# CHANAKYA SAHASAM.

or

# [C]ANDRAGUPTA CHARITRAM.

(A HISTORICAL TAMIL NOVEL)

BY


**Srimathi V. BALAMMAL**

*(Daughter of Dr. A. R. Vaidyanatha Sastriyar M. A. M. B. C. M.)*


---

# சாணக்ய சாகஸம்.

என்னும்

# [ச]ந்திரகுப்த சரித்திரம்.

---


[டாக்ட]ர A. R. வைத்தியநாத சாஸ்திரியார எம்.ஏ.எம்.பி.ஸி.எம்.

அவர்களின் குமாரத்தியாகிய

**ஸ்ரீமதி பாலம்மாள் இயற்றியது.**



*Publisher*

**PUNDIT, M GOPALAKRISHNIER,**

*[Pr]esident, " Manavar Sendamil Sangam ", Madura*

---

BHANU PRESS, 1914. [விலை ரூ. 1-8-0]

# INTRODUCTION.

——(*)——

## *Chanakya Sahasa.*

Chanakya Sahasa or the "Adventures of Chanakya" is a historical novel, the original of which is written in Sanskrit. From a Canarese version of the original, the author, I understand, has written this, in an easy and flowing Tamil.

## Chanakya.

Chanakya whose other name is Vishnugupta, was the son of Chanaka, a Brahman belonging to the Bhrigu race. This race whose antiquity can be traced to Rig Vedic period, though a Brahman race in origin, had in them the martial element of he Kshatriyas. In this race was born that famous Parasurama who is said to have avenged the death of his ancestor by extirpation of the Kshatriya race for twenty one generations, and who, at last, vanquished by Rama, son of Dasaratha, went into the south, and founded an Aryan colony in the Malabar coast Whatever may be the historicity of these episodes, one thing seems to be certain,—that though the Bhrigu race is a race of Brahmins they had in them the spirit of the Kshatriyas. Our Chanakya claims to belong to that illustrious race.

Chanakya who is the hero of this novel, was a Brahmin writer on politics and his name is still memorable in connection with the authorship of a political work named "*Chanakya Tantra*".

According to the tradition current in South India, Chanakya is said to have belonged to choliya sub-caste who generally wear their tuft of hair on the front part of their

heads. There is a Tamil proverb "சோழியன் குடுமி சும்மா ஆடுமா?" which means that even the tuft of a choliya will not shake without any purpose. This reminds us of the incident in this story itself, where Chanakya, when insulted by the nine Nandas untied his hair, with a vow never to tie it again, unless and until he successfully annihilated the Nandas.

## Magadha

Magadha is the ancient name of the province comprising the modern Bihar, whose capital was *Pushpapuri* or *Pataliputra* modern Patna) at the junction of the rivers the *Sona* and the *Ganges*. The ancient city is buried beneath the earth. The ancient splendour of the city has very well been described in the Puranas and also by the contemporary Greek writers, as Megasthenes, who was the ambassador of Selucas at the court of Chandragupta.

## Chandragupta.

The age of Chandragupta is the sheet anchor of the Indian chronology "—*Max Muller*.

Jarasandha, was the ruler of Magadha and contemporary of Udhishtira and according to Mahabharatha, he was vanquished in a duel by Bhima. After him various dynasties of Kshatriyas ruled over Magadha for a period of about 1500 years. *Sarvarthasiddhi* was the last of the Kshatriyas. He had two wives, Sunanda the *Pattamahishi*, and Mura a *Bhoga-sthri* of a lower caste. The nine Nandas were descendants of the *Pattamahishi* and Mura's grandsons were Chandragupta and his ninety-nine brothers. "Jealousy is the green-eyed monster." The Nandas who felt the growing power and influence of the Mauryas became afraid of their own position. The

result was that all Mauriyas were confined in an underground cell and all of them except Chandragupta were starved to death by the stratagem of the jealous Nandas. Chandragupta who survived them all, took a vow to avenge his brother's death, by the extirpation of the Nandas.

Chanakya's feelings, also were similarly wounded by the haughty Nandas and he also took a similar vow.

Just as the wind helps the fire, these two aggrieved persons conspired together to overthrow the Nandas.

## Rakshasa.

At that time Rakshasa (*alias Indusarma*) also a Brahman was the Prime Minister of the Nandas. Rakshasa, often used to advise the Nandas and was preventing them from vices. Yet who can stern the tide of time? In spite of his repeated advice the Nandas paved their own way of destruction. Just as Bhishma was the adviser and fighter on the side of Duryodana, Rakshasa was too loyal to forsake them in times of adversity. His superior wisdom and political stratagems were second only to those of Chanakya. The details of plots and counterplots are very interesting and are to be found in the story itself. In the end the Nandas were annihilated and Chandragupta ascended the throne of Magadha.

## The Date of the Story.

The age of our story is to be fixed by some references in the Puranas, and by the reference to the incidents connected with the invasion of Alexander the Great who invaded India, about 328. B. C. He heard about Chandragupta ruling over the Prachyas or the Easterns. It is also said that he even met him in a battle.

Whether Chandragupta ascended the throne before or after Alexander's invasion, on this point scholars do not agree. However it can be tolerably fixed between 330 B. C. and 320 B. C.

## Politics and Morality.

"All is fair in love and war." What is considered hypocrisy in the lowest classes of the society, is called *Policy* in the middle class, and *Diplomacy* and *Stastemanship* in the political arena: Since our characters belong to this highest circle where by the Law of struggle and Survival of the fittest 'Might is Right' we cannot judge their actions by common standard of morality. The whole story is full of details describing the rivalries of the two scheming heads, in their attempt to outwit each other. In the end Chanakya succeeds. Chanakya can very well be described as the ancient "*Machiavelli*" of India, in whom the end justifies the means.

This Story is a new departure in Tamil Novel writing. The plot is a historical one. The language is easy and beautiful. In fact it can be said that this is a valuable addition to our Tamil literature. The present work is only the first half of the whole story. This work begins with the vow of Chanakya and ends with the annihilation of the Nandas, and accession of Chandragupta to the throne of Magadha. The second portion will deal with the machinations of Chanakya, whereby he wins over Rakhshasa to Chandragupta's side by exacting a promise by a series of stratagems. This latter portion of the story is dramatised in Sanskrit by Visakhadatha in his *MudraRakshasa*. It is understood, that this author has rendered it also in Tamil and I have no hesitation to say that our public will heartily welcome it.

MADURA.
20—4—1914. } R. S. NARAYANASWAMI AIYAR, B.A., B.L.

# முகவுரை.

"அளவிடவு முடியாத ஆழ்கருங் கடலினுக் கடியினுட் குகையி னுள்ளே
அதிசுத்த மானபிர காசஒளி உமிழ்கின்ற அரியமணி பலஉறுதல் போல்
ஒளியபுக ழோடுதித் தும்தமது பெருமையும் உறைவிடமும் ஒருவ ராலும்
உணரமுடி யாதபடி மறைநிலையில் உத்தமர்கள் உறைவர்பலர்; அல்லாமலும்
அளிமுரலு மலர்கள்பல அனுபவிப் பாரின்றி அறியாத பாழ்வெளியி னில் [ம்
அழகுவள மணமாதி யாவுமே வீணு அலர்ந்துபின் வாடும்; அதுபோல்
எளிய அரி•வையர் பிறவி எய்தியதனால் தமதிருப்பிடம் தகைமை யாதி
எவரும் அறிந்துபயன் எய்தமுடி யாநிலை இருப்பர்பல பெண்மணிகளே."

என்ற புலவர் தீர்க்க தரிசியும் ஆவர். ஏனென்றால், சாணக்ய சாகஸம் அல்லது சந்திரகுப்த சரித்திரம்'' என்னும் இச்சரித்திர நாவலை இயற்றிய நல்லிசைப் புலமை மெல்லியளாகிய சௌபாக்கியவதி பாலம்மாள், அன்பு சான்ற என் அதனை மகளின் அருந்தவப் புதல்வி ஆவள். அவளை இவ்வளவு நெருங்கிய பந்துவாகப் பெறவும் அவளொடு பன்முறை பழகவும் நான் பாக்கியமுற்றிருந்தும், யான் ஸ்ரீ. மு. ரா. கந்தசாமிக் கவிராயருடன் நடத்திவரும் "வித்யாபாநு' வைத் தனக்கும் அனுப்பி வருமாறு அவள் விரும்பி யெழுதிய பொழுதுதான் உயர்தர மாதாந்தப் பத்திரிகையையும் படிக்கும் திறன் இவட்குண்டு என்பதை உணரலானேன்.

நீறுபூத்த நெருப்புப்போல் இருந்த இப்பெண்ணின் கல்வித் திறனைக் குன்றிலிட்ட தீபம்போற் சோபிக்கச்செய்தது இவளது அருமைத்தாயே. ஸம்ஸ்கிருதம், கன்னடம் ஆகிய விரண்டினும் பாண்டித்தியமும், தமிழில் போதிய ஞானமும், வேண்டுமளவு ஆங்கிலத் தேர்ச்சியுமுற்று, வித்வத்திலும், கவித்வத்திலும் வசன மெழுதும் வன்மையினும் சிறந்து விளங்கும் இந்நமது அருமைச் சகோதரி, தான் எழுதிய இந்நாவலின் கையெழுத்துப் பிரதியினை எனக்கு அனுப்பி, நானே அப்பிரதியில் உள்ள சகல பிழைகளையும் திருத்தி அச்சிடவேண்டு மென்பதும், முகவுரை என் கைப்படவே

இருக்கவேண்டுமென்பதும் தனது நற்றாயின் விருப்பமென அறிவித்தனள்.

அவ்விருப்பு இரண்டையும் இயன்றவாறு நிறைவேற்ற யான் ஒப்புக்கொண்டது உண்மையே எனினும், அவற்றுள் ஒன்றையே முற்றுவிக்க என்னால் முடிந்தது. அதாவது இரண்டாவதாகிய "முகவுரை எழுதுக" லையே. முதல் விருப்பாகிய "அப்பிரதியில் உள்ள சகல பிழைகளையும் திருத்தி அச்சிடல்" முற்றுப்பெறுமைக்கு நான் உத்தரவாதியல்லன். ஏனெனில், திருத்தித் தீரவேண்டியபிழை அப்பிரதியில் அற்பமேனும் இருந்தால் அன்றோ நான் திருத்துவேன்? இல்லையே! ஏதாவது திருத்தி வைக்கலாம் என்று பன்முறை சிந்தித்தேன், ஆயினும் "குளிக்கப்போய்ச் சேற்றைப்பூசி வந்தது" போலும், "பிள்ளையார் பிடிக்கக் குரங்காக முடிந்தது" போலும் ஆய்விடப் போகிறதென் றஞ்சி வாளா இருந்துவிட்டேன். உள்ளபடியே,

"புடமிடப்பட்ட பொன்மேல் பொன்"முலாம்" பூசல், அல்லி
மடவில்வெண் ணிறத்தைத்தீட்டல், மநக்கமழ்கருநெய்தல்மேற்
படநறு மணத்தை ஊட்டல், பனிஉறை வழுக்க லாக்கல்,
அடைவுற வான வில்லுக் கதற்கிலா வர்ணம் சேர்த்தல்.

அலங்கரித் திடுவான் வானத் தழகிய ஜோதி யைக்கைத்
தலந்தனில் தீப வர்த்தி தனைக்கொடு தேட லாதி
நலந்தரா வியர்த்த வேலை; நகைதரும்; மிகையே யாகும்
இலங்குநல் லழகைப் பின்னும் எழிலுறச் செய்வார் யாரே?"

ஆயினும், இப்பொழுது வெளிவந் துள்ள இந்நூலில் பிழையல காணுமாயின் அவை, எனது தவறுகளேயாகும். அஜாக்ரதையினால் நேர்ந்த அப்பிழைகளை அறிஞர்கள் பொறுத்தருள்வாராக. நிற்க.

"இனிய இயல்பான நடையினில் (பண்டிதர், பாமரர், ஆடவர் பெண்டிர், பெரியோர், சிறியோர்) யாவரும் எளிதில் அறியும் வண்ணம், இயற்கை அமைப்பையும், அழகையும், அற்புதங்களையும், ஜனஸமூகங்களின் நடை உடைபாவனைகளையும், மனிதர்களின் மனோபாவங்களையும், மனம், வாக், காயம் என்னும் திரிகரணங்களினும் மனிதர்க்

குள் ஏற்பட்டுள்ள எண்ணிறந்த வித்தியாசங்களையும் பிரத்யக்ஷமாக, உள்ளபடி கண்ணாடிபோல் பிரதி பிம்பித்துக் காட்டுவதே "நாவல்" எனப்படும். இந்தலக்ஷணங்களில் ஒன்றேனும் குறைவுறாது அமைந்துள்ளது நமது சகோதரி எழுதியுள்ள இந்நாவல்.

சாணக்கிய சாகஸமும் சந்திரகுப்த சரித்திரமும் தமிழர்க்குப் பண்டித நடேச சாஸ்திரியார் இயற்றிய "முத்ரா ராக்ஷஸம" போன்ற சின்னஞ்சிறு நூலானும், பிறர்க்குவடமொழி கன்னடம் முதலிய பாஷைகளில் உள்ள நூல்களானும், அவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்புகளானும் ஏற்கனவே தெரியும். ஆயினும் டாக்டர் A. R. வைத்தியநாத சாஸ்திரியார் M. A. M. B. C M. அவர்களும், அவரது இன்னுயிர்த்துணையாகிய மாமதி படைத்த ஸ்ரீமதியம்மையும் புரிந்த அருந்தவப்பயனாக அவதரித்த நம் சகோதரி இப்பழங்கதையை கற்போர் மனமும் கேட்பவர்காதும் களிக்க விரித்தும் தொகுத்தும் நூதன நடையுடன் எழுதியிருப்பதே அவளது குசைநுனி யதனினும் கூரிய மதியையும் பன்னூற்றேர்ச்சியையும் நன்கு புலப்படுத்தும்.

இந்நூலில் எவர் மனத்தையும் கவரக்கூடிய விஷயங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அவைகள்யாவையும் இங்குக குறிப்பிட இடமிராதென்றும் படிப்போரது ஸ்வாரஸ்யம் கெடுமே என்றும் அஞ்சிச் சிற்சிலவே குறிக்கின்றேன்:—

(க) 6-ஆம் பக்கம்: தாயத்தார் பகையை அக்நிக்கு ஒப்பிட்டிருத்தல்.

(உ) 8-ஆம் பக்கம்: ஷை பகையால் விளையும் தீங்கும் அதனைப் பரிகரிக்கும் விதமும் சாதுரியமாகக் கூறியிருத்தல்.

(ந) 12-ஆம் பக்கம்: நந்தர்கள் மௌரியரிடம் கபடமாக நடந்துகொண்ட விதம்.

(ச) 18-ஆம் பக்கம்: விநந்தனின் கடிதம்.

(ரு) 20-ஆம் பக்கம்: சர்வார்த்தசித்தியின் பிரலாபம்.

(சா) 27-ஆம் பக்கம்: லம்பாகதேச வர்த்தமானத்தில் குடிகளின்

"அரசனே! அவன் என்னை அடித்துக் கொஞ்ச தினங்களே ஆகின்றன. ஆயினும் நந்தர்கள் எனக்குச் செய்த அவமானத்தால், எங்களுக்குள்ள பகை, பிறவிப் பகையாயுள்ள யானை சிங்கங்களின் பகைபோல நாழிகைதோறும் விருத்தியடைந்தே வருகிறது. என் காரியத்தின் நிமித்தம் நின்னை அடித்தது போலவே, தன் காரியத்தின் நிமித்தம் சந்திரகுப்தன் என்னை அடித்திருக்கிறான். நந்தர்களிடம் நான் கொண்ட கோபத்திற்குக் காரணம் என்னைக் கேட்கிறாய். ஒரு வார்த்தை கேள். கோபம் லௌகிகத்திற்குக் காரணமேயொழிய, வீணானது அன்று: கோபமற்றவர்களை ஒருவரும் மதியார்கள். ஆனால், "ஸம்ஸாரிகளுக்கும் கிருஹஸ்தர்களுக்கும் கோபம் பிரயோஜனப்படுமே யொழிய தபஸ்விகளுக்கு அது நேர் விரோதமாயல்லவோ முடியும்? அதனால் தபசு அழிந்து விடாதா?" என்று சிலர் ஆக்ஷேபிக்கலாம். ஆராய்ச்சியோடு செய்த கோபத்தால் கீர்த்தியே உண்டாகும். ஆராய்ச்சியின்றிக் கொண்ட கோபமே ஹானி உண்டாக்கும். இதற்கு ராம ராவணர்களே ஸாக்ஷி. சீதையை எடுத்துச்சென்றதை ஊகித்தாய்ந்து ஸ்ரீராமன் யுத்தத்திற்குச் சென்றதால் அவன் கோபம், காரிய சாதகத்தை விளைவித்துக் கீர்த்தியையும் உண்டாக்கிறது. சீதையைத் தூக்கிவந்தபின் ராவணன் யோசனையற்றுக் கோபித்து யுத்தத்திற்குச் சென்றதாலேயே புத்திர மித்திரர்களாதியோருடன் மடிந்தான். பின்னும் பிராமணன் கோபித்துத் தபஸைச் செலவிட்டால் அக்கோபம் பரலோகத்திற்குக் கெடுதி விளைவிக்குமல்லாது, தனது பௌருஷத்தால் கோபத்தை யீடேற்றினால் நற்கதிக்குக் கெடுதி வராது. நந்தர்களிடம் நான் கொண்ட கோபம் ஆராய்ச்சியுடன் கூடியதால் எனது தபஸைச் செலவழிக்காது, பௌருஷத்தைக் கொண்டே முடிக்கத் தீர்மானித்திருக்கிறேன். நந்தர்கள் நிரபராதியும் அதிதியுமான என் விஷயத்தில் ஆராய்ச்சியில்லாது கோபித்து என்னை அவமானப்படுத்தியதால் அதன் பலத்தையவர்கள் அனுபவித்துத் தீர வேண்டும். ஆனதால் சந்திரகுப்தனைக் காட்டிலும் எனக்கு நந்தஸம்ஹாரம் மிகவும் சீக்கிரத்தில் அவசியமாய்ச் செய்ய வேண்டியிருக்கிறது. நந்தர்கள் எல்லாவிதத்திலும் உயர்வுள்ளவர்களானாலும் என்னெதிரில் நிற்க முடியாது. ஆனால் தபஸு குறையுமென்ற எண்ணத்தால் பரராஜர்களை ஆசிரயித்து

எனது பௌருஷத்தால் காரியத்தை முடிக்க வெண்ணியதாலேயே நந்தர்கள் இதுவரை பிழைத்திருக்கிறார்கள். நீ சூரனும் தைரியசாலியுமாகையால் "எனக்குத் தபஸு குறையாமல் சத்துருக்களைக் கொன்றேன்" என்றும், "சரணமடைந்த சந்திரகுப்தனைக் காப்பாற்றினேன்" என்றும் கீர்த்தியுண்டாகி அவனை நந்தராச்சியத்திற்கு அதிபதியாக்கி, எனது சபதத்தையும் ஈடேற்றுமாறு எங்களுக்குச் சஹாயமாக வருவாயென்று நம்பியே உன்னிடம் வந்தோம். நான் யோசித்திருக்கும் காரியத்திற்கு உனது சைனியங்கள் கௌடதேசம் போய் நின்றாலல்லாது மேல் நடக்கவேண்டிய காரியம் எதுவும் சித்தமாகமாட்டாது. உனக்கு யுத்தத்தில் குதூகலம் இருந்தால் உனது சௌரியம் கண்டு மன்னர்கள் யாவரும் தலைகுனியும் வண்ணம் ஸேனாஸமேதனாக நீயே புறப்படலாம். ஜனங்களை யுத்தத்தில் வீண் சிரமப்படுத்த வேண்டுமென்றிருந்தால் பேருக்கு மட்டும் உன் ஸேனைகளை யனுப்பிக்கொடுத்தால், ஆஹாரத்தைக் காண்பித்து மடுக்களில் இருக்கும் பெருமீன்களை வெளியில் எடுப்பது போல் உனது ஸேனைகளை தூரத்திலிருந்தே காண்பித்து, உபாயத்தால் நந்தர்களை ஸம்ஹரித்து விடுவேன். அதன் பிறகு நீ சொன்னது போல் நடக்கும். இப்பொழுது மாரிகாலம் கழிந்து சரத்காலம் ஆரம்பித்திருப்பதால் இதுவே அரசர்களுக்குத் தண்ட யாத்திரை செல்லும் ஸமயம்" என்றான்.

இது கேட்ட பர்வதேசன் "ஸ்வாமீ! தாங்கள் இதுவரை சொன்னது முழுதும் யுக்தமே. சரணமடைந்தவர்களைக்காப்பாற்றுவதும் துஷ்டர்களைச் சிக்ஷிப்பதுமே தங்களொத்த மஹான்களுக்குக் கடமை. 'இப்பொழுதே உங்கள் காரியத்தை முடித்துக் கொடுப்போம்' என்றால், பழைய பகையை மனதில் வைத்து, லம்பாகதேசாதிபனை கிர்வர்மன் தக்க ஐசுவரிய பலத்துடனும் சகாயத்துடனும் ஸேனைகளுடனும் நம்மீது தண்டெடுத்து வருகிறானே! ஆகையால் அவனை நிக்ரஹிக்க வேண்டியது நமக்கு இச்சமயம் முக்கியமாயிருக்கிறது. இதை உபேக்ஷித்து நான் இக்காரியத்தில் ஏற்பட்டால் சமீபத்தில் மெத்தக் கெடுதி விளைந்து விடும். ஆகையால் இச்சமயம் ஏற்பட்டிருக்கும் ராஜ காரியத்தை முடித்துக்கொண்டு பிறகு உங்கள் காரியத்திற்கு ஸகாயமாகப் புறப்படுகிறேன். அது வரையில் காரியத்தில் கண் வைத்து எங்களிடம் தயவு செய்து நீங்கள் இவ்விடமே

(எ) 39-ஆம்பக்கம்: சாணக்யனின் தோற்றம்.

(அ) 43-ஆம் பக்கம்: சாணக்யனின் சபதம்.

(கூ) 49-ஆம் பக்கம்: யௌவனம் ஐசுவரியம் முதலியவற்றின் உவமை.

(க0) 81-ஆம் பக்கம்: 'உலூகம்' என்பதைப்பற்றிச் சபரவர்மனின் சாதுரியப் பேச்சு.

(கக) 96-ஆம் பக்கம்: கொடுங்கோன்மைக்குக் காரணங்கள்.

(கஉ) 136-ஆம் பக்கம்: நாயகிமார் நந்தர்களுக் குரைத்த நன்மொழி.

(கங) யுத்தவிஷயமாக ராக்ஷஸன் செய்த தந்திரம்.

(கச) சாணக்யன் நந்தர்களை கொல்லச் செய்த உபாயம் முதலியன.

இந்நாவலின் ஏனைச் சிறப்புகளைப்பற்றித் தக்க பத்திராதிபர்களும் கல்வி கேள்விகளிற் றேர்ச்சிபெற்ற ஏனை வித்வ சிரேஷ்டர்களும் நானுவிதங்களிலும் வியந்து கூறியுள்ளார்களாதலின் நான் திரும்பவும் அவற்றைப்பற்றிக் கூறல் மிகையே யாகுமெனஅஞ்சி இத்துடன் நிறுத்துகின்றேன்.

சுதேசமித்திரன், வைசியமித்திரன், வித்தியாபாநு, செந்தமிழ் முதலிய பிரபல பத்திரிகைகள் இந்நூல் வித்பா இலாகா அதிகாரிகளால் அங்கீகரிக்கக்கூடிய சகல சிறப்புக்களுடனும் விளங்குவதால்" "அதனை காலேஜ் வகுப்புக்களுக்கேனும் ஸ்கூல் பைனல் (School Final) வகுப்புக்களுக்கேனும பாடமாக நியமிப்பது மிகவும் விரும்பத்தக்கது" என்று ஏகோபித்துத் தம் முழு மனதுடனும் விரும்பிக் கூறிய நன்மொழி சித்திக்குமாறு எல்லாம் வல்ல இறைவன் இன்னருள்புரிவாராக.

பெண்களின் படிப்பு விருத்தியாகவேண்டுமெனத் திரிகரணத்தோடும் உழைத்துவரும் காரணம்பற்றி உண்மை அபிமானிகளும், சிறுவரும் எளிதிற் பொருள் உணர்ந்து மகிழுமாறு தம் இனத்தவள் எழுதியுள்ளதால் ஸ்திரீ ஜாதியரும், இவ்வினிய நூலை, நம் செந்தமிழ் அணங்கு தன் அருந்தவப புதல்வி ஒருத்தி மூலமாகத்

தமக்களித்த பெருவிருந்தெனை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்வார்களென்றும், கூடிய சீக்கிரத்தில் இரண்டாம்பாகம் அற்ப சொற்பப் பிழையுமின்றி வெளிவருமென்றும் விரும்பி எதிர்பார்க்கிறேன்.

நம் தாய்மொழிப் பெருமை நாடெங்கு மோங்கி ஒளிரவும், இந்திய மாதரின் அறிவும் ஆற்றலும் மிகுந்து அவர்கள் ஒவ்வொருவரும்,

> "நாற்பொருளும் நாம்பெற்றேம் நன்மக்கட் பேறுற்றேம்
> நாற்குணத்தேம் நாமகளின் நல்லருளால்—நாற்றிசையீர்!
> மண்கல் விலங்காதி மானஇராம்! பெற்றேமால்
> பெண்கல்வி யென்னுமொரு பேறு"

என்று உளமகிழ்ந்துரைக்கக்கூடிய நற்காலம் வரவும் இறைவன் திருவருள் புரிவாராக.

இங்ஙனம்

**ம. கோபாலகிருஷ்ணயர்.**

மதுரை.

1—4—14

# முன்னுரை.

சகோதர சகோதரிகளே!

கர்நாடக சம்பிரதாயமே கைக்கொண் டொழுகிய பூர்வ கால த்திலும், அத்துடன் நவ நாகரிகத்தையும் அனுஷ்டித்து வரும் இக் காலத்திலும், கல்வியும்அறிவும் ஒன்றே. ஆயினும், முற்காலத்தினும் இக்காலத்தினில் உலகெங்கும் அறிவு பரவி இருத்தல் எவரும் அனு பவசித்தமாக அறிந்ததே. இதற்குக் காரணம் யாவெனில், முற்காலத் தில், கல்வி பயில்வதற்கும் வித்யாவிநோதங்களை நுகர்வதற்குமான வழிகள், பலநாள் பணிவிடை புரிந்தோ, பொருள் நனி கொடுத்தோ, உபாத்தியாயர் ஒருவரை படுத்து, அவர் எதிரில் நின்று, அவர் போதிப்பவற்றைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிவதும், பழைய ஏடு களை வைத்திருப்போர்க்குப் பெருந்தொகை தந்து அவற்றை இரவ லாகப்பெற்றுக் கையும் கழுத்தும் நோவ எழுதிப் படிப்பதுமே. இக்காலத்திலோ, பெரும்பொருட் செலவின்றி எளிதில் எவர்க்கும் கல்வி புகட்டப்பெற்று வருவதாலும், எழுதா எழுத்தில் எழுதி அரை நாழிகையில் ஆயிரக்கணக்கான பிரதிகளை உண்டாக்கும் அச்சு யந் திரங்களும், காகிதங்களும் பிறகருவிகளும் செய்யும்விதங்கள் கண்டு பிடிக்கப்பட்டு அவற்றின்மூலமாகப் பல நூல்கள் நாள்தோறும் வெளியாகி வருவதாலும், கல்வித் துறையைக் கண்டறிந்தோர்மட்டு மன்றி, எழுத்துவாசனை என்பதே இல்லாக் குக்கிராமவாசிகளும், நூல்களை விரும்பிப்பெற்றுக் கற்று, அறிவுணர்ச்சியும் மன வெழுச் சியு முற்று, நூற்பயனாகிய நாற்பொருளும் எய்த ஆவலுள்ளாராகி இருக்கின்றனர்.

முற்கூறிய விஷயத்தை நன்குணர்ந்த அறிஞர் பலர், மாந்தரின் பரிபக்குவ நிலைக்கிணங்கச் சரித்திரங்களையும் கதைகளையும் எழுதி வருவதோடு "நாவல்" என்னும் அபிநவக்கட்டுக்கதைகளையும்எழுதி வரலாயினர். இவ்வாறு, படிப்போர்க்கு உத்ஸாகமும் எழுதுவோர் க்கு ஊக்கமும் உதித்துள்ள இக்காலத்தில், ஓர் 'நாவல்' எழுதவேண்

டும் என்ற அவாவும் முயற்சியும் எனக்கும் எழுந்தது ஆச்சரியம் இன்றே! இதுபற்றிய எனது எண்ணத்தையும் விருப்பையும் நான் எனது அருமை மாதா அவர்களிடம் அறிவித்து அவர்களுடைய அபிப்பிராயம் வேண்டினேன்.

அதற்கு அவர்கள் " கண்ணே! ஆரியவர்த்தத்து அறிவுள மேலோர், காலத்திற் கனுகூலமாயுள்ள சீர்திருத்தங்கள் செய்யும் இக்காலையில், நின் அவா முயற்சிகள் நேரிய வழியினிற் போனமை பற்றி யான் மிக மகிழ்ந்தேன். ஆயினும் 'நாவல்' நாடகம், முதலியன எழுதிப் புகழ் பெறுதற் கருகரான ஸ்ரீமான்களாகிய பண்டித 'நடேச சாஸ்திரியார்', நாகை 'ஸி. கோபால கிருஷ்ணபிள்ளை அவர்கள், 'சம்பந்தம் முதலியார்' அவர்கள், B. R. 'இராஜம் ஐயர்' அவர்கள், 'அ. மாதவையா' அவர்கள் போன்ற எழுத்தாளர்கள், சிறுவர் சிறுமியர்க்கு நற்போத முண்டாகும் முறையை நாடி எழுதி வருவதைப் பார்த்து, நீயும் எழுதத் துணிவது "கான மயிலாடக் கண்டிருந்த வான்கோழி" தானுமது போலாடும் தன்மைத் தாகுமே! அன்றியும், தற்காலத்தில் ஞான சூனியராகிய அநேக கற்றுக் குட்டிகள் போலிப் புகழ் கருதியோ, வயிற்றுப் பிழைப்பின் நிமித்தமாகவோ, எப்படியும் 'புஸ்தகம்' என்று முடிந்தாற் போதும் எனக் கருதி, ஜாதி முறை காணுதும், உரை நடை விளங்காமலும், முன்னுக்குப் பின் முரணாகவும், அல்ப விஷயங்களைப் பிரமாதமாக விஸ்தரித்தும் எழுதி யாதேனும் பொருத்த மில்லாத ஓர் அலங்காரப் பெயரிட்டு "சிறந்த நாவல்" என்று குறித்து வெளியிட்டு வருகின்றார்கள். சிற்றின்ப விஷயங்களை மிகுதியும் கொண்டு படிப்போர் மனத்தையும் புத்தியையும் ஒழுக்கத்தையும் இவை பாழ்படுத்த ஹேதுவாயிருத்தலின் "நாவல்" என்ற பெயர் கேட்ட மாத்திரத்திலேயே நல்லோர் மனம் நடுக்குறுகின்றது. நீ இத்தகைய நாவல் எழுதுவதில் எனக்குச் சிறிதும் இஷ்டமில்லை. இங்ஙனம் நான் கூறுவதால் நீ 'ஏதுமே' எழுதக் கூடா தென்பது எனது கருத்து அன்று. சரித்திரத்தால் விவேகமும், காவியத்தால் யூகமும், தத்துவ நூலால் ஆழ்ந்த சிந்தையும், ஒழுக்க நூலால் பயபக்தியும், நீதியும் உண்டாகு மென்பது உயர்ந்தோர் கொள்கை. இவ் விஷயங்கள் யாவையும் ஒருங்கே உணர்த்திப் பயனுறற்க் கூடிய ஓர் நூலை நீ உன் விருப்பிற்

கிணங்க "நாவல்" ரூபமாக எழுதினால் அதுவே தான் எனக்குத் திருப்தி. இனிய எளிய வாசக நடையில் மட்டும் நீ எழுதுவையாயின், உன் நாவலைப்படித்தோர் யாவரும் "இன்பமும் அறிவும் எளிதில் தந்து படிப்போரது மனச் சஞ்சலத்தை மாற்றி மகிழ்வுறச் செய்வது, இதனினும் வேறு இல்லை" என்று உன்னைக்கொண்டாடுவர்" என்று அருளினர்.

இச் சொற்களால் எனக்கு மன வெழுச்சி மேலிட்டது. அன்னையாரின் விருப்பையும் எனது அவாவையும் இயன்றவாறு நிறைவேற்ற எண்ணி "எதனை எழுதலாம்?" எனப் பன்முறை சிந்தித்துப் பார்த்தேன். ஒரு நாள், எனது அன்னையவர்களே எனக்கு முன்பு வியந்து கூறிய கதை ஒன்று என் ஞாபகத்திற்கு வந்தது. அதையே நினைந்து இந்நூல் எழுதலானேன். நிற்க.

"முத்ரா ராக்ஷஸம்", "பிரசண்ட சாணக்யம்" என்னும் வடநூல்களும், கன்னட மொழியில் "முத்ரா மஞ்சூஷம்". என்ற நூலும் சந்திரகுப்தனின் ராஜ்ய லாபத்தையும் நவநந்தர்களின் அநீதங்களையும் எடுத்துரைப்பனவாகும். இவற்றையே ஆதாரமாகக் கொண்டும், விரித்தும், தொகுத்தும் என் சிற்றறிவுக் கெட்டியவரை தமிழில் எழுதலானேன். "இக்கதை இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப்பொழுது வெளியாகியுள்ளது 'முதற்பாகமே'.

(1) சாணக்கியனின் சாகஸகாரியங்களையும், சந்திரகுப்தனின் சரித்திரத்தையும் அனுஸரித்திருப்பதாலும், (2) சாணக்ய சாகஸத்தினாலேயே சந்திரகுப்தன் ராஜ்யம் அடைவதனாலும், (3) சாணக்ய சாகஸம் சந்திரகுப்தனையும் சந்திரகுப்த சரித்திரம் சாணக்ய சாகஸத்தையும் பற்றி யிருப்பதாலும், இச்சரித்திரத்திற்குச் சாணக்ய சாகஸம் அல்லது சந்திரகுப்த சரித்திரம் எனப் பெயர்இடப்பட்டது.

பெண்கள் படிப்பை அபிவிருத்தி செய்ய வேண்டுவது தமது கடமை என உணர்ந்துள்ள பல தக்க கனவான்களும், பத்திராதிபர்களும், இந்நூலைப்பற்றி நல்லபிப்பிராய மளித்து அதனைக் கௌரவப்படுத்திய நன்றியை என்றும் மறவேன். இந்நூலிற் காணப்படும்

எவ்வகைப் பிழைகளையும் பொறுத்தருளுமாறு உங்களை வேண்டுகின்றேன்.

இப்புத்தகம் அச்சாவதில் மிகுந்த சிரத்தையும் உழைப்பும் மேற்கொண்டு எனக்குப் பேருதவி புரிந்து வந்தவரும், மதுரைக் காலேஜ் தமிழாசிரியரும், 'மதுரை மாணவர் செந்தமிழ்ச சங்கத்தை ஸ்தாபித்து அதனை நடத்திவரும் அதன் ஸ்திரந்தர அக்ராஸநாதிபதியும் மதுரைத் தமிழ்ச்சங்க வித்வானும் ஆகிய எனது பிரிய சகோதரர் மகா-ள-ள-ஸ்ரீ ம. கோபால கிருஷ்ணையர் அவர்களுக்கு, பந்துமுறையை அநுஸரித்து நான் வந்தனமளித்தல் அநாவசியமாயினும் நன்றி பாராட்டியே தீரவேண்டியது கடமையாகும்.

> "இனையர் இவர் எமக்கு :இன்னம் யாம்; என்று
> புனையினும் புல்லெனும் நட்பு"

என்பதை மறந்து நான் இங்ஙனம் கூறியதை அவர் பொறுத்தருளுமாறு வேண்டுகின்றேன்.

'பொங்கும் மங்களம் எங்கும்' தங்குக

மணக்கால்<br>ஆநந்தவருஷ<br>சித்திரை-மீ<br>கஉ

இங்ஙனம்.

**வி. பாலம்மாள்.**

# அபிப்பிராயங்கள்.

பண்டைக் காலத்தில் பாடலிபுரத்திலிருந்து மகதநாடாண்ட மன்னர் பலருள் சந்திரகுப்தன் என்பான், நிரபராதிகளாகிய தன் உடன் பிறந்தாரைக்கொன்று தன்னையும் ஒறுத்த, தன் தாயாதிகளாகிய பகைவை, சாணக்யன் என்ற அந்தணன் உதவியால் வென்று அரசுரிமையை அடைந்த சரித்திரம் வடமொழியாளரால் மிகவும் பாராட்டப்பட்டதாகும். சாணக்கியனுடைய சூழ்ச்சி மிக அதிசயமானது. அக்கதையைக் கன்னடத்திலிருந்து அழகிய தமிழ் நடையில் மொழிபெயர்த்துள்ள சாணக்ய சாகஸம் என்ற நூலொன்று வரப்பெற்றோம். நூலின் தமிழ்நடை மிகவும் பாராட்டற்பாலது. குற்றமற்று இலகுவாய் அமைந்துள்ளது. கதை தேன்போல் தித்திக்குமாயினும் தெவிட்டாத தெள்ளமுது போன்றது. முற்றும் படித்து முடித்தாலொழிய புஸ்தகத்தைக் கீழே வைக்க மனம் வாராது: இந்நூலை காலேஜ் வகுப்புக்களுக்கேனும், ஸ்கூல்பைனல் வகுப்புக்களுக்கேனும் பாடமாக நியமிப்பது மிகவும் விரும்பத்தக்கது. இந்நூலைத் தமிழில் இயற்றினோர் ஸ்ரீமதி V. பாலம்மாள்; காலஞ்சென்ற டாக்டர் A. R. வைத்தியநாத சாஸ்திரி M. A. B. C. M. அவர்களின் குமாரத்தி. பெண் கல்வி பெறவேண்டுமென்று கவலையுறுவோர் கன்னடத்திலும் வடமொழியிலும் பாண்டித்தியமுடைய ஸ்ரீமதி பாலம்மாளின் சாணக்ய சாகஸத்தை ஆதரித்து அவருக்கு ஊக்கத்தைத் தருவாராக.

சுதேசமித்திரன்,

சென்

சாணக்ய சாகஸம் அல்லது சந்திர குப்த சரித்திரம் என்னும் பெயர் கொண்ட தமிழ் சரித்திர நாவல் ஒன்று நமது பார்வைக்கு வந்திருக்கிறது. இதனை இயற்றியவர் காலம் சென்ற டாக்டர் A. R. வைத்தியநாதசாஸ்திரியார் M. A. M. B. C. M. அவர்களின் அருந்தவ புதல்வியாரான ஸ்ரீமதி வை. பாலாம்பாள் அம்மையார் அவர்களாவர். சந்தரகுப்தனுடைய சரித்திரம் நமக்குப் புதிதன்று. இந்து தேச சரித்திரத்திலேயே சந்திரகுப்தன் ஒரு முக்யமான பாத்திரமாய் விளங்குகிற படியால் கலாசாலை மாணவர்கள் முதல் அறிவிற் சிறந்த பெரியோர்கள் இறுதியாக எல்லோரும் அவனைப் பற்றி நன்கறிவார்கள். முத்ராராக்ஷஸம் என்னும் வடநூலும், அதன்மொழி பெயர்ப்பாக ஏற்கனவே வந்துள்ள தமிழ் நூல்களும், அவனுடைய பிரதாபத்தைப் பற்றி மிக விஸ்தாரமாகக்கூறுகின்றன. ஆனால் இந்த நாவலில் அவனுடைய சரித்திரம் கூறப்பட்டிருக்கும் முறைமையும் போக்குமே நமக்கு புதிதாகும் இதனைக் கன்னட பாஷையிலிருந்து இந்நூலாசிரியார் மொழி பெயர்த்திருப்பதாக நாம் அறிகிறோம் ஸ்திரீகளும் சிறுவர்களும் எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய விதமாயும் பண்டிதர்கள் வியந்து பாராட்டும் படியான விதமாயும் இந்நூலின் வசனநடை மிக இலேசாயும் தெளிவாயும் இலக்கணக்குற்றமின்றியும்அமைந்திருப்பதுபெரிதும் பாராட்டற்பாலது. இந்நூலில் எண்ணிறந்த சம்ஸ்கிருத பதங்கள் ஆங்காங்கு பிரயோகிக்கப்பட்டிருப்பினும் அவை யெல்லாம் ஸம்ஸ்கிருதம் அறியாதவர்களுக்கும் எளிதில் விளங்கக் கூடிய விதமாய் இடமறிந்து பிரயோகிக்கப் பட்டிருக்கின்றமையானது, இந்நூலாசிரியரின் தமிழ் அறிவையும் வடமொழிப் பயிற்சியையும் இனிதுவிளக்குவதுடன்அவருடைய உலகியல் அறிவையும் நன்கு புலப்படுத்துகிறது. இந்நூலில் ஆங்காங்கு வரும் அழகிய வர்ணனைகள் படிப்பவர்களுக்கு உற்சாகத்தை விளைவிப்பதற்கும், ஆங்காங்கு வற்புறுத்திச சொல்லப்படும்

உயர்ந்த நீதி போதனைகள் சிறுவர் சிறுமிய ரின்னொழுக்கத்தைச் சீர் திருத்துவதற்கும் பெரிதும் பயன் படுவனவாம். இந்நூல் வித்யா லாகா அதிகாரிகளால் அங்கீகரிக்கக் கூடிய சகல சிறப்புக்களுடனும் விளங்குகிறது "பெண் கல்வி" அவசியம் என்று உண்மையோடு வற்புறுத்துவோர்கள் இத் தகைய நூலைப் பெரிதும் ஆதரிப்பதற்கு கடமைப்பட் டிருக்கிறார்கள். பெண் கல்வி புறக்கணிக்கப்பட்டும் அலட்சியம் செய்யப்பட்டும் வரும் இக்காலத்தில் ஸ்ரீமதி பாலாம் பாள் அம்மை யவாகளைப் போன்ற சகோதரிகள் இத்தகைய நூல் களை எழுதி வெளியிட முன்வருவது நம் நாட்டிற்கு ஓர் சிறந்த பெருமையேயாகும்.

"வைசியமித்திரன்,"
தேவகோட்டை.

"சாணக்கிய ஸாகஸம்" அல்லது "சந்திரகுப்த சரிதம்', என்னும் சரித்திரநாவல் படிக்குந்தொறும் படிக்குந்தொறும் எமக் குப் பேருவகை விளைவியா நின்றது. சந்திரகுப்தனுடைய சரித் திரம் நமக்குப் புதிதன்று. ஆனால், காலஞ்சென்ற டாக்டர் A. R. வைத்தியநாத சாஸ்திரியார் M. A., M. B., C. M. அவர் களின் அருந்தவப் புதல்வியாகிய பண்டிதை ஸ்ரீமதி. வை. பால ம்மாள் அம்மையாரவர்கள் தம்மனோபாவ சாமர்த்தியத்தாலும், கல்வித்திறமையினாலும், புதிய உடையுடன் இப்பழைய சரிதத்தை வெளியிட்டிருப்பதுதான் புதுவதாகும். சந்திரகுப்தனுடைய சரி தத்தை "முத்ரா ராக்ஷஸம்" போன்ற வடமொழி நூல்களானும், அவற்றின் தமிழ், ஆங்கிலமொழி பெயர்ப்புக்களானும் உலகத் தார் ஏற்கனவே அறிந்துளராயினும், இந்த நாவல் அவர்கட்குப் புதிய கருத்துக்களையும், நீதிகளையும் வெளியிடும் இயல்பினதாகவே துலங்கும்.

நான்காம் பக்கத்தில், "வளர்ந்து வரும் புத்திரர்களுக்கு சுக்கிலபக்ஷ சந்திரனையும், அரசனுடைய மகிழ்ச்சிக்குப் பூரணசந் திரனைக்கண்ட சமுத்திரத்தையும்", ஒப்பிட்டிருத்தல் பெரிதும்

பாராட்டற்பாலதாம். நந்தர்களின் இருதயத்தை அக்நிகுண்டத்திற்கு ஒப்பிட்டிருத்தல் சாலப்பொருத்த முடைத்து. இப்புத்தகத்தில் ஆங்காங்கு காணப்படும்இயற்கை வருணனை எமக்குப் பெரும் உற்சாகத்தை விளைத்தது. 162ம் பக்கத்தில் பர்வதேசனின் அதைரியம் இனிது புலப்படும்படி எழுதியிருக்கும் அம்மையாரின் சாமர்த்தியம் கற்றோரால் பெரிதும்பாராட்டற் பாலது. இந்த நாவல் முழுதும் அழகிய இயற்கை வருணனைகளும், சிறந்த உபமான உபமேயங்களும் நிறைந்து கிடக்கின்றன. சாணக்கியனுடைய சாகஸமும், ராக்ஷஸனுடைய தந்திரங்களும் வியக்கத்தக்கனவேயாம்

இந்த நாவலில் இரண்டு முக்கியமான விஷயங்கள் எம் கருத்தைக் கவர்ந்தன. அவையாவன:—1. பெண்மக்களும் சிறுவர்களும் படிப்பதற்கு ஏலாவாறு சில நாவல்களில் காணப்படும் பதப்பிரயோகங்களும், வாக்கியங்களும் மருந்திற்கும் இந்நாவலில் இல்லாமை. (2) ஏராளமான வடமொழிப் பதங்கள் இந்நாவலில் பிரயோகிக்கப் பட்டிருப்பினும் அவையெல்லாம் உலகவழக்கில் இருப்பனவாகவும் சாமானியர்க்கும் எளிதில் பொருள் விளக்கக்கூடியவை யாகவும் இருத்தல்.

படிப்பதற்கு மிக இன்பம் பயக்கும் விதமாய் அழகிய எளிய வசன நடையில் இலக்கண வழுஉக்கள் சிறிதுமின்றி இயற்றப்பட்டிருக்கும் இந்நாவல் தமிழறிந்த ஒவ்வொருவரிடமும் இருத்தல் வேண்டும் என்பது எமது விருப்பம். முக்கியமாக நம் தமிழ்நாட்டு ஸ்திரீகளுக்கு இப்புத்தகம் பெரிதும் பயனுடையதாகும். ஸ்ரீமதி பாலம்மாள் அம்மையாரவர்கள் இம்மாதிரியே பல நூல்களை மேலும் மேலும் இயற்றி நம் தாய்மொழியின் பெருமையையும், இந்திய ஸ்திரீகளின் அறிவாற்றலையும் மலை மேலிட்ட விளக்கம்போல் எங்கும் விளங்கச் செய்வார்களென்று யாம் நம்புகின்றோம். இறைவன் அவர்கட்கு எல்லா நலங்களையும் அருளுவாராக!.

நாகை வி. கோபாலகிருஷ்ணன்

# OPINIONS.

A work of this description ought to be hailed with delight by readers of Tamil fiction. The clearness of style, the ease and directness with which the story is told, the beautiful manner in which Sanskrit words and phrases are interwoven with Tamil and, above all, the masterly way in which the division into chapters is effected and named— all make the authoress eminently fitted to write a work of this kind and contribute, in no small degree, to the unqualified success which the work is bound to achieve both in the scholarly as well as in the ordinary Tamil-speaking world. Moreover, the apt descriptions of persons and the graphic paintings of landscapes, here and there, as occasion demands complete the qualifications of the authoress to write a masterly epic, in prose, on the lines of the Sanskrit School. The fertility of the authoress's style lends itself naturally to the fertility of Chanakya's political intrigues, the simplicity to the goodness of Rakshasa and the agreeable variety to the interesting complexity of the whole plot. Such an attempt to popularize sanskrit culture in our country is praiseworthy.

---

**S. NARAYANAN** B.A., L.T.,
Asst. Mathematics Lecturer,
Madura College.

# அட்டவணை


| அத்தியாயம் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1 | ஸர்வார்த்த ஸித்தியின் டிக்கட்பேறு | 1 |
| 2 | நவநந்தர்களின் துராலோசனை | 4 |
| 3 | மௌரியர் வதம் | 11 |
| 4 | வஞ்சகம் வெளிப்படல் | 18 |
| 5 | பர்வதேசுவரனின் பரீக்ஷை | 24 |
| 6 | சந்திரகுப்தன் சிறையினின்றும் விடுபடல் | 35 |
| 7 | சாணக்யனின் சபதம் | 39 |
| 8 | சாணக்யனின் முயற்சி | 48 |
| 9 | சந்திரகுப்தன் நைமிசாரண்யம் செல்லல் | 55 |
| 10 | சாணக்யன் பர்வதேசனிடம் செல்லல் | 62 |
| 11 | சாணக்யனின் சூழ்ச்சி | 76 |
| 12 | பர்வதேசனுடன் சாணக்யன் செய்த உடன்படிக்கை | 85 |
| 13 | யுத்த ஆரம்பம் | 94 |
| 14 | ராக்ஷஸனின் படைவகுப்பு | 101 |
| 15 | பகைவர் வெளிப்படல் | 117 |
| 16 | இந்து சர்மனைச் சோதித்தல் | 127 |
| 17 | நவநந்தர் தம் நாயகி ாரிடம் விடைபெறல் | 133 |
| 18 | நவநந்தர் தம் பெற்றோரிடம் விடைபெறல் | 138 |
| 19 | மாஸோபவாசியைத் தரிசித்தல் | 141 |
| 20 | பாகுராயணனைப் பேதித்தல் | 145 |
| 21 | ராக்ஷஸனின் வெற்றி | 149 |
| 22 | பர்வதேசனின் அதைரியம் | 157 |
| 23 | பர்வதேசனின் பயநீக்கம் | 175 |
| 24 | சேகரனை ஸர்வஸேனாதிபதியாக்கல் | 172 |
| 25 | நவநந்தர்கள் அகப்பட்டுக்கொள்ளல் | 175 |
| 26 | நந்த ஸம்ஹாரம் | 183 |

ஸ்ரீராம ஜயம்.

# சாணக்கிய ஸாஹஸம்

அல்லது

# சந்திரகுப்த சரிதம்.

## முதலாவது அத்தியாயம்.

## ஸர்வார்த்த ஸித்தியின் மக்கட்பேறு.

இப் பூமண்டலத்தின்கண்ணுள்ள ஐம்பத்தாறு தேசங்களில் மிகு ரமணீயமானதும், சகல வித்வான்களாலும் சோபிக்கின்றதுமான கௌட தேசத்தில், பாடலிபுத்திரம் எனவொரு நகரம் நேத்திரானந்தகரமாய் விளங்கிக் கொண்டிருக்கின்றது. அஷ்ட ஐசுவரியங்களும் நிறைந்துள்ள இந்நகரத்திற்குக் குஸுமபுரம் என்றும் ஒரு பெயர் உண்டு. அந்நகரில் சந்திரவம்ச பரம்பரையில் உதித்தவனான "ஸர்வார்த்த ஸித்தி" யென்ற ஓர் அரசன் ரத்னஸிம்மாசனத்தில் வீற்றிருந்து தருமத்துடன் மநுநீதி வழுவாது அரசாட்சி புரிந்து வந்தனன். இவ்வரசனுக்குச் சகல கலாப்யாஸத்தால் அதிஸூக்ஷ்ம புத்தியுள்ள வக்ரநாசன் என்பவன் முதலான எட்டு மந்திரிகள் இருந்தார்கள். அவர்களில், சந்தி விக்கிரகத்தில் அதிநிபுணனான அமாத்திய ராக்ஷஸன் என்ற மந்திரி எப்பொழுதும் அவ்வரசனுக்குத் தன் புத்தி சாதுர்யத்தால் நன்மையைச் செய்து வந்தான். அவ்வேந்தன் ஸிம்மபலன் முதலிய அஷ்ட சேனாதிபதிகளால் ரக்ஷிக்கப்பட்ட சதுரங்க சேனைகளால் சூழப் பெற்றவனாக சகல ராஜ்ய பாரத்தையும் மதியூகியான அமாத்ய ராக்ஷஸனிடம் ஒப்புவித்து க்ருதக்ருத்யனாய்த் தன் அந்தப்புர தேவியான ஸுநந்தா தேவி என்ற பட்டமகிஷியுடனும், ரதியைப்போல் சௌந்தரிய சாலினியும் ப்ரேம பாத்திரையுமான முராதேவி யென்ற ஸாமான்ய ஸ்திரீயுடனும் போகாசக்தனாய் சுகத்துடன் காலங்கழித்து வந்தான். அமாத்ய ராக்ஷஸனோ வென்றால், தன் புத்தி பலத்தினால் அநேக தேசத்தரசர்களை ஜயித்துச் சில மன்னருடன் ஸிநேக பாவத்துட

னும், சில வேந்தர்களுடன் உதாஸீநத்துடனும் இருந்து, நீதியுடன் ராஜ்ய பரிபாலனம் செய்து ராஜ்ய கோசங்களை அபிவிருத்தி செய்தும், ஸர்வார்த்த ஸித்தி மஹாராஜனை சகல சாமந்த ராஜர்களுடைய ரத்ந கிரீடங்கள் பாதத்தில் அநவரதம் படுவதால் சிவந்த பாதங்களையுடையவனாகச் செய்தும், சுகத்துடன் போஷித்து வந்தான். இவ்விதம இருந்தும்கூட அத்தார்வேந்தனுக்குப் புத்திரப் பேறு இல்லாமையால் தனது வம்சமும் செங்கோலும் தலைமையற்றுப் போவதை நினைத்து விசனப்பட்டுக்கொண்டிருக்கும் போது, ஒரு நாள் துவாரபாலகன அரசனின் ஸந்நிதானத்தை யடைந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து, "ஸ்வாமீ! சூரியனைப்போல் மகா தேஜஸ்விகளாய் விளங்கும் வீத்ஹோத்ரர் எனனும முநி ச்ரேஷ்டர் இரு சிஷ்யர்களுடன் நமது ராஜ த்வாரத்தில் கெழுந்தருளித் தம் வரவை ஸந்நிதானத்தில தெரிவிக்குமபடி ஆக்ஞாபித்தபடியால் விக்ஞாபித்துக்கொண்டேன். மஹாஸ்வாமிகளின சித்தமெப்படியோ?" என்றுரைத்தான்.

அக கஞ்சுகியின் வாக்கியத்தைக் கேட்டு அரசன் பரம சந்தோஷ பரிதனாய் சிமமாசனம விட்டெழுந்து மந்திரி புரோகிதர்களுடன் தானே நேரிலசென்று முனிவரை நமஸ்கரித்து "என தரண் மனைக் கெழுந்தருளி எனனைக் கிருதார்த்தனாகச் செய்யவேண்டும" என்று வணக்கத்துடன ப்ரார்த்தித்து அந்தப்புர சமீபத்திலுள்ள மணிமண்டபத்திற்கு அழைத்துச்சென்று, ரத்ந பீடத்தி லுட்கார செய்து, பட்டமகிஷியான ஸுநந்தாதேவியுடனும் சாமான்ய ஸ்திரீயான முராதேவியுடனும் அமமுனீசவருக்கு பாதப்ரக்ஷாளனம் முதலிய சோடசோபசாரமும் செய்து, அவர் பாதோதகத்தைத் தன் சிரசிலும, இருஸ்திரீகளின் சிரசிலும் ப்ரோக்ஷித்தான். அந்த பாதோதக பிந்துக்களில் ஒன்பது பட்டமகிஷியான ஸுநந்தாதேவியின் சிரவில க்ஷணகாலம் நின்று உடனே உருண்டு விழுந்துவிட்டன. சாமான்ய ஸ்திரீயான முராதேவியின் சிரசில் ஒரு பிந்து மட்டும் விழுந்து அசையாமல் அவ்விடமே நின்றது. இது கண்டு அவ்வேந்தன் தபஸ்வியைப் பார்த்து "ஹே! மஹானுபாவ! தமது பாதோதக பிந்துக்களில் ஒன்பது பட்டமகிஷியின்

சிரத்தில் க்ஷணிக காலம் நின்று விழுந்துவிட்டன. ஸாமான்ய ஸ்திரீ சிரசில் விழுந்த ஒரே பிந்துமட்டும் ஸ்திரமாய் நின்றது. இதற்குக் காரணமென்ன?" என்று கேட்டான்.

இதற்கம் முனிவர் "ஐயா மன்னனே! காரணம் கேட்பது இருக்கட்டும் புத்திரனைக் கோரும் உனக்கு பிந்துக்களின் பிரகாரம் பட்டத்தரசியிடம் ஒன்பது பிள்ளைகளும் உன் பிரிய பத்நியான சாமான்யஸ்திரீயிடம் ஒரு புத்திரனும் பிறப்பார்கள். ஆகாயத்தில் பிரகாசிக்கின்ற ஒரே சந்திர மண்டலமானது ஜலதரங்கங்களில் பிரதிபிம்பித்து அநேகம் பிம்பங்களாகத் தோன்றி, அலைகள் நின்றவுடன் மறுபடியும் ஒரே பிம்பமாகத் தோன்றுவது போல், அந்த உதக பிந்துவானது சலிக்காமல் நின்றது. இனி நமது ஆச்ரமத்திற்கு செல்லவேண்டும்" என்றுரைத்தனர்.

தபோதனரின் வாக்கியத்தைக்கேட்டு அரசன் "ஹே! முனிவர! வேதத்திற்கொப்பான தமது வாக்யத்தாலும், பரிபூரண அநுக்ரஹத்தாலும் நான் புத்திரர்களை யடைவதில் சந்தேகமில்லை. இக்கலியுகத்தில் தம்மொத்த மகா முனி சரேஷ்டர் எனக்கு தரிசனம் தந்து என் கிருஹத்தை பரிசுத்தம் செய்த காரணம் யாதோ?" என்று கேட்க, அம்முனி சிரேஷ்டர் "நாம் மகோதய புண்யகாலத்தில் ஸ்நானம் செய்யும் நிமித்தம் பிரயாகை க்ஷேத்ரம் சென்று அங்கிருந்து காசி க்ஷேத்ரமடைந்து விசவேச்வரனைத் தரிசித்து இக்கலியுகத்தில் தருமத்துடன் ராஜ்ய பரிபாலனம் செய்யும் உன்னைப் பற்றிக் கேள்விப்பட்டு, நேரில் பார்க்க வெண்ணி வந்தோம். அவ்வாறே கண்டு மிகவும் சந்தோஷித்தோம். சுகத்துடன் இரு" என்று ஆசீர்வதித்து, மணிபீடம் விட்டெழுந்திருந்து மந்திரி புரோஹித சமேதனை அரசனுடன் வாசற்படிவரையில் நடந்துவந்து தனனிரு சிஷ்யர்களுடனும் அவ்விடமே மறைந்துவிட்டனர்.

முனிவர் அந்தர்த்தான மடைந்ததைக் கண்ட வரசன், வந்தவர் சாபாநுக்ரஹ ஸம்பன்னரான மகாருஷியானதால் அவரநுக்ரஹப்ரகாரம் நமக்குப் பிள்ளைகள் பிறப்பார்களென்று சந்தோஷ ஸாகரத்தில் மூழ்கினவனாய்த் தனது ஆஸ்தான மண்டபம் வந்து சேர்ந்

தான். அது முதல் ஸர்வார்த்த ஸித்தியின் ப்ரியபத்நியாகிய முராதேவி அம்முநிவரின் பராசாதத்தினுல் கர்ப்பம் தரித்துப் பூரண மாசத்தில் ஓர் புத்திரனை ப்ரஸவித்தாள். அரசன் ஆனந்தபரிதனாய் அக்குழந்தைக்கு மௌர்யனென்று நாமகரணம் செய்தான். பின்னும் சிலகாலம் கழித்து பட்டத்தரசியான ஸுநந்தை கர்ப்பந் தரித்து, க்ரமமாக ஒன்பது குமாரர்களையும் பெற்றாள். வேந்தன் அவர்களில் மூத்தவனுக்கு நந்தனென்றும், இளையவனுக்கு ஸுநந்தனென்றும், மூன்றாவனுக்கு உபநந்தன் என்றும், நான்காவனுக்கு ப்ரநந்தன் என்றும், ஐந்தாவனுக்கு லோகநந்தன் என்றும், ஆறாவது பிள்ளைக்கு குருநந்தன் என்றும், ஏழாமவனுக்கு ப்ரியநந்தன் என்றும், எட்டாமவனுக்கு மித்ரநந்தன் என்றும், ஒன்பதாவது பிள்ளைக்கு விநந்தன் என்றும், யாவருக்கும் "நந்த" சப்தத்தையே முன்னிட்டு நாமகரணம் செய்தான். நாளுக்கு நாள் சுகல பக்ஷத்திய சந்திரனைப்போல் வளர்ந்துவரும் குமாரர்களைப் பார்த்துப் பூரண சந்திரனைக்கண்ட சமுத்ரம் போல் சந்தோஷத்தால் பூரித்தான் அரசன்.

## இரண்டாவது அத்தியாயம்.

(*)

# நவநந்தர்களின் துராலோசனை.

சிலகாலம் இவ்விதம் சென்றது ஸர்வார்த்தஸித்தி மஹாராஜன் தனது பிரிய பத்நீ புத்ரனான மௌர்யன் தக்க வயதடைந்து, சகல வித்தைகளையும் அப்யஸித்து வீர்யாதி குணஸம்பன்னனாக விளங்குவதைக்கண்டு, அவனுக்கு அநேகம் கன்னிகா ரத்னங்களை விவாகம் செய்வித்து சிம்மாசன மேறுவ தொன்று தவிர்த்து மற்ற ஸர்வாதிகாரங்களையும் அவனிடமொப்புவித்தான். அம் மௌர்யன், வித்தை புத்திகளாலும், சுபாவசித்தமான நற்குணத்தாலும், சகலப் பிரஜைகளுக்கும் ஸம்மதனாக, விருத்த மந்திரிகளின் புத்திரர்களுக்குப் புத்திமதிகளை யுபதேசித்து, அவர்களின் யோக்யதைக்குத் தக்கபடி உத்தியோகங்களி லவர்களை நியமித்தும், அவர்களால்

நடக்கும் காரியங்களை ஸமயானுஸாரமாயறிந்து கட்டளையிட்டும், பரம்பரைச் சூரர்களும், தனக்கு ஸமமான வயதினர்களுமான ஸிம்மபலன், பாகுராயணன், பத்ரபடன், டிங்கிராதன், பலகுப்தன் விஜயவர்மன், லோஹிதாக்ஷன், புருஷதத்தன் என்ற வீரர்களுக்கு ப்ரதம ஸேனாதிபத்திய மேற்படுத்தியும், பொக்கிஷத்திலிருக்கும் திரவியங்களை யபேக்ஷிக்காது, பாகுராயணனுடைய சேனாதிபதிகளைச் சத்துரு மன்னர்கள் மீது விடுத்து, சத்துருக்களைக் கீழ்ப்படியச்செய்து, அவர்களால் கப்பமாவும் காணிக்கைகளாகவும் கொடுக்கப்படும் பணங்களைப் பொக்கிஷங்களில் சேர்த்தும், ப்ரஜைகளுக்குத் தத்தமது தொழில்களை சரிவர நடத்தி வரும்படி போதித்தும் அதனால் ஐசுவரிய சம்பன்னர்களாயிருக்கும் குடிகளிடமிருந்து க்ரமமான தீர்வைகளை வாங்கி அவைகளைக்கொண்டு ராஜாங்கச் செலவுகளை நடத்தியும், பிதாவான ஸர்வார்த்தஸித்திக்குச் சற்றும் சிரமமில்லாது ராஜ்ய விசாரத்தைத் தானே நிர்வகித்தும், நவநந்தர்களிடம் ஸ்வாமி பக்தியுடன் நடந்து கொண்டும், அமாத்யனான ராக்ஷஸனுக்கு ஸம்மதனாக இருந்து வந்தான்.

சில காலங்கழித்து, அரசன், பட்டமகிஷியின் புத்திரர்களான நவநந்தர்கள் தக்க வயதடைந்தது கண்டு அமாத்ய ராக்ஷஸன் வசமொப்பிவிக்க, ராக்ஷஸனும், அவர்களுக்குச் சகல வித்யாப்யாஸங்களும் செய்வித்து, யானையேற்றம், குதிரையேற்றம், அஸ்திர சஸ்திர வித்தைகள் முதலியவற்றைத் தானேயுபதேசித்து அவரவர்களின் இஷ்ட ப்ரகாரம் க்ஷத்ரிய குலத்துதித்த கன்னிகைகளை விவாஹம் செய்வித்து, நவநந்தர்கள் சுகித்திருப்பதைக் கண்டு தான் சந்தோஷித்திருந்தான். அரசனின் ப்ரிய பத்நீ புத்திரனான மௌர்யனுக்கு அவனது அநேகம் பத்நிகளிடம் சந்திரகுப்தன் முதலிய நூறு பிள்ளைகள் பிறந்தார்கள். நவநந்தர்கள் அஸ்திர சஸ்திர வித்தைகளில் அதி நிபுணர்களாயிருப்பது கண்டு அரசன் சகல ஜனங்களின் அனுமதியையும் பெற்று, மூத்த பிள்ளையான நந்தனென்பவனை சிம்மாசனத்திலேற்றி, யுவ ராஜ்யாபிஷேகம் செய்வித்தான்.

மற்றவர்களும் ராஜ்யாதிபத்யத்திற்கு யோக்யதை யுள்ள வர்களாதலால், மூத்தோர்கள் சொல்வதை இளையவர்கள் அனுசரித்தும், இளையவர்கள் தெரிவித்துக் கொள்வதற்கு மூத்தோர்கள் இணங்கியும், எல்லோரும் ஐகமத்யம் தவறாது ஆதிபத்யம் புரியும்படி நவநந்தர்களுக்குக் கட்டளையிட்டு சமயங்களுக்கேற்ற புத்திமதி கூறும்படி அமாத்ய ராக்ஷஸனையும் நியமித்தான். அவர்கள் அவ்விதமே ராக்ஷஸனிடம் பூர்ண விசுவாசம் வைத்து அவன் சொற்படி நடந்துகொண்டு வருவதைக் கண்டு, மிகவும் சந்தோஷத்துடனிருந்தான்.

இவ்விதமிருந்துவரும் காலத்தில் ஸர்வார்த்தஸித்தி மஹாராஜன் தனது யௌவன திசை கழிந்து வருவதைக்கண்டு, தினந்தோறும் பரலோக சாதனமான புண்ய கதைகளைக் கேட்டும் மஹாதானபூர்வமாய் தத்துவஞான சம்பன்னர்களான அந்தண சிரேஷ்டர்களை பூஜித்துக் கொண்டும் இருந்தான். ப்ரியபத்நீ புத்ரனான மௌர்யனும் நவநந்தர்களிடம் ஸேவகத் தன்மையிலிருந்து.கொண்டு, நாளுக்குநாள் வளர்ந்து வரும் சந்திரகுப்தன் முதலிய தனது நூறு புத்திரர்களுக்கும் வித்யாப்யாஸம் செய்விக்கும்படி தக்க ஆசிரியர்களை நியமிக்க, சந்திரகுப்தாதிகளும் ஆசாரியர் சொல்லும் பாடங்களை நன்குய்க கிரஹித்து, சகல வித்தைகளிலும் அஸ்திர சஸ்த்ராப்யாஸங்களிலும் அதி நிபுணர்களாயும், தேஜோவான்களாயும் சூரர்களாயும், விநயாதிகுண சம்பன்னர்களாயும் இருந்து வந்தனர்.

இவ்விதம் வித்தையிலும், புத்தியிலும், சௌரியத்திலும் தங்களைக் காட்டிலும் மிஞ்சினவர்களாயும், நீதியில் விருத்த மந்திரிகளுக்கு சமானர்களாயும், சகலப் பிரஜைகளுக்கும் ஸம்மதர்களாகவும் இருக்கும் மௌர்ய புத்திரர்களைக் கண்டு "ஞாதிமத்ஸரம்" என்னும், அக்னியானது நந்தர்களின ஹிருதயமாகிய அக்நி குண்டத்தில் குரோதமாகிய கட்டைகளாலும், அசூயை யாகிய ஆஜ்யாஹுதியாலும் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு வந்தது. இதனால் நவநந்தர்கள் தமக்குள் யோசித்ததாவது:—"சூத்திர ஸ்திரீ புத்திரனான மௌர்யனின் புத்திரர்கள் நமக்கு ஞாதிகளாயும், சகல வித்தை

களிலும், பராக்ரமத்திலும் நம்மிலும் பதின்மடங்கு அதிகர்களாகவுமே இருந்து வருகிறார்கள். இவர்கள் புத்தி சாதுரியத்தையும் சக்தி ஸாஹஸங்களையும் சகல ப்ரஜைகளுக்கும் ஸம்மதர்களாயு மிருப்பதை யும் ஆலோசித்தால், சில காலத்தில் நமது தேசத்தையும், அரசாட்சியையும், செங்கோலையும் அபேக்ஷித்துச் சமயம் பார்த்து ஆக்ரமித்து விடுவார்கள்போலிருக்கிறது. ஆகையால், எவ்வித உபாயத்தினாலேனும் இவர்களை இப்பொழுதே நிக்ரஹம் செய்யாது நாம உபேக்ஷையாயிருந்து விடுவோமாகில், பின்னால், இவர்களால் நமக்குப் பெருத்த அநர்த்தம் ஸம்பவிப்பதில் தடையே யில்லை" என்று தீர்மானித்து, ஏகாந்த ஸ்தானத்தில் அமாத்ய ராக்ஷஸனை வரவழைத்து இவ் விஷயத்தை விவரமாகத் தெரியப்படுத்தினார்கள்.

அதைக்கேட்ட ராக்ஷஸன், "அன்புள்ள அரச குமாரர்களே! யாதுகாரணமுமின்றி ஞாதிமத்ஸரமொன்றையே எண்ணி, ஸாத்விக சுபாவமுள்ளவர்களாயும், நமக்கு அனுகூலர்களாயுமுள்ள இம் மௌர்யர்களை ஸம்ஹரித்தால் உலகத்தில் அபக்யாதி உண்டாவதுடன் சகல ப்ரஜைகளும உங்களிடமுள்ள விசுவாஸத்தை விட்டு விடுவார்கள். இதுவே உங்களுக்கு மஹத்தான அநர்த்தத்தையும், ஆபத்தையும் விளைவிக்கும். இதல்லாது, நிரபராதிகளான மௌர்யர்களை ஸம்ஹரிப்பதால் உங்களுக்கு தேவ ஸஹாயமும் தப்பிவிடும. என்புத்தியைக் கொண்டாலோசித்தவரையிலும் மௌர்யர்கள் உங்களிடம பகைமை பாராட்ட மாட்டார்களென்பது நிச்சயம். இக்காரியத்தை இத்துடன் மறந்துவிடுங்கள்" என்றான்.

அமாத்ய ராக்ஷஸன் எவ்வளவு சொல்லியும், நந்தர்கள், "கேடு வரும் பின்னே, மதிகெட்டு வரும் முன்னே" என்றபடி, காலபாசத்தினால் கட்டுண்டவர்களாக "எவ்விதத்திலும் மௌர்யர்களை ஸம்ஹரித்து விடவே வேண்டும்" என்றார்கள்.

இது கேட்ட ராக்ஷஸன், "அரச குமாரர்களே! மௌரிய புத்திரர்களால் காலாந்தரத்தில் ஸிம்ஹாஸநாதிபத்யமும் ஆக்ரமிக்கப் படுமென்ற அச்சம் உங்களுக்கிருக்குமாகில், ஒன்று சொல்லுவேன்:—

இனிச் சத்துருக்களால் உங்களுக்கு உபாதி ஏற்படும் ஸமயங்களில், மௌரியர்களை அவர்கள் மீது தண்டெடுத்துச் செல்லச்செய்து அச்சத்துருக்களைக் கொன்று அவர்களை நிக்ரஹித்துவிட்டால் உங்களுக்குச் சத்துருபாதை தப்பும். லோகாபவாதமும் உண்டாக மாட்டாது.” என்றுரைத்தான்.

அவ்வார்த்தையைக் கேட்டு நந்தர்களில் விநந்தன் என்பவன், “ஐயா, அமாத்யனே! ஞாதிகளுள் பரஸ்பரம் மத்ஸரமுண்டாவதும் அதற்கு நிவர்த்தியைத் தேடுவதும், உலக ப்ரஸித்தமான விஷயம். இது நமது சந்திரவம்சத்தினர்களான பூர்வீக அரசர்களில் அனேகமாய் நடந்திருக்கிறது. அஃதிருக்கட்டும். தேஹத்திலுண்டான வியாதியானது அபத்ய ஸேவையால் விருத்தியடைந்து சரீரத்தை எவ்விதம் நாசப்படுத்துகிறதோ, அதே விதமாக, ஒருகுலத்தில் பிறந்தவர்களாயினும் மத்ஸரமேற்பட்டுவிட்டால் ஸமயமறிந்து எதிரியை நாசப்படுத்தி விடுவார்கள். பின்னும் கழுத்திற் சுற்றிய அரவத்தைத் தனது உத்யானவனத்துப் பாம்பு என்று அதனிடம் விச்வாஸம் வைக்காது, எவ்வித உபாயத்தாலேனும் அம்மஹா ஸர்ப்பத்தைக் கொன்று சுகித்திருப்பவனுக்கு நல்லபாம்பைக் கொன்ற தோஷாபவாதங்கள் தைவ ப்ராம்ஹண பூஜைகளால் எவ்விதம் நிவர்த்தியாய் விடுமோ, அவ்விதமே மௌர்யர்களைக் கொல்வதினாலுண்டாகும் தோஷாபவாதங்களும் மஹாதானங்களாலும் தருமத்துடன் ப்ரஜைகளைப் பரிபாலிப்பதாலும் நிவர்த்தியாய் விடும்” என்றான்.

உடனே ராக்ஷஸன் சொன்ன வுபாயத்திற்குச் சம்மதித்தவனைத் தோன்றிய குருநந்தனைப் பார்த்து உபநந்தனென்பவன் “அடா தம்பி! இவ்வமாத்யர் சொற்படி மௌரியர்களை சத்துருக்களின் மீது விடுத்தால், இவர்கள் சத்துருக்களால் மடிந்துவிடும் பக்ஷத்தில் தான் நமதெண்ணம் நிறைவேறிவிடும். அப்படியின்றி இம்மௌர்யர்களாலேயே சத்துருக்கள் ஜயிக்கப்பட்டு விடுவார்களாகில் உலகில் இவர்களுக்கு ஸமானர்களான சூரர்கள் வேறில்லையென்னும் கீர்த்தியுண்டாகும். ஆதலால் நமக்கேற்படக் கூடும் அபாயத்திற்கு மௌரியர்களின் அபிவிருத்தியே அதிக ஸாதகமாகுமல்லவா?” என்றான்.

சென்றவர்கள் ஸம்ஹரிக்கப்பட்டால் மீந்து இவ்விடமிருப்பவர்கள் நமக்கு மித்துருவாவார்களோ? அவர்கள் நமது சூழ்ச்சியை யறியும் பக்ஷத்தில் பழிக்குப் பழிவாங்காது விடுவார்களோ? இந்தயோசனை நமக்கே கேடுவிளைவிக்கும். ஆதலால வேறுவிதம் ஆலோசியுங்கள்" என்றான்.

இவற்றையெல்லா மிருவரை கேட்டுக்கொண்டிருந்த ஜேஷ்ட நந்தன் "ஐய! அமாத்யராக்ஷஸரே! இக்கலியுகத்தில் ஸமுத்ர விருத்தி யால் பிராமணர்களுக்கு ஜீவனமும், ராஜவம்சத்தில் உதித்தவர்களுக்கு அரசுத்தலைமையும் உண்டாகிறதென்பது சாஸ்த்ர ஸித்த மானது. மஹா சூரர்களான நமது மௌரியர்கள் ஸேநா ஸமேதர்களாகச் சத்துருக்களின்மீது படையெடுத்துச் சென்றால் எப்பேர்ப்பட்ட துர்ஜனர்களான சத்துருக்களானாலும், இவர்களாலேயே கொல்லப்படுவார்களென்பது நிச்சயம். அப்பொழுது அதி சூரர்களென்று பிரஸித்திபெற்று ஸேநா ரஞ்சகர்களாய் விளங்கும் நமது ஞாதிகளான மௌரியர்களுக்கு நமது ராஜ்ய பிரபுத்வத்தை வேறொருவர் கொடுக்கவும்வேண்டுமோ? அவர்கள் எங்குநின்றாலும், அவ்விடமே அரசாங்கமாய்விடத் தடையுண்டோ? பிரஜைகள் அவர்களை யனுஸரிப்பதிலும் ஆக்ஷேபமில்லை. கடைசியாக நமது சத்துருக்களும் வீரர்களும் நீதிமான்களுமான மௌரியர்களை வழிபட்டு அவர்களுக்குப் பரம மித்திரர்களாகி, நம்மை யெதிர்ப்பார்களாகை யால், ஏதேனும் ஓர் விதத்தில் அவர்கள் யாவரையும் ஒரேதடவையில் பிறர் அறியாமல் ஸம்ஹரிப்பதே உசிதமல்லது வேறில்லை" என்றான்.

அமாத்ய ராக்ஷஸன், தன் மனதில், "மௌரியர் சுபாவத்தில் குணசாலிகள். நந்தர்களிடம் எஜமான பக்தியுடனிருப்பவர்களாதலால் காலாந்தரத்திலும் இவர்களிடம் பகைமை பாராட்டி ராஜ்யத்தை யாக்ரமிக்க மாட்டார்கள். மௌரியர்களை அடியோடு நாசம் செய்துவிட்டால், சத்துருக்களுக்குத் தைரியமுண்டாகி இந்த ராஜ்யத்தையு மாக்ரமித்து விடுவார்கள். நந்தர்கள் பொறாமை கொண்டு, ஸஹோதரபாவத்தையும் அவர்களால் தமக்குக்கிடைக்கும் ஸஹாயங்களையும், அவர்கள் தமக்குக் கீழ்ப்பணிந்து நடந்து வரு

வதையுமறியாமல், அவர்களைக் கொல்ல நினைக்கிறார்கள். ஆனாலும், இச்சமயம் இவர்கள் எண்ணத்தை மாற்றினால், காலாந்தரத்திலாவது நந்தர்களுக்கு அவர்களிடமீ துவேஷபுத்தி நீங்கிவிடலாம். சுக ஸந்தோஷத்துடன் அழிவில்லாது ராஜ்யம் ஆண்டுகொண்டிருக்க லாம். மஹத்தான தோஷமும் அபகீர்த்தியும் உண்டாகமாட்டாது." என்று நீடித்து ஆலோசித்து, "ராஜபுத்திரர்களே! ராஜோத்த மனான ஸர்வார்த்த ஸித்தியின் அரசாட்சியிலிருக்கும் ராஜாபரிவார ங்களிலும் விருத்தருக்குமுன் பாலகர்களுக்கு மரணமிதுவரையுண் டானதில்லை. நீங்கள் ஸத்புத்திரர்களானதால் என்றும் ஒருவித துக்கமுமறியாத உங்கள் தந்தைக்குப் புத்ரசோகம் வராது. அவர் உயிருள்ளமட்டும் நீங்களாதரித்து விட்டால், ஸர்வார்த்த ஸித்தி ஸத் ஸந்தானமுள்ளவனென்ற கீர்த்தி உங்களுடைய தல்லவா? ஸகல விதத்திலும் உங்களுடைய செல்வத்தையும் ஸாகத்தையும் அபே க்ஷித்து ஸேவகபாவத்தி லிருந்துவரும் எனக்குத் தோன்றியதை விஞ்ஞாபித்துக்கொண்டேன். இதற்குமேல் தங்கள் சித்தம்போல் செய்யலாம்" என்றான்.

அது கேட்டு விநந்தன் "ஐயா! அமாத்யரே! மௌரிய நிக்ர ஹம் தங்களுக்கு ஸம்மதமில்லாவிடில் இவ்வபிப்ராயத்தைச் சற்றும் வெளிவிடாமல் மனதிலேயே வைத்துக் கொள்ளவேண்டியது தான் தங்களால் எங்களுக்குக் கிடைக்கவேண்டிய மஹோபகாரம்" என்றுரைத்து விட்டு, "அண்ணன்மார்களே! இந்த யோசனை அமாத்ய ராக்ஷஸரிடம் செய்யத் தக்கதன்று. நமது யோசனை நமக் குள்ளேயே இருக்க வேண்டும். இதை விருத்தர்களிடம் தெரிவித் தால் அவர்கள் ஒருபோதும் ஸம்மதிக்கமாட்டார்கள்" என்றுரைத் தான். அதுகேட்டு, நந்தர்கள் அவ்வார்த்தைகளுக்கு உடன்பட்டு, தத்தமது அரண்மனைக் கேகினார்கள்.

பிறகு ராக்ஷஸன் தனக்குள் "ஐயோ! அனியாயம்! இந்நந்தர் கள்' நிரபராதிகளும் சாதுக்களுமான மௌரியர்களை அகாரணமாகச் சில நாள்களில் கொன்றுவிடத் தீர்மானித்து இருக்கிறார்களே! நாம் இச்சங்கதியை வெளியிட்டு இக்காரியத்தை நிறைவேறாது செய்வோ மென்றால், அது ஸ்வாமி துரோகமும் நம்பிக்கைத்ரோகமுமாகும்.

"விதியை யனுஸரிக்கும் மதி" யென்றபடி, நடப்பது நடந்தே தீரும். அச்சமயத்தில் நான் ஸஹாயகனாக இல்லாவிடினும், இந்நகரிலிருந்தால், நவநந்தர்களுக்கு இககாரியம் அமாத்யராக்ஷஸனுதவியில்லாது நடக்காதென்ற மஹத்தான அபவாதத்திற்கு நான் ஆளாவதுடன், நந்தர்கள் அடையும் அபவாதத்திலும் கூடப் பங்குபெற வேண்டும். ஆதலால் நான் ஏதாவது போக்குக் காட்டி இப்பட்டணம் விட்டகன்று இருக்கவேண்டும்." என்று தீர்மானித்து "எவ்விடம் செல்லலாம்" என்றுலோசித்துக்கொண்டே தன் வீடு வந்துசேர்ந்தான்.

மறுநாள் நவநந்தர்கள் தமக்குள் ஓர்விதம் ஆலோசித்து முடித்துக்கொண்டு தாருவன்மா என்னும் சிற்பியை வரவழைத்துப் பட்டணத்திற்கு வெளியிலிருக்கும் உத்யானவனத்தில் விஸ்தாரமாய் ராஜ யோக்யமான ஒரு வீடும், அகன்கீழ் நிலமாளிகையும் கட்டி, அவ்வீட்டிற்கு முன்பாகத்தில் திவ்ய தடாகமொன் றுண்டாக்கி அதனைச் சுற்றிப் பல புஷ்பச்செடி கொடி விருக்ஷங்களைக் கற்பித்து, அவ்விடமே இருந்து அதனைப் பாதுகாத்துவரும்படி உத்தரவிட்டு அனுப்பினார்கள். தாருவர்மனும் அரச குமாரரின் உத்திரவை யனுஸரித்து ஸகலமும் செய்து வந்தான்.

---

மூன்றாவது அத்தியாயம்.

## மௌரியர் வதம்.

—:0:—

இதற்குப்பின் சில நாட்கள் கழித்து ஒருநாள் ராஜ பௌராணிகன், விநந்தன் ஸமீபம் வந்து, கைகூப்பி, "ஐயா ராஜபுத்திரனே! விருத்த மஹாராஜரின் சந்நிதானத்தில் இதுவரை படித்துவந்த மஹாபாரத புராணம் இன்று சமாப்தி யாகிறது. மங்கலாலத்தி தரிசனத்திற்குத் தாங்கள் சகோதரர்களுடன் எழுந்தருளவேண்டும்" என்றுரைத்தான்.

அதுகேட்டு விநந்தன் தன்மனதில், "கும்பிடப் போனதெய்வம் குறுக்கிட்டதுபோல், பௌராணிகர் வந்திருக்கிறார். தந்தை பக்கத்திலிருக்கும்போது மௌரியர்களை நிக்ரஹிக்க முடியாதாகையால் தகப்பனாரை வேற்றிடம் செல்லும்படி ஏற்பாடு செய்வதற்கு

இப்புராணீகன்தான் முதல் சாதனம்.” என்று தீர்மானித்து “ஐயா பௌராணிகரே! நாங்களெல்லோரும் அவசியம் வந்திருந்து கற்பூர ஆலத்தியும் ப்ரசாதமும் பெற்றுக்கொண்டு உமக்கு வேண்டிய அளவு வெகுமதிகளும் அளிக்கிறோம். அஃதிருக்கட்டும்—நாளைமுதல் அரசன் சந்நிதானத்தில் ப்ரயாகை க்ஷேத்ர மஹிமையை நன்றாய் விஸ்தரித்துச் சொல்லவேண்டியது. சமீபத்தில் வரும் அர்த்தோதய புண்யகாலத்தில் பிரயாகையில் மகாஸ்நானம் மெத்த விசேஷமென்பதையும், முக்தி தரும் என்பதையும் நீர் அறிந்திருக்கிறீரல்லவா? நமக்கு நீர் முக்யமாய் வேண்டியவர். சரி போய்வாரும்” என்றனுப்பிவிட்டு ஸஹோதரர்களிடம் இச்சங்கதியையும் தான் செய்திருக்குந் தந்திரத்தையும் சொல்லி எல்லோரையும் அழைத்துக்கொண்டு தாய் தந்தையர்கள் சமீபம் சென்றான்.

அச்சமயம் நடந்த பாரதபுராண கதை பூர்த்தியாகும் சமயத்தில் அளவற்ற திரவியங்களையும் வஸ்திராபரணங்களையும் நந்தர்களிடம் பரிசுபெற்ற பௌராணிகனும் அன்றுமுதல் காசிகாண்டம் வாசிக்க ஆரம்பித்து, விசேஷமாய் ப்ரயாகை மகிமையை எடுத்துச் சொல்லிவந்தான். அக்கதையில் “மாக ஸ்நானம் மஹா பல ப்ரதம்” என்று அடிக்கடி கூறப்படுவதைக் கேட்ட அரசன், அவசியம் ப்ரயாகையில் வஸித்து மாகஸ்நானம் செய்யவேண்டுமென்று நிச்சயித்தான்.

அச்சமயம் நந்தர்கள் தமக்கு மௌரியர்களிடமிருக்கும் மாத்சரியத்தையும் துராலோசனையையும் வெளிப்படுத்தாது, அவர்களுக்கிருக்கும் அஸ்திர சஸ்திர வித்யா சாமர்த்தியங்களைக் கண்டு மிகவும் சந்தோஷிப்பவர்கள் போலும், அவர்களிடம் அதிக விசுவாசமிருப்பதுபோலும் நடித்தும், வஸ்திரபூஷணங்களால் அடிக்கடி சன்மானித்து யதார்த்தமாயவர்கட்குத் தம்மிடத்துள்ள விசுவாசத்தை விருத்திசெய்தும், ஆயுதவித்தைகளில் சூரர்களும் விசுவாசிகளுமான நூறு பிள்ளைகள் நமக்கிருக்கும்போது இவ்வுலகில் நமக்கு ஸமானர்கள் இல்லவே இல்லையென்று அடிக்கடி சொல்லிக்கொண்டும், மௌரியர்களின் வீரசூர பராக்ரமங்களைக் காணுந்தோறும் உண்டாகும் பயத்தை விசுவாசமாகவும், அசூயையை ஸந்தோஷம

கவும், கோபத்தைச் சிரிப்பாகவும் கபடமாகக் காட்டிக்கொண்டும் அவர்களை ஸம்ஹரிக்கத் தக்கசமயத்தையே எதிர் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இவ்விதமிருக்கும் நாளில் விருத்தராஜன் தான் ஸமீபத்தில் வரும் மாகமாஸ ஸ்நானத்திற்கு பத்னீ பரிவார ஸமேதனாய் பிரயாகை செல்லத் தீர்மானித்து அதற்காக வேண்டிய சகல காரியங்களையும் உடனே ஸித்தப்படுத்தி யனுப்பவேண்டிய தென்று நந்தர்களுக்குத் தெரிவித்தான். முந்தியே ஊர்விட்டுச் செல்லத் தீர்மானித்திருந்த ராக்ஷஸனும் இதுவே ஸமயமென்று, நந்தர்களைப்பார்த்து "ராஜகுமாரர்களே! மாகஸ்நானத்திற்காக உங்கள் தகப்பனார் பத்தினிகளுடன் ப்ரயாகைக்குச் செல்வது யுக்தமானதுதான். விருத்தர்களான தாய் தந்தையர்கள் அந்தப்புரத்திய ஸ்திரீகளுடன் கூடமட்டும் போய்வருவது பிசகு. அவர்களுக்கு ஆகவேண்டிய உதவிக்காரியங்களுக்கு நீங்கள் யாராவது கூடசசெல்வதே உசிதம். உங்களுக்குச் சௌகரிய மில்லாவிடில் நானாவது கூடசசெல்லவேண்டுமே அல்லாது, இச்சமயம் வேறு அதிகாரிகளை ஸஹாயத்திற்கனுப்புவது சிலாக்கியமன்று. உங்களுத்திரவானால் அரசருடன் நானே போய்வருகிறேன்" என்றுரைக்க, நந்தர்கள் அதற்குடனே உடன்பட்டு "ஐயா அமாத்யரே! பொக்கிஷங்களிலிருந்து வேண்டிய வஸ்துக்களை வேண்டுமான அளவு எடுத்துக்கொண்டு விருத்தரான அரசருடன் நீரே சென்று வாரும்" என்றனுப்பினர்.

ராக்ஷஸனும், வேண்டிய பொருள்கள் யாவும் எடுத்துக்கொண்டு பத்னீ பரிவார ஸமேதனாகப் பிரயாணத்துடனிருக்கும ஸர்வார்த்த மஹாராஜனுடன் ப்ரயாகைக்குச் சென்றான்.

நந்தர்கள் தமது தந்தையை வழிவிட்டுவந்ததும் இனிச்சற்றும் தாமதிக்கக்கூடாதென்று அதற்கடுத்த நாளே தாங்கள் வேட்டையாடச்செல்வதாகப் பறையறைவித்து, வேட்டையாட்களை வலைமுதலிய ஸாமக்ரியைகளுடன் முந்திக் காட்டிற்கனுப்பிவிட்டு ஊருக்கு வெளியிருக்கும் உத்யான வனத்திலுள்ள வீட்டில் சாப்பாடு சித்தப் படுத்தும்படி பரிசாரகர்களுக்கு ஆக்ஞாபித்து, மௌரியனை அவன் புத்திரரெல்லவருடனும் வருமபடி சொல்லி யனுப்பினார்கள்.

உத்தம அசுவங்களை ஸித்தப்படுத்திக்கொண்டு நூறுபிள்ளைகளுடனும் வந்தான் மௌரியன். அவனைப்பார்த்து "அண்ணு! மிருகங்களை வேட்டையாடுவதில் அநேகம் ஆச்சரியங்களுண்டென்று கேட்டிருக்கிறோமல்லாது அனுபவித்ததில்லை. இத்தினம் நாமெல்லோருமாகச் சென்று அவைகளை வேட்டையாடிவந்து நகரத்திற்கு வெளியில் இருக்கும் உத்யானவனத்தி லிறங்கி ராஜகுமாரருடனும் சிநேகிதர்களுடனும் விநோதமாகச் சேர்ந்து போஜனம் செய்து எல்லோரும் விளையாடித்திரிந்துவிட்டு நாளையதினம் நகரம்வந்து சேரலாமென்று ஏற்பாடு செய்திருக்கிறோம். பெரிய அரசர் இங்குவந்தபின், அவர் நாமெல்லோரும் சேர்ந்து வெளியிறபோவதறகும் மெய்ககாவலற்று விளையாட்டாகத் திரிவதற்கும் சம்மதிக்கமாட்டார். ஆகையால் தாங்கள் தயவுசெய்து இச்சமயமே புறப்படவேண்டும்" என்று ப்ரார்த்தித்தார்கள்.

நவநந்தர்களின் கபடமான துராலோசனையைச் சற்றுமறியாத மௌரியன் அதற்குச் சம்மதித்து, சகலபுத்திர ஸமேதனாக நந்தர்களுடன் வாஹனமேறிச்சென்றான். எல்லோரும் சென்றுமிருகங்களை வேட்டையாடிச் சீக்கிரமாகவே வேட்டையைநிறுத்திவிட்டு அங்கிருந்து ஊர்வெளியிலுள்ள உத்யானவனம் வந்திறங்கி அதிசீதளமாயும் மிகு ரமணீயமாயுமிருக்கும் மரங்களின் நிழலில் உட்கார்ந்து சற்று இளைப்பாறியவுடன் தடாகத்தில் ஜலக்ரீடைசெய்து வஸ்திராபரணங்களாலும் கந்தபுஷ்பங்களாலும் தம்மை அலங்கரித்துக்கொண்டு போஜனசாலை சென்றனர். அவ்விடம் நந்தர்களால் செய்யப்பட்ட ஏற்பாட்டின்படி பந்துமித்ரஜனங்கள் முதல் பந்தியில் உட்கார்ந்திருந்தார்கள். நந்தர்கள் யாதுமறியாதவர்கள்போல "எங்களுக்கு இவ்விடம் இலைபோடவில்லைபோலும், பந்துமித்திரர்கள் காற்றோட்டமாக இவ்விடமுட்காருவதுதான் சிலாக்யம். எங்களுக்குப் பசியதிகமாயிருக்கிறபடியால் கீழ்புறமிருக்கும் நிலமாளிகையில் இலை போடுங்கள்" என்று பரிசாரகர்களுக்கு ஆக்ஞாபிக்க அதற்கென்றிருக்கும் சுயம்பாகிகளும், அதிசீக்கிரமாக இலைகளைப்போட்டுப் பரிமாறினர். உடனே நந்தர்கள் மௌரியனையும் அவன் குமாரர்கள் நூறுபேர்களையும் அதியுபசாரத்துடனழைத்துச்சென்று நில மாளிகையில் பரிமாறி

யிருக்கும் இலைகளில் உட்காரவைத்துச் "சீக்கிரம் பரிமாறுங்கள்" என்று சுயம்பாகிகளை யதிகாரம்செய்பவர்கள்போலும்,மேல பந்தியை விசாரிப்பவர்கள்போலும், தாமுமுட்கார இடந்தேடுபவர் போலும் அங்குமிங்குந் திரிந்துகொண்டிருந்து, சுயம்பாகிகளை வெளியில் கண்ஜாடையால் அனுப்பிவிட்டு, "ஏன் ஸரிவரப் பரிமாறவில்லை" யென்று கோபிப்பவர்கள்போல் எல்லோருமாக எழுந்து வெளியில்வந்து, மௌரியனும் அவன் புத்திரர்கள் நூறுபேர்களும் மட்டும் உட்கார்ந்திருக்கும் நிலமாளிகைக் கதவைப் பூட்டி அதற்கு முத்திரையுமிட்டு, ஜன அபவாதத்திற்குச் சற்றுமஞ்சாமலும், பந்து விசுவாசத்தை எண்ணாமலும்,தெய்வத்திற்குப்பயப்படாமலும்,மனச்சாக்ஷிக்கஞ்சாலும், பரலோக விசாரணையையும் மதிக்காமலும்,ஆயுதபாணிகளான அநேகம் பேர்களை யங்குக்காவல் வைத்து "ஏவலீர்! ஏதோ குற்றத்தால் சிறைப்படுத்தப்பட்டிருக்கும் மௌரியர்களுக்கு அன்னமும் நீரும் கொடுத்துவருவதாகவும், அவர்கள் உயிருடனேயே இருக்கிறார்களென்பதாகவும், ஜனங்களுக்குக் காண்பிக்கவேண்டியது. வாஸ்தவத்தில் இவர்களெல்லோரும் ஆகாரமற்று உயிர்விட்டதும் உடனே எங்களுக்கு ரஹஸியத்தில் தெரிவிக்கவேண்டியது" என்று கண்டிப்பாய் உததரவிட்டு, "இன்றுடன் நமது சத்துருக்கள் நாசமடைந்தார்கள" என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டு மெதத ஸந்தோஷத்துடனும் உற்சாகத்துடனும் தத்தமது வாகனங்களி லேறிப் பட்டணம் வந்து சேர்ந்தார்கள்.

காரா கிருஹத்திலடைபட்ட மௌரியனும் அவன் புத்திரர்கள் நூறுபேரும் துக்கத்தாலும் பசி தாகங்களாலும் வருந்தி மிகவும் மெலிந்து நாள் ஒன்றுக்கு எட்டுப் பத்துப் பேர் வீதமாக மடிந்து போனார்கள். சுத்த க்ஷத்திரிய வம்சம் அழியும் காலத்திற்கோ, அல்லது நந்தர்களிடம் கோபித்த தெய்வத்தின் ஏவுதலாலோ, நந்தர்களான மூங்கிற் காட்டிற்குக் காட்டுத்தீ போன்றவனும், நந்தர்கள் என்ற யானைக்கூட்டத்திற்கு மிருகேந்திரனை விம்மம் போன்றவனும் ஆன சந்திரகுப்தன் என்பவனொருவன் மட்டும் உயிர்த்திருந்தான். காரா கிருஹவாசலிற் காவல்காக்கும் ஆட்கள் பலகணி வழியாக உள்நோக்கி "மௌரியர்களெல்லோரும் மாண்டுவிட்டார்கள். இச்சங்கதியை யரசர்களிடம் தெரியப்படுத்தவேண்டு"மென்று

பேசிக் கொள்வதைச் செவியுற்று, சந்திரகுப்தன், "தூதர்காள் இவ்விடம் சிறைப்பட்டவர்களில் நானொருவனை தவிர மற்றவர்களனைவோரும் மாண்டு விட்டார்கள். என்னுயிரும் இன்னும் மூன்று நான்கு தினங்கட்குமேல் நில்லாது. நான் நிச்சயமாய் ஜீவிக்கப்போகிறதில்லை. என்னொருவனைப் பிணநாற்றம் வீசும் இவ்விடம் விட்டு வேறிடம் சிறைப்படுத்தினால் நான் ஒருவாறுவது சுகமாய் உயிர்விடுவேன். உங்களுக்கு என்மேல் சற்றாவது கருணையிருந்தால் எனது வேண்டுகோளை நந்தர்களின் ஸந்நிதானத்தில விஞ்ஞாபியுங்கள்" என்றான்.

அதுகேட்டுத் தூதர்கள் நந்தர்களிடம்போய் அவர்களைக் கும்பிட்டு "உத்யானவன காராகிருஹத்திலிருந்தவர்களில் சந்திரகுப்தன் ஒருவன் தவிர, மௌரியனும் அவன் புத்திரர்களும இறந்துவிட்டார்கள். அச்சந்திரகுப்தனும், இன்னமிரண்டொரு தினங்களில் சாவதில் தடையில்லை. அவன், 'சாகிறது சாகப்போகிறேன். பிணநாற்றம் என்னால் ஸஹிக்க முடியவில்லை. இதை விட்டு வேறிடத்தில் என்னை வைத்தால் நான் ஸந்தோஷமாய் உயிர்துறப்பேன். இப்பிரார்த்தனையை ஸாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து விஞ்ஞாபித்துக் கொள்கிறேனென்று ஸந்நிதானத்தில தெரிவியுங்கள்' எனச் சந்திரகுப்தன் சொல்லுகிறான்" என்றார்கள்.

இவ்வார்த்தையைக் கேட்ட நந்தர்கள் மெத்த ஸந்தோஷித்து, "இனிப் பிணநாற்றம் வெளிப்பட்டால் ஜனங்களின் 'ஹா! ஹா' காரம் அதிகரிக்குமாகையால் அக்காராகிருஹத்திற்கு அக்நிப்ரவேசம் செய்யவேண்டும். சந்திரகுப்தனும் இனிப்பிழைத்திருக்கப்போகிறதில்லையாகையால், அவனை அதற்குள்ளிருத்தி தீ மூட்டுதல் அநாவசியம்" என்று தீர்மானித்து 'அடா தூதர்களே!' சந்திரகுப்தனும் இரண்டொரு நாட்களில் மாண்டு விடுவது நிச்சயமென்று உங்களுக்குத் தோன்றினால் அவனை வேறொரு சிறைச்சாலையில் வைத்து அற்பமாக ஆகாரமளித்துவந்து அவனிறந்தவுடனே எங்களுக்கு அறிவியுங்கள். உத்யான வனத்திலுள்ள வீட்டிற்கு நெருப்பு வைத்துவிடுங்கள்" என்று உத்திரவிட்டனுப்பினார்கள்.

அந்தூதர்களும் அவ்விதமே வேறு சிறைச்சாலையில் சந்திரகுப்தனைக் காவலிட்டுக் கூடியவரை தயவுடனே அன்ன ஆகாரமளித்துவந்தார்கள். இவர்களால் தீமூட்டப்பட்ட நிலமாளிகையும் அதிலுள்ள சவங்களுடன் எரிந்து சாமபலாயிற்று. பிறகு நந்தர்கள் தமக்குள் "புத்திரஸோகத்தால் மௌரியன் மரணமடைந்தானென்றதையும் அதற்கு யதார்த்த காரணத்தையும் இதரர்கள் யாரேனும் சொல நமது தந்தை கேட்பாராகில், நம்மை மஹா துரோகிகளென்று சபித்து நமது முகாலோபமும் செய்யாது புத்ரசோகத்தால் இருந்தவிடத்திலேயே மரணமடைந்து விடுவாரென்பதற்கையமில்லை. ஆகையால் 'மௌரியர்கள் தமக்குத்தாமே ஆபத்தை வருவித்துக்கொண்டு உயிரிழந்தார்கள்' என்று நாம்முந்தியே பத்திரிகைமூலமாகத்தெரியப்படுத்திவிட வேண்டு"மென்று நிச்சயித்து அவ்வாறே தந்தைக்குக் கடிதமெழுதி ஆப்தர்களான தூதர்கையில் கொடுத்தனுப்பினார்கள்.

இதற்குள், பிரையாகையில் வஸித்துவரும் ஸர்வார்த்த ஸித்திராஜனின் பிரிய பத்னியான முராதேவியால் செய்யப்படும் பூஜைக்கும் அவளுடைய பக்திக்கும் மெச்சிய கங்கா பாகீரதிதேவி முராதேவியின் ஸ்வப்நத்தில் சுமங்கிலி ரூபமாகத்தோன்றி 'என் வீட்டிற்கு வா' வென்றழைத்தாள். இதைககேட்டு முராதேவியானவள் தன் பதிக்கு இச சமாசாரத்தைத் தெரிவித்து அவருடைய ஆக்ஞையையும் பெற்றுக்கொண்டு, திரிவேணிசங்கமத்தில் ஸ்நானம்செய்து பாகீரதியை வழக்கம்போல் பக்தியுடன் பூஜித்து "என்னைக் கிருதார்த்தமாக்கு" என்று பிரார்த்தித்தாள். அவள் மனோ நிச்சயத்திற்கு பிரஸன்னையான கங்காதேவியானவள் எல்லோரும் காணும்படிப் பிரவாஹத்தின்நடுவில் தனது திவ்ய ஹஸ்தத்தை நீட்டி முராதேவியின் கரத்தைப் பிடித்துக்கொண்டு கங்கா ப்ரவாஹத்தில் மறைந்துவிட்டாள். இதைக் கண்ட ஜனங்கள் இவ்வாச்சரிய ஸமாசாரத்தை ஸர்வார்த்த ஸித்தி மஹாராஜனுக் கறிவித்தார்கள். இது கேட்டவேந்தன் "முராதேவியானவள் பாகீரதியில் தன் சரீரத்தை யொப்புவித்து தந்யளானாள். அவள் ஜன்மம் சபலமாயிற்று" என்று சொல்லி பிரியபத்னீ வியோகத்தால் சற்றுத் துக்கித்து அமாத்தியராக்ஷஸனை

யழைத்து "ஐயா! அமாத்யனே! இம்முராதேவியின் சமாசாரத்தை நமது புத்திரனை மௌரியனுக்கு நீயே எழுது. அவன் மாதாவை நினைத்துத் துக்கப்படாமல் தேறுதல் கூறி, இன்ன மெட்டு நாட்களில் நாம் அவ்விடம் வருகிறோமென்று, சிரஞ்சீவிகளான நந்தர்களுக்கும் எழுதியனுப்புக" என்று ஆக்ஞாபித்தான். அமாத்யராக்ஷஸனும் அவ்விதமே பிரயாகையில் நடந்த ஸகல ஸமாசாரங்களையும் விவரமாக எழுதி அதைத் தூதர்கள் மூலமாகப் பாடலீபுரத்திற்கு அனுப்பிவிட்டு, சரீரத்துடன் நற்கதியடைந்த முராதேவிக்குப் பரலோகார்த்தமாக அனேக பிராமண ஸந்தர்ப்பணைகள் செய்து வந்தான்.

---

## நான்காவது அத்தியாயம்.

# வஞ்சகம் வெளிப்படல்.

இதே ஸமயத்தில் பாடலிபுரமிருந்து வந்த தூதர்கள் நந்தர்கள் அனுப்பிய கடிதத்தை விருத்தராஜன் முன்வைத்துக் கைகூப்பி நமஸ்கரித்தார்கள். ஸமீபத்திலிருந்த அமாத்யராக்ஷஸனும் "ஓஹோ! ஏதோ விசேஷ சமாசாரம்!" என்று அக்கடிதத்தைப் பிரித்து மனதிற்குள் படிக்கும் போது,

"மகா கனம் பொருந்திய தந்தையவர்களின் திவ்விய ஸந்நிதானத்தில் பாலகன் விநந்தன் செய்துகொள்ளும் விக்ஞாபனம்; தாங்கள் இங்கிருந்து சென்றதும் இவ்விடம் நடந்திருக்கும் அநர்த்தத்தைச் சொல்ல ஸாத்யமில்லை. என்னவெனில், ஒருநாள் மௌரிய புத்திரர்கள் மிருகவேட்டையாட வேண்டுமென்று எங்களை மிகவும் நிர்ப்பந்தித்ததால், நாங்களும் மௌரியனும் நூறு பேரையுமழைத்துச் சென்று வேட்டையாடிவிட்டுக் களைப்படைந்து சிரமபரிகாரத்திற்காக ஊர்வெளியிலிருக்கும் உத்யான வனத்திலிறங்கி அவ்விடமே சாப்பாடு சித்தப்படுத்தும்படி உத்திரவிட்டுப் பூந்தோட்டத்தைச் சுற்றிக் கொண்டிருந்தோம். அச்சமயம் மௌரிய

புத்திரர்கள் பசிதாங்காது நாங்கள் பந்திக்கு வரும் முன்னதாகவே அங்கு செய்துவைத்திருக்கும் மாப்பலகாரங்களை வாரித்தின்று 'காபி சாயன'மென்னும் தீவிரமான கள்ளை வரவழைத்து, அமிர்தமாகக் குடித்து அதனால் அறிவழிந்து சமையல்களை எச்சில் செய்தனர். சுபம்பாகிகள் தடுக்கவே, அவர்களை அடிக்குமாறு கையோங்கி தமக்குள்ளேயே ஒருவரை யொருவ ரடித்துப் பிடித்துப் பிணக் காடாக்கி, வளைந்த தூண்களுக்கு முட்டுக் கொடுத்திருந்த மரங்களிற் கட்டப்பட்டிருந்த கயிறுகளை உருவி இழுத்தனர். உடனே தூண்கள் மரங்கள் முதலியயாவும் மளமளவென்று கீழ் விழுந்தன. இச் சப்தத்தையும் பையன்களின் கோலாஹல சப்தத்தையும் கேட்டுத்திகைத்து இதென்ன வென்று பார்க்க, மௌரியன் ஓடோடியும் சென்று அக் கட்டிடத்திற் புகுந்தான். அதே ஸமயம் மேற்கட்டியுடன் கட்டிடம் சரிந்து விட்டபடியால் மௌரியனும் அவன் புத்திரர்களில் தொண்ணூற்றொன்பது பேர்களும் கட்டிடத்தின் கீழ் அகப்பட்டு மரண மடைந்தார்கள். சந்திரகுப்த னொருவன் மட்டும் படுகாயப்பட்டுப் பிழைத்திருக்கிறான். ஆயினும் அவனும் பிழைப்பதரிது. பிறந்தது முதல் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாமல் ஐகமத்ய மாயிருந்து வந்த எங்களைப் பிரித்து மௌரியர்களைக் கொல்லவும், எங்களால் யாதொருவித உதவியும் செய்யமுடியா வண்ணம் தடுக்கவும், எங்களை மட்டும் உயிருடன் வைக்கவும் தெய்வம் இருந்ததே! ஐயோ! இதை நினைக்குந்தோறும் எங்களுக்கு உண்டாகும் ஆச்சரியமும் அச்சமும் கொஞ்சநஞ்சமில்லை, தாங்களும் இவ்விடம் இல்லாது இருப்பதால் எங்களுக்கு எத்தனைபேர்கள் தைரியம் சொன்னாலும் திடீரென்று நேரிட்ட ஆபத்தையும், உயிர் நஷ்டத்தையும் நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும் எங்கள் மனதி லுண்டாகும் பீதியும், விசனமும் சற்றும் அடங்கவில்லையே! உத்திரவாகில் நாங்களும் அவ்விடம் வருகிறோம். இவ்வர்த்தமானத்தை எவ்விதம் எழுதுகிறதென்ற பயமும் கவலையும் ஒருங்குசேர்ந்து எழுதவொட்டாமற் செய்தபோதிலும், எழுதாத பக்ஷத்தில் ஸன்னிதானத்தில் பூரணாபராதிகளாவோமென்ற எண்ணத்தால் விக்ஞாபித்துக் கொண்டோம்.

இங்ஙனம்,

தங்கள்பணிவுள்ள

விநந்தன்."

இவ்விதமெழுதியிருக்கும் "வக்கணை"யை ராக்ஷஸன் படித்துக் கொண்டு தனக்குள் மெத்த ஆச்சரியத்துடன் "அடடா அநியாயமே!! நந்தர்கள் பெரியர்களிடம் நிஷ்காரணமாய் பகைமை பாராட்டியதற்கேற்ப, அரசன் ஊரிலில்லாத ஸமயத்தில் அவர்களைக் கபடமாய்க் கொன்று லோகாபவாதத்திற்குப் பாத்திரரானார்கள். இனி அவர்களுக்குத் தெய்வபலம் இல்லை. பிரஜைகளுக்கும் இவர்களிடம் அன்பு குறைந்துவிடும். இனிச் செய்வதென்ன? இதில் இருக்கும் ஹானிவிருத்திகள் இவர்களைத்தான் அடையும். ஆயினும் நான் இவர்களை உபேக்ஷித்தால் வெகு காலமாய் என்னை ரக்ஷித்த விருத்த அரசனுக்கு விசனமுண்டாகும். இதுவுமல்லாது, இவ்வரசன் தன் பிள்ளைகளுக்கு என்னாலேயே நற்கீர்த்தியுண்டாகுமென்று நம்பிக்கைகொண்டிருக்கிறான். ஆகையால் நான் யாதொன்றும் அறியாதவன் போல் இவ்வரசனைச்சமாதானப்படுத்தி ஊருக்கு அழைத்துச் செல்லவேண்டும்" என்பதாய் நிச்சயித்தான். பிறகு துக்கத்துடன் கடிதத்தைப் படித்துச் சொல்வதற் காரம்பித்துத் தாழ்ந்த குரலுடன் தியங்கித் தியங்கி வெகு கஷ்டத்துடன் படித்துக் கொண்டிருக்கும்போது, அரசன் அமாத்யனைப் பார்த்து 'ஏனையா அமாத்யனே! கடிதத்தைப் பார்த்ததுமுதல் சிந்தித்துக் கொண்டே கவலை பாய்ந்தவனாகக் காணப்படுகிறாய்? நமது பட்டணத்தில் அமங்கலமேதாவது உண்டாயிற்றோ? அல்லது நமது புத்திரர்கள் ஒருவருக்கொருவர் கலகம் செய்து ஏதேனும் ஆபத்தை விளைவித்துக் கொண்டார்களா? அதன் உண்மையைச் சீக்கிரம் ஒளிக்காமல் தெரிவிப்பாயாக" என்றான்.

அதற்கு ராக்ஷஸன் "ஸ்வாமி! தெய்வத்தின் கொடுமையை என்னென்பேன! புத்திர ஸகிதனான மௌரியனுக்கு ஆபத்துண்டாயிற்றாம்" என்றுரைத்து அக்கடிதத்தின் 'வக்கணை'யைப் படித்துக் காண்பித்தான்.

அதைக் கேட்ட மாத்திரத்தில் அரசன் மூர்ச்சித்துக் கீழே விழுந்துவிட்டான். உடனே ஸுநந்தாதேவி ஓடோடியும் வந்து சைத்யோபசாரத்தால் ஸமாதானப்படுத்தியதும் பிரக்ஞையடைந்த அரசன் முராதேவி புண்யசாலினியாதலால் இப்புத்திரசோகத்தைப்

பாராது திரிவேணியில் தன் சரீரத்தை யொப்புவித்துச் சுவர்க்கலோகம் அடைந்து விட்டாள். நான் நிர்ப்பாக்கியனானதால் இப்புத்திர சோகத்திற் காளானேன். ஹா! மௌரியா! ஹா! பிரியகுமாரா! ஹா! சூராதிசூரனான புத்திரா! ஹா! என் கண்மணி! உனக்குப் புத்திர ஸமேதமாக இவ்வித துர்மரணம் பிராப்தமாயிற்று? ஹா! குழந்தாய்! என்னை மறந்து எங்கு சென்றாயப்பா?" என்று கன்றிழந்த கறவைப் பசுப்போற் கதறிப் பிரலாபித்தான். பிறகு அவன் க்ஷத்திரியோத்தமனும் மேதாவியுமானதால், அமாத்யனைப்பார்த்து, "நல்லது. ராக்ஷஸ! நந்தர்கள் இப்பொழுது எழுதியிருக்கும் பிரகாரமே நடந்திருக்குமோ அல்லது விதிவசத்தால் நந்தர்களுக்கு மௌரியர்களிடம் பொறாமை உண்டாகி இது நிகழ்ந்திருக்குமா? அல்லது பிற காரணங்களால் ஏதேனுமிருக்குமா? யோசித்துச் சொல்." என்றான்.

இதைக்கேட்ட ராக்ஷஸன் "ஸ்வாமீ! இவ்விஷயத்தில் எனக்கும் தங்களைப்போலவே சந்தேகமுண்டாகிறதன்றி, இவ்விதம் தான் இருக்கும் என்று சொல்லமுடியவில்லையே! தெய்வ சங்கற்பத்திற்கு யாரென்ன செய்யக்கூடும்? பிராணிகளிடம் தெய்வ சங்கற்பம் எச்சமயத்தில் எவ்விதம் வேறுபடுமோ, அதை மானிடர் அறிய முடியாது. இச்சம்ஸாரத்தில் யாருக்குத்தான் ஸதாகாலமும் ஸுகமுண்டு? சுகதுக்கங்கள் கலந்துதா னிருக்கின்றன. இது நிமித்தம்தான் ஞானிகள் இச் சம்ஸாரத்தைத் திரஸ்கரித்துச் சாந்தசித்தர்களாயிருக்கிறார்கள்." என்று இவ்வித வார்த்தைகளால் ஸமாதானப்படுத்தினான்.

பிறகு அரசன் திரிவேணீ ஸங்கமத்தில் ஸ்நானஞ்செய்து லோகாந்தரமடைந்த மௌரியனுக்குத் திலோதகம் கொடுத்து, பத்நீ பரிவார ஸமேதனாக உடனே பிரயாணப்பட்டு, பாடலிபுரம் வந்து சேர்ந்தான். அரசன் வந்தபிறகு மௌரியன் புத்திரர்களுடன் மரணமடைந்த சமாசாரம் தேசாந்திரங்களிலெல்லாம் பரவிற்று. சிலருக்கெல்லாம் நந்தர்களின் கபடமும், கொடுஞ் செய்கையும், வெளிப்பட்டு அங்கங்கு பிரஸ்தாபிக்கப்பட்டன. விருத்த அரசன் செவியிலும், உண்மைச் சங்கதி எட்டிவிட்டது. உடனே

அரசன் அமாத்ய ராக்ஷஸனை வரவழைத்து "ஐயா ராக்ஷஸ! ஸமாசாரத்தைக்கேள்விப்பட்டாயோ? இவ்விதம் நிஷ்காரணமாக ஞாதித்துரோகம் செய்த நந்தர்களின் முகாவலோகனம் செய்யக்கூடாது. நிக்ரஹ பாத்திரர்களான இவர்களை நிக்ரஹித்தல் வேண்டும். இல்லையேல், நாமாவது தபோவனத்திற் பிரவேசிக்கவேண்டும். இவ்விதம் பரமதுஷ்டர்களின் ஸஹவாஸத்தில் சற்று மிருக்கக்கூடாது" என்று மகா கோபத்துடன் படபடத்துப் பேசினான்.

புற்றிலிருந்து புறப்பட்ட மஹா நாகம்போல் சீறும் அரசனைப் பார்த்து புத்திமானாகிய ராக்ஷஸன் "மஹாஸ்வாமீ! தாங்க ளுத்தர விட்டது யுக்தமே. எவ்வளவு அபராதிகளாயிருந்தாலும் தமது புத்திரர்களைத் தாங்களே நிக்ரஹித்தல் கூடாதகாரியம். தாங்கள் தபோவனம் செல்வதானால் தங்களைவிட்டு நான் அரைக்ஷணமும்,பிரிந்திருப்பவனல்லேன், நாமிரண்டுபேரும் தபோவனம் சென்றுவிட்டால், இச்சமயம் உண்மையறிந்திருக்கும் சத்துருக்கள் மௌரிய ஸம்ஹாரத்தால் நந்தர்களிடமிருந்த பிரியத்தை விட்டு வெறுப்புடனிருக்கும் மந்திரிகள் ஸேநாபதிகள் முதலியவர்களுக்குப் பேதமுண்டாக்கி நந்தர்களுக்கு ஹானியை விளைவித்து விடுவார்களென்பது நிச்சயம். அந்த அபகீர்த்தி தங்களுக்கில்லையா? ராஜ்யாதிபத்யம் அவர்களிடமிருக்கும்போது அவர்களைத் தங்களால் நிக்ரஹிக்கத்தான் எவ்விதம் முடியும்? நடந்தது நடந்துபோயிற்று. இவர்களை எதிர்த்துக் கொள்ளாமலும் தாங்கள் பிள்ளைகளிடம் வெறுப்புற்றிருக்கிறீர்க ளென்பதை ஜனங்களிடம் காட்டிக்கொள்ளாமலும், உண்மையைத் தாங்கள் சற்று மறியாதவர்போல சிலகாலமிருந்துவரவேண்டும். மற்றுமொரு முக்கியமான விஷயம்: இப்பொழுது சிறையிலிருக்கும் மௌரிய புத்திரனை சந்திரகுப்தனை விடுவிக்காமலிருப்பது மகா பிசகு, விடுபட்டவனை ராஜாங்கத்தில் பெரிய உத்தியோகத்தி லேற்படுத்துவதும் பெரும் பிசகு ஏனெனில் மௌரியனிடம் அன்புள்ள உத்தியோகஸ்தர்கள், சந்திரகுப்தனையும் நந்தர்களையும் பேதித்து அவனுக்கு ஸஹாயர்களாய் நின்று நந்தர்களுக்கு ஹானியுண்டாக்கி விடுவார்கள். எங்கேயாவது சென்று பிழைக்கட்டுமென்று அவனை இவ்விடம் விட்டனுப்பவும்,

கூடாது. ஏனெனில், அவன் வெளியிற் சென்றால் நமது பகைவர்கள் அவனுக்குதவியாகத் தண்டெடுத்துவந்து யுத்தம் செய்யும்போது மௌரியனிடம் அபிமானமுள்ள உத்தியோகஸ்தர்கள் அவர்களுடன் கலந்து நமது ராஜ்ய மர்மங்களைத் தெரிவித்து நந்தர்களுக்கு ஹானியை யுண்டாக்குவார்கள். நந்தர்களிடம் 'தாயாதிக்காயல்' என்ற இத்துர்க் குணம் ஒன்றுமட்டும் இருக்கிறதே அன்றி அவர்களுடைய சௌரியத்திலும், உதாரியத்திலும், சுகுணத்திலும் குறைவில்லை. ஆகையால் ஏதாவது ஒரு காரணத்தை முன்னிட்டு சந்திரகுப்தனைக் காரா கிருஹத்தினின்று விடுவித்து சுவல்பமான ஜீவனத்தைக் கொடுத்து அவனை இப்பட்டணத்திலேயே நிறுத்த வேண்டும். தாங்கள்மட்டும் நந்தர்களிடம் உள்ள உதாஸீநபாவத்தை வெளிப்படுத்திவிட்டால், மஹத்தான அநர்த்தமுண்டாகும். தமது மகத்தான கீர்த்திக்கும், வம்சத்திற்கும் ஹானிவிளையும். ஆகையால் தயவுசெய்து க்ஷமித்துக்கொள்ள வேண்டும்" என்றுரைத்தான்.

இவ்விதம் ராக்ஷஸனுரைத்த ஸமயோசிதவார்த்தைகளை உசிதமென்று மதித்து அதுமுதல் ஸர்வார்த்தஸித்தியாசன் யாதும் அறியாதவன்போலவே இருந்துவந்தான். இதன் பிறகு ராக்ஷஸன் நந்தர்களுக்கேற்பட்டிருக்கும் மஹா தோஷ நிவிர்த்திக்காக அந்நகரத்திற்கும், கிராமங்களுக்கும், சாந்திகள் செய்வித்தும், ஸம்ஸ்த தேவாலயங்களிலும் விசேஷ அர்ச்சனை யபிஷேகங்களை மண்டலக் கணக்காக நடத்தியும், உத்ஸவங்கள் ஏற்படுத்தியும், அநேக லக்ஷம் பிராமணர்களுக்குக் கோதானம், பூதானம், சுவர்ணதானங்கள் செய்தும், அனேக லக்ஷ பிராமண போஜனம் செய்வித்தும் வந்தான். தவிர, மௌரியர்களிடம் அந்தரங்கப் பிரியமுள்ள அதிகாரிகளுக்கும் அவனால் நியமிக்கப்பட்ட ஸேநாபதிகளுக்கும், எக்காரணத்தை முன்னிட்டேனும், அடிக்கடி ஸன்மானங்கள் செய்தும், நந்தர்களிடம் அவர்களுக்குவிசுவாசமுண்டாக்கியும், இவ்விதம் மெத்த ஸாமர்த்தியமாக காரியங்களை நடத்திவந்தான். நந்தர்கள் ராக்ஷஸனுடைய சாதுரியத்தால் தமது தந்தை தங்களைத் திரஸ்காரம் செய்யாது யாதுமறியாதவர்போலிருந்து வருகிறார் என்பதைத் தெரி

ந்துகொண்டு "ஆஹா! ராக்ஷஸன் தான் நமக்குப் பரம மித்திரன்" எனறெண்ணி மெத்த விசுவாஸத்துடனும், பயபக்தியுடனும, சலி ைமயுடனும், அவனிடம் நடந்துகொண்டார்கள். அன்றியும், ராஜ காரிய மென்னவிருந்தாலும் அவற்றை ராக்ஷஸ னுத்தரவுப்ரகாரம், அவனைக்கொண்டே செய்வித்தும், முன்னிலு மதிகமாக ஜமீன்களை மானியமாகக் கொடுத்தும், அவனை ஸன்மானித்து வந்தார்கள். ராக்ஷஸனும், அதற்கு மெத்த சந்தோஷித்தவனாக நித்திரை ஆகா ரங்களையும் துறந்து, ராஜ்ப தந்திர விசாரணைகளைச்செய்துவந்தான். இதுகண்ட சத்துரு ராஜாக்களின் மனமும், இதர மனனர்களின இருதயமும், பயத்தாலும் அகங்காரத்தினலும், கொதித்துத் தவி தவித்துக் கொண்டிருந்தன.

---

## ஐந்தாவது அத்தியாயம்.

# பர்வதேசுவரனின் பரீக்ஷை.

இங்ஙனமாக, இவை நிகழ்ந்தசின்னுட்குப் பின்னர், தேசாந் தரங்களில் நடக்கும் விசேஷ வர்த்தமானங்களை யறிந்து வந்துதெரி விக்குமாறு பர்வதராஜனுல் அனுப்பப்பட்ட ஒற்றர்கள் பாடலிபுரம் வந்து, அவ்விடம் நடந்த மௌரிய ஸம்ஹாரத்தையும் அதற்குள்ள உண்மையான காரணங்களையும், நன்றாக அறிந்து அதிவேகமாய்த் தம் அரசன் சமீபம்சென்று கைகூப்பி நமஸ்கரித்து எல்லாவற்றை யும் விவரமாய்த் தெரியப்படுத்தினர்கள். அதுகேட்ட பர்வதேசன் தன் தலையை அசைத்துத் தனது சமீபமிருக்கும் சபரவர்மன் என் னும் மந்திரியைப் பார்த்து "அமாத்ய சிரேஷ்டனே! பாடலிபுரத்தில் நடந்த மிகக் கொடிய பயங்கர விசேஷ வர்த்தமானத்தைக் கேட் டாயா? நந்தர்கள் புத்திஹீனர்களாகத் தம் நிழலைப்போல தம்மை அனுசரிப்பவர்களாயும சேவகர்களாயும் ஸ்வஜனர்களாயும் அனேக காரியங்களுக்கு அநுகூலர்களாயும், சூரர்களாயு முள்ள மௌரியர் பால் அகாரணமாய்ப் பகைமை பாராட்டிக் கபடத்தால் அவர்களெல் லோரையும் கொன்றுர்களாய! இதைப் பார்க்கும்பொழுது புத்ரர்

க்ஷத்ரத்திற்குச் செல்லும் புருஷன் தன் கையிலிருக்கும் கத்தியை தானே முறித்து விட்டெறிந்ததுபோலாயிற்று. நந்தர்கள் சூரர்களான பந்துக்களுள்ளவர்களென்று பயந்துகொண்டிருந்த சத்துரு அரசரின் மனம் இனித் துணிந்துவிடும். கேவலம் ஜீவனார்த்தமாகச் சம்பளத்திற்கிருக்கும் ஜனங்கள் எவ்வளவு ஆப்தர்களானாலும், ஸ்வஜனர்போலாவார்களோ? இக லோகத்தில் அநேக பந்துக்களுடையவர்களென்ற கீர்த்தியைக்காட்டிலும் வேறொரு புருஷார்த்தமுண்டோ? அமர்த்ய ராக்ஷஸன் அவர்களுக்கு மந்திரியாயிருந்தாலும் இப்பேர்ப்பட்ட நீச கிருத்யத்திற்கு உள்ளாயிருக்கமாட்டான். ஆனால், அவனும் கிழவரசனும் பட்டணத்திலில்லாத வேளையில் தங்களை நம்பியிருக்கும் மௌரியர்களைக் கபடத்தால் ஸம்ஹரித்து நந்தர்கள் லோகாபவாதத்திற்குப் பாத்திரர்களானார்கள். இதனால் நந்தர்கள் உலகத்தில் கபடத்தொழில்தான் புருஷார்த்தத்தை யளிப்பதென்றும், அத்தொழிலில் தாங்கள் மஹா நிபுணர்களென்றும் எண்ணியிருப்பவர்களானாலும், இப்பேர்ப்பட்டவர்களுக்குச் சத்துருக்களின் கபடோபாயத்தினாலேயே நாசமுண்டாகுமென்பதில் சந்தேகமேயில்லை. இதற்கேற்பத் தெய்வ வசத்தால் மௌரியர்களில் சந்திரகுப்தனென்பவன்மட்டும் பிழைத்தானாம். அவனை இப்பொழுது சிறைப்படுத்தி யிருக்கிறார்களாம். காலாந்தரத்தில் அவனே இவர்களுக்குச் சத்துருவானாலு மாகக்கூடும். இப்பேர்ப்பட்ட அநியாய காரியத்தினால் சகல பிரஜைகளுக்கும் நந்தர்களிடம் விசுவாஸம் தப்பியிருக்கலாம்" என்றுரைத்தான்.

அதற்குச் சபரவர்மன்:-"ஸ்வாமி ஸந்நிதானத்தில் உத்திரவான சமாசாரங்களெல்லாம் உண்மையே. காரியத்தில் நிபுணனான மௌரியனிடம் சகல ப்ரஜைகளுக்கும் பிரியமும், சத்துருக்களுக்குப் பீதியுமுண்டாயிருந்தது. இவ்வுண்மையை நந்தர்கள் அறியவில்லை. மௌரிய ஸம்ஹாரமானது அமாத்ய ராக்ஷஸனுக்கு சம்மதமற்றதா யிருக்கும் பக்ஷத்தில் முக்ய மந்திரியான அவனுக்கும் நந்தர்களுக்கும் மனவேற்றுமையே யிருப்பதாகத் தெரியவில்லையே! ராக்ஷஸன் தெரிந்தும் தெரியாதவன் போலும் கண்டும் காணாதவன்போலும் இருக்கிறானே! மௌரியர்களால் பிர

ஸித்திக்கு வந்த பாகுராயணாதி சேனாபதிகளுக்கு நந்தர்களிடம் உண்மையான விசுவாஸமிராது. ஜீவனத்தின் நிமித்தம் எஜமான விசுவாசிகள் போலவே இருப்பார்கள். சந்திரகுப்தனுக்குத் தெய்வ யோகத்தினால் பந்த நிவர்த்தியானால் தக்க ஸமயத்தில் பாகுராயணாதிகள் அவனுக்கு ஸகாயர்களாக ஏற்படக்கூடும். இதெல்லாம் சத்துரு ராஜர்களுக்குத் தக்க ஸமயமாகும். பாடலீபுரத்தின் விஷயமெப்படியிருந்தாலு மிருக்கட்டும். என்றைக்கும் நாம் உதாஸீனர்களாக இருப்பது ராஜ தருமத்திற் கழகன்று. இப்பொழுது நந்தர்கள் அனேகம் தேசாதிபதிகளிடமிருந்து கப்பங்கள் பெற்றுக் கொண்டும் சரணமடைந்தவர்களுக்கு முன்கொடுத்த வாக்குத்தத்தம் மீறி சத்துரு தேசங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக ஆக்ரமித்துக் கொண்டும் அதிகமாக விருத்தியடைந்து வருகிறார்கள். அடுத்த வீட்டில் பற்றிய தீயை உடனே நாம் அணைக்காவிடில் அது நம் வீட்டிலும் வியாபித்து எவ்விதம் சாம்பலாக்கி விடுமோ, அதுபோல் அந்நிய அரசர் பிரபலர்களாயிருக்கும்போது அவர்களை யடக்காவிடில் நமது தேசத்தையும் ஆக்ரமிக்காது விட்டுவிடுவார்களோ? அரசர்களில் எவ்வேளையில் யார் சத்துருக்களாவர்களோ? மேகோதயம் போல் வரும் ராஜகாரியம் முந்தி யறியக் கூடாததாகையால் அப் பாடலீபுரத்தின் வர்த்தமானத்தை மறுபடியும் நன்றாய் அறியும் நிமித்தமும் அவ்விடமிருக்கும் மந்திரிகளின் புத்தி சாதுரியத்தையும் விஷயஞானத்தையும் நன்றாய்த் தாங்களறியும் படிக்கும், ஒரு கபடச் சில்பத்தை உண்டாக்கிச் சாரர்களைக் கொண்டு அதைப் பாடலீபுரத்திற் கனுப்பி, விஷயங்களை நன்றாய்த் தெரிந்து கொள்ள வேண்டும்" என்றுரைத்தான்.

பருவதேசுவரன் அவ்வார்த்தையைக் கேட்டு "அவ்விதமே செய்" யென்று உத்தரவிட்டு அந்தப்புரம் சென்றான். பிறகு சபரவர்மன் சதுரர்களான சிற்பிகளை வரவழைத்து ஒரு பஞ்சரத்தையும் அதற்குள் கபட ஸிம்ஹத்தையும் செய்வித்து, அக்கூண்டிற்குப் புத்திமான்களான ஆட்களை நியமித்து அவர்களுக்கு அதிலுள்ள உபாயங்களைத் தெரிவித்துச் சில வார்த்தைகளை யுரைக்கும்படி சொல்லிக்கொடுத்து "இக்கூட்டைப் பாடலீபுரத்திய ஆஸ்தான ஸமீபத்தில் இறக்குங்கள். நான் சொல்லித் தந்தது போல் சொல்லிக்

கொண்டு வீதிகளில் சென்று பிரசித்தப்படுத்தி இதன்பரீக்ஷையை யார் செய்கிறார்களென்பதையும், அச்சமயம் அங்கு நடக்கும் விசேஷ ஸமாசாரங்களையும் தந்திரமாயறிந்து வந்து சொல்லுங்கள்" என்று அனுப்புவித்தான் இவர்களும், கிருத்ரம ஸிம்மம் அடைக்கப் பட்டிருக்கும் கூண்டைத் தூக்கிக் கொண்டு பாடலீபுரத்திற்குச் சென்றார்கள். நிற்க.

ஒரு நாள் பர்வதராஜன் ஆஸ்தான மண்டபத்திலிருக்கும் போது, சில ஒற்றர் வந்து வணங்கிக் கைகூப்பி நின்று "மஹாப்ரபுவே! நாங்கள் லம்பாக தேச பிராந்தத்திற்குச் சென்றிருந்தோம். அவ்விடம் கண்டு கேட்ட வர்த்தமானங்களைச் சொல்லுகிறோம். கேட்டருளவேண்டும்: முந்திப் பார்வதேயர்களின் அக்ரமங்களைச் சஹிக்க மாட்டாது ராஜ்யம் விட்டு ஓடிப்போயிருந்த கிரிவர்மன் என்ற அரசனை அவ்விடத்துள்ள பூர்வம் ஆப்தர்களான அதிகாரிகள் ரஹஸியத்தில் வரவழைத்து, அவனது பிதாவால் தேடப்பட்டு ரஹஸிய ஸ்தலத்தில் வைக்கப் பட்டிருக்கும் பொக்கிஷங்களைக் காண்பித்தார்கள். கிரிவர்மனும் அதனால் மஹா ஐசுவரிய முடையனாகி நக்னதேசாதிபதியுடன் சினேகித்து மித்ர சிநேகராகிய அரசர்களின் ஸம்மதியால் தேசாதிபத்யம் புரிந்து வருகிறான். பரஸ்திரீ முகாவலோகனத்தை விநாயக சதுர்த்தி சந்திர தர்சனம் போல் பாவிக்கிறான். எப்பொழுதும் வித்துவான்களின் சமூகத்தை யனுஸரிக்கிறான். பிரஜைகளைக் குழந்தைகளாகப் பாவித்துக் காப்பாற்றி வருகிறான். நாஸ்திக வாதமென்பது அப்பட்டணத்தில் முயற்கொம்பிற்குச் சமானமாயிருக்கிறது. அபூஜ்யர்களை ஒருக்காலும் அங்கும் பூஜிப்பதில்லை. சூரர்களல்லாதவர்க்கு அவனால் ஸன்மானங் கிடைப்பதில்லை. சோரர்கள் விமரிசையுடன் விசாரிக்கப்பட்டுத் தக்கபடி தண்டனை யடைகிறார்கள். வஞ்சகர்களான எழுத்தாளர்களின் கைகள் உடனே சேதிக்கப் படுகின்றன. பிரஜைகளும் நியாயம் நீதி மீறாமலிருந்து வருகிறார்கள். இப்பேர்ப்பட்ட அரசன் நாளுக்கு நாள் விருத்தி யடையும் வீரசூர பல பராக்ரமங்களால் ஏவப்பட்டு ஸமீபத்தில் பார்வதேயர்களுடன் யுத்தத்திற்கு வருவான்போல் இருக்கிறது. இதற்கடையாள மென்னவென்றால், அவ்விடத்திய பாதை போவ

வோர் நமது தேசத்திற்கு வரும் பாதைகளை மேடுபள்ளங்கள் ஸமப்படுத்துகிறார்கள். "இதுயாது நிமித்தம்?" என்று கேட்டால் "அரசன் மிருக வேட்டையாட வரப்போகிறார்" என்றுரைக்கிறார்கள். மார்க்க மத்தியில் இருக்கும் நதிகளைத் தாண்டும் நிமித்தம் அனேகமாகக் கட்டிக்கொண்டிருக்கும் ஓடங்களைக்கண்டு "இவை எதற்கு?" என்றால் "அரசன் ஸ்திரீகளுடன்கூடித் தெப்போத்ஸவம் கொண்டாடப்போகிறா" எனகிறார்கள். லங்கர் ஏற்றும் நூலேணிக் கூட்டங்களைக் கண்டு "இவை எதற்கு?" என்று கேட்டால் நிந்தனை செய்கிறார்களன்றி சரியானபதில் சொல்லுகிறார்களில்லை. அவ்வரசனுடைய எல்லையோரங்களிலிருக்கும் அரண்களில் யுத்த சாமக்கிரியைகள் அனேகமாய்ச் சித்தப்படுத்தப்படுகின்றன. ஜனங்கள் பிரயாண ஸித்தர்களாயிருக்கிறார்கள்" என்று விக்ஞாபித்தார்கள்.

இவ்விதமாக உரைத்த சாரர்களின் வார்த்தைகளைக் கேட்ட அரசன், சபரவர்மன் முகத்தைப்பார்த்து "மந்திரீ! பூர்வ வைரத்தை நினைத்துக்கொண்டிருந்த லம்பாகாதிபதிக்கு உதவியாயிருக்கும் தெய்வ பலத்தைப் பார்த்தாயா? அவனுடைய சரிதத்தைக் கேட்டால் இதரர்களால் ஜயிக்க முடியாதவனென்று தோன்றுகிறது. இதற்கென்ன யோசனை சொல்லுகிறாய்?" என்று கேட்டான்.

அதற்குச் சபரவர்மன். "ஸ்வாமீ! சதுரங்க பலஹீனன் என்று அவனை நாம் உபேக்ஷித்துவிட்டதால் இப்பொழுது இச்சமாசாரம் கேள்விப்பட வேண்டியதாயிற்று. ஆயினும் அரசன் எவ்வளவு நற்குணம் நீதியோடு கூடியவனானாலும் சூரனேயானாலும் நீதிமான்களாயும் மதியூகிகளாயுமுள்ள மந்திரிகளில்லாவிடில், அவன் ராஜகாரியங்களையாகட்டும், யுத்தமுகத்தில் நடக்கின்ற காரியங்களையாகட்டும் நிர்வகிக்கமாட்டான். தக்க மந்திரிகளற்ற லம்பாக தேசாதிபதிக்கு ஜயங்கிடைக்கமாட்டாது. யுத்தத்தையே கோரிக்கொண்டிருக்கும் நமது சைன்யங்கள் புறப்பட்டுச் சென்றால் அவன் எவ்வளவு தூரம் யுத்தத்திற்குத் தயாராகயிருந்தாலும் ஒரு நாளைக்குக்கூடத் தாங்கமாட்டான். மகாராஜா உத்திரவானால் அவன் கோட்டை கொத்தளங்களை யிடித்து நில ஸமமாகத் தகர்த்தெறிந்து அந்த

லம்பாகாதிபதியான கிரிவர்மனையும் கைப்பிடியாய்ச் சிறைப்பிடித்து வருகிறேன். இல்லையெனில், சேனைகளுடன் கூடிய சேகரனுக்காவது உத்திரவிடுங்கள்" என்று விக்ஞாபித்தான்.

அதுகேட்ட அரசன் "நல்லதிருக்கட்டும். லம்பாகாதிபதியுடைய வருகையையும் யுத்தத்திலுள்ள முயற்சிகளையும் இன்னொரு முறை நன்றாய் அறிந்து வரும்படிக்கு மறுபடியும் சாரர்களை யனுப்பு. அவர்கள் திரும்ப வந்து தெரிவித்ததும் உசிதம்போல் செய்வோம்" என்று சொல்லி ஆஸ்தானம் விட்டெழுந்து ஸ்நான அறைக்குச் சென்றான். சபரவர்மனும், அரசனுத்திரவு ப்ரகாரம் லம்பாக தேசத்திற்குச் சாரர்களை யனுப்பிவிட்டுத் தனதில்லம் சென்றான். நிற்க,

இங்கு பார்வதேயர்களின் பட்டணத்திலிருந்து புறப்பட்ட பஞ்ச ரக்ஷகர்கள் (கூண்டுக்காவலர்) சிலதினங்களில் பாடலீபுரம் வந்துசேர்ந்து ஆஸ்தான வாசலுக்கெதிராக அப்பஞ்சரத்தை இறக்கி வாத்தியத்துடன் இந்நகரில் புத்திமான்கள் யாரேனுமிருப்பார்களாகில், அமானுஷிகமான இக்கூண்டைப் பேதிக்காமல் இதற்குள்ளிருக்கும் ஸிம்மத்தை உயிருடன் வெளிப்படுத்தட்டும். அப்பேர்ப்பட்டவர்களில்லாவிடில், இதுவரையினும் பார்த்த தேசங்களிலுள்ள ஜனங்களைப்போல் எங்களுக்கு ஸன்மானம் மரியாதை முதலியன செய்துமேல் சொல்லும்படிக்கு உத்திரவிடட்டும்" என்று கைகளை உயரத் தூக்கிக்கொண்டு கூவிச் சென்றார்கள். இதுகேட்டு நகரிலுள்ள ஜனங்களெல்லாம் கூட்டங்கூடி நிறைந்து நின்று உற்றுப் பார்த்து அதிலுள்ள ரஹஸியத்தை யறியமாட்டாமல் திரும்பிச் சென்றுகொண்டிருந்தார்கள். அப்பொழுது இதுகண்ட ராஜபடர்கள் ஆஸ்தானத்திலுட்கார்ந்திருக்கும் நவநந்தர்களிடம் சென்று கும்பிட்டு "ஸ்வாமிகளே! சில ஜனங்கள் வாயில் கதவு ஒன்றுமில்லாது அகண்டமாயிருக்கும் கூட்டில் உயிருடனிருக்கும் ஸிம்ஹத்தையடைத்து தேசாந்தரத்திலிருந்து இவ்விடம் வந்து ஆஸ்தானத்திற் கருகிலதை யிறக்கிவைத்து "இவ்வூரில் சமர்த்தர்களிருந்தால் கூண்டைத் துண்டியாமல் உள்ளிருக்கும் ஸிம்ஹத்தை உயிருடன் வெளிப்படுத்தட்டும்" என்று கூவிச் சொல்வதைக்கேட்டு இந்நகரவாஸிகளனைவரும் வந்து அக்கூண்டைப் பார்த்து அதன் விஷ

யத்தை யறியமாட்டாமல் அனைவர்களும் திரும்பிச் சென்றார்கள். அதைப் பரீக்ஷித்தறியக் கூடியவர்கள் இதுவரை யொருவருமில்லை" என்றுரைத்தனர்.

அதுகேட்டு நந்தர்கள் "நமது மந்திரிகளெல்லாரும் சென்று கண்டு வரட்டும்" என்று ஆக்ஞாபித்தார்கள். அவ்விதமே அமாத்ய ராக்ஷஸனொருவன் தவிர மற்ற மந்திரிகளெல்லாம் அககூண்டினிடம் சென்றும், அதன் விவரத்தை அறிய மாட்டாமல் யாவரும் திரும்பி வந்து நந்தர்களிடம் கப்பிரமாய் நின்றார்கள். அமாத்ய ராக்ஷஸன் நந்தர்களைநோக்கி "ராஜகுமாரர்களே! ஸிம்மமிருக்கும் கூண்டோ அமானுஷிகருத மாகமாட்டாது. நம் எல்லோர்களின் புத்தியையும் பரீக்ஷிக்கும் வண்ணம் கபடிகளான சத்துரு ராஜர்களான இதரவரசர்களால் நிர்மாணம் செய்தனுப்பப் பட்டிருக்கும் கபடசிம்ம மென்று தோன்றுகிறது. ஆகட்டும். இந்நகரில் ஏராளமாக ஜனங்களிருக்கிறார்கள். யாருடைய புத்தி சாமர்த்தியம் எப்படியிருக்குமோ? நமது படர்கள் சென்று ராஜ வீதிகளில் பறையறைந்து இச்சங்கதியைச் சொல்லட்டும். அதனால் இதைப் பரீக்ஷிப்பவர்கள் யாரேனும் கிடைக்கலாம். எல்லோரும் பார்த்து அஸாத்யமானதாயிருந்தால், பிறகு நாமே அக்கூண்டை இவ்விடம் வரவழைத்துப் பார்ப்போம்" என்றுரைத்துத் தூதர்களைக்கூப்பிட்டு தூதர்களே! "இதைப் பரீக்ஷிக்கத் தக்கவர்கள் யாரேனுமிருந்தால் அவர்களுக்கு ராஜ ஸன்மானம் கிடைக்கும் என்று உரத்துக் கூவும்போது யாரேனுமகப்பட்டால் அவர்களையழைத்து வாருங்கள்" என்று ஆக்ஞாபித்தான்.

அதுபோலவே, தூதர்கள் ராஜவீதிகளில் கூவிக்கொண்டுவரும் பொழுது சிறைக்கூடத்தின் வாயிலில் நின்று கொண்டிருந்த சந்திரகுப்தன் இதைக்கேட்டு, "தூதர்களே! இப்பட்டணத்தில் அப்பேர்ப்பட்ட பஞ்சரத்தைப் பரீக்ஷித்தறிவதற்கு ஒருவரும் கிடைக்கவில்லையோ?" என்று கேட்கத் தூதர்கள் அவனை லக்ஷியம் செய்து பதிலளிக்காமல் மறுபடி நந்தர்கள் ஸந்நிதானம் வந்து "ஸ்வாமி உத்திரவு ப்ரகாரம் பட்டணம் முழுவதும் கூவித் திரிந்தோம். இந்நகரிலுள்ள பால விருத்தர்கள்யாவரும் வந்து பார்த்து ஒருவரும் இன்ன

தென்றறிய மாட்டாதவர்களாய் 'இது அமானுஷ கிருதம் தான் சுயமாலறியக் கூடுமோ?' என்று சொல்லிக்கொண்டு திரும்பிச் சென்று விட்டார்கள்" என்றார்கள்.

நந்தர்கள் ஆச்சரியப் பட்டுத் தாங்களும் அக்கூட்டை வரவழைத்துப் பார்த்து ஒன்றுமறிய மாட்டாதவர்களாக மறுபடியும் தூதர்களைப் பார்த்து "இப்பேர்ப்பட்ட பெரிய பட்டணத்தில் இதைப் பரீக்ஷித்தறிய ஒருவருமா இல்லாது போனார்கள்?" என்று அதட்டிக் கேட்க, அவர்கள், "ஸ்வாமி! யாருமில்லை. ஆனால் யாரோ ஒருவன், காராக்கிருக வாசலில் நின்று கொண்டிருந்தவன், எங்களைக் குறித்து "இவ்வூரில் அதைப் பரீக்ஷித்தறிவதற்கு ஒருவரும் கிடைக்கவில்லையா?" என்று கேட்டானேயல்லாது மற்று ஒருவரேனும் 'என்ன?' வென்று கூடக் கேட்கவில்லை என்றார்கள்.

அதுகேட்ட நந்தர்கள் "ஓஹோ! அவன் இதையறியக்கூடிய புத்திமானாயிருப்பதனாலேயே இக்கேள்வியைக் கேட்டிருக்கிறான். அவனவ்விதமறிந்து சொல்வானாகில் சிறையினின்றும் விடுபட்டு விசேஷ ஸன்மானமு மடையட்டும். அவனை யழைத்து வாருங்கள்" என்றதும், "உத்தரவு" என்று தூதர்கள் சென்று சிறையிலிருக்கும் சந்திரகுப்தனைக் கண்டு, "அரசரின் உத்தரவாயிருக்கிறது. பஞ்சர பரீக்ஷை செய்வதற்கு வாருங்கள்" என்றழைக்க, அதுகேட்டு "இதுவுமொரு நற்காலத்திற்கறிகுறியாகும்" என்றெண்ணிக்கொண்டு ஆஸ்தானம் குறித்து வந்துகொண்டிருந்தான் சந்திரகுப்தன்.

அதற்குள் ராக்ஷஸன் தூரத்தில் நின்று கொண்டு அக்கூண்டை நோக்கித் தனக்குள் யோசித்ததாவது:-"நானிப்பொழுது சென்று பார்ப்பதாலும் எனக்குத் தெரியப்போகிறதில்லை. நான் பரீக்ஷித்துப் பார்த்தும் முடியாவிட்டால், ஜனங்கள், 'ஆ! இதனை மற்றொருவன் கண்டு பிடித்து விட்டானே! ராக்ஷஸனால் முடியவில்லையே, என்று சொல்வார்களேயானால் எனக்கிதைக்காட்டிலும் அவமானம் வேறுண்டோ? ஆகையால் இப்பொழுதே நான் சென்று பார்ப்பது நன்மையன்று. இச்சமயம் யாரோ ஒருவன் சிறைக்கூடத்தி லிருந்து வருகிறானாம். அவன் வந்து பார்த்து

அதைப் பரீக்ஷித்து உண்மையைக் கண்டுபிடித்துவிட்டால் நமது காரியமும் ஜயமாவதுடன், அவனும் ஸன்மான மடைந்து செல்லட்டும். அவனாலும் முடியாத பக்ஷத்தில் இனி யிவ்வூரில் மீதி யொருவருமில்லாததால் நான் பிறகு சென்று பார்த்துக் கண்டுபிடிக்காமல் போனாலும், "ஒருவருக்குமே புரியவில்லை." என்ற ஒரு சொல்லுடன் தொலையட்டும். "என்னால் முடியாததை மற்றொருவன் செய்தான் என்ற அவமானமட்டும் எனக்கு வரக்கூடாது" என்று நிர்மானித்து வாய்பேசாம லிருந்தான்.

அதற்குள் நந்தர்கள் அவ்விடம்விட்டு வேறிடம் சென்றார்கள். அப்பொழுது சந்திரகுப்தன் கூட்டினருகில் வந்து உற்றுப்பார்த்து தனக்குள் "இக்கூண்டுக் கதவு சார்த்து, பூட்டு ஒன்றுமில்லாமல் அகண்டமாய் உயர்ந்திருக்கிறது. இதற்குள்ளிருக்கும் சிங்கம் போஷகரால் கொடுக்கப்பட்ட மாம்ஸத்திற்கு மறுகியும், வெளியில் அவன் கூண்டைச் சுற்றிவந்தால் அவன் சென்றவிடங்களெல்லாம் மாம்ஸத்திற்காசைப்பட்டு உட்புறத்தில் தானும் சுற்றியும்வருகிறது. கூடு திறப்புச் சார்த்து இல்லாதகாலும் உள்ளிருக்கும் ஸிம்ஹம் மாம்ஸத்தை இச்சிப்பதாலும் இது அமானுஷ கிருதமென்றுரைக்கக் காரணமாயிற்று" என்று நிர்மானித்து, அதன் போஷகர்கள் மாம்ஸத்தைக் கொடுப்பதையும், அச்சிம்மம் அதை கிரஹிப்பதையும், உற்றுநோக்கி, அதன் விஷயத்தை மனத்திற்கு வாங்கிக்கொண்டு, ஸமீபத்திலிருக்கும் ராஜ படனைக் கொஞ்சம் மாம்ஸம் கொண்டுவரச் சொல்லி அதிலொரு துண்டெடுத்து அவர்களைப்போல் தானும் கைநீட்டி ஸிம்ஹத்திற்குக் கொடுத்தான். அச்சிங்கமோவெனில், மாம்ஸத்திற் கபேக்ஷித்து வராமலும் நின்றவிடம்விட்டசையாமலும்

இது கண்ட சந்திரகுப்தன் அவ்வாட்களைப் பார்த்து "நான் கொடுக்கும் மாம்ஸத்தை மட்டும் ஸிம்ஹம் ஏன் கிரஹிக்கவில்லை?" என்று கேட்க அதற்குக் கூண்டுக்காரர்கள் தமக்குள் கலக்கப்பட்டுக் கொண்டே, "ஐயா! இச்சிங்கம் அமானுஷ கிருதமானதால் தனது உபாஸகர் கைபாலளிக்கப்படும் ஆஹாரத்தைக் கிரஹிக்குமல்லாது அன்னியர்களை மதிக்குமோ? " என்று கபடமாயுரைக்க,

சந்திரகுப்தன் "இது வீண்வார்த்தை" யென்றறிந்து, தனக்குள் யோசித்ததாவது:—"பஞ்சரம் திறப்புச் சார்த்துக்களில்லாதிருக்கும் போது இதனுள் உயிருள்ள ஸிம்மம் எப்படிச் செல்ல முடியும்? இப் பஞ்சர ரக்ஷகன் பஞ்சரத்தைச் சுற்றி வந்தால் இச்சிங்கமும் மாம்ஸம் கொடுப்பவனிடமிருக்கும் ஆஹாரத்தை யபேக்ஷித்தது போல அவன வெளிப்புறம் சென்றவிடங்களெல்லாம் உட்புறம் தானும் சுற்றுகிறது. அவன் எட்டி அப்பால் சென்றுவிட்டாலோ இதுவரை யலைந்த ஆயாஸத்தாற் போலும்? எனறெண்ணும்படி கழுத்தை அசக்கி பெருமூச்சு விடுவதுபோலிருக்கிறது. அன்றியும் பஞ்சர ரக்ஷகன் கைநீட்டிக் கொடுத்த மாம்ஸத்தை யபேக்ஷிப்பது போல வாலைத் தலைக்குநேரே தூக்கிக் குதித்து மாம்ஸத்தைக் கடிக்கின்றது. இக்காரணங்களால் இது ஜீவ ஸிம்மமென்றே பார்ப்பவர்களுக்குத் தோன்றுகிறது. ஆயினும் இது உயிருள்ள சிம்மமாக மாட்டாது. இது அரக்கிலும்,மெழுகிலும், நனைக்கப்பட்ட துணியில் ஸிம்ஹத்தின் ரோமங்களை ஒட்டி நிஜத்தோல் போலச் செய்து சிற்பியின் சாதுரியத்தாலும்,புத்தி விசேஷத்தாலும்,மாம்ஸம் கொடுக்கும் துளையின் வாய்முதல, அதன் வயிற்றின் வரை இரும்புச சலாகைகளை ஜோடித்து,வாலுக்கும் கழுத்திறகும் ரோமத்துடன் கூடிய உருக்குக் கம்பிகளைப் பிணைத்து ஆங்காங்கு வர்ணம் தீட்டி முடித்திருக்கும் கிருத்திரம ஸிமமமாக இருக்கவேண்டும். இன்னொரு பரீக்ஷையும் செய்து பார்ப்போம்" என்று, தூதர்களை யழைத்து யானை கட்டிய இடத்திலிருந்து ஓர் குட்டி யானையை ஓட்டிவரச் சொல்லி அதன் கண்களைக் கட்டி, பஞ்சரத்தைச் சுற்றி வரும்படி செய்தான். அதுகண்டு அச்சிம்மம் ஆர்ப்பரிக்காமல் சும்மா நிற்பதைக் கண்டு 'இது கபட சிம்மம்' என்று நிச்சயமாயறிந்து அச்சிம்மம் ஓடியாடுவதற்கும் மாம்ஸமெடுத்துக் கொடுப்பதற்கும் ஸாதனமாயிருக்கும் இருப்புச் சலாகை கைப்பிடித்திருக்கும் ஆளைப்பார்த்து "இச்சலாகை நுனியிலிருக்கும் மாம்ஸத்திற்கு சிம்மம் மறுகிக் கடிப்பதாலும், அதைப் பிடித்திருக்கும் இம் மனிதன் செல்லுமிடங்களை யனுஸரித்து உள்ளிருக்கும ஸிம்மம் தானும் சுற்றி வருவதாலும், இரும்பை ஆகர்ஷிக்கும் தன்மை காந்தத்திற்கு உரிய தாகையால் இசசலாகை காந்தத்தினால் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இதனாலேயே அவன் சலாகையுடன் சுற்றினா லல்லாது சிம்மம் இருந்தவிடம் விட்டசைய மாட்டாது" என்று அறிந்து "அடா பஞ்சர ரக்ஷகனே! உன் கையிலிருக்கும் சலாகையை விட்டு விட்டுச்சாறலுக் கூண்டைச் சுற்றிவா" என்றான்.

பஞ்சர ரக்ஷகன் அது கேட்டு "இதுவரை யொருவரு மறியாத சலாகைச் சூக்ஷமத்தை இவன் அறிந்துவிட்டான். கபட சில்பத்திலும் அத னுபாயங்களை யறிவதிலும் இவன் மஹா நிபுணன் னென்பதில் ஆக்ஷேபமேயில்லை. நமது கபடம் இவனால் வெளிப்படாவண்ணம் இவனுடைய ஆக்ஷேபத்திற் கொருவிதமாகப் பதில் சொல்லவேண்டும்" என்று நிச்சயித்து, "ஐயா! பிறந்தது முதல் இச்சலாகையின் நுனியில் அளிக்கப்படும் மாம்ஸத்தாலேயே ஜீவிக்கும் இச் சிம்மமானது அதனைவிட்டு விட்டால் மாம்ஸத்தின் மீதுள்ள ஆசையைவிட்டு வெறுங் கையுடனிருக்கும் என்னைப் பார்த்து போஷக னென்ற விசுவாஸத்தையும் துறந்து சும்மா இருந்துவிடும். ஆகையால் இச்சலாகையை விடககூடாது" என்றான்.

அது கேட்ட சந்திரகுப்தன் "அடா! பணமுள்ளவனிடம் மெத்த ஆசையுள்ளவன்போல் நடிக்கும் காந்தத்தி னெதிரில் உருக்குச் சலாகைகளால் செய்யப்பட்ட கபட சிம்மம், பல விதமாகச் சலித்தல் ஒரு ஆச்சரியமோ? இதுபோலவே அரக்கும், மெழுகும், நெருப்பைக்கண்டால் உருகிவிடும் என்ற உலக ப்ரஸித்த வார்த்தை மட்டும் நீங்கள் கேள்விப்பட்ட தில்லையோ? இனியேனும் இப்பேர்ப்பட்ட கபடச் செயல்களை நிறுத்துக" என்று சொல்ல, அவனும் பிறரும் வெட்கத்தால் தலைகுனிந்து "நாங்கள் தோற்றோம்" என்று சொல்லிக் கைச்சலாகையைச் சந்திரகுப்தனிடம் கொடுத்து விட்டார்கள்.

# ஆறாவது அத்தியாயம்.

## சந்திரகுப்தன் சிறையினின்றும் விடுபடல்.

அப்பொழுது சந்திரகுப்தன் தனக்குள் "இப்பேர்ப்பட்ட கபட சில்பத்தை மெத்த ப்ரயத்தனத்துடன் தேசாந்திரத்திலிருந்து கொண்டுவந்து ஆஸ்தான வாயலிலேயே இறக்கிப் "புத்தியுள்ளவர்களிருந்தால் பரீக்ஷிக்கலாம்" என்று அவர்கள் கூறியதற்குக் காரணமென்னவென்று யோசித்தால், "நந்தர்கள் கபடத்தினால் மௌரியர்களைக்கொன்று விட்டார்களென்பது தேசாந்திரங்களிலும் பிரஸித்தப்பட்டுவிட்டது. அதனால் இதரமன்னர்கள் யாரோ கபடிகளான நந்தர்களை அவமானப்படுத்தும் நிமித்தம் அஸாத்யமான கபட சில்பத்தை உண்டாக்கி இவ்விடத்திலுள்ள மந்திரி முதலியவர்களின் புத்தியைப் பரீக்ஷிக்கும் நிமித்தம் அனுப்பியிருக்கவேண்டும். இதனால் நந்தர்களிடம் பொறாமையும் த்வேஷமும் கொண்டுள்ள மன்னர்களிருக்கிறார்களென்பது நிச்சயம். இவ்வித தந்திரம் இங்கு வெளிப்பட்டுவிட்டதால், கபடிகளான இதரமன்னர்களைத் தண்டிப்பதற்குச் சக்தனான அமாத்ய ராக்ஷஸன் அவர்களைப் பதில் அவமதிக்கும் நிமித்தம் இப்பஞ்சர ரக்ஷகர்கள் அமானுஷ்கிருதமென்று ராஜஸ்தானத்தில் சொன்னதையே குற்றமாக்கி இவர்களைக் கடுமையாய்த் தண்டிப்பான். ஆனால் எனக்கு இச்சமயம் இதைப் பரீக்ஷித்த நிமித்தமாக பந்த விமோசனமாவதுடன் காலாந்தரத்தில் நன்மையுமுண்டாகக் கூடும்" என்று நிர்மானித்து "இவர்கள் ஆபரணங்களையும் ஆகாரத்தையும் பார்த்தால் பார்வதேயர்கள்போல் தோன்றுகிறது. எல்லாவற்றிற்கும் இவர்கள் எத்தேசத்தவர்களென்று கேட்டு இங்கு விட்டுத் தப்பியோடும்படி செய்யவேண்டும்" என்றெண்ணி அவர்களை நோக்கி "உங்கள் தேசம் யாது?" என்று கேட்டான்.

அதற்கு அவர்கள் "ஸ்வாமி! காடுமலைகளையடைந்து இதரர்களால் ஜீவித்துக் காட்டுமிராண்டிகள்போல் திரிபவர்களுக்கு, இன்னதேசமென்று எவ்விதம் உரைப்பது?" என்றார்கள். அது

கேட்ட சந்திரகுப்தன் இவர்கள் தாங்கள் "பர்வதேசனின் தேசத்திலுள்ளவர்கள்" என்று சொல்கிறார்கள் என்றறிந்து அவர்கள் அருகில் ராஜபடர்களிருப்பதால் அவர்கள் அவ்விடம்விட்டுச்செல்லுமாறு கண்ணால் சமிக்ஞை செய்தான். அதையறிந்த பஞ்சர ரக்ஷகர்கள் தாங்கள் இனி அவ்விடமிருந்தால் ஆபத்து உண்டாகுமென்றும், இவன்தான சந்திரகுப்தனாயிருக்கவேண்டுமென்றும் நிச்சயித்து, ஜனச்சந்தடியில் பிச்சைக்காரர்போல் வேஷந்தரித்துச் சென்றுவிட்டார்கள். சந்திரகுப்தனும் ஆட்கள் கண் மறையும் வரையில் காத்திருந்து, பிறகு, ராஜபடர்களைப் பார்த்து "இச்சிங்கத்தைப் பரீக்ஷித்தாயிற்று. இது கிருத்திரமமாகச் செய்யப்பட்ட சிங்கம். இது உயிருள்ளதன்று. இதைப் பிரபுக்களுக்கு விக்ஞாபியுங்கள்" என்றான்.

அதுகேட்டுத் தூதர்கள் சென்று சந்திரகுப்தன் செய்த காரியங்களையும் அப்பஞ்சர ரக்ஷகர்களின் தோல்வியையும் நந்தர்களிடம் தெரிவித்தார்கள். உடனே நந்தர்கள் அவ்விடம் வந்து பரீக்ஷித்தறிந்தவன் சந்திரகுப்தன் என்று அறிந்து, பிரமை கொண்டவர்களாய், ஒன்றுந் தோன்றாது க்ஷணகாலம் நின்று, ஏதோ ஆச்சரியத்தால அவ்விதமிருந்ததுபோல அபிநயித்து, "அடா சந்திரகுப்தா! இது பொய்ச்சிங்கமென்று நீ யெவ்விதமறிந்தாய்?" என்று வினவ, அவன் "ஸ்வாமிகாள்! கவனிக்கவேண்டும்" என்று நெருப்பைக் கொளுத்தி அதைப் பஞ்சரத்துக்கருகில் வைத்தான். நெருப்பின் சூடு தாக்கியதும் சிங்கத்தின் மீது பூசப்பட்டிருந்த அரக்கும் மெழுகும் உருகிப்போய் உருக்கிரும்பின் சலாகைகள் மட்டும் நின்றன.

நந்தர்கள் இதுகண்டு ஆச்சரியப்பட்டு, "ஒருவருமறியமுடியவில்லை என்னாது நமது நகரத்தில் பஞ்சர பரீக்ஷையாயிற்று" என்ற சந்தோஷமும் அது சந்திரகுப்தனால் நடந்ததால் "மஹா புத்திசாலியான சத்துரு மீந்துவிட்டானே! இனி இவனைக்கொல்ல முடியாதே" என்ற விசனத்தினால் கலங்கிய மனதும் உடையவர்களாக இருந்தார்கள்.

அச்சமயம் விருத்த மந்திரியான வக்ரநாஸன் என்பவன் நந்தர்களைப்பார்த்து "மன்னர்களே! ஒருவராலும் முடியாதிருந்த இப்பஞ்சர பரீக்ஷையானது தங்கள் . புத்திரனாலேயே ஆயிற்றென்ற கீர்த்தியானது உலகம் முழுதும் பிரஸித்தி யாவதால் தங்களுக்கு மெத்தப் பெருமையாகும். இப்பேர்ப்பட்ட புத்தி சாலியும் தங்களுககுப் பந்துவுமான இவனைச் சிறையினின்று விடுவித்து தக்க அதிகாரத்தில் நியமித்துக் காப்பாற்றி வந்தால் பின்னால் தங்கள் காரியங்களுக் கனுகூலப்படுவான். பஞ்சரத்தைப் பரீக்ஷித்தறிந்தவனுக்கு ஸன்மானம் செய்கிறோம்" என்று ராஜசபையில் உரைத்தவாக்கியமும ஸத்யமாகும்" என்றான்.

நந்தர்கள் "இவன் சொல்வதுபோல் செய்தால், சத்துருசேஷம் மிஞ்சுகிறது. அவ்விதம் செய்யாவிடில் "நந்தர்கள் சொன்ன வார்த்தையைத் தப்பி நடந்தார்கள்" என்ற அபவாதமு முண்டாவதுடன்முன்மௌரிய ஸம்ஹாரத்தால் தவிதவித்துக்கொண்டிருக்கும் பிரஜைகள் இச்சமயம் மீறி எதிர்ப்பார்களென்பது நிச்சயம்' என்று யோசித்துக்கொண்டே, பதிலளிக்காம லிருந்தார்கள்.

இச்சமயம் ஸுமதி யென்ற மந்திரி "இந் நந்தர்கள் விருத்தமந்திரி வாக்கியத்திற்குப் பாதி உடன்பட்டும் படாமலுமிருக்கிறார்கள். நான் இவர்கள் மனத்தை யனுசரித்து சந்திரகுப்தன் விடுதலையடையும் படிக்கும் பின்னால் சந்திரகுப்தன் தானே நாசத்தையடைந்து விடுவானென்று இவர்கள் நம்பும்படிக்கும் ஆலோசனை சொல்லாவிடில் மறுபடியும் ஆயுள்முடிய அவனைச் சிறையிலடைத்து விடுவார்கள். இதுவன்றி இப்பரம துஷ்டர்களும் படுபாவிகளுமான நீசர்கள் ஒன்றுக்கும் அஞ்சவே மாட்டார்கள். இவர்களிடம் ராஜ நீதியும் இல்லை. க்ஷத்திரிய தருமத்திற்கும் இவர்களுக்கும் வெகு தூரம். பந்து விசுவாசமென்பதை இவர்கள் சொப்பனத்திலும் அறியார்கள். நரகத் துன்பத்தை மதியார்கள். அபவாதத்திற் கஞ்சார்கள்" என்று அறிந்து நந்தர்களை நோக்கி "ஸ்வாமிகாள்! இச் சந்திரகுப்தனைத் தங்கள் சொல்லுக்குப் பிசகின்றி சிறையினின்று விடுவிக்க வேண்டுமானாலும், அரசாங்கத்தில் வேறொரு அதிகாரத்தையும் கொடுக்கக் கூடாது. பிராமணபோஜனம்

நடக்கும் அன்ன சத்திரத்திற்கு மேல் விசாரணைக் காரனாக நியமி யுங்கள்" என்றான்.

இதற்கு நந்தர்கள் "இது உசிதமானதுதானோ?" வென்று கேட்பவர்கள் போல், ராக்ஷஸனுடைய முகத்தை நோக்க, அவன் ரஹஸியமாகத்தில், நந்தர்களிடம், "ராஜபுத்திரர்களே! ஸுமதி சொன்னது மெத்த நன்மையான காரியமே. ஏனெனில், இச்சந்திரகுப்தன் சூத்திர ஸ்திரீ வழியில் உதித்தவனாதலாலும் ராஜபீஜத்திற்கு உண்டானவனாதலாலும் விருத்த ராஜனுக்குப் பேரனென்ற அகம் பாவத்தினால் ஸ்வஸ்பாதிகாரத்தில் உதாஸீனனாகப் பிராமண போஜனங்களைச் சரிவர விசாரித்து நடத்த மாட்டான். அன்ன சத்திரம் போட்டவனுக்குப் புண்ணியமும், அவ்விடத்திய மணிய காரனுக்குப் பாபமும் சேருவது வழக்கமும் உலக பிரஸித்தமு மான தால் அதில் நடக்கும் குறைகளால் உண்டாகும் அபவாதம் தங்களை அணுகாது. சந்திரகுப்தனுக்குப் பிராமணர்கள் சாபமேற்படுவதால் தங்களுக்கு மீந்திருக்கும் சத்துருவும் தானே நரகத்தையடைந்து விடுவான் என்பதை அனுஸரித்தே ஸுமதி இவ்விதம உரைத்திரு க்கிறான். இது நல்ல காரியம்" என்றான்.

பிறகு நந்தர்கள் சந்திரகுப்தனை விடுவித்து அன்ன ஸத்திராதி காரத்தில் நியமித்தார்கள். அப்பொழுது ராக்ஷஸன் "பஞ்சராக்ஷகர்களை நாம் தண்டிக்காவிடில் நம்மை அவமதிக்குமாறு இவ்விதம் கபட சில்பம் அனுப்பித்தவர்களுக்குப் புத்திவராது. கர்வம் அடங்காது" என்று தீர்மானித்து அவ்வர்ட்களை யழைத்து வரும்படி தூதர்களை யனுப்பினான். அத்தூதர்கள் மூலைக்கு மூலை ஓடி எங்கும் வெகு நாழிகை தேடித் திண்டாடித் திரும்ப வந்து ராக்ஷஸனைக் கும்பிட்டு "அவர்கள் தங்கள் சாமான்களைப் போட்டது போட்டபடி யே போட்டுவிட்டு ஓடிவிட்டார்கள்" என்று உரைக்க, ராக்ஷஸன் "ஓஹோ இஃதேதோ அனர்த்தத்தை விளைவிக்கக் கூடியது போலி ருக்கிறதே! நல்லதிருக்கட்டும். நந்தர்களிடம் அமாத்ய ராக்ஷஸன் இருக்கிறானென்பதை மமதையுள்ள மன்னர்கள் மறந்து விட்டார்கள் போலும்" என்று சிந்தித்துக் கொண்டே தன் வீடு சென்றான்.

சிறையினின்று விடுபட்ட சந்திரகுப்தன் கங்காதீரம் சென்று ஸ்நானம் செய்து தனது துக்கத்தை யுள்ளடக்கிக்கொண்டு இறந்த தனது தந்தைக்கும் சகோதரர்களுக்கும் திலோதகம் கொடுத்து வந்து தனக்கேற்படுத்தப்பட்டிருக்கும் அன்ன சத்திர அதிகாரத்தைத் திறனால கூடியவரையிலும் பிசகின்றிச் செய்துவந்தான்.

## ஏழாவது அத்தியாயம்.

# சாணக்யனின் சபதம்.

இவ்விதம் நந்தர்களாக்ஞைப்படி அன்ன ஸத்திராதிகாரத்திலிருந்து வரும் சந்திரகுப்தனானவன், பிராமணர்களிடம் பக்தி சிரத்தையுடன், சற்றும் அபராதத்திற்கே இடமின்றி ஆராதித்து வரும் நாளில் சிலகாலங் கழிந்து, ஒரு நாள் தண்டம், கிருஷ்ணாஜினம் தரித்து "இவர் பிரகாசிக்கும் சூரியனே? ஸப்த ஜ்வாலையுடன் விட்டெரியும் அக்கினிதேவன் தானே?" என்றெண்ணும்படியான தேஜஸ்ஸினால் விளங்கும் சரீரத்தையுடைய சாணக்யன் என்னும் பிராமண சிரேஷ்டனொருவன், அவ்வன்ன சத்திரத்தின் வழியாக நைமிசாரண்யம் குறித்துச் சென்று கொண்டிருந்தான். நடு மத்தியான வேளையில் பசி தாகங்களாலும், மார்க்க ஆயாஸத்தாலும், களைத்திருக்கும் அச் சாணக்யனது காலில் ஓர் வகைக் காய்ந்தபுல் இடறி வேகத்துடன் நடக்கும் அவனைக் குப்புற வீழ்த்தியது. அதனா லளவற்ற கோபத்தை யடைந்த அவன் "ஓர் ஜட ஸ்வரூபமான அற்பப் பூண்டினால் நமது வழிப்ரயாணம் தடைபட்டு நாமும் கீழ் வீழ்கிறதா? இதை நிர்மூலமாக்காமல் விடக்கூடாது!" என்று அக்கடும் வெயிலையும், பசிநேரத்தையும் லக்ஷியம் செய்யாது தன் கையிலிருக்கும் தண்டத்தின் நுனிகொண்டு வேருடன் அம் முஞ்சிப்புல்லைப் பிடுங்கித் துணுக்கு துணுக்காய் அதைச் சேதித்து எறிந்து தான் செல்லவேண்டிய வழியை யனுஸரித்துச் செல்ல வாரம்பித்தான்.

இவ்வளவையும் தான் தூரத்திலிருந்த போதிலும், உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த சந்திரகுப்தன் "இவர் யாரோ, மகா தேஜஸ்வியாயும் கடுங் கோபிஷ்டராகவு மிருக்கிறார். இவ்விதக் கோபமுள்ளவர்க ளிடம்தான் மெய் அபிமான மிருக்கும். ஆகையால் இவர் நமக்கு அனுகூலப்பட்டுவிட்டால் நமது குறை நீங்கிவிடும். ஆதலால் இவா உதவிபெற வேண்டும்" என்று நினைத்து அவ்வந்தணன் ஸமீபம் சென்று சாஷ்டாங்கமாக நமஸ்கரித்துக் கைகளைக் கூப்பிக் கொண்டு "ஸ்வாமீ! மத்தியானகாலம் மீறிவிட்டதால் எனது கிருஹத்திற்கு எழுந்தருளிப் பழமாதிய அருந்திச் சற்று இளைப்பாறிவிட்டுச் செல்லுமாறு வேண்டுகிறேன்" என்றான்.

சாணக்யனும் சந்திரகுப்தன் பிரார்த்தனைக் கிணங்கி "அவ்விதமே யாகட்டும்" என்று அன்புடன் கூறி, அவன் கிருஹம் சென்று அர்க்ய பாத்யங்களால் பூஜைபெற்று பக்தியுடன் அளிக்கப்பட்ட பழங்களை அருந்தி இளைப்பாறியதும், நைமிசாரண்யம் செல்லுமாறு எழுந்தான். அவனைச் சந்திரகுப்தன் நமஸ்கரித்து "மஹா ஸ்வாமீ! பிரயாணத்தால் மெத்தக் களைத்திருக்கிறீர்கள். என்மேல் தயை செய்து இக் கிருஹத்தில் நாலைந்து தினங்களாவது தங்கிக் களைப்பாற்றிக்கொண்டு என்னால் செய்யப்படும் அற்ப ஸேவைகளை ஏற்றுப் பிறகு செல்க. பெரியோரின் வரவினால் எனது பித்ருக்களெல்லாம் சந்துஷ்டராவார்கள். நானும் தன்யனானேன். எனது கிருஹமும் புனிதமாயிற்று" என்று வணக்கமா யுரைத்தான்.

இவ் வார்த்தைகளைச் செவியுற்று, சந்திரகுப்தனின் பக்தி விசுவாஸத்தையும் நற்குணத்தையும் கண்டு சாணக்யன் மெத்த சந்தோஷித்து "அவ்விதமே யாகட்டும்" என்று ஒப்புக்கொண்டு அவ்விடமே மூன்று நான்கு தினங்களிருந்து அவனால் செய்யப்படும் உபசாரங்களை அங்கீகரித்து மன மகிழ்ந்தவனாய் அவனைப் பார்த்து "ஐயா கிருஹஸ்தனே! நீ யாருடைய புத்திரன்? உன்பெயரென்ன? உனக்கிவ்விடமிருக்கும் ஜீவனம் யாது?" என்று வினவினான்.

மெத்த தாழ்ந்த குரலுடன் "ஸ்வாமீ, இவ்வூர் அரசனான ஸர்வார்த்த ஸித்தியின் பிரியபத்தினியான முராதேவிக்கு என்

தகப்பன் மௌரியனும், பட்டமகிஷியான ஸுநந்தா தேவிக்கு நந்தர்களென்ற ஒன்பது பிள்ளைகளும் பிறந்தார்கள். என் தகப்பனை மௌரியனுக்குப் பிறந்த நூறு பிள்ளைகளில் என்னைச் சந்திரகுப்தனென்று அழைப்பார்கள். எனக்குற்ற துர் திசையை என்னென்னவுரைப்பேன்! "அநேகருடன் பிறந்தவர்களுக்கு அதிக கிலேசம்" என்னும் உலகச் சொல்லானது எனது அனுபவத்திலேயே ஏற்பட்டதே. எவ்விதமெனில், பட்டமகிஷி புத்திரர்களான நவநந்தர்கள் அஸகாய சூரர்களாயும், ஞாதிகளாயும், நூறுபேர்களாயுமிருக்கும் எங்களிடமும், ஸகல ப்ரஜைகளுக்கும் ஸம்மதனுக்குத்தக்க அந்தஸ்தி லிருக்கும் என் தந்தையிடமும், "காலாந்திரத்தில் இவர்கள் நமது செங்கோலை ஆக்ரமித்து விடுவார்கள்" என்ற சந்தேகம் கொண்டு, கபடமாக எம் எல்லோரையும் நில மாளிகையில் அடைத்து, அன்ன ஆகாரம் கொடாமலிருந்துவிட்டதால், யானொழிந்த தொண்ணூற்றொன்பது பேர்களும், என் தகப்பனும் அவ்விடமே மாண்டார்கள். நான்மட்டும் இதனைக் கண்ணால் கண்டும், எண்ணியெண்ணி வருந்தியும், கதறிக் காலங்கழிக்கும் நிமித்தம் பிழைத்திருந்தேன். ஏதோ காரணத்தைக் கொண்டு என்னைச் சிறையினின்றும் விடுவித் திருக்கிறார்கள். ஆயினும் என்ன? என்னொருவனிடமும் தயவைக் காட்டாது ஏதோவொரு கபட ஆலோசனையால் அன்ன ஸத்திராதிகாரத்தை ஜீவனமாக ஏற்படுத்தி இங்கிருந்து வரும்படி கட்டளையிட்டிருக்கிறார்கள். எனக்குத் தக்க ஆதாரமில்லாததால் இத் துர்திசை யடைந்து, அற்பத்தொழில் செய்து தலைவிதியை யனுஸரித்துப் பொறுமையொடும் காலங்கழித்து வருகிறேன். ஆனாலும் எச்சமயத்தில் 'என்னையும் நந்தர்கள் கபடமாய்க் கொன்று விடுவார்களோ?' வென்ற பயத்துடன் ஆகாரநித்திரைக ளற்று இருந்து வருகிறேன். அதிசயிக்கத் தக்க விதமாய் நவநிதியும்தேடி அநேக தேசமன்னர்களிடமிருந்து கப்பம் வாங்கும் மஹாராஜனுக்கு நான் பௌத்திரனாயிருந்தும், எனது தகப்பன் மௌரியனால் பிரதிஷ்டிக்கப் பட்டிருக்கும் காசியிலுள்ள விருபாக்ஷஸ்வாமிக்கு நின்று போயிருக்கும் அபிஷேக ஆராதனைகளைக் கூட நிர்வகிக்கமாட்டாது, ஏழையாக, 'ராஜவித்துக்குப் பிறந்தவன்,' என்று பெயர் வைத்துக் கொண்டு கபடிகளான

இச்சத்துருக்களின் மத்தியில் ஜீவிக்கிறேனே! இதனினும், மஹா புண்ணிய மிருந்த அரணியத்தில் வஸித்துக கந்தமூலங்களால் வயிற்றை நிரப்பியும் தங்களையொத்த மஹானுபாவர்களின் பாத ஸேவையைச் செய்தும் வந்தால் பரலோகமாவது கிடைக்குமே! அகால மரணமடைந்த எனது தகப்பனும் சகோதரர்களும் நற்கதி யடையாரகளே! ஆகையால் நானிங்கு யாது நிமித்த மிருககவேண்டும்? உத்திரவானுல் நானும் தங்களுடன் அரண்யம வருகிறேன்" என்றுசொல்லி வாய்விட் டலறினுன்.

கண்ணீரப் பெருக்கினுல் நனைந்திருக்கும் சரீரத்தையுடைய சந்திரகுப்தனைப் பார்த்து சாணக்யன் "ஆ! ஆ!! இவனுடைய விசனத்தையும் ஸௌஜன்யத்தையும் பிரபுத்வலக்ஷணத்துக்குரிய சரீரத்தையும் பார்த்தால் "இவன் சிமமாஸனத்திலிருந்து முடிசூடவேண்டியவனுக இருககிறன். அவ்வாறிருக்கக் கஷ்டதிசை யடைந்திருக்கிறனே!" என்று மனம உருகி, "அடா சநதிரகுப்தா! க்ஷத்திரிய பிரருவுக்கு உதித்து யௌவனசாலியாகி அரசனுவதற்குரிய ஸாவ லக்ஷணங்களையும அடைந்திருக்கும் உனக்கு வன வாஸமும் கநத மூல ஆகாரமும் ஏற்றதோ? அவ்விதம் பிராமணர்களன்றே இருக்க வேண்டியவர்கள்? க்ஷத்திரிய ஏழையாய் ஆபத்திற் குட்பட்டால் தைரியத்தையே முன்னிட்டு நற்காலத்தை எதிர்பார்த் திருந்து தக்க ஸமயமறிந்து தன் புத்தி பௌருஷ பலங்களால் சத்துருககளை நிகரஹித்து நிலைகக வேண்டுமேயல்லாது நீ இவ்விதம் தைரியமிழந்து கேவல ஜனஙகள் போல் சொல்வது சரியோ? நீசாதுக்களுக்குப் பணிவிடைசசெய்வதாலும், உன் கண்ணீராலும் உன் தந்தையும் சகோதராகளும் நற்கதியடைவார்களோ? ஒருக்காலும் இல்லை. உன் சத்துருககளின் இரத்தத்தைப் பூமியில் இறைத்தாலல்லது, அவர்களால் துர்மரணமடைந்த உனது பிதுருக்களுக்கு நீ இறைதத எள்ளுந்தண்ணீரால் தாக சாநதி ஆகாது, ஆகாது," என்றுன்.

அதற்குச் சந்திரகுப்தன் "ஸ்வாமி மகாநுபாவா! அணுவினும் சிறிய நெருப்புப் பொறியானது காற்றின் சகாயத்தால் பெருங் காடு முழுவதையும் தகித்து விடுவதுபோல், என் அதிர்ஷ்டத்தால்

தங்கள் கிருபாகடாக்ஷத்திற்குப் பாத்திரனாகி எனது சத்ருக்களெல்லோரையும் நாசப்படுத்தி நான் பிரகாசிக்க வேண்டு மல்லாது, எனது பௌருஷ பலத்தால் சத்ரு நிக்ரஹமாகுமெனபது அஸாத்யம். தங்களையே நான் சரணமடைந்து விட்டேன். தங்கள் தேஜோ பலத்தால் இக் குரூரர்களான சத்ருக்களை ஸம்ஹரித்து என்னைக் காப்பாற்றவேண்டும்'' என்று சாணக்யனுடைய பாதங்களைப்பிடித்துக் கொண்டு கதறினான்.

உடனே சாணக்யன் அவனை நல் வார்த்தைகளால் எழுந்திருக்கச் செய்து "அடா சந்திரகுப்தா! உனது சத்ருக்களை நிக்ரஹித்து உன்னை ராஜ்யாதிகாரம வகிக்கச் செய்ய நான் சமர்த்தன் தான். ஆனாலும் நந்தர்கள் பந்து விரோதத்தால் உனக்கு மட்டும் துரோகிகளாகிப் பிரஜைகளைத் தருமத்துடன் பரிபாலித்து வருகிறார்கள். ஆதலால், இவர்களை நான் அகாரணமாய் நிகரஹித்தால விக்கினங்களும அபகீர்த்தியு முண்டாய் விடும். நேரே நமக்குச் செய்த அபராதத்தை அறிந்து அவர்களை நிகரஹிப்பதால் பாதகமில்லை. நீயோ சர்ஜனனாகவும் குணசாலியாகவுமிருக்கிறாய். ஆகலால் சுபாவ துஷ்டர்களான நந்தர்களுக்கு என்னிடம் கோப முண்டாக்கக் கூடியதும் தரும விருத்த மில்லாததுமான ஒரு சேஷ்டை செய்கிறேன். உனது நற்காலத்தினாலும் அவர்களுடைய நாசகாலத்தின் வலுகலினாலும் அக்காரியத்திற்கு நந்தர்கள் க்ஷமிக்காது நிராகரித்து எனக்குக் கோபமுண்டாகும்படி செய்து கொண்டார்களாகில், அப்பொழுது உனக்கு அபயம் தருகிறேன்'' என்றுரைத்து மாத்யானிக ஸநானம் செய்யும் நிமித்தம கங்காதீரம சென்றான்.

அதே ஸமயம் தெய்வானுக்ரஹத்தால் நவநந்தர்கள் நூதனமாயுண்டாக்கியிருக்கும் உதகியான வனத்தின் வனப்பைப் பார்த்துக் களித்துத் திரும்ப அரண்மனை நோககி வருமபோது நடுப்பாதையிலுள்ள அன்னஸத்திரங்கண்டு, பிராமணர்களின போஜனபங்தியைப் பார்க்க விரும்பி தமது வாஹனங்கள்விட் டிறங்கிச் சத்திரத்துட் சென்றார்கள். இது கண்ட சாணக்யனும் இதுவே ஸமயமென்று ஸ்நானத்தையும் மாத்யானிகத்தையும சீக்கிரம முடித்துக்கொண்டு வேடு கெட்ட கந்தை வஸ்திரமுடுத்து யாரோ வொரு பஞ்சைப்

பார்ப்பனன் போல அச்சந்திரத்தினுட் புகுந்து அவ்விட மிருக்கும் அரசருக்குரிய ஸுவர்ண பீடத்தை இழுத்து முன்பக்கத்தில் போட்டுக்கொண்டு அதிலுட்கார்ந்தான். அவ்வேளையில நவநந்தர்கள் பிராமணர்களுக்குப் போட்டிருக்கும் பந்திகளைப் பார்த்துக் கொண்டேவருமபோது சாணக்யனைக் கண்டு, மதத்தினாலும விதிவசத்தாலும மதியாது கோபங்கொண்டு, 'தமது ஆகார மென்றெண்ணி விளக்கில விழ எண்ணும் விட்டில்கள் போல, காலபாசத்திற்குட்பட்டவர்களாகி, ஒருவரை ஒருவர் பார்த்துத் தமது தூதர்களை அழைத்து "யார இவன் பிராமணாதமன்? துச்சன்? அரசஸ்தான பீடத்தில், கால் மேல் காலிட்டுக்கொண்டு, தானே அதிகன் போல் உட்கார்ந்திருக்கிறான். நீங்களெல்லோரும் ஏன் பேசாம லிருக்கிறீர்கள்?" என்று அதட்டினார்கள்.

அதைக்கேட்டு ஓடோடியும் வந்த ராஜபடர்கள் "எழுந்திரு எழுந்திரு!" என்று சாணக்யனை வெருட்டினார்கள். சாணக்யன், அவர்களுரைத்ததைச் சற்றும் லக்ஷியம் செய்யாமல் முன்போலவே உட்கார்ந்திருக்க, தூதர்கள் மிகவும் கோபித்து அவனைக் கையைப் பிடித்துக் கரகர வென்றிழுத்தார்கள். அப்பொழுது சாணக்யன் சந்திர குப்தனுக்கு அதிர்ஷ்ட காலம் கிட்டியதனால், மகா கோபத்துடனெழுந்திருந்து, கண்கள் சிவக்க, புருவத்தை நெறிநெறித்துப் பீடத்தை உதைத்து, காலமிருத்யுவைப்போல உதடுகளைக் கடித்து, பற்களை நெறித்து, கால்கள் கிடுகிடுவென நடுங்க, அஸாத்யமாயுண்டாகும் கோபத்தைச் சற்றுமனதிலடக்கி, நந்தர்களை நோக்கி "நந்த அதமர்களே! "போஜனத்தை யபேக்ஷித்துவந்த அதிதியை நிராகரித்த கிருஹஸ்தனுடைய ஆயுளை மிருத்யு அபகரிக்கிறான்" என்றுரைக்கும் சாஸ்திர வாக்யம் உங்களிடமே பலித்து விட்டது! நிரபராதியாகப் போஜன பந்தியிலுட்கார்ந்திருக்கும் என்னைப் பிராமண அதமனென்றும் துச்சனென்றும் மெத்தக் கேடு கெட்ட கொடும் வாக்யங்களால் எல்லோரும் கேட்கும்படி வைது, அவமானப்படுத்தி ஆட்களுடன் சொல்லி என்னைப்பற்றி யிழுக்கச் செய்த உங்களை ஸம்ஹரித்து, கால்களிற் கயிறு கட்டி கழுது, நாய், நரி பிசாசங்களிவைகளுக்கு ஆகாரமாகும்படி உங்கள் சவங்களை வேலிக்

கப்புறம் இழுக்கு எரியச் செய்வதை இச்சபையிலுள்ள ஜனங்கள் பார்ப்பார்கள். ப்ருகு வம்சத்திற் பிறந்த ஓர் ரிஷி தனக்கு அபராதிக ளான ஹேஹயர்களென்ற துஷ்ட க்ஷத்திரியர்களைத் தமது பார்வை யினாலேயே நாசப்படுத்தியது போல, எனது தபசிற் சிறிதைச் செலவழித்தே இப்பொழுதே உங்களை நாசப்படுத்தி விடுவேன். ஆனா லும், அதனால் எனது பௌருஷத்திற்குப் பிரயோஜன மேற்படா மல் போய்விடும். ப்ருகு புத்திரரான சுக்ராசாரியாரால் செய்யப் பட்ட தண்டநீதிசாஸ்திரத்தை அத்யயனம் செய்ததால் நான் அவ ருக்குத் தரும புத்திரனாவது சத்யமானால், பிருகு வம்சத்தில் பிற ந்த பரசுராமன் துஷ்ட க்ஷத்திரியர்களை அனேகமாய் சங்கரித்து இளைப்பாறியது போல், க்ஷத்திரிய அதமர்களாம் உங்களை ஸம்ஹரி த்தே, கால ஸர்ப்பம் போல விழுந்திருக்கும் இவ்வெனது சிகையைக் கட்டுவேன். அவ்விதம் செய்யாது கட்டுவேனாகில் ஸ்வதருமத்தை விட்டு டாம்பீகமாக அன்ய தருமத்தை யாசரிக்கும் மனுஷ்ய அத மன் அடையும் துர்க்கதியை நான் அடைவேன். பின்னும் பிராமணர் கள் செய்யும் வேதாத்தியானத்தை மனமுற்றுக் கேட்டுக்கொண் டிருந்த சூத்திரனுக்குப் பிராப்தமாகும் பரலோக தண்டனை எனக்கு உண்டாகட்டும். இஃதல்லாது வேதத்தைச் சூத்திரனுக்கு உபதேசி த்த பிராமணன் அடையும் கெட்டகதியையும் அடைவேன்." என்று இவ்விதம் அனேகமான குரூர பிரதிக்ஞைகளைச் சபத பூர்வமாகச் செய்து எல்லோரும் பிரமித்துக்கொண்டிருக்கும்போதே அவ்விடம் இருந் தெழுந்து சென்றான்.

அப்பொழுது, பின்வரும் பெருங்கேட்டைக் குறிக்கக்கூடிய பூகம் பமும் தூமகேதுக்களும் உற்பவித்ததுகண்டு, சபையிலுள்ள ஜனங்கள் நடுநடுங்கினார்களல்லாது, சத்துருக்களைக்கண்டு மீசையை முறுக்கும் வீரனைப்போல் அவிழ்ந்து புரளும் தனது சிகையைக் கையால் உருவிக் கொண்டே செல்லும் சாணக்யனை சமாதானப்படுத்தி நிறுத்துவ தற்கு யோசனையே தோன்றாது நின்றார்கள். நந்தர்களுக்குத் தெய்வ பலம் தப்பிவிட்டதால் சிலர் கோபத்தையு மடைந்தார்கள்.

இவை கண்ட வக்ரநாசன் என்ற விருத்த மந்திரியின் புத் திரனான புஷ்பதந்தன் என்பவன் தன்னுள் "இப்பொழுது குரூர

மான பிரதிக்கிஞையைச் செய்துபோன பிராமணனின் கொடுஞ்சொற் பிரயோகத்தால் இந்த நவநந்தர்கள் பிராமணர்களிடம் கௌரவ புத்தியுள்ளவர்களுக்குப் பயம் தோன்றியிருத்தலேயும், பிராமண அவமானத்தில் வெறுப்புள்ளவர்களுக்குப் பச்சாத்தாபமுண்டாயிருத்தலேயும், "பிராமணர்கள் பிச்சைக்காரர்கள்; இவர்களால் ஆவதென்ன!" என்று இருப்பவர்களுக்குக் கூட கோபமுண்டாயிருத்தலேயும் உணராமற் போகவில்லை. ஆயினும் சத்துருக்களால் உண்டாகும் பேதோபாயத்திற்கு இடமில்லாதிருக்கும்படி இவர்கள் கட்டுப்பாட்டிலும் ஐகமத்தியத்தாலும் ஒருவர் சொல்லும் வார்த்தைக்கே எல்லோரும் உடன்பட்டு நடப்பவர்கள். ஆதலால் தான் ஒருவரேனும் பொறுமையுடன் ஆலோசியாது, பிராமணனே அவமானப்படுத்திய விஷயத்தில் ஒருவன் சொன்னதையே எல்லோரும் கேட்டுச் சும்மாயிருந்து விட்டார்கள். இதனால் நேரும் ஆபத்திற்கு எல்லோரும் சமபாகிகளாக இருக்கிறார்கள். காலபேதத்தை யறியாமற் செய்து கொண்டிருக்கும் இக்கட்டுப்பாட்டினலேயே ஒரு சமயம் பெருத்த ஆபத்திற் கிவர்கள் உள்ளாவார்களென்பது நிச்சயம். இப்பொழுது பிரதிக்ஞை செய்து போன பிராமணனின் வாக்கு சத்தியமானல் இனிப் பரலோகம் செல்ல இருக்கும் ஸர்வார்த்த ஸித்தி ராஜனுக்கு இந்நந்தர்களின் கையால் எள்ளுந் தண்ணீரும் கிடைக்குமென்று தோன்றவில்லை. அப்பிராமணன் அதிக தேஜஸ் உள்ளவனுதலால் அவன் நந்தர்களைப்பார்த்து நினைத்தபடி பேசியபோது இவ்விடமிருக்கும் ஜனங்களெல்லோரும் பயப்போன்றவர்களாய் யாதொரு பதிலும் சொல்லாது ஸ்தம்பித் திருந்தார்கள். இதை யோஜித்துப் பார்த்தால் அவன் தன் பிரதிக்ஞையை ஈடேற்றி விடுவானென்றே தோன்றுகின்றது. இதற்கு சாதகமாயும் உத்பாதங்களும் தோன்றியிருக்கின்றனவே!. இவ்வளவானலும் இவர்கள் சமீபத்திலிருக்கும் துஷ்ட ஜனங்கள் இந்நந்தர்களுக்கு உண்டாயிருக்கும் கோபத்தைக் கிளறி மறுபடியும் அப்பிராமணனை மேலும் கோபிக்கச் செய்தால், இனிவரப்போகும் ஆபத்து இப்பொழுதே சம்பவித்து விடும். நான் மந்திரி புத்திரனாய் சமீபத்திலிருப்பதால் இவர்களை நல்ல வார்த்தை சொல்லி அடங்

யனைக்கு அழைத்துச் செல்வதே அமைச்சர் தர்மம்'' என்று நிச்சயித்து நந்தர்களைப்பார்த்து,

"ஸ்வாமிகாள்! சிஷ்டர்களுக்கு ருசியாத இச்சத்திரத்துச் சாப்பாட்டிற்கு வந்து முனைபாகத்திலிருக்கும் ஸ்வர்ண பீடத்திலுட்கார்ந்து சமயோசிதமற்றும், மனத்திற்குத் தோன்றியபடியும் கத்தியிட்டுச் சென்ற அப்பிராமணன் பைத்தியம் பிடித்தவனென்று தோன்றுகிறது. உலகத்தில் பாலர் பித்தர் இவர்களுடைய சொற்கள் விநோதத்திற்கு யோக்கியமல்லாது பொருட்படுத்த யோக்கியமல்ல. உங்கள் கோபத்திற்கு எதிர்ப்பட்டுப் பிழைத்தவர்களை இவ்வுலகத்தில் எங்கேயும் காணேன். இப்பஞ்சைப் பிராமணன் எம்மாத்திரம்? இவனை நிக்ரகித்தலால் வரும் வெகுமானம் என்ன? உபேக்ஷித்தலால் உண்டாகும் அவமானம் தான் என்ன? இது தர்ம சத்திரமாகையால் இவ்விதமே அநேகர் வருவார்கள். இவ்விடமிருக்கும் அதிகாரிகளுக்கு இப்பேர்ப்பட்ட மூர்க்கர்களைத் திருப்திசெய்வதால் ஆகாரநித்திரைக்குச் சமயம் கிடைப்பது கூடக் கஷ்டம். இஃதிருக்கட்டும். அநேக நாட்களாக மகா ஸ்வாமிகளின் கடாக்ஷத்திற்குக் காத்திருந்த அநேகம் தேசாதிபதிகளுக்குச் "சன்மானத்துடன் நாளைக்கு உத்தரவு தருகிறோம். அவரவர்கள் தேசம் செல்வதற்கு எல்லோரும் சித்தமாயிருக்கட்டும்" என்று நேற்று சந்நிதானத்தில் உத்தரவானதன்றோ? அம்மன்னர்கள் தாந்தாம் செலுத்த வேண்டிய கப்பங்கள் சகிதம் சந்நிதானத்தின் பாத தரிசனம் எப்பொழுது கிடைக்குமென்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். அமாத்யரும் தங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார். எழுந்தருள்க'' என்றுரைக்க, நந்தர்கள் "சரி" யென்று தமது வாஹனங்களிலேறி ஆஸ்தானம் சென்றார்கள்.

## எட்டாவது அத்தியாயம்.

# சாணக்யனின் முயற்சி.

---

அதிகோபத்துடன் சபதம் செய்து சாணக்யன் சென்றதும் அங்குண்டான உத்பாதங்களைக் கண்டு அவ்விடத்தி லுள்ள ஸபா ஜனங்கள் ஒருவருக்கொருவர் பின்வருமாறு பேசிக்கொண்டனர். "இதென்னவோ விபரீதங்கள் காணப்படுகின்றன! இவ்வித பிராமண அவமானமும் என்றும் நடந்ததில்லை. அவ்வந்தணனை நிறுத்திச் சமாதானப் படுத்துவோமென்றால் அவன் மெத்தகோப மடைந்து பிரதிக்ஞையைச்செய்து போனவனாதலால் நல்லவார்த்தைகளுக்கு வசப்படமாட்டான். இதை யரசருக்குத் தெரிவிப்போம் என்றால் கலிமகிமையால் பிராமணரெல்லாம் கொடிய மூர்க்கரென்று அவமதித்து விடுவார்கள். பின் யாரேனும் தைரியசாலிகளைக்கொண்டு தெரிவிக்கலா மென்றால், தண்ணீர் ஊற்றுவதால் அதிகமாக எரியும் படபாக்னி போல் சொல்லப்போனவர்கள் மீது கோபமதிகரிக்கும். 'நல்ல வம்சத் துதித்தவர்களானதால் நல்லமனம் இராதா' என்று எண்ணுவோமாகில், சிலாக்யமான சந்தனக்கட்டையி லுண்டான தீயானது வனத்தை எரிப்பது போல ஏழைகளைத் தண்டிப்பார்கள். சௌமியர்களாய்த் தோன்றும் இவ்வரசர்களிடம் இப்பேர்ப்பட்ட தோஷமுண்டோ என்றால், அகாலத்தில் புஷ்பித்த புஷ்பமரமானது பார்ப்பவர்களுக்கு ரமணீயமா யிருந்தாலும் பிரஜைகளுக் குண்டாகும் பீடைகளை குறிப்பது போல ஸமயத்தில் ஜனங்களை ஹிம்ஸிப்பார்கள். பட்டாபிஷேக கலச ஜலங்களால் இவர்களுடைய ஸ்வாதந்திரிய மற்ற தன்மை கழுவப்படுவதுபோல தேச கால வர்த்தமானங்களறிந்து உபதேசிக்கும் ஆப்தர்களான விருத்த ஜனங்களின் வார்த்தைகளிலுள்ள கௌரவமும் கழுவப்பட்டு விடுகிறது. சுவேத சத்திர நிழலினால் வெயில் மறைபடுகிறது போல், உதாஸீனத்தால் தூராலோசனை யுண்டாகி ஆபத்து வருமென்ற எண்ணமும் உலக அபவாதத்தில் பயமும் மறைகின்றன. இவர்கள் மரியாதையை மீறி நடக்கும் சுபாவமுள்ளவர்களானதால் ஹிதத்தை எடுத்துரைக்கும் ஜனங்கள் இவர்களிடம் கொஞ்சமாகவே இருப்பார்கள்.

"மேலும், ஐசுவரியம் யௌவனம் ரூபம் விநயமற்ற குணம் இவற்றி லொன்றொன்று மட்டுமே அனர்த்த காரணங்களாகில், இவை யாவும் ஒரே இடத்தில் சேர்ந்து விட்டால் கேட்பானேன்? பின்னும் யௌவன மத மென்னும் இருட்டானது சூரியவெளிச் சந்திரால் விலகமாட்டாது. ஐசுவரிய மதமென்னும் நேத்திர ரோகமானது அஞ்சனங்களால் (மைதீட்டலால்) நிவர்த்தியாகாது. அலக்ஷ்யத்துட னிருக்கும் மன்னர்களுக்கு எதிரிகள் அற்பர்களா யிருந்தாலும், நெருப்புப் பொறி சிறிதாயினும் அது திரணத்தை முதலிற்பற்றி மேன்மேலும் விருத்தியடைந்து மஹா வனத்தை யும் தஹித்து விடுவதுபோல, ஆபத்துப் பெரிதாகவே ஏறபடும். பூர்வ யுகத்தில் பித்தன்போ லிருந்த துர்வாசமுனியின் சாபத்தினால் ஒரு சமயம் இந்திரனின் ஐசுவரியம் அனைத்தையும் அசுரர்கள் ஆக்கிரமிக்கவில்லையா? பிராமணன் பிச்சைக்காரன் போலிருந்தால் அவனுடைய தேஜஸையும் தபோபலத்தையும் அவமதிக்கலாமா? பிராமணனவமான மென்பது ஐசுவரியத்தை நாசப்படுத்துமே! ஐசு வரியமோ லக்ஷ்மீ ஸ்வரூபம். லக்ஷ்மியின் குணமோ கைக்கொள்வோ ரிடத்துள்ள தோஷத்தால் சஞ்சலமடைகிறது. அசுசியான இடத் தை, ஆசார வந்தர்கள் நீக்குவது போலும், ஆந்தை புகுந்த வீட்டை மேன்மேலும் விருத்தியடைய விரும்புவோர் விடுவதுபோலும், தருமநீதி தப்பி நடக்கும் மனிதன் எவ்வளவு குணவானா னாலும் அவனை விட்டு லக்ஷ்மியானவள் சென்றுவிடுவாள். பின் னும் அநந்த வேளையில் காரமேகத்தி லுண்டாகும் மின்னல் போல் தோன்றி மறைந்து விடுவாள். இப்பேர்ப்பட்ட லக்ஷ்மியைக் கைக் கொள்ளும் அரசர்கள் நியாயந் தப்பி நடக்கக் கூடாதென்பதை மற ந்து ஸாதுக்களை நிந்தித்து லோகாபவாதத்தைச் சற்றும் மதி யாம லிருந்துவரும் இநநந்தர்கள் விஷயத்தில் தெய்வ சங்கல்ப மெவ்விதமிருக்கிறதோ? அப்பிராமணன் யாது காரண மில்விடம் வந்தானோ? இனி என்ன நடக்கப் போகிறதோ?" என்று பேசிக் கொண்டே தத்தம் இடம் சென்றார்கள். இது நிற்க.

தேசாந்திர விசேஷங்களை அறிந்து வரும்படி அனுப்பப்பட் டிருந்த பர்வதராஜனது கூடசாரர்கள் அன்ன சத்திரத்தில் நடந்த

சகல சமாசாரங்களையும் அறிந்து அவற்றை உடனே தமதரசனுக்குத் தெரிவிக்குமாறு சென்றார்கள். இதற்குள் பஞ்சர ரக்ஷகர்கள் சென்று பாடலீபுரத்தில் நடந்த வர்த்தமானங்களையும் சந்திரகுப்தன் கண் ஜாடை செய்து தங்களை யனுப்பியதையும் தம் அரசனிடம் விவரமாய்த் தெரிவித்தார்கள். அது கேட்ட பருவதேசன் தன் மந்திரியான சபரவர்மனைப் பார்த்து "என்ன ஐயா! நீ யனுப்பிய பஞ்சரத்தின் பரீக்ஷை மந்திரிகளாலும் முடியாமல் சந்திரகுப்தனென்பவனால் ஆயிற்றாம். அதனால் நந்தர்கள் அவனைச் சிறையினின்றும் விடுவித்து அன்ன சத்திராதிகாரத்தில் நியமித்தார்களாம். அவன் கண் ஜாடை செய்து நமது தூதர்களை யனுப்பக் காரணமென்ன? அச்சந்திரகுப்தனே மௌரிய புத்திரனாக இருக்கலாம்" என்ன, அவன்,

"ஸ்வாமி! தமது சில்பத்திறனாலேயே சந்திரகுப்தனுக்குப் பந்த விமோசனமாயிற்று. அவன் இச்சமயம் தன ஹீனனும் இளைத்தவனுமா யிருப்பதால் சத்துருக்களை நிக்ரஹிக்க முடியவில்லையேயொழிய தக்க உதவி அவனடைவானாகில் அவனது எண்ணமும் ஈடேறி, அதிர்ஷ்டமும் பலிக்கும். மௌரியர்கள் புத்திமான்களென்று நாம் கேள்விப்பட்ட வண்ணமே சந்திரகுப்தனும் "பஞ்சர பரீக்ஷை" செய்ததுமல்லாமல் நமது தூதர்களை ஜாடைசெய்து அனுப்பவும் செய்தான். இதற்குக் காரணமென்ன வென்றால், பஞ்சர ரக்ஷகர்கள் ஆஸ்தானத்தில் "சிம்மம் அமானுஷகிருதம்" என்று சொல்ல, பரீக்ஷையால் அது கபட சிம்மம் என்று வெளியானதன்றோ? அதுபற்றி இனி இவர்கள் அங்கு இருந்தால் ராஜ தண்டனைக்குப் பாத்திரர் ஆவார்கள் அல்லவா? அவ்விதம் கூடாதென்ற கருணையாலும், இப்பஞ்சரத்தாலேயே தான் விடுதலை யடைகிறோமென்ற நன்றியினாலும கண் ஜாடை செய்திருக்கிறான். ஆதலால் அவன் மெத்தச் சதுரனாயிருக்கவேண்டும். அவனைப் பரீக்ஷித்த பிரபுக்களுக்குக் கீர்த்தி யுண்டாகும். தெய்வபலம் யாரிடம் எப்படி யிருக்கிறதோ?" என்றுரைத்துப் பின்னும், "இவர்களை யாரென்று கேட்டு, இவர்கள் சொன்ன பதிலால் இப்பஞ்சரம் பர்வதேசுவரனால் இவர்களை யவமானப் படுத்தும் நிமித்தம் அனுப்பப் பட்டிருக்கிறதென்று அறிந்து கொண்டதாலேயே கண் ஜாடை

செய்திருக்கிறான். இனி அவனுக்கு அங்கு இருப்பது அஸாத்யமாகும். சமீபகாலத்தில் ராஜ காரியத்தை யுத்தேசித்தாவது சந்திரகுப்தன் இவ்விடம் வரக்கூடும்'' என்றாய். பர்வதேசனும் ''இது சரியானது தான். இவ்விதமே நடக்கவுங் கூடும்'' என்று உரைத்துத் தனது அந்தப்புரம் சென்றான்.

இங்கு இவ்விதமிருக்க, அங்கு, கோபத்துடன் எழுந்து சென்ற சாணக்யன், தனக்குள் ''இப்பொழுது நந்தர்களை எனது புத்தி பௌருஷங்களால் சங்கரித்துவிட்டால் சுத்த க்ஷத்திரிய வம்சம் இதோடு நின்றுவிடும். உபேக்ஷித்தால் நான் செய்த பிரதிக்ஞைக்குப் பங்கமுண்டாகும். சாதுக்களைப் பிடித்த சுத்த க்ஷத்திரியனான வேண ராஜன் போல, இந்நந்தர்களும் துஷ்டர்களாயிருக்கிறார்கள். பூர்வத்தில் சூத்திர ஸ்திரீ புத்திரனான விதுரன் திருதராஷ்டரனின் ராஜ்யபாரத்தை நிருவகித்துக் கீர்த்திமானாக இருந்ததுபோல், என் புத்திபலத்தால் சத்துருக்களான நந்தர்கள் நாசமடைந்து அச்சந்திரகுப்தனே நந்த ராச்சியத்திற்கு அதிபதியானால், அவன் நியாயத்துடன் பிரஜைகளை ரக்ஷித்துக் கீர்த்தியுடனிருப்பான் என்பது நிச்சயம். உலகத்திற்கு இதைக்காட்டிலும் க்ஷேமகரம் வேறென்ன வேண்டும்? உலகத்தில் பூததயை யென்பது முக்ய தர்மம். அதைக் காட்டிலும் பயந்தவர்களாகிச் சரண மென்றவர்களை ரக்ஷிப்பது இன்னும் மேலான தர்மம். இது விஷயத்தில் பெரியோர்களான முன்னோர்கள் நடந்துகொண் டிருக்கிறதை நாமறிந்திருக்கிறோம். பசுக்களையும் பிரஜைகளையும் ஹிம்சிக்கும் புலியைப் போன்ற இந்நந்தர்களைச் சிக்ஷிப்பதால் பாப மேற்படாது. விக்கினங்கள் வாரா. சிஷ்டர்கள் சந்தோஷிப்பார்கள். துஷ்டர்கள் அடங்குவார்கள். இதுவே சரி'' என்றுயோசித்துக்கொண்டே செல்லும்போது, சந்திரகுப்தன் ஓடிவந்து நமஸ்கரித்து, பலங்களைச் சமர்ப்பித்து, ''ஸ்வாமீ! எனக்கிங்கு என்ன காரியம்? நானும் தங்களுக்கு சேவை செய்துகொண்டே பின்னோடி வருகிறேன். அரண்யத்தை யெல்லாம் தஹிக்கும் காட்டுத்தீயின் உக்கிரத்தால் வாடும் சம்பக விருக்ஷத்தை, உலக வெப்பத்தைச் சமனம செய்யும் உதக தாரைகளால் அணைத்துக் குளிரச்செய்யும் மேகம் போல், ஸ்வ

ஜனங்களை நாசப்படுத்தினவர்களான இச்சத்துருக்களின் கொடுமை பொறாது சோகத்தால் வாடும் என்னைத் தங்கள் கருணை பொருந்திய பார்வையாகும் அமிருத தாரையின் பெருக்கினால் சுகிக்கும்படி செய்ய வேண்டும்" என்று அவனது இரு கால்களையும் பிடித்துக் கொண்டு பிரார்த்தித்தான்.

இது கண்டு கருணையா லுள்ளம் கசிந்த சாணக்யனும் "ஐயா சந்திரகுப்தா! இனிச் சத்துருக்களின் பயத்தை விட்டுவிடு. இன்னம் சில தினத்தில் இந்நந்தர்களை ஸம்ஹரித்து ஸார்வபௌம பதத்திற்கு உசிதமான மகா ரத்ன ஸிம்ஹாஸநத்தில் உன்னை உட்காருவித்து பட்டாபிஷேகம் செய்வித்து ஸகல ஸாமந்த ராஜர்களின் ரத்ன கிரீட சோபையால் எப்பொழுதும் விளங்கும் பாதங்களை யுடையவனாக உன்னை நிலை நிறுத்தி அவ்வைபவங்களை எனது கண்களால் கண்டு களித்து நான் "செய்வன திருந்தச் செய்த" வனாகிய பிறகு தபோவனம் செல்வேன். இவ்வார்த்தையை நம்பு. ஸத்யம். ஸத்யம். ஸத்யம்." என்று மும்முறை உரைத்து "நான் இவ்விதம் உரைத்ததற்கு எனது ஸுசரித்ரமே சாக்ஷி" யென்று அபயம் தந்து, ஜனக்கூட்டமில்லாத ஓர் இடத்தில் மரத்தின் நிழலில் உட்கார்ந்து களைப்பாறிக் கொண்டே ராஜகாரியத்தை யாலோசித்து முடித்து பாதஸேவை செய்து கொண்டிருக்கும் சந்திரகுப்தனைப்பார்த்து, "ஐயா குமாரனே! இப்பூமியிலிருக்கும் மண்டலாதிபதிகளில் நந்தர்களுக்குச் சத்துருக்கள் யார்? மித்துருக்கள் யார்?" என்று கேட்டான்.

அதற்குச் சந்திரகுப்தன் "ஸ்வாமி! அரசர்களுக்கெல்லாம் மனதில் நந்தர்களிடம் மாற்சரியமுண்டாகிலும் ராக்ஷஸன் செய்யும் நான்குவித உபாயங்களாலும், புஷ்பித்திருக்கும் வனத்தை விரும்பி அதில் ஜீவித்துக்கொண் டிருக்கும் வண்டுகள்போல, சில அரசர்கள் நந்தர்களிடம் அன்பு வைத்து கீழ்ப்பணிந்துகொண் டிருக்கிறார்கள். சிலர் ராக்ஷஸனிடத்துள்ள பயத்தால், அங்குசத்திற்குப் பயந்து மாவுத்தனுக்கு வசப்பட்டிருக்கும் மதயானைகள் போல் நந்தர்களுக் கடங்கி யிருக்கிறார்கள். ராக்ஷஸனும் நந்தர்களை யெதிர்ப்பவர்களைத் தண்டித்தும் அன்பு வைத்திருப்போரை யாதரித்தும் அவரவர்களுக்கு உசிதமான தேசங்களைக் கொடுத்து அதிக வரும்படியைக் கப்பம்

கொடுக்கும்படி செய்து அந்தந்தக் காலத்திற்குச் சரியாய வற்றை வசூலித்தும், ராஜ பொக்கிஷங்களை நிரப்பிகொண்டிருக்கிறான். அவன் க்ஷணகாலமும் உபேக்ஷையா யிருக்க மாட்டான். பின்னும் மீந்த அதிகாரிகளுக்குச் சம்பளமொன்றொழிய வேறு எதும் பெறச் சற்றும் இடம் கொடான்'' என்றான்.

அது கேட்டு சாணக்யன் "ராஜ்ய தந்திரங்களில் நிபுணனான ராக்ஷஸன் மந்திரி பதவிக்கு மிக்க யோக்யன்தான். ஆகையால் நந்தர்கள் இவனைச் சகலத்திலும் நம்பியிருக்கிறார்கள். அது போகட்டும். நந்தர்களுக்கு ஆப்த மித்திரர்கள் யார்? உதாஸீன பக்ஷம் வகித்த மன்னர்கள் யார்?'' என்று கேட்க,

"ஸ்வாமீ! நந்தர்களுக்குக் காசி தேசாதிபதி மச்ச தேசாதிபதி ஆகிய இவ்விருவர்களும் பரம மித்திரர்கள். காச்மீரபதி மலையபதி சிந்துபதி குலூதபதி பாரசீகபதி காம்போஜ சீன ஹூண தேசாதிபர்களுக்கு, எஜமானாகிய பர்வத ராஜ்யாதிபனான பர்வதேச்வரன் அவர்களுக்கு உதாஸீன பக்ஷத்தைச் சேர்ந்தவன். அப்பருவ தேசுவரனுக்கு ஒரு ஸமயம் சத்துருக்களுடன் நேர்ந்த கலகத்தை அமாத்ய ராக்ஷஸன் ஸமாதானப் படுத்திய காரணத்தால் ராக்ஷஸன் தனக்கு மித்திர னென்று பர்வதேசன் பாவித்திருப்பவனும். அவன் நந்தர்களுக்கு உதாஸீன பக்ஷத்தினனாயினும் எக்காரணத்தாலோ நந்தர்களை அவமானப்படுத்தும் நிமித்தம் கபட சில்ப மொன்றாக்கிப் பாடலீபுரத்திற் கனுப்பியிருந்தான். அச்சில்ப பரீக்ஷையாலேயே நான் சிறையி னின்றும் விடுபட்டேன்'' என்றான் சந்திரகுப்தன்.

இதற்கு சாணக்யன் "குழந்தாய்! உலகில் ஸ்வஜனங்கள் படுத்தும் அவமதிப்பு விரோதமாகவே முடியும். இதரர்கள் அக்காரியம் செய்தால் வைரமே உண்டாகும். இவ்வுண்மை யறிந்து நந்தர்களுக்கு சத்துருக்களானவர்கள் பர்வதேசனைத் துணைகொண்டாலும் அவனுடைய சத்துருக்கள் நந்தர்களை யனுஸரித்தாலும் இவ்விருவர்களுக்கு முள்ள உதாஸீனத் தன்மை போய் அந்யோன்ய வைரமேவிருத்தி யடையும். அது போகட்டும். இந்நகரில் உன்

தகப்பன் மௌரியனிடம் ப்ரீதியுள்ள அதிகாரிகள் இருக்கிறார்களோ? இல்லையோ?'' வென்று கேட்டான்.

சந்திரகுப்தன் "ஸ்வாமீ!'' என் தகப்பனான மௌரியனால் ஆதரவு பெற்றதாலேயே பாகுராயணாதிகளான அஷ்ட சேனாதிபதிகளும் பிரஸித்தி யடைந்தார்கள். இப்பொழுது அந் நன்றி யறிவிருக்குமோ இராதோ நானறிய இடமில்லை. புத்தி பராக்ரமங்களில் என் தகப்பன் ராக்ஷஸனுக்கு ஸமானராகிலும் அவர்களால் செய்யப்படும் ராஜ்ய விசாரத்தைக் கண்டு எப்பொழுதும் லௌகிக கவலை இன்றியிருந்து கொண்டிருந்தான்'' என்றான்.

மறுபடி "சாணக்யன் ராக்ஷஸனிடம் சௌரியமுமுண்டோ?'' வென்றுவினவ, ஸ்வாமீ! "இச் சேனாபதிகளைக் காட்டிலும் அதிக சௌரியவானான ராக்ஷஸன் யுத்த பூமி செல்வானாகில் எதிரிகளின் லக்ஷோப லக்ஷம் ஸைநியங்களையும், இந்திரன் பருவதங்களின் சிறகுகளைத் துண்டித்தது போல துண்டித்து வீழ்த்தி விடுவான் என்பது கண்டதும் கேட்டதுமான விஷயம். ஆனதால் ராஜ்யபார நிர்வாக மெல்லாம் ராக்ஷஸனிடமே அடங்கியிருக்கிறது'' என்று சந்திரகுப்தன் உரைத்தான்.

அதுகேட்ட சாணக்யன், ராக்ஷஸன் குணங்களைக் கேட்டு மனதில் சிலாகித்து, "இனிமேல் எவ்விதமும் யுத்தம் ஆரம்பமானால், நந்தர்களைக் கபடத்தினால் சம்ஹரித்து ராக்ஷஸனை வசப்படுத்திக்கொள்ள வேண்டு''மென்று நிச்சயித்து, "ஹே சந்திரகுப்தா! மஹா ரஹஸ்யமானதோர் ராஜ காரிய மிருக்கிறது. அதற்கு உன் தந்தையிடம் அன்புள்ளவர்களா யிருப்போர்களான பாகுராயணாதிகளின் சொந்தக்கையெழுத்தில் எழுதப்படக் கூடிய சம்மதக்கடிதம் ஒன்று வேண்டியிருக்கிறது. இப்பொழுது நான் ஒரு கடிதமெழுதித் தருகிறேன். அதை அச்சேனாதிபதிகளுக்குக் காண்பித்தால் அவர்களிதை நம்பி உடன்பட்டு உன் கையெழுத்துடன் கூடிய கடிதத்திற்குத் தாங்களும் சம்மதிக் கையெழுத்திட்டுத் தருவார்கள்'' என்றுரைத்து சமயோசிதமாய் ஓர் கபட மெழுதிச சொல்லவேண்டிய வற்றையும் சொல்லிககொடுத்து, "சந்திரகுப்தனே! நீ இககடி

தத்தை யவர்களுக்குக் காட்டி உசித மனுஸரித்துப் பேசி முடித்ததும் அவர்கள் கையெழுத்திடும ஸமயத்தில் நீ முந்திக் கையெழுத்து வைத்து, அவர்களை யதை யொட்டிச் 'சம்மதிபோடச் சொல்லு. இவ்விதம் எழுதி வாங்கிக்கொண்டு ஒருவருடைய கண்ணிலும்அகப்படாமல் ஜாக்ருதையாய் நைமிசாரண்யத்தில் கங்கா தீரத்திலிருக்கும் ஸோமேச்வரர் ஆலயத்தருகி லிருக்கும் எனது மித்திரனை இந்து சர்மன் வீட்டிற்கு வந்துசேர. நான் அங்குதான் இருப்பேன்" என்று உரைத்து அனுப்பிவிட்டு சாணக்யனும்| நைமிசாரணியம் நோக்கிச் சென்றான்.

ஒன்பதாவது அத்தியாயம்.

## சந்திரகுப்தன் நைமிசாரண்யம் செல்லல்.

——(*)——

பிறகு சந்திரகுப்தனும் ரஹஸியத்தில் பாகுராயணாதி அஷ்ட ஸேநாபதிகளைக் கண்டான். அப்பொழுது அவர்கள் மௌரியனுக்குப் பிறந்தும் சந்திரகுப்த னடைந்திருக்கும் துக்க நிலைமையைக் கண்டு மனது வருந்தி அவனுக்கு நல்ல வார்த்தைகளால் தைரியம் சொல்லி "ஐயா! இனி துக்கத்தை விட்டுவிடு. நீ எங்களிடம் வந்த காரியமென்ன? தடையின்றிச் சொல்" என்று சொல்ல சந்திரகுப்தன்,

"சேனாபதிகளே! உங்களைக்'கண்டதால் என் துக்கம் நீங்கியதுடன் என் பெரியோரைக் கண்டது போலுமாயிற்று. சொல்ல வேண்டிய சங்கதி யென்ன வென்றால், முன் என் தந்தையான மௌரியன் காசி கங்காதீரத்தில் சிவாலயங் கட்ட வாரம்பித்து அதில் ஈசுவர பிரதிஷ்டையும் செய்து பிறகு நடக்க வேண்டிய பிராகாரம் முதலிய வேலைகளுக்கும், அபிஷேக ஆராதனை நிவேதனங்களுக்குமாக தம்மிடமிருக்கும் திரவியத்தை காசியிலிருக்கும் கேசவதாஸன் என்ற வர்த்தகனிடம் கொடுத்துவிட்டு அவனைக் கொண்டு அவற்றை நடத்த வெண்ணியிருந்தார். அதற்குள்

ளாக, ஐயோ! அவர் நந்தர்களின் சூழ்ச்சியில் அகப்பட்டு இறக்கும்பொழுது, "அடா! நான் தர்மமாய்ச் சாவதுடன் காசி தேவாலய நிமித்தம் கொடுத்திருந்த திரவியங்கள் கேசவதாஸனிடமிருந்தும் வேலை முடியவில்லையே? இனி யார் அதை நடத்தப் போகிறார்கள்?" என்று பிரலாபித்துக்கொண்டே உயிர்விட்டார். அவர்களில் பிழைத்திருந்த நிரப்பாகயனான நான் இவற்றை எல்லாம் அறிந்ததால் சிறையினின்று விடுபட்ட சில தினங்களுக்கு மேல் அக்காரியங்களை முடிக்கும்படி கேசவதாஸனுக்கு எழுதினேன். அதற்கு அவன் இவ்விதம் பதில் எழுதியிருக்கிறான். தந்தையைக் காட்டிலும் வாத்ஸல்யமுள்ள நீங்களும் தயவு செய்து இத்தருமம் நிரந்தரமாய் நடக்கும் வண்ணம் ஸம்மதிக்கவேண்டும்" என்று தனது கையிலிருந்த கடிதத்தைக் கொடுத்தான். அதில் பின்வருமாறு எழுதி இருந்தது:—

"ராஜஸ்ரீ சந்திரகுப்த ராஜருக்கு ஸேவகனான காசி கேசவதாஸன் செய்து கொள்ளும் விக்ஞாபனம்: தாங்கள் எழுதிய கடிதத்தின் கருத்தை யறிந்துகொண்டேன். இங்கு மௌரியரால் கட்டப்பட்ட சிவாலய வேலை பாக்கியையும் செய்து, அபிஷேக ஆராதனைகளும் நிவேதனமும் நடத்திவரும்படிக்குக் கட்டளையேற்படுத்தும்படி, தங்கள் தகப்பனாரால் கொடுபட்டிருக்கும் திரவியங்களை ஏற்பாடு செய்வதில், தங்கள் உத்திரவுப் பிரகாரமே செய்வதில் தடையில்லை. மௌரியருக்குத் தாங்கள் சற்புத்திர ராயிருந்தும், இன்னம் சிறுவராயிருப்பதால், கணக்கற்ற திரவியச் செலவு செய்து நடத்தும் இக்காரியத்திற்கு உங்களைக் காட்டிலும் பெரியவர்களும் உங்கள் தகப்பனாருக்கும் உங்களுக்கும் ஆப்தர்களுமான தக்க மனிதர்களிடம் கலந்து ஆலோசித்து எனக்கொரு விதத்திலும் சொல்குறைவு ஏற்படாவண்ணம் அவர்கள் கையெழுத் துள்பட நீங்களும் கையெழுத்திட்டு இவ்விஷயத்தை மறுபடி எனக்கெழுதினால், நான் அவ்விதமே நடத்தத் தடையில்லை. உங்கள் தகப்பனாரால் ஆரம்பிக்கப்பட்டு நின்று போயிருக்கும் இக் கைங்கரியத்தை ஸத்புத்ரர்களான நீங்கள் கிரமமெடுத்துக்கொண்டு முடித்தால் உங்களுக்கு மெத்த கீர்த்தியும் தர்மமும் பிறரு

வாத்ஸல்யமும் பிரஸித்தமடைந்து தாங்களும் க்ஷேமத்துடனிருக்க ஈசுவர கிருபை உண்டாகும். தர்மிஷ்டரான உங்கள் தந்தைக்கும் புண்யலோகங் கிடைக்கும். என்னெய் அளந்த அளவுபாத்திரம் போல் எனக்கும கொஞ்சம் தர்மம் லபிக்கும்.

இங்ஙனம் பணிவுள்ள சேவகன்.

கேசவதாஸ்''

அதுகண்டு, பாகுராயணுதி ஸேநாபதிகள்,"ஐயா! உன் தந்தையான மௌரியன் பரமகாருண்யசாலியும் தர்மிஷ்டரும் ஸ்வாமிகாரிய துரந்தரராயுமிருந்தார். அப்பேர்ப்பட்டவரைக் குழந்தைகளுடன் அனியாயமாய்க் கபடமாகக் கொன்றதும் தவிர, இத்துஷ்டர்களான நந்தர்கள் உன்னிடமும் கருணை காட்டாது ஸர்வகுண சம்பன்னனும் ராஜகுமாரனுமான உன்னை இகமேகெட்ட அன்ன சத்திராதிகாரத்தில் நியமித்தார்கள். இத்துக்கங்களையெல்லாம் மனதிலெண்ணுது தசப்பனுல் ஆரம்பிக்கப்பட்ட தர்மகாரியம் முடிவடைய எண்ணியிருக்கும் நீ, உன் தருமபுத்தியாலும், ஈசுவர கிருபையாலும, இனி மிகக்கீர்த்தியுடன் பிழைக்கப் போகிறுய். உன் தநதையான மௌரியன் எஙகளைத் தந்தைபோல் பரிபாலித்துத் தகக ஸ்திதிககு கொண்டுவநதார். நிர்ப்பாக்கியர்களான நாங்கள் அவரை இழந்துவிட்டோம். ஆனுலும் உன் தந்தை செய்த உபகாரத்தை யொருக்காலும் மறககமாட்டோம். அவ்வர்த்தகனுக்குப் பதிலெழுது. நாங்களும் சமமதக் கையெழுத் திடுகிறோம்" என்றுர்கள்.

சந்திரகுப்தனும் தக்கபடி ஓர் கடிதத்தை கேசவதாஸன் பெயருக்கு எழுதித் தன் கையெழுத்து வைத்து பாகுராயணுதிகள் கையில் கொடுக்க அவ்வெட்டுப் பேர்களும் தங்கள் கையெழுத்தில் சம்மதிகள் போட்டு வஸ்திர தாம்பூல ஸமேதமாக அக்கடிதத்தைச் சந்திரகுப்தன் கையில் கொடுத்து "உன் எண்ணம் நிறைவேறிச் சுகமாயிருப்பாயாக" என்று வாழ்த்தி விடைகொடுத் தனுப்பினுர்கள்.

சந்திரகுப்தனும் தன் வீடு வரும்போது "இதெல்லாம் நல்ல சகுனத்துடனேயே யிருக்கிறது" என்றெண்ணி வீடு அடைந்ததும் தாயை நமஸ்காரம் செய்து, "அம்மா! நான் சாணக்யரிடம் செல்ல வேண்டி இருக்கிறது. நீயும் என மனைவியும் இவ்விடம் இருந்தால் இத்துஷ்டர்கள் என மேலுள்ள ஸந்தேஹத்தாலும கோபததாலும் உங்களை ஹிம்ஸிப்பார்கள். ஆகலால் நீங்கள் எனக்கு நல்ல காலம் வருமளவும் மறைந்திருக்க வேண்டியது அவசியம்" என்று, அதற்குத் தக்க உபாயங்களும் உரைத்து, மாதாவை மீண்டும் நமஸ்கரித்து உத்திரவு கேட்டான்.

அதற்கு அப்பதிவிரதா சிரோமணியும் "அப்பா குழந்தாய்! நான் மௌரியருக்கு மாலையிட்டு உன்னைப்பெற்றெடுத்துச் சீராட்டும்போது உன் தந்தை இவ்விதம் புத்திரர்களுடன் மரிப்பார் என்றும், மீந்திருக்கும் நீயும் அரண்மனையில் வசித்துச் சுகிக்காது இவ்விதம் எளியவனுக் கெளியவனாய் கஷ்டப்படுவாயென்றும், நான் கனவிலும் எண்ணவில்லையே! ஏதோ போகட்டும். மகா உத்தமியான உன் பாட்டியார் முராதேவியாரின் ஆசீர்வாதத்தால் நீ யெடுத்த காரியங்களை முடித்து, சத்துருக்களை நாசம் செய்து, ராஜ்யாதிபத்யம் புரிவதை என் கண்ணுறல் காணவேண்டு மென்று எனக்கு ஆவலிருப்பதாலேயே கண்மணிபோன்ற உன்னையும் பிரிந்திருக்க ஸம்மதித்தேன். நான் நீ சொல்லிய உபாயப்படி உன் மனைவியுடன் உனக்கு நற்காலம் வருமளவும் மறைந்திருக்கிறேன். போய் வா குழந்தாய்." என்று கட்டியணைத்து ஆசீர்வதித்து இனிப் பட்டாபிஷேக மாதற்கு றிகுறியாகவே என்றெண்ணும்படி சந்திரகுப்தனைத் தனது கண்ணீரால் நனைத்தாள்.

சந்திரகுப்தனும் "அம்மா! நான் சாணக்யர் அனுக்ரஹத்தால் சீக்கிரம் சத்துருக்களை ஸம்ஹரித்துப் பட்டாபிஷேகம் பெற்றுத் தங்களை நமஸ்கரிக்கும் காலத்தில் இப்பொழுது சோகக் கண்ணீர் விட்டு என்னை நனைத்ததுபோல், ஆனந்தக் கண்ணீரால் என்னை அபிஷேகம் செய்து சந்தோஷிப்பீர்கள்" என்று கூறிப் பிரதக்ஷிணம் செய்து அவளை நமஸ்கரித்து விடை பெற்றுக்கொண்டு நைமிசாரண்யம் சென்று கங்காதீரம் அணுகி, தனது மித்திரனை இந்து

சர்மன் கிருஹத்தில் அதிதி ஸத்காரம் பெற்றுக்கொண் டிருக்கும் சாணக்யனைக் கண்டு ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்துத் தான் கொண்டுவந்த கடிதத்தையும் கொடுத்தான். அக்கடிதத்தில்,

"சந்திரகுப்தராஜன் பரமப் பிரியரான காசி கேசவதாஸருக்கு எழுதுவ தென்னவென்றால்: நீங்களெழுதிய கடிதத்தை எனக்கு இப்பொழுது மூத்தோர்களாயிருக்கும் ஸேநாதிபதிகளுக்குக் காண்பித்தேன். அவர்களும் ஸந்தோஷித்து ஸம்மதித்து இக்கடிதத்தில் கையெழுத் திட்டிருக்கிறார்கள். ஆதலால் நின்று போன தேவாலய காரியத்தை முடிப்பது இனி உங்களைச் சேர்ந்த பொறுப்பு. இக் காரியம் எனக்கு சம்மதமானது" இங்ஙனம்

சந்திரகுப்தன்"

என்று சந்திரகுப்தன் கையெழுத்திட்டிருந்தான். அதற்குக் கீழ் வரியில்,

"சந்திரகுப்தனுக்கு சம்மதமாகி அவனேற்பட்டிருக்கும் இப் பெருங் காரியத்தில் எங்களுக்கும் பூரண ஸம்மத மென்பதற்காகவே சொந்தக் கையெழுத்தில் இதை எழுதிச் சம்மதியும் தருகிறோம். இதை நீர் அறியவேண்டியது. இங்ஙனம்

ஸேநாதிபதிகளான,

| | |
|---|---|
| சிம்மபலன் | பலகுப்தன் |
| பாகுராயணன். | விஜயவர்மன். |
| பத்ரபடன். | லேஹிதாஸன். |
| டிங்கிராதன். | புருஷதத்தன்." |

என்று எழுதப்பட்டு தேதியும் குறிக்கப்பட்டிருந்தது.

இதைப் படித்த சாணக்யன் "சந்திரகுப்தன்" என்று எழுதப்பட்டிருக்கும் வரியுள்பட மேல்கடிதத்தை உபாயமாய்க் கிழித்தெறிந்து விட்டான். மீந்திருந்த கடிதத்திலுள்ள விஷயம் யாதெனில் "சந்திரகுப்தனுக்கு அவனேற்பட்டிருக்கும் இப்பெருங்

காரியத்தில் எங்களுக்கும் பூரண ஸம்மதம் என்பதற்காகவே சொந்தக் கையெழுத்திட்டு சமமதியும் போட்டிருக்கிறோ மென்பதை நீங்களறிய வேண்டியது. இங்ஙனம் ஸேநாபதிகளான சிம்ம பலன், பாகுராயணன் முதலியனவே.

உறுக்கடிதத்தை எடுத்து இதுவே முக்ய சாதகமான தென்று ஜாக்ரதையுடன் மடித்து வைத்து, தன்னுடன் சேர்ந்து அத்யயனம் செய்தவனும் தண்ட நீதி ஜோதிஷ சாஸ்திரங்களில் மஹா ப்ரவீணனும் தனக்குப் பரம மித்திரனுமான இந்து சர்மனை நோக்கிச் சாணக்யன் பேசலுற்றான்: "ஐயா மித்திரனே! குஸுமபுரத்தில் நவநந்தர்கள் கபடத்தினால் அநியாயமாய் இச் சந்திரகுப்தன் தகப்பனும் தர்மிஷ்டனுமான மௌரியனையும் அவனது புத்திரர் தொண்ணூற்றொன்பது பேர்களையும் கொன்றார்கள். தெய்வ வசத்தால் உயிர்த்திருந்த "இச் சந்திரகுப்தனையும் ஸமயம் பார்த்து ஸம்ஹரிக்க வேண்டும்" என்றாலோசித்துக் கொண்டு அவனை அன்னஸத்திராதிகாரத்தில் நியமித்திருந்தார்கள். நான் ஒரு நாள் போஜனத்தின் நிமித்தம் அங்கே சென்று வெயிலால் வாடிப் பசியால் துடிதுடித்து அச்சத்திரத்திலிருக்கும் ஓர் ஆஸனத்தில் உட்கார்ந்திருந்தேன். அச்சமயம் துஷ்டர்களான நந்தர்கள் வந்து, பிராமணன் என்று என்னை மன்னிக்காதும், எனது தேஜஸையும் ஸாமர்த்தியத்தையு மறியாமலும், கொடுஞ் சொற்களைப் பேசி ஆட்களைக் கொண்டு என்னைப் பிடித்துக் கரகர வென் றிழுக்கச் செய்தார்கள். அப்பொழுது எனது சிகை அவிழ்ந்து விட்டது. நான் அதுகண்டு மெத்தக் கோபமடைந்து "துஷ்டர்களான நவநந்தர்களை ஸம்ஹரித் தல்லாது என் சிகையைக் கட்டுவதில்லை" யென்று சபதத்துடன் பிரதிக்ஞை செய்து வெளியில் புறப்பட்டு வரும்போது இச்சந்திரகுப்தன் எனனைக் கண்டு "சரணம்" என்றுரைத்துத் தனது துக்கத்தை யெல்லாம் முறையிட்டான். "நந்தர்களை நிக்ரஹித்து உன்னைப்பாடலிபுரத்தின் சிம்மாஸனத்தின் மீது உட்காருவித்துப் பட்டாபிஷேகம் செய்விக்கிறேன். இனி அஞ்சவேண்டாம்" என்று சபதத்துடன் இவனுக்கு அபயம் தந்து அவனை இங்கு வரச் சொல்லி நான் முந்தி உன்னிடம் வந்தேன். நீ யெனக்கு மித்திரனும், ஸஹபாடியாயுமிருப்பது ஸத்யமானால்

சரணாகதனாய் வந்திருக்கும் இச்சந்திரகுப்தனுக்கு நீயும் ஸஹாயகனாகிப் பௌத்த சந்யாஸி வேஷத்துடன் ஜீவஸித்தி என்று பெயர் வைத்துக் கொண்டு, உனக்கு ஆப்தர்களான சிஷ்யர்களுக்கும் சமயோசிதமான வேஷம், பாஷை, பெயர்கள் ஏற்படுத்தி பாடலீபுரத்தில், அமாத்ய ராக்ஷஸன் முதலிய அதிகாரிகளிடம் ஜோதிடம் முதலிய வித்யா சாமர்த்தியத்தைக் காண்பித்து, அவர்களுக்கு ஆப்தன் போலிருந்து, ராஜ காரியங்களை அறிந்து, விசேஷ வர்த்தமானங்களை வேஷதாரிகளான உன் சிஷ்யர்களைக் கொண்டு எனக்கு அப்போதைக்கப்போது அறிவித்தும், நீ படித்திருக்கும் தண்ட நீதி சாஸ்திரங்களுக்குப் பிரயோஜனங்களை யடைந்தும் அவ்விடமே யிருந்துவந்தால் நீ எனக்கு மித்திரன் தான்." என்றுரைத்து நந்த நிக்ரஹ முதல் ராக்ஷஸனைக் காத்தல் வரை நடத்த வேண்டிய உபாய ரஹஸியங்களையும் அறிவித்து, அடிக்கடி இக்காரியங்களை உன சிஷ்யர்களால் எனக்கறிவித்துக் கொண்டு ராஜகாரியத்தில் மிகவும் ஜாகரூகனா யிருந்து வர வேண்டும்" என்று உபசாரத்துடன் உரைத்தான்.

சாணக்யனை இந்து சர்மன் நமஸ்கரித்து "புத்தியில் பிருஹஸ்பதிக்கும் நீதி ப்ரவீணத்தில் சுக்கிராசாரியருக்கும் சமானரான சாணக்யரே! உங்களுக்கு சிஷ்ய சமானனான எனக்கு இவ்வளவு உபசாரமும் வேண்டுமோ? தாங்கள் சொல்வதை சிரஸில் வகித்து நடப்பேன். தாங்கள் சொல்வதற்கு முந்தியே நான் செய்ய வேண்டியது மித்திர லக்ஷணமாயிருக்க, சொல்லியும் அவ்விதம் நடக்கா விட்டால் என்னைப் போன்ற சிநேக துரோகி வேறுண்டோ? அவ்விதம் நடவாவிடில் எனக்கு நரகமுண்டாகும். ஆகையால் தங்கள் சொல்லைச் சற்றும் மீற மாட்டேன். தாங்கள் எங்கிருப்பீர்கள்?" என்று கேட்டான்.

அதற்கு சாணக்யன் "நான் இப்பொழுது நந்தர்களை ஸம்ஹரிக்கும் நிமித்தம் அபரிமித சேனைகளுடன் கூடிய பர்வதேசனிடம் சந்திரகுப்தனுடன் செல்லுகிறேன். நீ இச்சமயமே சிஷ்யர்களுடன் பாடலீபுரம் செல். நீ எனக்குப் பரம மித்திரனானதால் உன்னிடம் மெத்த நம்பிக்கை வைத்து அந்தரங்கக் காரியத்தில் உன்னை நியமிக்

திருக்கிறேன். உனக்கு க்ஷேம முண்டாகட்டும்'' என்று உரைத்து விட்டு அவன் சிஷ்யர்கள் இருவரையும் சந்திரகுப்தனையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு பர்வதேசனின் தலை நகரமான சாஹூரீ நகரத்திற்குச் சென்று கொண்டிருந்தான்.

---

## பத்தாவது அத்தியாயம்.

# சாணக்யன் பர்வதேசுவரனிடம் செல்லல்.

—(*)—

சாணக்யன் சந்திரகுப்தனுடனும் இந்துசர்மனின் சிஷ்யர் இருவர்களுடனும் பர்வதராஜ்யம் நோக்கிச் சென்றுகொண்டிருக்க, இந்துசர்மனும் தன்மித்திரன் சாணக்யனால் உரைக்கப்பட்ட காரியம் செய்வதில் வித்தனாகி, க்ஷபணக வேஷந்தரித்து, தனது சிஷ்யர்கள் ஐந்து பெயர்களுக்கும் மாஸோபவாஸி, சித்தார்த்தகன், வேகசர்மன், ஸமித்தார்த்தகன், பசுலோமன்என்று பெயரிட்டு, அவர்களை வைத்யர் மாந்திரிகர் முதலியவர்களின் வேஷங்களுடன் பாடலீபுரத்தில் பாகுராயணன் முதலிய அதிகாரிகளிடம் வைத்தியம் சோதிடம் முதலிய வித்தைகளின் சாமர்த்யங்களைக் காட்டி அவர்களிடம் நெருங்கிப் பழகி அந்தரங்கங்களை யறிந்துகொண் டிருக்கும்படி நியமித்து, தானும் பாடலீபுரம் சென்றான். சென்று அமாத்ய ராக்ஷஸனிடம், மெத்த ஆப்தனைப்போல் நடந்து அடிக்கடி நந்தர்களைக் கண்டு பேசியும் அப்பட்டணத்திலுள்ள சகல சமாசாரங்களையும் சகல மனிதர்களின் நிலைமை எண்ணம் பிரயத்தனம் முதலியவைகளையும், நன்று யறிந்து கொண்டும், சிஷ்ய சமேதனாகத் தனது கபடத்தைப் பிறர் சற்றுமறிந்து கொள்ளா வண்ணம் பரம ஜாக்கிரதையாய் சாணக்யனின் வரவையே எதிர்பார்த்துக்கொண் டிருந்தான். இது நிற்க.

அன்னஸத்திரத்தி லிருந்து சென்ற பர்வதேசனின் கூட சாரர்கள் தங்கள் தேசம் சென்று பர்வதேசனை வணங்கி மஹா ''ஸ்வாமி! நாங்கள் பல தேசமும் சுற்றிக் கொண்டு வழி நடுவில் பாடலீபுரம்

சென்று அன்னஸத்திராதி காரத்தில் சந்திரகுப்தன் நியமிக்கப்பட்டிருக்கிறான் என்று ஜனங்கள் பேசிக்கொள்வதைக் கேட்டு 'ஏதோ விசேஷமிருக்கலாம்' என்று அச்சத்திரத்தில மாறு வேஷத்துடன் நான்கு தினம் மறைந்திருந்தோம். அச்சமயம் சூரியனினும் அக்கினியினும் மிக்க தேஜஸையுடைய பிராமணனொருவன் ராஜர்கள் உட்காரும் ஸுவர்ண பீடத்தை இழுத்துப் போட்டுக் கொண்டு கால்மேல் காலைபோட்டு உட்கார்ந்திருந்தான். புஷ்ப உத்தியான வனம் சென்றிருந்த நந்தர்கள் அவ்விடம் வந்து தங்களை லக்ஷியம் செய்யாது இவ்விதம் உட்கார்ந்திருக்கும் பிராமணனைப் பார்த்து, கோபம் மீறி, அவனுடைய தேஜஸைச் சற்றும் எண்ணிப் பாராது வாய்க்கு வந்தபடி கேடு கெட்ட சொற்களால் பேசி, தமது தூதர்களைக் கொண்டு அவ்வந்தணன் கையைப் பிடித்திழுத்து எறியச் சொன்னார்கள். அச்சமயம் தனது சிகையும் அவிழ்ந்து, பல ரெதிரில் அவமானப் பட்டதால் மெத்த கோபத்தை யடைந்த அவ்விப்ரன், கண்கள் சிவக்க, உதடு துடிக்க, மெத்த கோபத்துடன் நந்தர்களைப்பார்த்து, "ஹே! க்ஷத்திரியாதமர்களே! சத்திரத்திற்கு அதிதியாய் வந்த என்னைப் பூஜிக்காது வாய்க்கு வந்ததைப்பேசியதும் அல்லாமல் தூதர்களைக்கொண்டு என் சிகை அவிழ்ந்து விடும்படிக்கு இழுக்கச் செய்தீர்கள். ஆனதால் உங்களையொத்த துஷ்டர்கள் விஷயத்தில் என் தபஸை சற்றும் செலவழிக்காது நான் பிருகு வம்சோத்பனனது பற்றி சுக்கிராச்சாரியரால செய்யப்பட்ட காலதண்டம் போன்ற தண்ட நீதியினாலேயே உங்களை சம்ஹரித்தல்லாது, அவிழ்ந்திருக்கும் என் சிகையை முடிந்து விடுவேனாகில், திருவேணீ சங்கமத்தில் ஹரி பூஜை செய்துகொண்டிருக்கும் மஹாத்மாவான புருஷனைக் காலினால் உதைத்தவன் அடையும் கதியை யடைந்தவனாவேன" என்றிவ்விதம் பல கொடுஞ் சபதங்கள் செய்து அவ்விடம் விட்டுச் சென்றான். இவ்விதம் தூர்வாஸரைப் போல் செல்லும் பிராமணனைச் சமாதானமும் செய்யாது கர்விகளான நந்தர்கள் அரண்மனை சென்றார்கள்! ஆ! அப்பொழுதே மஹோத்பாதங்களுண்டானமை கண்டு சகல ஜனங்களும் கலங்கி 'ஹா! ஹா!' காரத்துடன் "இத் துர்நிமித்தங்களையும் பிராமணனுடைய தேஜஸையும் அவன் செய்த சபதத்தையும் பார்த்தால் நந்தர்களுக்கு இனி மகாவிபத்து உண்டாவதிற் சந்தேகம்

இல்லை." என்று பேசிக்கொண்டார்கள். இவற்றை யறிந்து நாங்கள் திரும்பி வரும் வழியில், அன்ன ஸத்திராதிகாரத்திலிருந்த சந்திர குப்தனும் எங்கேயோ ஓடிப்போய் விட்டானென்று கேள்விப்பட்டோம" என்றார்கள்.

அது கேட்டுப் பர்வதேசன் மந்திரியைப்பார்த்து "என்ன ஐயா! சபரவர்மனே! பாடலிபுரத்தில் நடந்த இவ்விசேஷங்களை யோசித்துப் பார்த்தால் அப்பிராமணன் சாதாரண னென்று தோன்றவில்லை. அவன் மஹாத்மாவான சுக்கிராசாரியரின் சிஷ்யனே யாகில் அவனால் நந்தர்களுக்குக் கூடிய சீக்கிரம் ஆபத்து விளையுமென்பது நிச்சயம். இன்னொரு விசேஷம் பார்த்தாயா? இதே சமயத்தில் நந்தர்களிடம் பூரணமான வைரமுள்ள சந்திர குப்தனும் அவ்விடம் விட்டு ஓடிவிட்டானும" என்ன,

சபரவர்மன், "ஸ்வாமி! இச்சமாசாரத்திலுள்ள சூக்ஷ்மத்தை விசாரித்தால் இதில் தெய்வ ஸகதனத்துடன் கொஞ்சம் மனித ப்ரயத்தனமும கலந்தே யிருக்கிறது. முன்னமே ஓர் ஏற்பாடு மில்லாது அப்பிராமணன் அரசர்க்குரிய ஆஸனத்தில் கால்மேல் கால்போட்டுக் கொண்டு, நந்தர்கள பிரபுககளென் றறிந்தும் லக்ஷ்யம்செய்யாது உட்கார நியாயமென்ன? அவன் பித்தனாக இராது நிஜமான தேஜஸ்வியானால் அவனால் நந்தர்கள் ஆபததடைவது உறுதிதான். அப்பிராமணன் சபதம செய்து சென்றதும உத்பாதங்களுமுண்டானதால் அவன் தேஜஸ்வி என்பதில் சந்தேகமே இல்லை. "நந்தர்களிடம் வைரமுள்ளவனானதால் கோபமுண்டாகி யிருக்கலாம்" என்றால், வைரங்கொண்ட மனதுள்ளவனுக்கு தேஜஸு இராது. தேஜஸ்வி யல்லாதவன் இக்காரியத்தை ஆரம்பித்தால் வீணாகி விடுமே. அவன் தேஜஸ்வியானது பற்றியே சபதம் செய்து சென்றிருக்கிறான். சந்திரகுப்தனும் இதே ஸமயம் சென்றதைப் பார்த்தால், அப்பிராமணன், சரணமடைந்த சந்திரகுப்தனிடம் தயவுகொண்டு, தான் சாமர்த்திய சாலியாயிருந்தும், தர்ம விருத்தமில்லாது, நந்தர்களுக்குக் கோபமுண்டாக்கி, உலகம் மெச்சும்படி சபதம் செய்திருக்கிறான்.

இவனுடைய தேஜஸினாலே காரியம் கைகூடுமென்று சந்திரகுப்தன் சரணமடைந்திருக்க, மந்திராலோசனையும் தூரதிருஷ்டியும்

புத்தியுமற்ற நந்தர்கள் காலவசத்தாலும் ராக்ஷஸன் சமீபத்திலில்லாத குறையாலும் அப்பிராமணனின் தேஜஸை யறியமாட்டாமல இவ்விதமான அவிவேக காரியம் நடத்தியிருக்கிறார்கள். ஸாதுக்களின் தாபம் குலத்தை நசிக்கச் செய்யும், ஆனதால் ஸர்வார்த்தஸித்திக்குப் பிறந்த புத்திரனும் விவேகியும் சாதுவுமம ஹிதம் செய்பவனுமான மௌரியனை அவன் புத்திரர்களுடன் சிறையிலடைத்த ஸமயம் அவனால் விடப்பட்ட பெருமூச்சுக்களாகிற பெருங்காற்றானது, அவனது சோகமென்னும் அக்கினியை வளரச்செய்து, நந்தா குலமாகிற வனத்தை யழித்து, வேருடன் தஹித்துவிடக் காத்திருக்கிறதல்லவா? இதற்குத் தேஜஸ்வியான பிராமணனை யவமதித்ததே காரணமாகும்'' என்றான்.

அது கேட்டுப் பர்வதேசன், "ஐயா. மந்திரியே! நந்தர்களால் அவமதிக்கப்பட்ட பிராமணன் தேஜஸ்வியும பிருகு வம்சத் துதித்தவனுமானால் உடனே சபித்து விடமாட்டானோ? வாக்கு வன்மையில்லாதவன் தபஸ்வி யாவானோ? தரித்திரனான பிராமணனும பலஹீனனான சந்திரகுப்தனும், மஹைசுவரிய ஸம்பன்னர்களும் பெருத்த சேனைகளையுடையவர்களும் அமாத்திய ராக்ஷஸனை மந்திரியாய் அடைந்திருப்பவர்களுமான நந்தர்களை என்ன செய்ய முடியும்?'' என்று கேட்டான்.

சபரவர்மன் அரசனை நோக்கி "ஐயா, ராஜேந்திரா! உலகில் மஹான்களுக்கு, லோபிக்குத் தனத்தின் மீதுள்ள கருத்தைப் போல், தபஸைச் செலவழிப்பதில மனம் வராது. சாபமளித்துப் பரலோக ஸாதனமாயுள்ள தபஸைக் குறைத்துக் கொள்வதைக் காட்டிலும் தமக்குள்ள பௌருஷத்தாலேயே அவர்கள் தமது காரியத்தைச் சாதித்துக் கொள்வார்கள். ஆனதுபற்றியே பிருகு வம்சத்தி லுதித்தவனும், தண்டநீதி ப்ரவீணனுமான அப்பிராமணன் தனது தபஸிற்குக் கெடுதியின்றி, பூர்வத்தில் விசுவாமித்திரர் எவ்விதம் ஸ்ரீ ராமனைக் கொண்டு சுபாஹு மாரீசர்களை உபாயத்தால் வென்றாரோ, அவ்விதமே சந்திரகுப்தனைக்கொண்டு, நவநந்தர்களைச் சங்கரிக்கும் வழியைத் தேடுவான். மஹான்களுக்கு ஸாதனமும ஸம்பத்துமில்லாமலே அவர்கள் எண்ணிய காரியங்களும

சொன்ன சொற்களும் ஈடேறிவிடும். ஆகையால் அப்பிராமணனும் சந்திரகுப்தனும் ஏற்பட்டுச் செய்யும் காரியம் தெய்வ கதியால் முடியக்கூடும். நமக்கு அஸாத்யமாகத் தோன்றும் அக்காரியம் சந்திரகுப்தனுக்கு தெய்வபலமிருந்தால் அனுகூலப்படுவதில் ஸந்தேகமுண்டோ? சந்திரகுப்தனுக்குத் தெய்வ பலம் இருப்பதாலேயே அப்பேர்ப்பட்ட மஹா தேஜஸ்வியான பிராமணனின் சகாயம் கிடைத்தது" என, பர்வதேசனும், "வாஸ்தவம்" என்று உரைத்து விட்டு ஏகாந்த ஸ்தானம் அடைந்தான்.

மறுநாள் லம்பாகதேசம் சென்றிருந்த பர்வதேசனின் கூடசாரர்கள் வேகத்துடன் வந்து, பர்வதேசனை நமஸ்கரித்து "ஸ்வாமீ! லம்பாக தேசாதிபனுன கிரிவர்மன் தனது ஸாமந்த சேனைகளுடன் கூடி பார்வதேயர்கள் மீது தண்டெடுத்து வருவதற்கு விதத்தனுகி இப்பதினேந்தாம் நாள் "தண்ட யாத்திரை" யென்று பலரும் அறியும்படி அவனுடைய ஸேநா த்வஜத்தை உயரத் தூக்கி நமது தேசத்திற் கெதிராக அவன் தேசத்திற்கு நிருத திக்கில் கட்டி அனேகம் ஸேனைகளையும் காவல் போட்டிருக்கிறுன். அவனது பாளயக்காரர்கள் நம் தேசத்து எல்லைப் புறங்களிலிருக்கும் கிராமங்களைச் சூறையிடுவதற்கு எத்தனம் செய்திருக்கிறுர்கள். அத்தேச சமாசாரங்கள் பிரஸித்தமாக இருக்கின்றன" என்றுரைத்தார்கள்.

அது கேட்ட பர்வதேசன், சபரவர்மனைப் பார்த்து, "மந்திரி புலிக்குட்டியை, பூனைக்குட்டி போலிருக்கிற தென்றெண்ணிஞல், அது காலாந்திரத்தில் பதினறடி வேங்கையாவது போல, நாம் முந்திப் "பலஹீனன்" என்று உபேட்சித்த லம்பாகாபதியின் நிமித்தம் இப்பொழுது பெருத்த பிரயத்னம் செய்ய வேண்டியிருக்கிறது. நாம் இச்சமயமும் உதாஸீனத்துடன் இருந்தால் இனிப் பிரமாதமாய் விடும். ஆகையால் கிராதாதிபதியான மாதங்கனுடைய ஸேனைகள் முந்தித் தயராய் நடக்கட்டும். காம்போஜ ஹூண சீனக ஸேனைகள் அதற்குப் பின்புறம் தண்ட யாத்திரைக்கு விதத்தமாக நிற்கட்டும். குலூத, பாரசீக, சிந்து, காச்மீர, தேசாதிபர்கள் தத்தமது சேனைகளுடன் நமது சேனுபதியான சேகரனை யனுசரித்து நடக்கட்டும். பார்வதேயர்களின் சேனை பட்டணத்தைக் காத்துக் கொண் டிவ்விடமே இருக்கட்டும்" என்று ஆக்ஞாபித்தான்.

சபரவர்மனும் "மஹா ப்ரசாதம்" என்று ராஜாக்ஞையை ராஜ படர்கள் மூலம் தேசாதிபதிகளுக்குத் தெரிவித்ததும் அதன் ப்ர காரமே அத்தேச மன்னர்கள் தங்களுடைய சேனைகளுடன் வந்து பாவதேசனின் ராஜதானியான சாஹாரி நகரத்திற்கு வெளியில் இறங்கிக்கொண் டிருந்தார்கள்.

இச்சமயமே சாணக்யன், சந்திரகுப்த சமேதனாக அவ்விராஜ் யத்திற் பிரவேசித்து அத்தேசத்தின் நிலைமையைக்கண்டு மனதில் ஆனந்த பரிதனாகிக் கூடவரும் சந்திரகுப்தனைப் பார்த்து "குழந் தாய்! என் வாடிய முகத்துடன் மெத்த சிந்தாக்ராந்தனாக இருக் கிறாய்?" என்று கேட்டான்.

அதற்குச் சந்திரகுப்தன் "மஹாநுபாவா! என் தகப்பன் ஸர் ஜன பூஜ்யனான ஸர்வார்த்த ஸித்திக்குப் பிறந்தும் ஸாமந்த சத்துருக் கள் மீது ஸேநாஸமேதனாகப் படையெடுத்துச் சென்று அவர்களை யும் யுத்தரங்கத்திற் கொன்று முன் வைத்த காலைப் பின்வைக்காமல் தன்னுயிரைவிட்டு, ரம்பாதி அப்ஸர கன்னிகைகளால் போடப்படும் புஷ்ப மாலைகளைத் தரித்து அவர்களால் ஆலிங்கனம் செய்து கொள்ளப் பட்டவனாய் திவ்ய விமானம் ஏறிக்கொண்டு வீரசுவர்க்க மடையாமல், திருடர்களைப்போல் சிறையில் அகப்பட்டுத் தன் கண் முன் செத்துக்கொண்டு வரும் தன் பிள்ளைகளைக் கண்டு தவிதவித்து துக்கத்துடன் பிராணனை விட்ட விசனமொன்று, "இவ்வித மனியாய மாகப் பகைமை பாராட்டி எம்மவர்களைக் கொன்ற துஷ்டர்களான நவநந்தர்களைத் தமது சரணங்களின் அனுக்ரஹத்தினால் நான் என்று ஸம்ஹரித்து எனது பிதுரு ருணத்தைத் தீர்ப்பேனோ" என்ற யோசனை யொன்று—ஆக இவ்விரண்டு கவலைகளாலும் தினந் தோறும் இரவில் எனக்குத் தூக்கம் வருகிறதேயில்லை. எனக்கு மஹா புருஷரான தாங்கள் அபயமளித்ததால் மட்டுமே உயிர் நின்றது தங்களுடைய ஆதரவு கிடைத்திராவிடில் இத்தனை நாளில் நான் பிரா ணனைவிட்டு என் தந்தையும் சகோதரர்களும் சென்ற இடத்திற்குச் சென்றிருப்பேன்" என்றுரைத்துக் கண்ணீர் பெருக்கினான்.

அது கண்டு சாணக்யன் மெத்த மனமிளகி, "அப்பா குழந்தாய்! புத்திமானான புருஷன் ஆபத்துக் காலத்தில் தைரியத்தைக் கைவிடாதிருக்க வேண்டுமல்லாது கவலைக்கு இடந்தரக்கூடாது. இதோ பார் இப்பர்வதேசுவரன "அநேக மிலேச்ச ராஜாக்கள்பால் கப்பம் பெறுபவன். அசாத்தியமான சேனைகளையுடைய சூரன் என்று கேள்விப்பட்டு இவனாலேயே உன் காரியம் கைகூடவேண்டும்" என்று இங்கு வந்தேன். அதற்கேற்ப இச் சாஹஸீ நகரத்தைப் பார்த்தால தேவாஸுரர்களாலும் பிரவேசிக்கமுடியாததாக இருக்கிறது" என்றான்.

சந்திரகுப்தன், "ஸ்வாமீ! தாங்கள் சொன்னது சத்தியமே. தாங்கள் நிச்சயித்த அருத்தம வேறாக முடியுமோ?: எனக்கொரு விஞ்ஞாபனை யிருக்கிறது. கேட்டருள வேண்டும். அஃதென்னவெனின், இப்புரத்திற்கு ஈசானிய பாகத்தில் சத்துரு நாசத்திற்கு அறிகுறியாய் உற்பவித்த தூமகேதுவைப் போல தூமரேகையின் லக்ஷணத்தால் குறியிடப்பட்டு ஆகாச லக்ஷ்மியுடன் விளையாடும் விஜய லக்ஷ்மிக் கிருப்பிடமான ஸேநாத்வஜமானது, உயரத் தூக்கப்பட்டு அநேக சேனைகளால் காக்கப்படுவதாலும, முன்பக்கம் சூரர்களின் பரிவாரமும் பின்பக்கம் சேவகர்களின் பரிவாரமும் இறங்கியிருப்பதாலும், இப்பருவதேசனுக்கு ஈசானிய திக்குக்களிருக்கும் சத்துரு மன்னர்கள்மீது "தண்டயாத்திரை" யுண்டாயிருக்குமென்று தோன்றுகிறது. 'இதே சமயத்தில் இவ்வரசனிடம் நமது காரியத்தைத் தெரிவித்தால் தனக் கவசியமாய் நேரிட்டிருக்கும் ராஜகாரியம் விட்டு நமது காரியத்திற்கு உடன்படுவானோ? என்னவோ? இக்காரியம் பலிக்குமோ அல்லது வீண் சிரமமாக முடியுமோ?' என்று என் மனம் ஊசலாடுகிறது" என்றான்.

இது கேட்டு சாணக்யன் அப்பா சந்திரகுப்தா! இப் பருவதேசன் நற்குணமுள்ளவனானது பற்றி நாம் நமது காரியத்தைத் தெரிவித்துக் கொண்டால் பரோபகாரமே முக்கியமென்று நிச்சயித்துத் தன் காரியம் எதுவாயிருந்தாலும் அதை விட்டு நமது காரியத்திற்கு ஸஹாயனாவான். நமக்குத் தெய்வபலம் உதவிடில் நாம் செய்யும் உபாயங்களால் இவ்வரசனுக்கு இப்பொழுது உண்டாயிருக்கும்

சத்துருக்களின் தொந்தரவு நீங்கி இப்பிரயாணமே நம் காரியத்திற்கு உபயோகமாக ஏற்பட்டு, பாடலிபுரத்திற்குப் படை யெடுத்துச் செல்லவும் கூடும். ஆதலால் நீ கவலைப் படாதிரு" என்று நல்வார்த்தைகளால் அவனைச் சமாதானப்படுத்தி அநககரில் பிரவேசித்து ஒரு நாள் தங்கி, மறுநாள் அவ்வரசன் கொலுமண்டபம இருக்கும் சமயம் பார்த்து "இதுவே நல்ல முகூர்த்தம்" என்றெண்ணி, சநதிர குப்தனுடன் ராஜத்வாரம் அடைந்து, வாயில் காப்போரை நோக்கி "துவார பாலர்களே! அரசகுமாரன் ஒருவனுடன் சாணக்யன் என்னும் பிராமணன் பிரபுக்களைத் தரிசிக்குமாறு ராஜ துவாரத் தருகிலிருந்து எங்களைச் சமையம் அறிந்து வரச் சொனனான்" என்று அரசனுக்கு அறிவியுங்கள்" என்றான்.

வாயிற் காப்போர் உள்ளேசென்று ஆஸ்தானத்தில் உட்கார்ந்திருக்கும் பர்வதேசனை வணஙகி "ஸ்வாமி! பராக். சாணக்யர் என்னும் பிரமஞேத்தமர், உதிக்கும் பால சநதிரனுடன் கூடிய அங்காரகன்போல் மஹா தேஜோவானு யிருக்கும் ராஜபுத்திரன் ஒருவனுடன் ராஜத்வாரத்தை அலங்கரித்து, ஸந்நிதானத்தைக் காணவேண்டுமென்று விக்ஞாபிக்கச் சொன்னா" ரென்றார்கள்.

அது கேட்டரசன் "முந்திச சபவர்மன் உரைத்த வண்ணம் சாணக்ய னென்னும் பிராமணனே ராஜகுமாரனை சந்திரகுப்தனுடன் நந்தர்களை நிகரஹிககும நிமித்தம நமமை நாடிவந்திருககலாம" என்றறிநது, மந்திரியைப் பார்தது, "யாரோ பூஜ்யர் வந்திருக்க வேண்டும். ஆகையால் உசிதமான மரியாதையுடன் அழைத்து வா" என்று ஆக்ஞாபிக்கச், சபரவர்மன் எழுந்து மெத்த மரியாதையுடன் கைலாகு தந்து சந்திரகுப்த சாணக்யர்களைச் சபாமண்டபம் அழைதது வந்தான். உடனே பர்வதேசன் ஸிம்மாசனம் விட்டெழுநது ஓர் சுவர்ணமயமான ஆஸனத்தில் அவர்களிருவரையும் உட்கார வைத்து" க்ஷேமம் விசாரித்து "சந்திர சூர்யர்கள் ஓரிடத்தில் கூடினல் அத்தினம் அமாவாசை யென்னப்படும். அன்று உலகம் அந்தகாரத்தினுல் சூழப்படுவது சம்பிரதாயம். ஆனல் அனுகூலர்களாய் ஏக காலத்தில் பிரகாசித்து இருட்டைப் போக்கி ஆகாயத்தில் விளங்கும் அபூர்வமான சந்திர சூரியர்கள் தரிசனததைபோல க்ஷத்திர

(க்ஷத்திரிய) தேஜஸினுலும் அலங்கிருதமாக விளங்கும் பிரம தேஜோநிதிகளான தங்கள் தரிசனத்தாலும் எங்கள் மனதிலுள்ள அஞ்ஞான மாகும் அந்தகார மெல்லாம் விலகி விட்டது. தங்கள் இருவர்களின் வரவினுலும் நான் இத்தினம் தன்யனுனேன்" என்று உரைத்தான்.

பர்வதேசுவரனை, சாணக்யன் உட்காரச் சொல்லி "ராஜாதி ராஜரான பர்வதேசுவரரே! நாங்கள் க்ஷேமத்துடன் வந்தோம். பிரஜா பரிவார சமேதமாக க்ஷேமந்தானே?" என்று கேட்டான்.

ஐயா! அந்தண சிரேஷ்டரே! தங்களொத்த மகா புருஷர்களின் ஆசீர்வாத பலத்தால் நாங்களெல்லாரும் க்ஷேமமே. தாங்கள் வந்த விசேஷப் பிரயோசனம் யாது?" என்று அரசன் கேட்க, அதற்கு சாணக்யன்நியாயத்துடன் பிரஜா பரிபாலனம் செய்து கீர்த்தியுடன் விளங்கும் உங்கள் வைபவத்தைப் பார்ப்பதற்கு வந்தோம. அஃதல்லாது ஏகாந்தத்திற் குரிய காரியமும் உண்டு" என்று சாணக்யன் கூற, பர்வதேசன் நான்கு திக்குகளையும் ஓர் முறை பார்த்ததும் அவனது மனோபாவம் அறிந்து ஜனங்களெல்லோரும்வெளிச் சென்றூர்கள்.

அப்பொழுது சாணக்யன் "ஐயா பூபதியே! உனது பிரதாபமாகிற சூரியவெப்பத்தின் உஷ்ணத்தைச் சகிக்கமாட்டாது, சத்துரு ராஜ்ய லட்சுமிகள் உனது வெண் கொற்றக்குடை நிழலை அண்டி இருப்பதைக் கண்டு, நந்தராஜ்ய லட்சுமியும் உனது அந்நிழலையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருள். ஆகையால் தாயாதிப் பகையால் தனது தந்தை சகோதரர்கள் எல்லோரையும் சங்கரித்த சத்துருக்களான அந் நவநந்தர்கள் செய்யும் அவமானத்தால் மனம் உடைந்திருக்கும் சந்திரகுப்தன் என்னும் இவ் ராஜகுமாரனை "முன்னேற்றம்" என்கிற பாலசந்திர மண்டலத்துக்க 'உன் பராக்கிரமமாகிற சூரிய பிரதி பிம்பத்தின் பிரவேசம் உண்டானல் அல்லாது முடியாது' என்றறிந்து உன் சமீபம் வந்தோம் துராத்மாக்களான நந்தர்கள் அகாரணமாக, தமக்கு ஞாதிகளான மௌர்ய குமாரர்களிடம் நடந்து கொண்ட கொடுஞ் செயலைக் கண்டு, இவர்களுக்குச் சம்மதனுன ராக்ஷஸன் என்ற மந்திரியொரு

வன் தவிர, மற்ற சாமாஜிகர்களின் மனமாகிற ஆம்பல் புஷ்பங்கள் நந்தர்களின் கொடுஞ் செயல்களான சூரிய வெப்பத்தை வெறுத்து சந்திரகுப்தன் என்ற சந்திரோதயத்தையே அபேட்சித்திருக்கின்றன. சந்திரகுப்தன் எண்ணத்தை அனுசரித்து சமயோஜிதமாய் சொந்தக் கையெழுத்தில் அவர்கள் எழுதிக் கொடுத்த கடிதம் இதுவே" என்று ஓர் கடிதத்தை அவ்வரசன் கையில் கொடுத்தான்.

அதைப்படித்து அவ்வரசன், தனக்குள் "மௌரியாகளை வதைத்ததன் நிமித்தம் நந்தர்களிடம் வெறுப்புற்றிருக்கும் பாடலீபுரம் பிரஜைகளில் முக்கிய ஸேநாதிபதிகள் தக்க சமயத்தில் சந்திரகுப்தனுக்கு உதவி புரிவார்களென்று நான் முந்தி நினைத்த வண்ணமே 'சந்திரகுப்தன் ஏற்பட்டிருக்குமிக்காரியத்தில் எங்கட்கும் சம்மதம்' என்று பாகுராயணாதி முக்கிய சேனாதிபதிகள் இக்கடிதத்தில் கையெழுத் திட்டிருக்கிறார்கள். இச் சந்திரகுப்தனின் ரூபம், லாவண்யம், கம்பீரம், முதலிய லக்ஷணங்களைப் பார்த்தால் பிரபு பதத்திற்குத் தக்கவனாகவே தோன்றுகிறது. இவனாலேயே முன்னம் பஞ்சா பரீக்ஷையும் நடந்திருப்பதால் இவன் அதி புத்திமான் என்பதற்கு ஐயம் இல்லை. மனோ விசாரத்தால் இளைத்திருக்கும் இவனுடைய காம்பிரியத்தைப் பார்த்தால் இவன் இராஜ்யாதிபதியாய் விட்டால் அதிமாகவே பிரகாசிப்பான் என்று தோன்றுகிறது. ஐசுவரியத்தால் மதம் அடைந்த அரசர்கள் ஞாதிகளிடம் துவேஷம் கொள்ளுவார்கள். ஆயினும் தமது க்ஷேமத்தைக் கருதிக் கொடுங்கொலை புரிவார்களுண்டோ? இதுவரையிலுமே நந்தர்களுக்கு நற்காலமிருந்தது. என்றாலும் இனிமேல் அது விலகி விடும். ஸேநாதிபதிகள் தத்தமது கையெழுத்திட் டிருப்பதால் இச்சந்திரகுப்தனுக்கு எப்படி நந்தர்களைக் கொல்லுவது அவசியமாயிற்றோ அவ்விதமே பாகுராயணாதி சேனாதிபதிகளுக்கும் நவநந்த ஸம்ஹாரம் ஆவசியகமாயிருக்கிறது. சந்திரகுப்தன் நமது சகாயத்தைக் கொண்டு நந்தர்களை ஸம்ஹரிக்க வேண்டுமென்று இவ்விடம் வந்திருக்கிறான். என்பதாகச் சாணக்யன் வார்த்தையால் நிச்சயமாயிற்று. இச்சந்திரகுப்தனுக்கு நந்தர்களிட மிருக்கும் சேனாதிபதிகளே சகாயமா யிருக்கும்போது இவனுக்கு உதவியாய்ப் போகும் நமக்கு நந்த நிக்ரகம் சுலபமாகவே முடியும் என்று தோன்றுகிறது. இஃதல்லாது பூர்வ துவேஷத்தை

கினைந்து லம்பாகா பதியனுவன் கம்மேல் தண்டு எடுத்து வரச் சித்தனு யிருக்கிறான். இவ்விரண்டு விஷயங்களையும் மந்திரிகளுடன் ஆலோசித்து அதிலுள்ள குண தோஷங்களை யறிந்து செய்ய வேண்டியதை மனத்திற்கு வாங்கிக் கொண்டு அதன் பிறகு சாணக்யனுக்குப் பதில் உரைக்க வேண்டும்'' என்று நிச்சயித்து சாணக்யனின் பக்கமாகத் திரும்பினான். அதற்குள் மத்தியான காலத்தை அறிவிக்கும் சங்க பேரி வாத்தியங்கள், முழங்குவது கேட்டு "நாம் ஆலோசித்த காரியத்திற்கு இவ்வாத்தியத் தொனிகள் நற்காலத்தைக் குறிப்பிடும் சகுனங்கள்'' என்று மதித்துப் பிராமணோத்தமரான "சாணக்யரே! உங்களுக்கு மாத்யானிக சமயம் நெருங்கி விட்டது. மற்ற ஆலோசனைகள் பிறகு ஆகட்டும். எங்களிடம் கிருபை செய்து வெகுதூர மிருந்து வந்தீர்கள். சிரம பரிகாரம் செய்து கொள்ளலாம்'' என்று உரைத்து சிம்மாசனம் விட்டெழுந்து மந்திரிகளின் முகத்தை நோக்கினான். அப்பொழுது மிருதங்கம் பேரி காளம் சங்கம் முதலிய வாத்திய விசேஷங்கள் ஒலிக்க ஆரம்பித்தன. அவசரத்துடன் எழுந்து நிற்கும் சாமந்த ராஜர்களின் ஹார கிரீடங்களிலுள்ள ரத்நசிரேஷ்டங்களின் காந்தி கோடி சூரியர்கள் உதித்தது போல் விளங்கிறது. ஸ்துதி பாடகர்கள் "ஜய விஜயீபவ!'' என்று வாழ்த்தினார்கள். சேவக ஜனங்கள் "மகா ஸ்வாமிகளுக்கு பராக்!'' பர்வதேசாதிபனுக்கு எச்சரிக்கை!'' என்று சாமந்த மன்னர்களை விலக்கி நின்றார்கள். இவ்விதம் மகா வைபவத்துடன் பர்வதேசன் ஆஸ்தானம் விட்டுப் புறப்பட்டு சாணக்யரால் கொடுக்கப்பட்ட கடிதத்தைத் தனது குமாரனை மலயகேதுவின் கையிற் கொடுத்து ஸ்நானமாடச் சென்றான். அப்பொழுது அரசனின் இங்கிதத்தை யறிந்த சபரவர்மன் என்னும் மந்திரியானவன் அன்னம் நீர்க்காக்கைகளின் சப்தத்தால் மனோகரமாயும் கமலம் செங்குவளைகளால் சோபித்தும் நிர்மலமாயும் மதுரமாயுமிருக்கும் ஜலத்தினால் பூர்ணமாகியும் நகர லட்சுமியின் முகம் பார்க்கும் கண்ணாடிகளோ!'' என்று இருக்கும் பொய்கைகளால் விளங்கியும், நட்சத்திர நிறைவால் பிரகாசிக்கும் ஆகாச வெளியைப் போல், பூங்கொத்துகளால் மனோகரமாயும், பலங்களின் பாரத்தால் வணங்கித தளிர்களால் வன லட்சுமியைப் பூசிப்பது போல நேத்திரானந்தகரமாயும் பலவித

புஷ்பங்களிலுள்ள மகரந்தத்தை உண்டு அதனால் மதத்திருக்கும் வண்டுகள் ரீங்கார சப்தத்துடன் கூடியும், கிளி அன்றில் முதலிய பட்சி விசேஷங்களின் சப்தத்தால் நிறைந்தும், தேவேந்திரனுடைய நந்தன வனத்தின் சோபையைப் பரிகசிக்கும் பிரதம வனத்தில் விதம்விதமான அலங்காரங்களாலும் சகல வஸ்துக்களாலும் சேவக ஜனங்களாலும் பூர்ணமாயிருக்கும் ஓர் விடுதியில், தக்க மரியாதையுடன் சாணக்ய சந்திரகுப்தர்களை இறக்கிக் காத்துக்கொண்டிருந்தான். சாணக்கியனும் சந்திரகுப்தனுடன் அவ்விடத்தில் ஸ்நானம் செய்து மாத்தியானிகத்தை முடித்துக்கொண்டு சிஷ்யர்களால் சித்தப்படுத்தப்பட்டிருக்கும் பல புஷ்பங்களால் தேவதார்ச்சனை செய்து உசிதமான ஆகாரத்தை முடித்துக்கொண்டு சிரமபரிகாரம் செய்து கொண்டான்.

அப்பொழுது பர்வதேசன் உத்திரவினால் அனுப்பப்பட்ட திவ்ய மால்யங்கள் வஸ்திரங்கள் ஆபரணங்கள் சந்தனாதி அலங்காரங்கள் இவைகளால், சபரவர்மன் சந்திரகுப்தனை அலங்கரித்துப் பாடகர்கள், வாத்தியம் வாசிப்பவர்கள், ஸ்துதிபாடகர்கள், விதூஷகர்கள் முதலியவர்களை சற்று தூரத்திலிருந்துகொண்டு சந்திரகுப்த ராஜனுக்குப் பொழுதுபோக்கிக்கொண்டிருக்கும்படி ஏற்படுத்திச் சைனிகர்களைக் காவல் காத்துக்கொண்டிருக்கும்படி நியமித்துச் சந்திரகுப்தனால் கொடுக்கப்பட்ட தாம்பூலத்தை பெற்றுக் கொண்டு, சாணக்யனின் அனுமதியும் பெற்று, அரசனிடம் சென்று தான் செய்த சத்காரத்தைத் தெரிவித்தான்.

அதற்கு மறுநாள், பர்வதராஜன் ஏகாந்த கிரகத்தில் தனது மந்திரிகளான உலூபனையும் சபரவர்மனையும் வரவழைத்து "பிரிய மந்திரிகளே! இப்பொழுது சந்திரகுப்தன் நந்தர்களிடம் துவேஷத்தைத் தீர்த்துக்கொள்ள நமது சகாயத்தை நாடி வந்திருக்கிறானோ; அல்லது சத்துருக்களினின்றும் பித்ரார்ஜிதமான ராஜ்யத்தைக் கைக்கொள்ளுமாறு நமது சகாயத்தை அபேட்சிக்கிறானோ? சாணக்யர் உரைத்த நோக்கத்தைப் பார்த்தால் இவ்விரண்டு விதமாகவும் தோன்றுகிறது. இச்சமயத்தில் லம்பாகாதிபதியும் தண்டெடுத்து வருகிறான். இவ்விரண்டிலுமுள்ள குணதோஷங்களை யறிந்து முந்

திச் செய்யவேண்டிய காரியத்தைச் சொல்லுங்கள்" என்று கேட்டான்.

அதற்கு அமாத்திய ராக்ஷஸனிடம் விசுவாஸமுள்ள உலூபன் என்றவிருந்த மந்திரி அரசனைப்பார்த்து, "ஸ்வாமி! பாடலிபுரத்திய அரசர்களுக்கும் நமக்கும் ஒருநாளும் துவேஷங் கிடையாதே. இப்பொழுது இச்சந்திரகுப்தனால் அவர்களுடன் பகை பாராட்டவேண்டியிருக்கிறது. அவர்கள் சகல விதத்திலும் சிரேஷ்டர்கள் என்பது தாங்கள் அறிந்த விஷயம். ஸ்வயமாய் சூரர்களும் சூர பரிவாரமுள்ளவர்களும் அனேக தேசத்திய சிற்றரசர்களிடமிருந்து கப்பங்கள் பெறுபவர்களும் பிரஜா ரஞ்சகர்களும் விதரணசாலிகளுமான அந்நந்தர்கள் யுத்தத்தினால் ஜயிக்கப்பட மாட்டார்கள். புத்திமானும் சமர்த்தியவானும் ஸ்வாமி பக்தனுமான ராக்ஷஸன் மந்திரி பதத்திலிருந்து சகல பாரத்தையும் வகித்திருப்பதால் அவர்களிடம் பேதோபாயமும் பலிக்காது. சாம தானங்களுக்கு இடமேயில்லை. ராக்ஷஸன் உங்களுக்கு முன்பு உபகாரம் செய்திருப்பதால் தாங்கள் அதை மறக்கக்கூடாது. பின்னும் பெருத்த சாகஸம் செய்து திரவியத்தைச் செலவு செய்து அபரிமிதமான சேனைகளை மடித்தேனும் ஜயத்தைச் சம்பாதித்த போதிலும், சந்திரகுப்தன் சூத்திர ஸ்திரீ பௌத்திரனானதால் பிரஜா சம்மதமான பிரபு பதத்திற்கு அருகனாக மாட்டான். யுத்த முடிவிலும் ஜயாபஜயம் எப்படியிருக்குமோ? ஆகையால் எலியைப் பிடிக்குமாறு மலையைக் கெல்லாது, நமக்கு மித்திரனான ராக்ஷஸனைக் கொண்டே சந்திரகுப்தனுக்கும் நந்தர்களுக்கும் இருக்கும் துவேஷத்தை நீக்கி, சந்திரகுப்தனிடம் தங்களுக்கு அபிமான முண்டு என்பதை வெளிப்படுத்தி, அவனுக்கு அவர்களைக் கொண்டே அவன் சக்திக்குத் தக்கபடி ஓர் ஜீவனத்தை ஏற்படுத்தினால் எல்லோர்க்கும் க்ஷேமமுண்டாகும். இக்காரியத்தையும் பிறகு செய்யலாம். இப்பொழுது நம்மீது தண்டெடுத்து வரும் லம்பாகாபதியின் கர்வத்தை யடக்குவதற்கு முன் பாடலிபுரத்திய விஷயமொன்றும் பேசவும் கூடாது" என்றான்.

அதைக்கேட்ட சபரவர்மன் "ஸ்வாமீ! ராஜ பீஜோத்பன்னர்களான அரசர்கள் இக்கலியுகத்தில் அனேக தேசத்தை ஆண்டுவரு

கிறார்கள். சுத்த க்ஷத்திரிய வம்சம் ஒவ்வொன்று தானிருக்கிறது. இனி வரவர அதுவும் அழிந்து விடும். சூரனும் நியாயத்துடன் பரிபாலிப்பவனுமான அரசன் தாழ்ந்த வம்சத்தினனாயினும் அவனின்றி வேறு ஆதரவில்லாவிடில் பிரஜைகள் எல்லோரும் அவனையே அனுசரிப்பார்கள். அகங்காரத்துடன் கூடிக் காரணமற்று ஜனங்களைத் தண்டித்தும், பிரஜைகளின் திரவியத்தை அபகரித்தும் ராஜ்யம் ஆளும் அரசன் நல் வம்சத்தில் உதித்தவனாயினும் அவனுக்குக் கெடுதியையே சகல ஜனங்களும் அபேட்சிப்பார்கள். ஆகையால் பிரபு பதத்திற்கு குணங்கள் முக்கியமே ஒழிய குலம் முக்கியமன்று; நந்தர்களோ வரவர இதர தேசங்களைத் தமக்குள் சேர்த்துக் கொண்டும் அனேக சிற்றரசர்களிடம் பகுதி பெற்றுக்கொண்டும் சார்வபௌமர்களென்று பெருமை பேசிக்கொண்டு நாளுக்கு நாள் ஓங்கி வருகிறார்கள். இச்சமயத்தில் நாம் உபேக்ஷித்தால் இனியவர்கள் ஒரு ஸமயம் நம்மையும் எதிர்ப்பதில் ஸந்தேகமுண்டோ? நாம் சற்று உபேக்ஷித்தால் லம்பாகபதி நம்மை இப்பொழுது எதிர்ப்பதுபோல் நந்தர்களும் எதிர்த்தால் நாம் மெத்த சிரமப்பட வேண்டியிருக்கும். ஆகையால் இச்சமயமே சரணமென்று வந்திருக்கும் சந்திரகுப்தனுக்கு ஸஹாயமாய் நாம் சென்று துர்அகங்காரிகளான நந்தர்களையெதிர்த்தால் நந்த நிக்கிரஹம் சுலபமாய் முடிவதுடன், சரணாகதனைக் காப்பாற்றியதில் தங்களுக்குக் கீர்த்தியுமுண்டாகும். சந்திரகுப்தன் குணசிரேஷ்டனானது பற்றித் தங்களால் அடைந்த உபகாரத்தை என்றும் மறவாமலும் தங்களுக்குக் கீழ்ப்படிந்தும் இருப்பான். நந்தர்கள் எவ்வளவு தேசங்களை ஜயித்தாலும் மேன்மேலும் தேசங்களை ஆக்ரமிப்பதில் கண்ணுள்ளவர்களாகவே இருப்பார்கள். மானிகளும் சூரர்களுமான மன்னர்கள் இதர ராஜர்களின் அபிவிருத்தியைக் கண்டு சகிப்பார்களோ? இவையாவும் தாங்கள் அறியாததோ; ஆனால் ராக்ஷஸனின் பேதோபாயம் நமது ஜனங்களிடத்திலும் பிரவேசித்திருக்கிறது போல் இருக்கிறதல்லாது வேறில்லை. நமது தேசத்திற்கு முள்ளைப் போலிருக்கும் கார்ண குடசேனாதிபதிகளால் ஏற்பட்ட கலகத்தை யடக்கியதால் ராக்ஷஸன் தங்களுக்கு மித்திரனானாலும் சேவக பதத்திலிருக்கும் அவனையுத்தேசித்து, அவனுக்குப் பிரபுக்களான நந்தர்களை நாம் அனு

சரிக்க வேண்டுமோ? நமக்கவர்கள் உதாஸீனர்களல்லாது மித்திரருமல்லர். மௌரியனிடம் அபிமானத்துடன் இருந்த ஸேனாபதிகள் அவன் புத்திரனான சந்திரகுப்தனிடமும் பக்ஷம் வைத்திருப்பார்களானதால் நந்தர்கள் நமது பேதோபாயத்திற் கட்டுப்படுவார்கள். அஃதிருக்கட்டும். ஸமீபத்தில் தண்டெடுத்துவரும் லம்பாகமன்னனை முறியடித்து நமது பராக்கிரமத்தை வெளிப்படுத்தினால் சிரமமில்லாது, கௌட தேசங்களை ஜயித்துவிடலாம். இச்சந்திரகுப்தனுக்கு நாம் இவ்வித உதவிபுரிந்தால் அவனால் பிரதி யுபகாரம் பெறுவதில் ஸந்தேகமேயில்லை. அதனால் இப்போது நந்தர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்கும் சிற்றரசர்களெல்லாம் நமக்குப் பணிந்து நடப்பார்கள். இதனாலும் நமக்குக் கீர்த்தி அதிகமாகும்" என்றான்.

இதைக் கேட்டதும் பர்வதேசனுக்கு நந்தர்கள்மீது ஆக்ரஹம் பொங்கி "ஐயா சபரவாமனே! நீ சொன்னவையெல்லாம் யதார்த்தமாயிருப்பதால் அங்கீகரித்து விட்டேன். இப்பொழுது லம்பாகபதியான கிரிவர்மனை வெல்லும் நிமித்தம் சதாவதி நதீ தீரத்தில் நமது சேனைகள் சென்றிறங்கும்படி நாளைப் புதன்கிழமை உத்திரவு செய்" என்றுரைத்துத் தனது அந்தப்புரம் சென்றான்.

## பதினொராவது அத்தியாயம்.

# சாணக்யனின் சூழ்ச்சி.

மறுநாள் பர்வதேசன் சாணக்யருக்கு நந்தர்கள்மீது கோபமும் சந்திரகுப்தன்மீது தயவும் ஏற்படுவதற்குக் காரணத்தை அவரைக்கொண்டே அறிய விரும்பித் தூதன் ஒருவனை அழைத்து, "நீ சாணக்யரிடம் சென்று, 'அரசர் தங்கள் சமயம் எப்படி? இச்சமயம் தங்களைப் பார்க்கலாமா? எனக் கேட்டறிந்து வரச்சொன்னார்கள்' என்பதாகச் சொல்" என்றான்.

தூதனும் அவ்வாறே சென்று அறிவிக்கச் சாணக்யன் "அங்கு வரவே புறப்பட்டுக்கொண்டிருக்கிறேன்" எனக்கூறித் தக்ஷணமே சந்திரகுப்தனுடன், ராஜஸபை வந்து, அரசனைக்கண்டு "க்ஷேமமுண்டாகுக!" என வாழ்த்தி ஓர் ஆஸனத்தமர்ந்தான். அமர்ந்ததும், அரசன் "ஸ்வாமி, பூசுரோத்தமரே! சந்திரகுப்தன் தங்களை அடுத்து எத்தனை நாள்கள் ஆயின?" என்று வினவ, சாணக்யன்,

இருக்க வேண்டும்" என்று மெத்த மரியாதையுடன் வணக்கத்துட னும் உரைத்தான்.

இது கேட்டதும் சாணக்யன் சிரிப்புடன்"ஐயா ராஜாதிராஜ னே! என்ன பிரமாதத்திற்கு அஞ்சி நீ இப்போது யுத்தத்திற்கு ஆர ம்பிக்கிறாய்? இது உனக்கு ஒரு விஷயமோ!" என, பர்வதேசனும் "ஸ்வாமி உலகத்தில் மன்னர்களால் துவேஷமுண்டானால் இளைத்த வனை வலுத்தவன் நிக்ரஹித்து விடுவான். ஸமபலமிருந்தால் ஜயாப ஜயம் இருபங்கிலும் நிச்சயிக்க முடியாது. முன் நமக்குப்பயந்து ஓடிய கிரிவர்மன் தக்க பலத்துடனேயே தண்டெடுத்து வருகிறா னல்லாது வேறில்லை. அவனுக்கு இப்பொழுது ஏற்பட்டிருக்கும் உதவிகளைப் பார்த்தால் ஸம பலத்துடனேயே யுத்தத்திற்கு வருகி றான் என்று தோன்றுகிறது. அதனால் யுத்தத்திற்குப் பிரயத்தனப் படாமல் உபேக்ஷிப்பதற்கு நாங்கள் தபஸ்விகள் போல் விரக்தர்கள் அல்லரே" என்றான்.

சாணக்யன் அதுகேட்டு "ஐயா, வேந்தனே! சத்துருக்களை ஜயிக்க ஸாம தான பேத தண்டமென்ற நான்கு உபாயங்களில் முக் யமாயுள்ள முந்திய மூன்று உபாயங்களை விட்டு ஹிம்ஸையே பிரதா னமாயுள்ள தண்ட நீதியால் சத்துருக்களை ஜயிப்பவனுக்கு "ஜய சாலி" யென்று மட்டுமே கீர்த்தியுண்டாகும். சாமதான பேதங்க ளால் சத்துருவை ஜயிப்பவனுக்கு தயவுள்ளவனென்ற கீர்த்தியு முண்டாகிறதல்லவா? வென்று" கேட்டான்.

அரசன் "ஸ்வாமிகளே! சாம தான பேதங்கள் சாவகாசத்தில் நடத்த வேண்டியவை. ஆகையால் அவற்றிற்குச் சமயம் சரியில்லை. சந்திவிக்ரஹாதி ஆறு குணங்களில், நம்மால் கீழ்க்கடை ஜயிக்கப் பட்ட மன்னனுடன் ஸந்தி பேசுவது சரணமடைவதற்கு ஸமான மல்லாது வேறில்லை. இதைக்காட்டிலும் மானியான் அரசனுக்கு அவமானம் வேறுண்டோ?" வென்றான்.

சாணக்யன் "ஐயா மன்னனே! சத்துருக்களை ஜயிப்பதில் சா மபேத தானங்களைக் காட்டிலும் தண்டோபாயம் மத்தியம் என்று உரைத்தற்கு நீ வேறு விதம் அர்த்தம் செய்தாய். இப்பேர்ப்பட்ட

ஹீனர்களிடம் சந்திபேசுவது உனக்குக் கௌரவமாகுமோ? நீ அவ்விதம் செய்ய வேண்டுமென்றும் நான் சொல்ல வரவில்லை. நான் சொல்ல வந்தது வேறு" என்றான்.

"நந்தர்களிடம் தண்டோபாயமே நடத்த வேண்டியிருக்கிறதல்லவா" என்று பர்வதேசன் கேட்க, சாணக்யன் நந்தர்களை சம்ஹரித்தல்லாது நந்த ராச்சியாதிபத்யத்திற்குச் சந்திரகுப்தன் சம்மதியான். அன்றியும், 'நந்தர்களை சம்ஹரித்தல்லாது என்சிகையைக் கட்டுவதில்லை' என்ற எனது சபதமும் வீணாகாம லிருக்கும்பொருட்டே நந்தர்களிடம் தண்டோபாயமே செய்யவேண்டியிருக்கிறது" என்றான்.

அப்பொழுது சந்திரகுப்தனும் "அரசே! பிதுர்த்ரோகிகளான நந்தர்களை சம்ஹரித்தல்லாது நந்த ராஜ்யாதிபத்யம் செய்வதைக் காட்டிலும் வனவாஸமே சுகமென்று எனது ஆசாரியரிடம் நான் முந்தியே தெரிவித்துக்கொண்டேன். அப்பொழுது அவர் சத்துருக்களை சம்ஹரித்து எனக்கு ராசசியாதிபத்யம் தருவதாக உரைத்தருளியிருக்கிறார்" என்றான்.

இது கேட்ட பர்வதேசன் சிரித்துக்கொண்டே "ஐயா! சந்திரகுப்தா! சத்துருக்களை சம்ஹரித்து ராசசிய மடைவதில் மன்னர்களை அடிக்காமல் தமோதனரை அடித்ததைத வெளிக்காண்பித்துக் கொள்ளத் தக்கதில்லை" யென சந்திரகுப்தன் "எனது ஆசாரியரின் அனுக்ரஹத்தால் ராஜாதி ராஜரான தங்களுடைய ஆதரவு எனக்குக் கிடைத்த பின் இனி யெனக்குக் கவலையுமுண்டோ?" என்றான்.

இது கேட்டு அரசன் தனக்குள் இவ்வளவு மிருதுவாய் சம்யோசித மான பேச்சுக்கள் ராஜாதி ராஜ லக்ஷணமுள்ளவனுக் கல்லாது மற்றவர்களுக்கு வராதென்று சந்திரகுப்தனிடம் ஸந்தோஷிப்பட்டு, சாணக்யரைப்பார்த்து "சகலமும அறிந்த சாணக்யரே! பூர்வ துவேஷம் நினைந்து வரும லம்பாக மன்னனை ஜயிக்கும் விஷயத்தில் தங்களுடைய தீர்மானமென்ன?" வென்று கேட்டான்.

சாணக்யன் "வேந்தனே! எனது அபிப்ராயம் காரியத்தின் முடிவில் தெரிந்துகொள்ளலாம். உனக்கு ஆப்தனுகி புத்திசாலியான'

ஒரு *நியோகியை (காரியஸ்தனை) நான் சொன்னபடி நடந்துகொள்ளும்படி நியமித்து என்னிடம் அனுப்பு" என்று கூறிவிட்டு அரசனிடம் அனுமதிபெற்றுச் சந்திரகுப்தனுடன் தன் விடுதி வந்து சேர்ந்தான்.

அப்பொழுது அரசன் கமலாபீடன் என்ற நியோகியைச் சாணக்ய னுரைத்தபடி நடந்துகொள்ளும்படி நியமித்து அவனை அவனிட மனுப்பினான். அக்காரியஸ்தனும் சாணக்யனிடம் வந்து நமஸ்கரித்து "உத்திரவு ப்ரகாரம் வந்திருக்கிறேன்" என்று தெரிவித்துக்கொண்டான். சாணக்யன் தக்கவிதமாய் இரண்டு கடிதங்களை எழுதி அவற்றிற்கு ராஜ முத்திரையிடச் செய்து கமலாபீடனிடம் அவன் செய்ய வேண்டிய சாதுரிய காரியங்களை விவரமாய்ச் சொல்லிக் கொடுத்துக் கடிதங்களுடன் காமரூப தேசாதிபதியின் ராஜதானியாகிய ப்ராக் ஜோதிஷ புரத்திற்கு அனுப்பினான்.

அந்த ராஜகாரியஸ்தனும் காமரூப தேசம் சென்று, தன்னுடன் வந்திருக்கும் ஓர் தூதனிடம் தன் பெயருக்கெழுதிய விலாஸத்துடன் ராஜ முத்திரையுடனிருக்கும் கடிதத்தைக் கொடுத்து 'இவ்விதம் செய்' என்று ரகஸியமாக உரைத்துத் தான் முந்திச் சென்று ப்ராக்ஜோதிஷ புரத்தின் ப்ராகாரத்திற்கு வெளியிலிருக்கும் உத்யானவனத்தில் இறங்கியிருந்தான். நிற்க.

இவனால் முன்கடிதம் கொடுக்கப்பட்ட தூதனும் அந்த நியோகி சொல்லித்தந்த வண்ணம் ஆங்காங்கு "பர்வத ராச்சியத்தின் காரியஸ்தனான கமலாபீடன் எங்கிருக்கிறான், எங்கிருக்கிறான்" என்று கேட்டுக்கொண்டே ப்ராக்ஜோதிஷ புரம் முழுதும் தேடித் திரிந்து அப்பட்டணத்தின் வேவுகாரர்கள் இருக்கும் சாவடிக்கருகில் நின்று "ஐயா ஜனங்களே! பர்வதேசனா லனுப்பப்பட்ட காரியஸ்தன் எங்கு இறங்கியிருக்கிறான்? ராஜ காரியத்தின் அவஸரத்தால் நான் அவனைக் காணவந்திருக்கிறேன். சற்று தயவுசெய்து காண்பியுங்கள்" என்றான்.

அவர்களிவனைப் பார்த்து, வேவுகாரர்களானதால் "இவனிடம் ராஜகாரியம் அடங்கிய கடிதத்தின் விஷயம் யாதோ இருக்கவேண்டும்.

---

*நியோகி என்பவன் ராஜகாரிய மடங்கியிருப்பவைகளை எடுத்துச் சொல்வோன்.

பேசாது உபேக்ஷையாயிருக்கக்கூடாது" என்று அத்தூதனையுடனே சோதித்து அவனிடமுள்ள ராஜ முத்திரை யிடப்பட்ட கடிதத்தை எடுத்துக்கொண்டு அவனுடன் தம தரசனிடம் சென்று அக்கடித த்தைக்கொடுத்து "ஸ்வாமீ! பர்வதராச்சியத் திருந்து ராஜகாரியஸ் தன்வந்து யாதோ'வொரு காரியநிமித்தம் இங்கு இறங்கிக் கொண் டிருக்கிறானும். அவன் பெயருக்கு ராஜமுத்திரையுடன் இக்கடிதம் கொண்டுவந்த இத்தூதன் அவன் இறங்கி யிருக்குமிடம் அறியாமல் நமது நகரத்தில் தேடித் திரிந்துகொண்டிருந்தான். அவனையும் அழைத்து வந்திருக்கிறோம்" என்றார்கள்.

உடனே காமரூபாதிபதியும் அக்கடிதத்தைப் பிரிக்காமல் தன்னிடமே வைத்துக்கொண்டு அதன் விலாஸப்படி "பர்வத ராச்சி யத்தின் காரியஸ்தனான கமலாபீடன் என்பவன் எங்கிருந்தாலும் கண்டுபிடித்து நமது ஆஸ்தானத்திற்கு அழைத்து வந்து விடுமள வும் இத்தூதனைக் காவலிலிட்டுப் பிறகு விட்டுவிடுங்கள்" என்றான். அவ்வேவுகாரர்களும் அவ்விதமே நகர்முழுவதும் தேடி உத்யான வனத்தி லிறங்கியிருக்கும் நியோகியைக் கண்டு "மஹாராஜாவின் உத்தரவாயிருப்பதால் தாங்கள் ஆஸ்தானத்திற்கு வரவேண்டும்" என்று அழைத்தார்கள். அக்கமலாபீடனும் "சரி" யென்று ஆஸ் தானத்திற்கு வரும்போது அவனுடைய பரிவாரங்கள் அவ்வுத்யான வனத்திற்கும் ஆஸ்தான மண்டபத்திற்குமாக ஏகமாய் நின்றார் கள். அதுகண்டு அவ்விடத்திய ஜனங்கள் "ஆஹா ஒரு ராஜகாரிய ஸ்தனுக்கு இவ்வளவு ஆடம்பரங்களும் பரிவாரங்களுமிருந்தால், அப்பருவதேசனின் ஐசுவரியமே ஐசுவரியம்." என்று எல்லோ ரும் சிலாகித்தார்கள். நியோகியும் ஆஸ்தானம் சென்று மெத்த மரியாதையுடன் கும்பிட்டு தான் கொண்டுவந்திருக்கும் வஸ்திர வாஹனங்களை ஒப்புவித்தான். பிறகு அரச னுத்திரவா லுட்கார்ந்து "ராஜோத்தமரே! ராஜாதி ராஜரான பர்வதேச்வரர் தங்கள் குசலத் தை விசாரித்தார்" என்ன, அரசன் "ஐயா நியோகியே! நாங்க ளெல்லோரும் க்ஷேமத்துடனிருக்கிறோம். பிரஜைகளுடன் உங்க ளரசர் க்ஷேமந்தானே? யாது காரியம் பற்றி உங்களை இவ்விடம் அவர் அனுப்பி யிருக்கிறார்?" என்று கேட்டான்.

அதற்கு, நியோகி "ஸ்வாமி! சத்குலத்திலுதித்த தங்களிடம் ஸம்பந்தத்தைக் கோரி என்னை யனுப்பினார்கள். உயர்ந்த வம்சத்தினர்களான உங்களிருவருக்கும் ஸம்பந்த முண்டானால் க்ஷீர சமுத்திரம் இக்ஷு சமுத்திரத்துடன் கலந்தது போலும், ஜனகரும்தசரதரும் சம்பந்தம் செய்து கொண்டது போலும் லோகத்திற்கே க்ஷேமகரமாயிருக்கும். உங்களிருவர்களின் குழந்தைகளும் சந்திரனும் சந்திரிகையும் போல லோகாநந்தகரமாயு மிருப்பர்." என்றுரைத்துத் தன்னிடமிருந்த நிருபத்தை அவ்வரசனிடம் ஒப்புவித்தான். அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது:—

"நமக்கு பரம ப்ரியரான காமரூப தேசாதிபதிகளான ஸூரிய வர்மருக்கு பர்வதேச்வரர் செய்யும் விக்ஞாபனம் என்னவெனில்,

கன்னிகையான தமது சிரேஷ்ட புத்திரியினால் நமது குமாரன் மலையகேதுவிற்கு கிருஹஸ்தாசிரமம் உண்டாக்க வேண்டுமென்று அபிலாஷையால், தங்களிடம் சம்பந்தம்கோரி எனது நியோகி கமலாபீடனை அனுப்பியிருக்கிறேன். இதற்குத் தாங்கள் ஸம்மதித்து நமது நியோகியுடன் கன்னிகையின் ஜாதக பத்திரிகையுடன் உங்கள் புரோகிதரையும் அனுப்பினால் நம்மிருவர்களின் பந்து வர்க்கங்களுக்கும் சம்மதமான இச்சுபகாரியத்தைச் சீக்கிரம் நடத்திக் கண்டு களிக்கலாம். இதனால் நம்மிருவர்களின் யோக க்ஷேமங்களும் ஒன்றே யாகும்."

இக்கடிதத்தை வாசித்ததும் காமரூபாதிபன் 'இது தக்கஸம்பந்தம்' என்று சந்தோஷித்து நம்மிடம் அகப்பட்ட கடிதத்திலும் இதை யனுஸரித்தே யெழுதியிருக்கும் என்றெண்ணி மந்திரியை நோக்கி இவருக்குத் தக்க விடுதி யொன்று நியமித்து, தக்கபடி உபசரிக்குமாறு கட்டளையிட்டு, "ஐயா நியோகியே! மெத்த சிரமத்துடன் ஊருக்கு வெளியி லிறங்கி நம்மைக்காணும் பொருட்டு எவ்வளவு நாளாகக் காத்திருந்தீர்களோ" என்று உபசாரமாகச் சொல்லி, வஸ்திர தாம்பூலாதிகளால் ஸன்மானம்செய்து "நீங்கள் வந்து நாளாயினமை பற்றியோ என்னவோ உங்களரசர் இன்னொரு கடிதமும் உங்கள் பேருக்கு அனுப்பியிருக்கிறார். இந்தாரும்" என்று தன்னிடமிருந்த கடிதத்தைக் கொடுத்தான்.

அக்நியோகி அதைப்பிரித்துப் பார்த்ததும் ஸர்வ சொத்தை யும் இழந்து கொண்டவன் போல தலையைக் குனியப்போட்டான். அது கண்டு அரசன் "ஏன் ஐயா கடிதங்கண்டு உச்சாக மற்றவரா யிருக்கிறீர்." என, அவன் "ஒன்றுமில்லை" யென்றான்.

உடனே அரசன் மந்திரியைப் பார்த்து "அக்கடித விஷயத் தை யுரைக்க நியோகி பின் வாங்கி சங்கோசப்படுகிறான். நீ படி த்து உள்ளதைத் தெரிவி" யென்றான். மந்திரியும் அக்கடிதத்தை மனதிற்குள் படித்துக்கொண்டு ரஹஸ்யத்தில் அரசனுக்குப் படித் துக் காட்டினான். அதில்,

ஸ்வஸ்திஸ்ரீ "பர்வதேச்வரர் நியோகி கமலாபீடனுக்கு எழுது வதென்னவென்றால்,

நீ சம்பந்த விஷயமாய் அங்கு சென்றதில் அரசரின் தரிசனம் கிடைத்ததோ இல்லையோ தெரியவில்லை. முக்கியசமாசாரம் உனக்கு அறிவிக்கவேண்டியதொன்று உளது. அதென்னவென்றால், "லம் பாக தேசாதிபதியின் சபையில், மன்னர்களின் கீர்த்தி சௌரியங் களைப்பற்றி பேச்சு நடந்த ஓர் ஸமயத்தில், லம்பாக தேசாதிபதி யான கிரிவர்மன் "காமரூபாதிபதியின் வம்சத்தில் கலப்பு தோஷ முண்டாகையால் அவர்கள் தற்கால சூரர்கள்" என்றானும். இதைக் கேட்டிருந்த நமது ஆப்த ஜனங்கள் நமக்கறிவித்திருக்கிறார்கள். பூமாதேவிக்குப் பௌத்திரனான பகதத்த மஹாராஜன் வம்சத்திலு தித்துப் பரம்பரையாய் வரும் காமரூபாதிபர்களுடைய வம்சத் தில் எவ்வித அகாரியமும் நடந்திருக்க மாட்டாதென்றும் லம்பாக மன்னன் மதத்தாலும் மாற்சரியத்தாலும் இப்பேர்ப்பட்ட துச்ச வார்த்தை சொல்லியிருக்கலாமென்றும் நாமுத்தேசித்தாலும், இவகு நாளைக்கு நீடித்த சம்பந்தம் செய்ய வேண்டியிருப்பதால் நீயும் அங்கு நன்றாய் விசாரித்தறிந்து உன்மனதிற்குத் திருப்தியானால் முஹூர்த்தம் நிச்சயப்படுத்தி வரவேண்டியது"

என்று எழுதியிருந்தது.

அது கேட்ட காமரூபாதிபதியும் கல்லடிபட்ட சிங்கம் போல் மஹா கோபத்துடன் ஆர்ப்பரித்துப் பல்லை 'நெற' 'நெற'

என்று கடித்து மீசை துடிதுடிக்க "அடா மந்திரி! க்ஷத்திரிய அத மனான லம்பாக மன்னன் எங்கள் வம்சத்தைக் குறித்துச் சொன்ன துஷ்டவார்த்தைக்கு நான் அவன்சிரத்தை நிலத்தில் உருட்டாமல் யமபேனுகில் லோகநாயகனுயிருந்த நரகாசுர வம் சத்தில் உதித்தவனாக மாட்டேன். இப்பொழுதே நமது சிற் றரசர்களைச் சகல சேனைகளுடனும் லம்பாக தேசம் சென்று முற் றுகையிடும்படி நியமித்து விடு: நமக்கும் தண்டயாத்திரை யென் று பறை அறைவி. நாளையதினமே தரங்கிணீ நதி தீரம் சென்றிறங் கவேண்டும்" என்று கட்டளையிட்டு நியோகியைப் பார்த்து "ஐயா! உங்கள் அரசர்போல் எங்களுக்கும் இச்சம்பந்தத்தில் பிரிய மிருக் கிறதானால் நீசனான லம்பாகபதியை நிக்ரஹித்தல்லாது இச்சபதகா ரியத்தில் பிரவேசிக்க முடியாது. இதை உங்கள் அரசருக்கு அறி வியும்." என்றுரைத்து, மந்திரியைக் கொண்டு பர்வதேசருக்கு அவர் கடிதத்தை அனுஸரித்து மரியாதையுடன் பதிலெழுதிக் கொடுத் துவிட்டு அந்தப்புரம் சென்றான்.

பிறகு அந் நியோகி தானிறங்கி இருக்குமிடம் வந்து நான்கு தினங்கள் சாணக்யருத்திரவுப் படியே தாமதித்திருந்து, காமரூபா திபதியான சூர்யவர்மன் சகல சேனைகளுடன் லம்பாக தேசத்தின் மீது படையெடுத்துச் சென்றதும், "ஓஹோ சாணக்யரின் புத்தி சூக்ஷ்மத்தால் பர்வதேசரின் ராஜ காரியம் வேறு மனிதர்களாலேயே நடந்து விட்டது" என்றறிந்து சந்தோஷத்துடன் பருவதராஜ் யத்திற்குத் திரும்பிச் செல்லுமாறு தனது பரிவாரங்களுடனும் கடிதம் கொண்டு வந்து தேடிய தூதனுடனும் பிரயாண மானான்.

---

## பன்னிரண்டாவது அத்தியாயம்.

# பர்வதேசனுடன் சாணக்யன் செய்த உடன்படிக்கை.

பர்வதராச்சியத்தின் தலைநகரான சாஹாரீ நகரமடை ந்த கமலாபீடன் ஆஸ்தான மடைந்து பருவதராஜனைக் கண்டு வண ங்கி காமரூப தேசத்தில் நடந்த சகல ஸமாசாரங்களையும் ரஹஸிய த்தில் தெரிவித்து அவ்வரசனால் கொடுக்கப்பட்ட பதிலையும் ஒப்பு

வித்தான். இதை அறிந்த பர்வதேசன் ஆச்சர்யமடைந்து "ஐயா சபரவர்மனே! புத்திமானாகிய சாணக்யர், சொன்னது போல காரியத்தையும் முடித்ததால் நாமெடுத்த பெருத்த காரியாரம்பம் காமரூபாதிபதியாலேயே முடிவடைந்து விட்டது. நாம் சந்திரகுப்தனுக்கு உபகாரம் செய்ய வேண்டுமென்பது போய் பிரதியுபகாரம் செய்ய வேண்டியது அவசிய மாயிற்று. இப்பொழுதேனும் மந்திரி உலூகனுக்கு இக்காரியத்தில் சம்மத முண்டாமோ இல்லையோ?" என்றான். அதற்கு சபரவர்மன் "யாத்திரை ஸமயத்தில் உலூகனென்னும் சப்தத்தையும் சொல்லவும் நினைக்கவும் கூடாது" என்றான்.

இதுகேட்டரசன் தனக்குண்டான சிரிப்பை மறைக்கும் வண்ணம் வஸ்திரத்தால் வியர்வை துடைப்பவன் போல் முகத்தை மறைத்துக் கொண்டான். அதற்கு உலூகன் "ஸ்வாமி! இச்சபரவர்மன் சிறுவனாதலின், விளையாட்டும் வேடிக்கையுமே பேசிப் பொழுது போக்குகிறான். எனது வார்த்தையைச் சற்று அங்கீகரிக்க வேண்டும். நமக்கு உதவி புரிந்த சந்திரகுப்த சாணக்யர்களுக்கு சஹாயமாய் ஸேனைகளை அனுப்பினால் போதும்" என்றான்.

உடனே சபரவர்மன் "சேனைகளால் அவர்களுக்குக் காரியம் முடியாது. பிறகு செல்வதைக் காட்டிலும் இப்பொழுதே நாங்கள் நேரில் ஸேனைகளுடன் சென்று அவர்கள் காரியத்தையும் முடித்துக் கொடுத்து நமக்காக வேண்டிய காரியத்தையும் முடித்துக் கொள்ளலாம்" என்றான்.

"காரியத்தை முடித்துக் கொள்ளக்கருதியவர்கள் சகாயத்திற்காக விசேஷ லாபமுண்டாக்குவதாக முந்திச் சொன்னாலும் காரியம் முடிந்ததும் அதன்படி நடக்கவேமாட்டார்கள்" என்றான் உலூகன்.

"பிராமணன், அதிலும் தபஸ்வி, பொய் கூறுவது உண்டோ?" வென்று அரசன் கேட்க, உலூகன், "ஸ்வாமி! கலிகாலத்தில், லௌகிக விவஹாரத்தில் பொய் பேசாமலே காரியம் கைகூடமாட்டாது. இன்னொரு சூக்ஷ்மமும் தெரிவிக்கிறேன். என்னவெனில், சந்திரகுப்தன் தங்களிடம் உரைத்ததில் "சத்துரு ரஹிதமான

ராச்சியத்தி லுனக்குப் பட்டாபிஷேகம் செய்விக்கிறேனென்று ஆசாரியர் வாக்களித்திருக்கிறார்" என்றதால், எவ்வித சாகலத்தா லேனும் எவ்வளவு பொய் வார்த்தைகளாடியேனும் சந்திரகுப்தனு க்கு நந்த ராச்சியாதி காரத்தை யேற்படுத்துவதே சாணக்யரின் தீர்மானம் எனத் தெரிகிறது. இதரர்களுக்கு அவ்விராஜ்யத்தில் லேச மாத்திரமும் கிடைக்கவே மாட்டாது. இனி அனுபோகத் திற்கு வரும்போது பச்சாத்தாபப் படவேண்டியிருக்கும் என்று கண்டிப்பாய் விக்ஞாபித்திருக்கிறேன்" என்றான்.

"ஐயா விருத்தமந்திரியே! நீ சொல்வதே மெய்யாய் விட்டால் நாம் இப்பூமியிலிருந்து பிரயோஜனமென்ன?" வென்று அரசன் கேட்க, சபரவர்மன் "ஸ்வாமீ! 'நாம் அவர்கள் காரியத்தை முடித் துக் கொடுத்தால் நாமடையும் லாபமென்ன?' வென்பதை மலய கேதுவை சந்திரகுப்தனிடம் அனுப்பித் தெரிந்துகொள்வோம். தக்கபடி சமாசாரமிருந்தால் செல்லலாம். இல்லாவிடில் பேசாது வாம்" என்றான்.

பிறகு பர்வதேசன் சாணக்யரை மரியாதைகளுடன் வரவழை த்துஉட்காரச்செய்து"கார்யநிர்வாஹியானசாணக்யரே!உங்கள்புத்தி விசேஷத்தினால் நமக்கேற்பட்டிருக்கும் தொந்தரவு நீங்கி காமரூபா திபனே லம்பாகபதி மீது தண்டெடுத்துச் சென்றானும். நீங்கள் எத்தனிக்கும் காரியத்தில் அனுகூல மில்லாமலிருக்குமோ? நீங்கள் ஏற்பட்டிருக்கும் காரியத்திற்கு எங்கள் ஸஹாயம் நிமித்த மாத்திரமேயாகும். இனி உங்கள் காரியத்தில் பிரவேசிக்கத் தடை யில்லை. இச் சுப சமாசாரத்தைத் தங்களுக்கறிவிக்குமாறு வர வழைத்தேன். ஸந்த்யா காலம் மீறுகிறபடியால் தங்களுக்கு இச் சமயம் தாமதிக்க முடியாது" என்று தாம்பூல புஷ்ப மாலிகைகளுட னுபசரித்து விடுதிக் கனுப்பிவிட்டு கமலாபீடனென்னும் நியோகிக் கும் பஹுமானம் செய்து தனதந்தப்புரம் சென்றான். ஸபையோர் களும் தத்தம்மிடம் சென்றார்கள்.

அப்பொழுது கமலினியினிட முள்ள அனுராகத்தால் சிவந் தவன் போலிருந்த கமல பாந்தவன் சிவந்த ஒளியுடன் மேற்குத்

திசையாகும் ஸ்திரீயிடம் இச்சை கொண்டவன் போல் பச்சிமாசல சிகரத்தில் மறைந்துகொண்டு வந்தான். சூரியனின் பிரிவாற்றுமை யால் ராஜீவ பங்திகள் மூடுவது கண்டு பரிகசித்துச் சிரிப்பது போல ஆம்பல்கள் மலர வாரம்பித்தன. மன்மத சராக்னியால் தஹிக்கப்பட்ட சக்ரவாகங்களின் ஹிருதயத்திலிருந் துண்டாகும் புகைப்படலம் போல் இருள் உலகத்தை மூடிற்று. சந்திரனுகிற சிம்ஹத்தின் நகங்களால் பிளக்கப்பட்ட கும்ப ஸ்தலமுடைய இரு ளென்னும் யானையிடத்திருந்து சொரியும் நல் முத்துக்களாகிய நக்ஷத்திரக் கூட்டங்கள் ஆகாயத்தை யலங்கரித்தன. பிரியனின் தரிசனத்தால் புன்சிரிப்படைந்த திக்குகள் என்னும் ஸ்திரீகளின் சிரிப்பைப் போல் சந்திரிகையானது ஆகாயவகையின் பிரவாக நுணிக ளுடன் விளங்கியது. பாதாளத்திருந்து பூமியின் சிரிப்பைக் கண்டு களிக்குமாறு வெளிவரும் ஆதிசேஷனின் நடுச் சிரஸிலிருக்கும் மஹா ரத்நம்போல் சந்திரனுதயமானுன். அப்பொழுது உலகு முழுதும் சந்திரனின் அமிருத தாரையாலும் கங்கா ஜலத்தாலும் அபிஷேக மடைந்ததுபோல சந்திரிகை விளங்கிற்று. மதன ராச் சியாபிஷேக ஸமயத்தில் எடுக்கப்பட்ட முத்தாரதி போல் குமுத யாந்தவன் விளங்கினுன்.

அச்சமயம் தன் குமாரனும் யுவராஜனுமாகிய மலயகேதுவை யழைத்துக் "குழந்தாய்! ஆயுஷ்மானுகிய சந்திரகுப்தன் நந்தர்களை ஸம்ஹரித்து அவ்விராஜ்யத்தைக் கைக்கொள்வதற்கு நமது ஸகாய த்தை விரும்பிப் புத்திசாலியான சாணக்யருடன் வந்திருக்கிறுன். நந்தர்கள் பிரபலர்க ளாகையால் அவர்கள் மீது யுத்தத்திற்கு நாமே நேரில் செல்ல வேண்டி யிருக்கிறது. நாம் அவர்களுக்கு இக்காரிய த்தைச் சாதித்துத் தந்தால் நமக்கவர்கள் செய்யும் பிரதியுபகார மெவ்விதமாகுமென்பதையறிந்துவா" என்றனுப்பினுன்பர்வதேசன்.

மலயகேதுவும் "மஹாப்பிரஸாதம்" என்று புறப்பட்டு நக்ஷத்திரங்களுடன் சோபிக்கும் சந்திரனைப் போல் தீப ஸஹஸ்ரங்க ளுடனும் பரிவாரங்களுடனும் சாணக்யரின் விடுதிக்கு வரும்போது சந்திரகுப்தன் தூரத்திலிருந்தே தெரிந்து, எதிர் கொண்டு வந்து பிரியத்துடனும் மரியாதையுடனும் அழைத்துச் சென்று, உட்காரு

வித்து பரஸ்பரம் குசலப் ப்ரசனம் செய்தான். அப்பொழுது சாணக்யன் மலயகேதுவைப் பார்த்து "சூரனும் புத்திசாலியுமான ஜயிந்தனைக் கண்டு சந்தோஷிக்கும் தேவேந்திரனைப் போல் உனது சௌரியம் கண்டு உன் தந்தை சந்தோஷிப்பதற்கு இதே தக்க சமயம். சூரியன் தன்னொளியால் அந்தகாரத்தை விலக்கி அவ்வொளியை சந்திரனிடத்தும் அக்கியிலும் நிறுத்தி அவர்களைக் கொண்டே இரவின் இருட்டையும் எவ்விதம் பரிகரிக்கிறானோ அதுபோலவே அன்னியோன்னிய மித்திரரும் சூரருமான உங்களைக் கொண்டு சத்துருக்கள் நசித்தது கண்டு உன் தந்தைக்கு சந்தோஷமுண்டானால் அப்பொழுது ராச்சிய பாரத்தின் கவலை விட்டு விச்ரமித்துக் கொள்ளலாம். சத்துருக்களால் பாதை யடைந்த இச்சந்திரகுப்தன் உங்களிடம் சினேகித்துத் தனக்கு பிதுரார்ச்சிதமான ராஜ்யத்தில் பாதியை உங்களுக்கீந்து பாலில் நீர் கலந்தது போலும் கங்கையில் யமுனை சங்கம மானது போலும் உங்களை படைந்து கீர்த்திமானாக வேண்டு மென்று கோருகிறான். இவ்விரு ராச்சியங்களுக்கும் அதிபர்களாயும் அசுவினி தேவதைகள் போல் மித்திரர்களாயு மிருந்துகொண் டிருக்கும் உங்களைக் கண்டால் சகல மன்னர்களும் அருகித் தங்கள் சிரசை உங்கள் பாதத்தில் படிய வணங்குவார்கள். அர்த்த ராச்சியம் தரும் விஷயத்தில் ஒப்பந்தமெழுதிக் கொடுத்துத் தன் கையெழுத் துள்பட சந்திரகுப்தன் எழுதிய கடித மிது. இதை உங்கள் தகப்பனாருக்குக் காண்பிக்க வேண்டும். நமது ஆலோசனையை சத்துருக்கள் அறியும் முன்னதாகவே உங்கள் சேனைகளா லுண்டாகும் தூளிகளால் நந்த ஸ்திரீகளின் மாரினில் பூசப்பட்டிருக்கும் செம்மஞ்சட் குழம்புப் பூச்சும் சந்தனப் பூச்சும் அழிய வேண்டும். அப்பொழுது தான் நம் காரியம் கை கூடும். இதெல்லாவற்றையு முன் தகப்பனாருக் கறிவி" என்று அர்த்த ராச்சியம் கொடுப்பதாக எழுதிய கடிதத்தைக் கந்த புஷ்ப தாம்பூலங்களுடன் மலயகேதுவின் கையில் சந்திரகுப்தனைக் கொண்டு கொடுப்பித்தான்.

மலயகேதுவும் அரண்மனை வந்து தன்னை யெதிர் பார்த்திருக்கும் பிதாவை நமஸ்கரித்து "தந்தையே! புத்திமான்கள் முகக்குறியாலேயே மனதிலுள்ளதை அறிவது வழக்கம். ஆனதால் சகலமும்

அறிந்த சாணக்யர் நான் சென்றதும் மெத்த மரியாதையுடன் குச லப்ரச்னம் செய்து முந்தியே எழுதி வைத்திருந்த இக்கடிதம் கொடுத்தார். இதில் நந்தர்கள் மடிந்ததும் தனக்குக் கிடைக்கும் ராஜ்யத்தில் பாதி நமக்குத் தருவதாக எழுதி சந்திரகுப்தன் கை யெழுத்திட்டிருக்கிறான்" என்றான்.

அதைக்கேட்டு பர்வதேசன் "பிறர் அபிப்பிராயம் அறிவதில் நிபுணனான சாணக்யனால் செய்யப்படுங் காரியங்கள் எல்லாம் சீக்கி ரம் கைகூடுவதில் தடையில்லை. குணவானாகிய இச்சந்திரகுப்த னுக்கு உதவி செய்ய வேண்டி நாமே ஸேனா ஸஹிதம் செல்வதே யுக்தம்" என்று தீர்மானித்து பர்வதராச்சியத்தின் ஸகல அதிகார த்தையும் புரிந்து வரும் தம்பியான விரோசனனை யழைத்து "அப்பா! தேவஸேனாதிபதி போல் பராக்ரமசாலியான விரோசனா! நமக்குக் கௌட தேசத்தில் ராஜ காரிய முதலியிருப்பதால் நாமே தண்டயாத்திரைக்குச் செல்ல வேண்டி யிருக்கிறது. ஆனதால் கிராதாதிபதியான மாதங்கன் தன் ஸேனா ஸமேதனாக பாடலீபுர த்தைத் தகைவதற்கு முந்திச் செல்லட்டும் "குத்தாலகன்" என்ற கொத்துவேலைக்காரன் தனது ஆறு லக்ஷம் ஆட்களுடன் சென்று ஸேனைகள் செல்லும் வழிகளிலுள்ள மேடு பள்ளங்களைச் சரிபடுத்தி யும் ஜலமில்லாத விடங்களில் ஜலங்களுண்டாக்கியும் ஜனங்களுக்கு சிரமம் தோற்றாது ஆங்காங்கு விடுதிகளும் தண்ணீர்ப் பந்தல்களு மமைத்தும் ஸேனைகளுக்கு வேண்டிய விறகுகளையும் புற்களையும் தயாரித்துக்கொண்டும் முந்திச் செல்லட்டும். "தாஸன்" என்னும் ஓடக்காரன் நடுவழிகளிலிருக்கும் நதிகளைத் தாண்டுவதற்கு முப் பதினாயிரம் ஓடங்களைத் தயாரித்துக் காத்துக்கொண் டிருக்கட்டும். ஸேனாதிபதியான சேகரன் அஹோராத்திரிகளும் சத்துருக்களின் போக்குவரத்துக்களை அறிந்து தண்டித்தும் சேனைக்கு வேண்டிய தனதானியங்களைக் காப்பாற்றியும், சத்துருக்களின் வேவுகாரர் களைக் கண்டு பிடித்துச் சிறையிலடைத்தும், தீனர்களுக்கும் அநா தர்களுக்கும் அன்னந் தண்ணீர் கொடுத் துதவியும், சௌகரியமான விடங்களில் ராஜயோக்யமான கூடாரங்களை யடித்தும், ஸேனைகளை

உத்ஸாகப் படுத்திக்கொண்டு செல்லட்டும். நமது ஸாமந்த நரபதி யான மகதன் ஸேனைகளை வ்யூஹம் வகுத்துக் கொண்டு நமக்கு முன்புறம் செல்லட்டும். காந்தார சக சீன ஹூண தேசாதிபர் கள் ராஜகுப்தனை சந்திரகுப்தனுக்கு அங்க ரக்ஷகர்களாக வரட் டும். குலூதபதி சித்திரவர்மனும் மலயபதி ஸிம்ஹநாதனும், குமாரனை மலயகேதுவின் பக்கங்களில் வரட்டும். காச்மீரபதி புஷ்கராக்ஷன் குமாரனுடைய முன் பக்கத்திலும், சிந்துபதி ஸிந்து ஷேணன் பின்புறத்திலுமாக வரட்டும். பாரசீக மேகநாதனும் மற்றவர்களும் சத்ருக்களின் கோட்டைகளையும் அரண்களையும் பிடித்துக் கொண்டும் ஸேனைகளுக்கு வேண்டிய சாமான்களை யுதவி யும் செல்லட்டும். நமது மாதுலனை அங்காரவர்மன் பார்வதேயர் களின் ஸேனையில் பாதியை இங்கு நிறுத்திக்கொண்டு இப்பட்டண த்தைப் பாதுகாத்தும் உலூகனென்ற மந்திரியுடன் அந்தப்புரம் பட்டணம் இவற்றின் யோக க்ஷேமங்களை யடிக்கடி நமக்கு எழுதி யனுபபிக்கொண்டும் இங்கேயே இருக்கட்டும். நீ என்னுடன் கூடவே இருக்கவேண்டியது. இப்பொழுது ஈசானிய திக்கில் தூக்கப்பட்டிருக்கும் நமது ஸேநா துவஜமானது அகநாசினீ நதி தீரத்தில் ஸ்தாபிக்கப்படட்டும்'' என்பதாக ஆக்ஞாபித்தான்.

விரோசனனும் ராஜாக்ஞையைக் கைக்கொண்டு அதே பிரகா ரம் சேகரன் முதலியவர்களுக்கும் சிற்றரசர்களுக்கும் கட்டளையிட அவர்களும் தத்தமது ஸேனைகளை பிரயாணத்திற்கு ஸித்தமாகும் படி நியமித்தார்கள். அச்சமயத்தில் தண்ட யாத்திரையின் நிமித் தம் பிரயாணத்தைக் குறிப்பிடும் பேரீ வாத்யங்களின் சப்தம் திக்கு களை யளாவிற்று. அச்சப்தம் கேட்ட சாணக்யன் சந்திரகுப்தனைப பார்த்து "பர்வதேசன் மலயகேதுவிடம் நாமனுப்பிய கடிதங்கண்டு இது நமது மனத்தைப் பரிசோதிக்க வேண்டியென்பதறிந்து திரு ப்பியனுப்பாது மெத்த லாபமடைந்து விட்டவன் போல் உத்ஸாகத் துடன் ஸேனைகள் பிரயாணப் படும்படி பேரிகைகளை முழக்குவ தால் நாம் செய்த வுபகாரம் நன்றியற்ற ரோயாளிக் குதவிய ஸஞ் சீவி மருந்தைப் போலாயிற்று. நமது உத்தேச காரியம முடிந்த தும் அர்த்த ராச்சியம் தர வேண்டுமென்ற சொல் ஏற்படும். நல்ல

தாகட்டும். அப்பொழுது உசிதம் போல் நடந்து கொள்ளலாம்" என்றுரைத்து நித்திரை செய்தான். சந்திரகுப்தனும் ஸேவகர்களால் தயாரிக்கப்பட்ட பஞ்சணையில் துயின்று இரவைக் கழித்தான்.

அப்பொழுது தருண தமால கதலிகா சமூஹங்களாலும் சமுத்திரத்தில் வீசும் அலைகளின் தண்ணீர்த் திவலைகளாலும் சீதளமாயிருக்கும் பச்சிமாசல வீதியைச் சந்திரனாச்ரயித்தான். சந்திரகுப்தனின் ஹிருதய துக்கம் போல் இருளும் மெள்ள மெள்ள விலகிக்கொண்டிருந்தது. 'இரவு முழுதும் பாணப் பிரயோகம் செய்ததால் மெத்த சிரமம் அடைந்திருக்கும் மன்மதனுடைய நிச்வாஸம் போல் உஷக்காலத்தின் குளிர்காற்றுக்கள் எல்லாப் பக்கங்களிலும் வீசின. மேற்குத் திக்காகிற ஸ்திரீயினால் கேளி கிருஹத்தில் பூசப்பட்ட குங்குமபங்கத்தினால் கூடியவன் போல் ராஜீவ பர்ந்தவன் அருணகாந்தியுடன்

சந்திரகுப்தன் சயனம் விட்டெழுந்து இரு பிராமணர்களையும் கன்றுடன் கூடிய பசுவையும் தரிசனம் செய்து ஸ்நாநாதிகளை முடித்து அலங்கிருதனானன். அதற்குள் பர்வதேசனு மெழுந்து ஸ்நாநாதிகளைமுடித்து அலங்கரித்துக்கொண்டு சுபலக்னத்தில் பிராமணர்களுக்கு மெத்த திரவியங்களையும் ரத்னங்களையும் யாத்திராதானமாகச் செய்து தனது பிரவிர்த்திக்கு இசையாதிருக்கும் அந்தப்புர ஸ்திரீகளை யுடன்படுத்தி தனது இஷ்டதேவதையை நமஸ்கரித்து புறப்பட்டு தேசாதிபதிகளுடன் சூழப்பட்டவனாக ஆஸ்தானம் வந்து சேர்ந்தான். அப்பொது காந்தார சக சீன ஹூண மன்னர்கள் சந்திரகுப்தனுக்கு வந்தனம் செய்து விசுவாசத்துடன் நெருங்கி நின்றார்கள். வந்திய மாகதர்கள் 'ஜய ஜய' வென்று புகழ்ந்து கொண்டிருந்தார்கள். அச்சமயம் அலங்கிருதனான சந்திரகுப்தனை ராஜபடர்கள் வணங்கி "மஹாஸ்வாமி! ராஜோத்தமரான சந்திரகுப்த ராஜரே! ஸேனைகளெல்லாம் ராஜாக்ஞையால் கௌட தேசத்திற்குப் பிரயாணமாகிச் சித்தமாயிருக்கின்றன. பிரபுவின் ஆக்ஞையால் தாங்கள் உட்காருவதற்கு "அளகிரி என்ற பட்டத்து யானை அலங்கரிக்கப்பட்டு காத்திருக்கிறது. சாணக்யருக்கு முத்துச் சிவிகையும் இறக்கி யிருக்கிறோம். மஹா ராஜரும் அவர்

குமாரருடன் தங்களை யெதிர்பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். மன்னர்களும் காத்திருக்கிறார்கள். விஜயம் செய்யலாம்" என்று விக்ஞாபித்தார்கள்.

சந்திரகுப்தனும் இஷ்ட தேவதையைத் தியானித்து சாணக்யரை நமஸ்கரித்து அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்று முத்துச் சிவிகையில் அவரை யுட்கார்த்தி, அவரைப் பிரதக்ஷிணமாகச் சுற்றி வந்து யானையின் மீதேறினான். மலயகேதுவும் மற்றொரு யானைமீதேறினான். சேனாஸமேதர்களாக சந்திர சூரியர் போல் விளங்கும் சந்திரகுப்த மலயகேது, இருவர்களும் இருபுறத்திலும் அனுஸரித்து வருவதால் சாணக்யன் சந்திரசூரியர்களுடன் கூடிய மகாமேருமலை போல் விளங்கினான். விரோசனனும் யானை யேறி ஸேனைகளுடன் பருவதேசனை யனுஸரித்து வந்தான். அப்பொழுது பதினெட்டு வாத்யங்களும் முழங்கின அச்சமயம் சம்பிரமத்துடன் நடக்கும் யானைக்கூட்டத்தினாலும், விரிக்கப்பட்ட குடைகளின் சமூகத்தாலும், குதிகுதிக்கும் துரகங்களின் வரிசையாலும், சலித்துக்கொண்டிருக்கும் சாமரங்களாலும், உன்னதங்களா யிருக்கும் துவஜபதாகங்களாலும், பூமண்டலமெல்லாம் துரக மயமானதுபோலும், திக்பாகங்கள் குஞ்சரமயமானது போலும், அந்தரிக்ஷம் குடைமயமானது போலும், நபோமண்டலம் துவஜ பதாக மயமானது போலும், பிரஜை ஸமூஹமெல்லாம் பூபால மயமானது போலும், சூரியவெளிச்சமெல்லாம் ஆபரண காந்தி மயமாயும் மாருதங்கள் மதோதக கந்த மயமாகவுமானது போலும் உலகெலாம் ஜயசப்தமயமானது போலும் தோன்றின. பிரளய கால மேகம் சப்திப்பது போலும் மந்தர பருவதத்தால் கடையப்பெற்ற சமுத்ர கோஷம்போலும் முழங்கிக் கொண்டிருக்கும் பிரயாணபேரிகை சப்தத்தால் அஷ்ட குலாசலங்களின் குகைகள் நடுவினின்றும் பிரதி ஒலி ஒலித்தன. இவ்விதம் பருவதராஜனுடைய ஸேனைகள் அகநாசினீ என்ற நதிக்கரையில் அழகிய வனமத்தியில் இறங்கிய ஹிமோத்கிரி சிகரங்கள் போல் உன்னதங்களாயிருக்கும் சுவர்ண கலசங்களினால் விளங்கிக் கொண்டிருக்கும் கூடாரவரிசைகளில் அரசர்கள் எல்லோரும் இறங்கி விசிரமித்துக்கொண்டிருக்க, சத்துரு பயங்கரனான பர்வதேசனுக்கு

அச்சமீப தேசங்களிலுள்ள மன்னர்கள் பயபக்தி டன் தமது சிரோபூஷணமாகும் கிரீடம் பர்வதேசனின் பாதத்தில் படியும்படி நமஸ்கரித்து திரவியங்களும் ஸ்வர்னங்களும் ரத்னங் களுமாகக் கப்பங்களை யொப்பிவித்துக்கொண் டிருந்தார்கள்.

---

## பதின்மூன்றாவது அத்தியாயம்.

# யுத்த ஆரம்பம்.

பிறகு பர்வதேசன்ஸேனையிலுள்ள வேவுகாரர் சத்துருக்களின் கூடசாரர்களை வேஷ பாஷைகளின் வித்தியாஸங்களால் அறிந்து கட்டியிழுத்துச் சென்று சந்திரகுப்தனிடம் ஒப்புவித்தார்கள். சந்தி ரகுப்தனும் அவர்களைப்பார்த்து "நீங்கள் உயிருடன் திரும்பிச் செல் லவேண்டுமானால் எத்தேசத்தவர்கள் என்பதைத் தெரிவியுங்கள்" என, அவர்கள் "ஸ்வாமி! அபயம் தந்தால் சொல்லுகிறோம். நாங்கள் அமாத்ய ராக்ஷஸனால் அனுப்பப்பட்ட பாடலீபுரத்திய கூடசாரர் கள். எல்லா தேசங்களும் சென்று விசேஷங்களை அறிந்து வரும் வழியில் இங்கு இறங்கியிருக்கும் ஸேனைகளின் விசேஷம் அறியும் வண்ணம் அவர்களுடன் மாறுவேடத்துடன் கலந்திருந்தோம்" என்றார்கள்.

அது கேட்டு சந்திரகுப்தன் தன் ஸமீபமுள்ள தூதர்களை நோக்கி, "இவர்களுக்கு நமது ஸேனை முழுவதும் காண்பித்துச் சவுக்கினால் அடித்துத் துரத்தி விடுங்கள் என்றான். அவர்களும் அப் படியே செய்தார்கள். பாடலீபுரத்திய தூதர்களும் இம்மட்டும் பிழைத்தோமென்று அடுத்த வனத்தில் கட்டியிருந்த தமது குதி ரைகளில் ஏறிக்கொண்டு தம் தேசம் நோக்கிச் செல்லலாயினர். இங்கு பருவதராஜன் ஸேனைகளும் கௌட தேசத்தை வியாபித்துக் கொண்டிருந்தன.

அச்சமயம் ராக்ஷஸன் பாடலீபுரத்தில் உத்பாதங்களுண்டா வது கண்டு "இதென்ன விபரீதம்!" என்று யோசித்துக்கொண்டிரு க்கும்போது ஓர் கூடசாரன் ஓடி வந்து "ஸ்வாமீ! அமாத்யரே! நமது தேசத்தின் மலைநாட்டு ஜனங்கள் மிலேச்சர்களின் உபத்ரவம் தாங்காது ஊரை விட்டு ஓடிப் போய்விட்டார்களாம்" என்றான்.

அதற்கு ராக்ஷஸன் "நாம் துஷ்டர்களான பாளையக்காரர்களு க்கு ஒன்றிரண்டு கிராமங்களையேனும் ஜீவனத்திற்கு உதவித் தாராத தால் பிழைப்பற்று அவர்கள் இவ்விதம் செய்திருக்கலாம், அவர் கள் வயிறு வளர்க்குமாறு இரண்டொரு கிராமங்களைக் கொடுத்து உதவும்படி அங்குள்ள கணக்கர்களிடம் நாம் கட்டளை யிட்டதாகச் சொல்லுங்கள்" என்றான்.

மறுநாள் மற்றொரு சாரன் ஓடிவந்து "ஸ்வாமீ, அமாத்யரே! நமது தலைக்கட்டிலுள்ள எட்டு துர்க்கங்களைப் பாரசீகர்களின் ஸேனை வசப்படுத்திக்கொண்டதாக இவனுரைத்தான்" என்று ஒருதூதனைக் காண்பித்தான். அதற்கு ராக்ஷஸன், "இதென்னடா இது? ஒன்றோ டொன்று இவ்விதமாகுமோ? யாரோ காவாலிகள் பிறப்பித்த வர்த்த

என்றான்.

அன்று மாலையில் ஒரு தூதன் ஓடி வந்து "ஸ்வாமீ,! அமாத் யரே! காசப்ரஸ்தத்திலிருக்கும் நமது குதிரைப் படைக்கும், சக ஸேனைகளுக்கும் கடும் யுத்தம் நடந்து நமது அசுவங்கள் அனேக மாய் மடிந்ததும் தவிர நமது பக்கத்திய குதிரை வீரனை ராமசிங் கனும் இறந்தானும்.அவன் பெண்டு பிள்ளைகளையும் சிறைப்பிடித்தா ர்களாம். அக்காசப்பிரஸ்தமும் அவர்கள் வசமாயிற் றென்று அவ்வி டத்திய அரிகாரன் எழுதி யனுப்பிய கடிதம் இது" என்றான்.

அதைப் படித்து ராக்ஷஸன் தனக்குள் ஆதங்கம் அடைந்து சக ஸேனையாவது? பாரசீகர் படையாவது? வெகு தூரத்திலுள்ள இவர் கள் இங்கு வரக் காரணமென்ன? என்ன விபரீத காலமோ வென்று இரவு முழுதும் தூக்கமற்று காலையில் வெளியி லெழுந்து வரும் போது, அங்கு காத்திருந்த தூதன் "ஸ்வாமீ! கிரவுஞ்சப்ரஸ்தம் என்ற அரணைக் காத்துக்கொண்டிருந்த லக்ஷம் பதாதிகளுக்கு நாயு கனை கிருஷ்ண சிங்கன் என்பவன் தனக்கு நான்கு மாத சம்பளம் செல்ல வில்லை யென்ற கோபத்தால் ஸிந்துபதியின் குதிரைப் படை களைக் கண்டு யுத்தம் செய்யாததுடன் அனேக ஆயுதங்களால் நிரம் பியிருக்கும் அவ்வரணை யவர்கள் வசம் விட்டுக் கொடுத்து ஸேனை

களை விட்டு ஓடி விட்டானும். பக்கத்திய துர்க்கத்தி லிருந்தவர்கள் ஓட்டக ஆட்களிடம் அனுப்பிய கடிதம் இது" என்றான்.

ராக்ஷஸன் ஆச்சரியத்துடன் ஸுமதி யென்ற மந்திரியை வரவழைத்து ஏகாந்தத்தில் "ஐயா, மித்திரனே! கேள்விப்பட்டாயா? நமது தேசத்திற்கு ஏதோ துன்பம் ஏற்படும் போல் இருக்கிறதே! சக, பாரசிக, சிந்து பதிகளின் ஸேனைகள் நமது துர்க்கங்களையும் அரண்களையும் வசப்படுத்திக் கொண்டனவாம். வெகு தூர தேச மன்னர்களான இவர்கள் கட்டுப்பாட்டினால் பலிஷ்டர்களான நம்மீது படையெடுத்து வரும் காரணம் என்ன? இவர்கள் பர்வதேசனுக் கடங்கியவர்களாகையினால், அவனறியாமலும் அவனுத்திரவின்றியும் இவ்விதம் செய்திருப்பார்களாகில் அவர்களை இக்கணமே பிடித்து வரச்செய்து இழித்துத் தோரணமாகக் கட்டிவிடுவேன். பர்வதேசன் சம்மதத்தாலேயே இவ்விதம் செய்திருந்தால் கீழ்க்கடை நம்மால் உபகாரமடைந்திருக்கும் அவ்வரசன் நன்றியை மறந்து நமக்கிருக்கும் பலத்தையும் அறியாமல் இருப்பதால், அவனுக்கேதோ கேடுகால முண்டாயிருக்க வேண்டும். அல்லது தெய்வபலம் குன்றியிருக்க வேண்டும். இவ்விதம் பிரமாத முண்டாகும்படி பிரஜைகளை விசாரியாமை, தானியங்களுக் களவற்ற விலை யேற்றம், பக்ஷபாதம், மந்திரிகளற்ற துரைத்தனம், லஞ்சம் வாங்கும் அதிகாரிகள் முதலான குறைகளால் நமது ராஜ்யபாரம் கெட்டிருக்கவில்லையே. அரசாட்சிக்குக் குறைவு வராவண்ணம் ராஜபக்தியுள்ளவர்களை யாதரித்தும் ராஜ துரோகிகளை சிக்ஷித்தும் ஸேனைகளுக்குப் பொருத்த சம்பளங் கொடுத்தும் வருவதல்லாது பெரிய அதிகாரங்களில் கண்டவர்களை நியமித்தும், பிரஜைகளுக்கு நன்மையைக் குறைத்தும், கண்டவாறு சட்டதிட்டங்க ளுண்டாக்கியும், கொடுமையாகக் குற்றவாளிகளைத் தண்டித்தும் இவ்விதம் அநீதியாக ராச்சியபாரம் புரிந்தா லல்லவோ இதுவே சமயமென்று பர தேசத்திய மன்னர்கள் படையெடுத்து வந்து தகைவதற் கிடமுண்டாகும்? நான் பிராமண மந்திரியாக இருப்பதால் வருணாசிரம தர்மங்களில் வித்யால மேற்பட்டு அதனால் கலகம் விளையவில்லை. ராஜ நீதியறிந்தவர்களை யெதிர்த்து அவர்களுக்குள்ள பய விசுவாஸங்களைக் கெடுத்

தூக்கொண்டதுமில்லையே. எக்காரணத்தால் இச்சமயம் சத்துருக்கள் தண்டெடுத்து வருகிறார்களென்பதைத் தெரிவி”யென்றான்.

அதற்கு ஸுமதியும் “ஸ்வாமீ! அமாத்யாரே! தாங்கள் உரைத்து வந்ததெல்லாம் சரியே. நமது ராஜ்யம் செழித்து அரசர்கள் ஸேனாபலமும் திரவியபலமும் மெத்த வுள்ளவர்களாகையால் சத்துருக்கள் எட்டிப்பார்க்கவும் முடியாது. என்றாலும், சத்துருக்களை ஸ்வஜனங்கள் ஆசிரியத்தால் இவ்விதம் நேரிடுவதுண்டு. எப்படியெனில், சிறையினின்று விடுபட்டு அன்ன ஸத்திராதிகாரத்தி லிருந்த மௌரிய புத்திரனை சந்திரகுப்தன் நந்தர்கள் மீது மாற்சரியங்கொண்டு, சொல்லாது ஓடிய பின், இசமாசாரம் வந்திருப்பதால் அவன் சத்துருக்களை ஆசிரியித்து இருக்கலாம். இதுவே ஸ்வஜனவிரோதத்தால் நேரிடும் தோஷம். அதல்லாது அதற்கு முந்தி சத்திரத்தில்வந்திருந்த பிராமணனை அவமதித்ததும் தேஜஸ்வியான அப்பிராமணன் கொடிய சபதமிட்டுச் சென்றதும் உடனே உத்யாதங்களுண்டானதும் அறிவோம். பிராமண தேஜஸானது க்ஷத்திரிய தேஜஸை வென்று விடுமென்பது புராண ப்ரஸித்தம். ஆகையால் வலியோர்களிடம் பகையென்ற தோஷம் ஏற்பட்டது. பின்னும் பிரஜைகளுக்கு ஸம்மதனை மௌரியனையும் அவன் புத்திரர்களையும் அகாரணமாய் வதைத்ததுவும் அனுசித காரியம். இவ்வாறு ப்ரபலமான மூன்று தோஷங்களால் சகலபலமும் நாம் குன்றி சத்துருக்கள் தண்டெடுத்து வரவும் ஏற்பட்டது” என்றான்.

அதற்கு ராக்ஷஸன் “ஐயா சுமதியே! ‘விதியை யனுஸரிக்கும் மதி’. ஸம்பத்திற்கும் ஆபத்திற்கும் தெய்வபலமே காரணமாகும். அதை யாரால் மீற முடியும்”? என்று கூறிச் சுமதியை அனுப்பிவிட்டுத் தான் ஸ்நானம் செய்யுபோகிருஹம் சென்றான்.

மாலையில் ஒரு மாவுத்தன் ஓடி வந்து “ஸ்வாமீ! நேற்று புதன் கிழமை காசப்ரஸ்தத்திலிருக்கும் நமது மதகஜங்களைக் குலூதபதியின் படர்கள் நித்திரை செய்யும் மாவுத்தர்களைக் கொன்று யானைகள் முழுவதையும் பிடித்துச் சென்றார்கள். பயமடைந்து உயிர் தப்பி யோடி வந்தேன்” என்றான். அதற்கு ராக்ஷஸன்

"நல்லது. சத்துருக்களை வென்று யானைகளை மீட்டிவிடுவோம். போ" என்றனுப்பினான்.

பிறகு தனக்குள் "முன் மௌரியனால் பிரஸித்தியடைந்த அதிகாரிகள் இன்னம் உயர்பதவி கிடைக்குமென்று, சந்திரகுப்தனைத் தூண்டி விட்டு 'நாங்கள் ஸஹாயம் செய்கிறோம்' என்று உரைத்தனுப்பி யிருந்தால் சந்திரகுப்தனும் அதனால் ஜயமடையலாம். என்றெண்ணிப் பருவதேசனை யுடன்படுத்தி அழைத்து வரக்கூடும். அரசர்களுக்கு லாபத்தில் திருஷ்டி யேற்பட்டு விட்டால் சிநேகத்தையும், சத்தியத்தையும், தாக்ஷண்யத்தையும் துறந்து விடுவார்கள். ஆனால் நமக்கு நிச்சய சமாசாரம் தெரியாததால் ஒன்றும் தீர்மானிக்க முடியவில்லை. இதற்குப் பரிகாரமும் இப்பொழுதே செய்வதும் நன்மை யில்லை" என்று யோசித்துக்கொண் டிருக்கும் போதே, ஓர் தூதனோடி வந்து "ஸ்வாமி! அமாத்யரே! காந்தார பதியின் சேனைகள் நமது ஸரயூ நதிக்கரையில் ஸஞ்சாரமாயிருக்கும் ஒருஹத்தி லுள்ள லக்ஷம் கோக்களைப் பிடித்துக்கொண்டு இடையர்களையும் படுகாயப் படுத்திச் சென்றார்களாம். இதையறிவிக்க வந்த தூதன் இவன்" என்றான். ராக்ஷஸன் அதுகேட்டு "எல்லாம் தெரிந்த விஷயம் தான். போங்கள்" என்றனுப்பி விட்டு "ராஜகாரியமோ பிரபலமா யிருக்கிறது. இதன் நிச்சயமும் காரணமும் அறியாமல் பிரபுக்களுக் கறிவிக்கக் கூடாது" என்றெண்ணிப் பேசாது இருந்தான்.

மறுநாள் தூதன் ஒருவன் வந்து "ஸ்வாமீ! மகதபதி ஸேனைகள் நமது ஷண்பகாவதியைத் தகைந்து யுத்தம் செய்து சாத்யப் படாமல், யுத்தம் செய்வதுபோல் காண்பித்து சுரங்கமிட்டு பிராகாரத்தை வீழ்த்தி உள் நுழைந்து சூறையிடும்போது அங்கிருந்த ரத்நங்களை அபஹரித்துச் சென்றார்கள்" என்றான். அதுகேட்டு ராக்ஷஸன், "கீழ்க்கடை நம்மால் ஜயிக்கப்பட்டு உத்தர தேசத்து மன்னரை யடைக்கலம் புகுந்திருக்கும் மகதபதி மர்மம் அறிந்தவனானதால் இவ்விதம் செய்திருக்கிறான். அவன் தேசத்தை நாம் வசப்படுத்திக் கொண்டும் "மகதபதி" யென்ற பேர் தப்பவில்லைபோலும்! இருக்கட்டும். அவனுக்கு ஞாதியான ருத்திரவர்மனை யனுப்பி அவனைப் பிடித்துவரச் சொல்கிறேன் என்றான்.

இவ்விதம் சொல்லி முடிக்கும் முன் மற்றொருவன் ஓடி வந்து "ஸ்வாமீ! நமது ஸ்ரீங்கார பாளையத்தின் அதிபதியும் ராஜ பிரேஜாத்ப ன்னனுமான ஸௌரம்பன் ஹூணர்களிடம் அரண்களை யொப்பு வித்து அவர்களாலேயே அவ்விடத்திற்கு அதிகாரியாய் நியமிக்கப் பட்டானும். ஸ்வஜன மென்று ரக்ஷித்ததற்கு ஸ்வாமித்துரோகம் புரிந்தான்" என்றான். அதற்கு ராக்ஷஸன்" சந்திரகுப்தனுக்கு ஸௌரம்பன் மைத்துனனானதால் இவ்விதம் செய்திருப்பான். சந்திர குப்தனின் தாயும் மனைவியும் அவனிடமே யிருக்கலாம். நல்லது இருக்கட்டும். எங்கு ஓடிவிடுவான்? பார்ப்போம்" என்று பதில் சொன்னான்.

சற்று நேரத்திற்குள் இரண்டு குதிரை வீரர்கள் ஆயுதமற்று உலர்ந்த நெஞ்சுடன் ஓடி வந்து கோட்டை வாயிலிலுள்ள ஸேவகர் கள் தடுக்க அவர்களுக்குக் கையால் "இங்குள்ளவர்கள் தாம்" என்று ஜாடை காட்டி ஓடோடி வந்து ராக்ஷஸன் முன் குதிரை விட்டுக் குதித்து "தண்ணீர்" என்று கூவி மூர்ச்சையடைந்தார்கள். அவர்களுக்குத் தூதர்களைக் கொண்டு மூர்ச்சை தெளிவித்துத் தாக சாந்தி செய்து ஏகாந்தத்தில் யாது விசேஷமென்று ராக்ஷஸன் கேட்க "நாங்கள் சத்துருக்கள் தண்டிலிருந்து புறப்பட்டுப் பன்னிர ண்டு நாளாயின. அன்னமில்லை. தண்ணீரில்லை. அஹோராத்திரம் தூக்கமின்றிப் பிரயாணம் செய்து ஓடி வந்தோம். உயிருடன் வந் தது சன்னிதானத்தின் அன்ன மகிமை" யென்றார்கள்.

அதற்கு ராக்ஷஸன் "சத்துருக்களாவது, தண்டெடுக்கவா வது? ஏன் உங்களுக்கு இவ்வளவு பரபரப்பு? விவரமாகச் சொல்லு ங்கள்" என, அவர்கள் "ஸ்வாமீ! சத்யமாக உரைக்கிறோம். பர்வதே சன் தனக் கடங்கிய அனேக சிற்றரசர்களுடன் அளவற்ற ஸேனை யோடு நம் மீது தண்டெடுத்து வந்து அகநாசினீ தீரத்தில் இறங்கி யிருக்கிறான். அவனைச் சேர்ந்த துஷ்டமன்னர்களும் சிற்றரசர்களும் நமது கோட்டைகள் கொத்தளங்கள் கிராமங்கள் அரண்கள் இவை களை நிமிஷத்திற்கு நிமிஷம் பிடித்துக்கொண்டு வருகிறார்கள். நாங் கள் கண்ணாரக் கண்ட விஷயம் இது" என்றார்கள்.

ராக்ஷஸன் மறுபடி "தூதர்களே! பர்வதேசனுக்கும் லம்பாகபதிக்கும் துவேஷம் மீறி இருவர்களும் யுத்தத்திற்குச் சித்தமாயிருக்கிறார்கள்" என்று நாம் கேள்விப்பட்டது பொய்யோ?" வென்ன, அவர்கள் "ஸ்வாமீ! அது மெய்தான். பர்வதேசன் யுத்தத்திற்குச் செல்லுமாறு லம்பாக தேசம் நோக்கி ஈசானிய பாகத்தில் யுத்தக் கொடியைத் தூக்கியிருந்தான். இச்சமயம் தலையவிழ்த்து விட்டிருக்கும் பிராமணன் ஒருவன், மௌரிய புத்திரனை சந்திரகுப்தனுடன் சாஹாரி நகரம் வந்து பர்வதேசனால் மரியாதையடைந்து விடுதியில் தங்கியிருக்கும்போது ஒருநாள் பர்வதேசனின் நியோகி யொருவன் சந்திரகுப்தனைக் கண்டுபேசி அங்கிருந்தே காமரூபதேசம் சென்று சில நாளில் திரும்பி வந்ததும் காமரூபாதிபதி லம்பாக தேசத்தின் மீது தண்டெடுத்துச் சென்றானென்று வர்த்தமானம் உண்டாயிற்று. நியோகியானவன் காமரூபதேசமிருந்து வந்தவுடன் பர்வதேசன், சாணக்யனென்னும் தலை அவிழ்த்துவிட்டிருக்கும் பிராமணனுக்கு அனேகமாய் உபசாரம் செய்து அனுப்பி திரும்ப மலயகேதுவை சந்திரகுப்தனிடம் அனுப்ப, மலயகேதுவும் சந்திரகுப்தனுடன் வார்த்தையாடிச் சென்றான். அம்மறுநாளே ஈசானியத்தில் தூக்கப்பட்ட யுத்தக் கொடியானது நம் தேசத்தின் பக்கமாய் நாட்டப்பட்டு பேரிகைகள் முழங்கின. உடனே பருவதேசன் சகல சிற்றரசர்களுடனும் மலயகேது, விரோசனன், சாணக்யன், சந்திரகுப்தன் முதலிய எல்லோருடனும் புறப்பட்டு அகநாசினீ தீரம் வந்திறங்கி விட்டான். நாங்கள் மாறுவேடத்துடனிருந்தும், அவ்வரசனின் வேவுகாரர்களறிந்து சந்திரகுப்தனிடம் அழைத்துச் சென்றதும், அவன் மெத்த கருணையுள்ளவனாதலால் "ஸேனை முழுவதையும் இவர்களுக்குக்காட்டி சவுக்கினாலடித்துத் துரத்தி விடுங்கள்" என்றான். அத்தூதர்கள் இரவும் பகலுமாக ஏழு நாட்கள் வரை ஸேனைகளைச் சுற்றிக்காண்பித்து அடித்துத் துரத்தி விட்டார்கள். சத்துரு ஸேனைகளின் விஸ்தீரணத்தை நினைத்தால் நமது தேசத்திற்குப் பெரும் ஆபத்து நேர்ந்திருக்கிறது என்பதில் ஸந்தேகமில்லை. ஸேனைகளின் விவரமாவது பர்வதேசனுக் கடங்கிய அபசர்களில் குலூதபதி சித்திரவர்மன் ஸேனை மூன்று லக்ஷம். மலயபதி சிம்மநாதன் ஸேனை இரண்டு லக்ஷம். காச்மீரபதி புஷ்கராக்ஷல

சேனை நான்கு லக்ஷம். சிந்துபதி சிந்துஷேணனுடையது மூன்று லக்ஷம். பாரசிகபதி மேகநாதனின் ஸேனை நான்கு லக்ஷம். மகந்துனுடையது அரை லக்ஷம். காந்தாரபதி யுடையது நான்கு லக்ஷம். சகனுடையது இரண்டு லக்ஷம். சீனர்களுடையது ஒரு லக்ஷம். ஹூணர் ஸேனை ஒரு லக்ஷம். கிராதனது மூன்று லக்ஷம். பர்வதேயர்கள் ஸேனை சேகரனதுள்பட ஒன்பது லக்ஷம். இவ்வளவு ஸேனைகளுடன் பர்வதேசன் பாடலீபுரம் நோக்கி வருகிறான்- இது சத்தியம்" என்றார்கள்.

## பதினைந்தாவது அத்தியாயம்.

# ராக்ஷஸனின் படை வகுப்பு.

---

தூதர்க ளிவ்வாறு உரைத்தது கேட்ட ராக்ஷஸன் தன் மனதில் 'அடடா! மௌரியர்களைக் கொன்று தாங்கள் அகப்படவெண்ணி யிருந்த நந்தர்களுக்கு விதிவசத்தால் சந்திரகுப்தனால் சத்துரு சேஷ முண்டாயிற்று. அத்துடன் அக்கினி வாயு சஹாயகன் ஆவதுபோல தேஜஸ்வியான பிராமணன் சகாயம் கிடைத்து பர்வத ராஜனை யுடன்படுத்தி நந்தர்கள்மீது தண்டெடுத்துவருகிறானென்றால் இது தெய்வ யத்தினமே யன்றி மனித ப்ரயத்தினம் சற்று மில்லை யென்றே தோன்றுகிறது. தூதர்கள் உரைத்த சமாசாரங்களைக் கவனித்துப் பார்த்தால் சாணக்யன் பர்வதேசன் தனக்கு உதவியாக வரும் நிமித்தம் லம்பாக பதியிடம் நடஸ்தனு யிருந்த காமரூபாதிபதிக்கு லம்பாக மன்னனிடம் துவேஷ முண்டாக்கி, அவனை யுத்தத்திற்கு அனுப்பிவிட்டு மெத்த ஆசை வார்த்தைகளையுரைத்துப் பர்வதேசனை நம்மீது தண்டெடுத்து வரச் செய்திருக்கிறான் என்று தோன்றுகிறது. இதெல்லாம் சாணக்யனுடைய சாகஸத்தாலேயே நடந்திருப்பதால் நமது ஸுமதி சொன்னது போல் நந்தர்களுக்கு வலியோரிடம் விரோதமேற்பட்டது போல் ஆயிற்று. இதைக்காட்டிலும் பதின்மடங்கு பிரயத்தனங்களை நான் எனது புத்திசக்தி பராக்ரமங்களால்செய்தும் மேற்கடை நந்தர்களின் அதிருஷ்டவசம் எப்படி யிருக்கிறதோ' என்று முஹூர்த்த காலம்

ஆலோசித்து "அடா! சாரர்களே! இச்சங்கதிகளை யெல்லாம் பிரபுக்களான நந்தர்கள் சன்னிதானத்தில் விவரமாய் விக்ஞாபியுங்கள்" என்றனுப்பிவிட்டு ராயஸக்காரர்களை வரவழைத்து முதலில் தக்ஷிண தேசத்திலிருக்கும் ஸேனைகளை விரைவில் வரும்படிக் கடிதமெழுதியனுப்பிப் பிறகு தசார்ண தேசத்ததிபனுக்கும் சூரஸேனாதிபதிக்கும் எழுதச் சொன்னான். அவ்விஷயம் வருமாறு:—

"முதல் உங்களுக்கும் பர்வதேசனுக்கும் மனஸ்தாபமுண்டாகி யுத்தமேற்படும் சமயத்தில், நாம் மத்யஸ்தமா யிருந்து கலஹத்தை யடக்கி பர்வதேசனுக்குநன்மை புரிந்ததற்குப்பிரதியுபகாரமாக நம் மீது பர்வதேசன் தண்டெடுத்து வந்து கொண்டிருக்கிறான். நன்றியற்ற அப்புருவதேசனைத் திரும்பவிடாது ஸேனைகளுடன் மடக்கி இவ்விடம் யுத்தம் செய்கிறோம். நீங்கள் எனக்கு மித்திரர்களென்பது சத்யமானால் உடனே பருவதராச்சியத்தின் மீது தண்டெடுத்துச் சென்று அங்கிருந்து ஸேனைகள் இவ்விடம் வராது யுத்தம் செய்து சாஹஸ்ரீ நகரத்தை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டால் அத்தேசகோசங்களெல்லாம் நீங்களே யனுபவிக்கும் உரிமை பெறுவீர்கள்.

இங்ஙனம்
அமாத்யராக்ஷஸன்."

என்று கையெழுத்திட்டுக் குதிரை வீரர்களிடம் அக்கடிதங்களைக் கொடுத்து அவர்களுக்கு ஒரு வருஷ சம்பளத்தை இனாமாகத் தந்து "சீக்கிரம் கடிதத்தைச் சேர்ப்பித்து அவர்கள் பருவதராச்சியத்திற்குப் படை யெடுத்துச் செல்லும் வரை அங்கிருந்து பார்த்துக்கொண்டு வந்து நமக்கு அறிவியுங்கள்" என்றனுப்பினான்.

பிறகு அவ்விடமிருந்து நந்தர்கள் ஸமீபம் சென்று தனதுஉத்திரவுப்படி சமாசாரங்கள் சொல்லிக்கொண் டிருக்கும் தூதர்களை "இன்னொரு முறை நன்றாய் தெரிவியுங்கள்" என்றுரைத்து, நந்தர்கள் நன்றாய் விஷயத்தைக் கவனித்தவுடன், "அரசர்களே! நமது அன்ன ஸத்திரம் விட்டோடின மௌரியபுத்திரனை சந்திரகுப்தன் பர்வதேசனைக் கண்டு அவனை யுடன்படுத்தி நம்மீது தண்டெடுத்து வருகிறானாம்! அவனுக்கு அனேகம் தேசாதிபதிகள் ஸேனா ஸமேதராக சொற்படி நடக்கிறார்களாம்! காராகிருஹ மிருந்து விடுபட்ட

சந்திரகுப்தனை உபாயமாய் அன்ன ஸத்திர அதிகாரத்தில் ஏற்படுத்தியும் அவன் அங்கில்லாது ஓடிவிட்டான். அவனுக்குத் தகுந்த பிராமணின் சகாயமும் கிடைத்திருக்கிறது. நடந்துபோன விஷயத்தில் யோசித்துப் பயனில்லை. நம்மீது வரும் சத்துருக்களை நமது ஸேனைகளை எதிராக அனுப்பி நிக்ரஹிக்க வேண்டுமல்லாது உபேக்ஷை செய்யக்கூடாது. இப்போதைக்கு நமது சில கோட்டைகளும் அரண்களும் சத்துருக்கள் வசமாயினவாம். அதனால் ஸ்வதேச ஜனங்கள் மெத்த பீதியை யடைந்திருக்கிறார்கள். சந்திரகுப்தன் சகல ஆசையையும் அறந்துவிட்டுப் போனவனானதால் 'நமக்கென்னவானாலும் நமது சத்துருக்களும் ஞாதிகளுமானவர்களின் தேசம் கொள்ளைபோய் அவர்களும் நம்மைப் போலானால் சரி' யென்று அவன் எண்ணியிருக்கக்கூடும். பருவதேசனை யுடன்படுத்தும் நிமித்தம் எவ்வளவு திரவியம் ராஜ்யம் கொடுப்பதாக உறுதி கூறி அழைத்துவந்திருக்கிறானோ தெரியவில்லை. இதனால் அசக்தர்கள் பேசும் சக்தியை நாம் பேசுவது கௌரவமன்று. தனஹீனனான பிராமணனின் வாக் சாதுரியத்தால் மயங்கி வந்திருக்கும் பருவதேசனை யேதோ உபாயத்தினால் இன்னொருவரை யவன்மீது ஏவிப் பருவதேசனை ஜயித்து விடுவோ மென்றால், நடுவழி வந்து விட்டானாகையால் அவ்வாறு செய்யப்போதிய சாவகாசம் இல்லை. நாம் செய்யவேண்டியதென்னவென்றால் சத்துருக்கள் ஸமீபம் வரும் முன் நமது ஸேனைகளை எதிராக அனுப்பி யுத்தம் செய்துகொண்டிருக்கச் செய்து ஸாம தானங்களால் பருவதேசனுக்கு உதவியாய் வந்திருக்கும் மன்னர்களை ஸேனைகளுடன் உதவி செய்யா வண்ணம் பேதித்துப் பருவதேசனைத் தண்டோபாயத்தால் நிக்ரஹித்தால், சந்திரகுப்தனும் கூட நஷ்டமாவான். இதுவே யோசனை" என்றுரைத்தான்.

அதற்கு நந்தர்கள் சந்தோஷித்து "ஐயா! அமாத்யரே! நமது அபிப்பிராயம் போலவே நீங்களும் சொன்னீர்கள். இவ்வித ஸமயங்களில் தேச காலங்க ளறிந்து காரியம் நடத்துவதில் உங்களுக்கு நிகர் ஒருவரு மில்லை யென்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம். தாங்கள் மந்திராலோசனை சொல்லும் மந்திரி மட்டும் அல்லர். அலைவும் சத்துருக்களால் துன்பம் யேற்பட்டு விட்டால் தாங்கள் யுத்தரங்கம் செல்வீர்களாயின் வைக்கோலில் அக்கி புகுந்தது போல ஸேஷம்

லக்ஷ சத்துருக்களையும் சற்றும் ஸம்சயமின்றி ஹதம் செய்துவிடுவீர்
கள் என்ற நம்பிக்கை எங்களுக்குண்டு. நீங்கள் உரைத்தவாறு சத்
துருக்களில் பேதமுண்டாக்கி சகாயமாய் வந்திருக்கிற மன்னர்கள்
பருவதேசன் மீது வெறுப்பாலோ கலகத்திலோ விலகிப் போய்
விட்டால் மீந்திருக்கும் பருவதேசன் ஸேனைகளையும் அவனையும்
விளையாட்டிலே நாங்கள் ஸம்ஹரித்து விடுகிறோம். அது கண்டு நீங்
கள் சந்தோஷிக்கப் போகிறீர்கள்" என்றுரைத்து ராக்ஷஸனை விலை
யற்ற பூஷணங்களால் அலங்கரித்துத் தாம்பூலம் அளித்து வேறிடம்
சென்றார்கள்.

ராக்ஷஸனும் ஏகாந்த கிருஹத்தி லுட்கார்ந்து "இந்த நகரத்தி
ற்கும் அரசர்களுக்கும் கிரஹ பலம் இப்பொழுது எவ்வித மிருக்கி
றதோ! புத்திமான்களான சோதிடரைக் கொண்டு தெரிந்து ஏதாயி
னும் சாந்திகள் செய்விக்க வேண்டும்" என்று சொல்லிக் கொண்டு
காயஸ்தக்காரர்களை வரும்படி சொல்லி யனுப்பினான். அவர்கள் வந்து
நமஸ்கரித்து உட்கார்ந்ததும் "ராஜசாஸன லிகிதர்காள்! எழுதி
அனுப்ப வேண்டிய ராஜ காரிய மிருக்கிறது. எழுதுங்கள்" என
அவர்களும் நல்லதென்று கடிதமெடுத்து இறகை மையில் தோய்த்
துப் பிடித்துக்கொண்டு "உத்திரவாகலாம்" என்றார்கள். இது நிற்க.

முன் சாணக்யனால் அனுப்பப்பட்டு "ஜீவஸித்தி" என்ற பெய
ருடன் க்ஷபணக (பௌத்த ஸந்யாஸி) வேஷந் தரித்து ராக்ஷஸனை
யாசிரியித்துக் கொண்டும், அப்போதைக் கப்போது சகல ராஜகாரி
யங்களையும் அறிந்துகொண்டு மிருந்திடும் வாத, வசிய, சோதிட, மந்
திர சாஸ்திரங்களில் மேதாவியான இந்துசர்மன், ராக்ஷஸன் ஏகாந்த
ஸ்தானத்திலிருந்து லிகிதர்களை வரவழைத்ததறிந்து, "ஏதோ விசே
ஷமிருக்கிறது" என்றறிந்து ராக்ஷஸ னிருக்குமிடம் அச்சமயம் வந்
து "வாசற் காப்போர்களுக்கு நான்வந்திருப்பதாக அறிவியுங்கள்"
என்று தன் கையிலுள்ள மயில் தோகையால் ஜாடை காட்டினான்.

அஃதறிந்த அத்துதர்களும் ராக்ஷஸனுக் கறிவித்து உத்திர
வின்பேரில் க்ஷபணகனை யுள்ளேவிட்டார்கள். உட்சென்ற ஜீவஸித்தி
யும் "தர்மிஷ்டர்களுக்கு சிரேயஸ்ஸு உண்டாகட்டும்" என்று வாழ்
த்தி உட்கார்ந்து கொண்டதும், அவனைப்பார்த்து ராக்ஷஸன், "ஐயா

க்ஷபணகரே! நினைத்ததுபோல் நல்ல ஸமயத்தில் வந்தீர்கள்" என்றான்.

அதற்கு ஜீவஸித்தியும் "பிரபுவான அமாத்யனே! சர்வ ஸங்கங்களை பரித்யாகம் செய்த பின் வனவாஸம் செய்ய வேண்டியவர்களான நாம், உங்களுடைய ஆதரவினால் உங்களிடம் மௌனம் விட்டு உங்களைச் சற்றும் பிரிந்திருக்க மாட்டாது சிரேயஸ்ஸையே அபேக்ஷித்துக் கொண்டிருக்கிறோம். நாலைந்து தினங்களாக நின் தரிசனமும் துர்லபமான பின்பு யாது பிரயோஜனத்திற்காக நாம் இங்கிருக்க வேண்டும்?" என்றான்.

அதற்கு அமாத்யன் "ஐயா, க்ஷபணகரே! ராஜ காரியங்கள் அதிகமாயிருப்பதால் உங்களை வரவழைக்க முடியாமல் போயிற்று. இப்பொழுது தாங்களாகவே வந்தது மெத்த நல்லதாயிற்று. ஒரு ப்ரச்நம் சொல்ல வேண்டும்" என்றான்.

க்ஷபணகனும் அவன் மனோபாவம் அறிந்து, ஸமயம் அறிவதில் மேதாவியானதால், கிரஹபலங்களைப் பார்ப்பதுபோல நடித்து, "ஐயா, அமாத்யரே! நீங்கள் கேட்ட ப்ரசினை ராஜ்யத்திற்கு ஆதங்கத்தையும் சத்துருக்களின் வரவையும் தெரிவிக்கிறது. இந்த லக்நத்திற்கு சத்துரு ஸ்தானத்திய கிரஹத்தைச் சத்துரு கிரஹம் பார்ப்பதினால் உங்கள் மீது தண்டெடுத்து வரும் சத்துருவானவன் உயிருடன் திரும்பிச் செல்ல மாட்டான். இதற்கு உன்னுடைய விரதமே சாக்ஷியாகும். உங்களுக்கு காரிய முடிவில் ஜயலாபம் என்று சொல்ல வேண்டும். பின்னும் புதனாதி பஞ்ச கிரஹங்கள் லக்நத்திற்கு பேத பலனைத் தருவனவாக இருப்பதால், சத்துருவுக்கு சகாயமாய் வந்திருப்பவர்கள் பேதத்திற் குட்படுவார்கள். அப்பொழுது தண்டோபாயத்தினால் சத்துருவும் ஸம்ஹரிக்கப் படுவான்" என்று உரைத்து கீழ்க்கடை சாணக்யர் சொன்ன வார்த்தையை நினைந்து இதுவே தக்க ஸமய மென்றறிந்து, "ஐயா, அமாத்யரே! நானுரைத்தது உங்கள் மனதிற் குறைத்தால் சத்துரு பாதை நிவர்த்திக்காக நதி தீரத்தில் ஜயசீலர்களான பிராமணர்களைக் கொண்டு இதே சுப லக்நத்தில் சத்துரு பலாயன ஜபத்தை ஆரம்பிக்கச்செய்தால் ஸர்வாநிஷ்ட சாந்தியாகும்" என்றான்.

ராக்ஷஸனும் "ஐயா க்ஷபணகரே! தாங்கள் சொன்னவை என் மனதிற் காயிற்று. சோதிடத்தில் தாங்கள் மகாசமர்த்தர். விரக்தியினால் எங்களை விடாது இவ்விடமே இருக்க வேண்டும். உங்களுக்கு ஏதேனும் ஆக வேண்டிய பிரயோஜன மிருந்தால் சொல்லுங்கள்" என்றான்.

அதற்கு க்ஷபணகன் "அமாத்யரே! லௌகிக பிரயோஜனத்தால் எங்களுக்காகவேண்டிய தென்ன விருக்கிறது? ஊருக்குவெளியில் பர்ணசாலை நியமித்து அங்கிருக்கச் சொன்னால் உங்கள் க்ஷேமத்தைக் கோரிக்கொண் டிருப்போம்" என்றுரைத்து "மாயாதாரமே" என்றுச்சரித்து இருகண்களையும இறுக மூடிக்கொண்டு தியானத்தில் இருப்பவன் போல் உட்கார்ந்து விட்டான்.

இஃதிவ்வாறிருக்க, அப்பொழுதே அமாத்ய ராக்ஷஸன் ஸேனாபதியான பாகுராயணனை வரவழைத்து, "ஐயா பாகுராயணனே! இப்போது பர்வதேசன் சந்திரகுப்தனுக்கு உதவியாக நந்தர்கள் மீது தண்டெடுத்து வருகிறான். இங்கு சில துர் நிமித்தங்கள் உண்டாவதால் அரிஷ்ட பரிகாரத்தின்பொருட்டுப் பிராமணர்களைக் கொண்டு சாந்தி செய்விப்பதுடன் விசேஷமாய் நதிதீரத்தில் ஜபசீலர்களான பிராமணர்களால் சத்துருக்கள் பலாயனம் செய்யும்படி ஜபங்கள் ஹோமங்கள் செய்து வருவதற்கு வேண்டிய சாமக்ரியைகளை யுதவிக் கொடுத்து ஜபசாலையும் ஏற்படுத்தி ஜபம் செய்யச் சொல்லு. இதே லக்கினத்தில் ஆரம்பிக்கப்பட வேண்டும். ராஜகாரியம் அதிகமானால் இந்நகர ரக்ஷணத்தை நீயே செய்ய வேண்டியிருக்கும்" என்றுரைத்து அவனை அனுப்பினான்.

அச்சமயம் இந்துசர்மன் என்ற சிஷ்யனொருவன் வைத்ய வேஷத்துடன் சித்தார்த்தகன் என்ற பெயருடன் பாகுராயணனை யனுஸரித்து, பிரீதிக்கு பாத்திரனா யிருந்ததால் அவன் இனி சாணக்யரின் காரியத்திற்கு அனுகூலமாய் உத்தர திக்கில் யுத்தத்திற்காக நந்தர்கள் இறங்குமிடத்திற்கு அதிதூரத்தில் "ஸரயூநதி தீரமே ஜபசாலைக் கேற்ற இடம்" என்று ஆலோசித்து, பாகுராயணனைப் பார்த்து "ஐயா ஸேனாபதியே! சத்துரு பலாயன ஜபம் செய்யும் விஷயத்தில் கங்கையும் ஸரயூ நதியும் சங்கமமாகும் இடமே ஜபிப்ப

தற்கு சீக்கிரம் பலனைக் கொடுக்கும் இடம் என்று நான் பெரியோர்கள் மூலம் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆதலால் அவ்விடமே நமது ஜப சாலைக்கு ஏற்ற இடம்" என்றான்.

இதே ஸமயம் மாஸோபவாஸி யென்ற பெயருடனும் முனி வேடத்துடனும் இந்துசர்மனின் சிஷ்யனொருவன் வீதியில் சென்று கொண்டிருக்க, அதுகண்டு சித்தார்த்தகன் "இதென்ன ஆச்சரியம்! இவர் இங்கு வரக் காரணமென்ன?" என்று சொல்லிக்கொண்டு தூரத்திலிருந்தே அவரை விழுந்து விழுந்து நமஸ்கரித்துக் கைகட்டிக் கொண்டு நின்றான்.

இது கண்டு பாகுராயணனும் "இதென்ன விசேஷம்? இவர் யார்? என்று கேட்டதும், சித்தார்த்தகனும்,"ஐயாவேனாதிபதியே! இவர் தான் மஸோபவாஸிகள் என்ற மஹா முனிவர். யாது காரணமாக இவ்விடம் வந்தாரோ? அதெல்லாம் கிடக்கட்டும். முந்தி எவ்விதமேனும் இவரை ஜபத்திற்கு ருத்விக்காக ஏற்படுத்திக் கொண்டால் காரியம் அனுகூலப் படுவதில் ஸந்தேக மில்லை" யென்றான்.

அதனைநம்பிப் பாகுராயணனும் அவரை மெத்த மரியாதையுடன் அழைத்து வந்து பலவிதமாக உபசாரத்துடன் சொல்லி அவரை ருத்விக்காக ஏற்படுத்தி, சித்தார்த்தகன் சொன்ன விடத்திலேயே ஜபசாலை உண்டாக்கி அம் மாஸோபவாஸிகள் சொன்ன பிராமணர்களையே வரவழைத்துக் கொடுத்து, ஜபங்கள் நடக்கும்படி ஏற்பாடு செய்து, வேண்டிய சாமக்ரிகைகளுக்கும் தக்க ஆள்களை நியமித்தான். அங்கு ருத்விக்காக ஏற்பட்ட மாஸோபவாஸியும் தனது நான்கு சிஷ்யர்களுடன் சாணக்யரின் வரவை எதிர் பார்த்துக் கொண்டும் ஜப ஹோமங்கள் செய்வது போல நடித்துக்கொண்டும் அப் பர்ணசாலையில் இருந்தான்.

இங்கு ராக்ஷஸனைப் பார்த்து ராயஸக்காரர்கள் "ஸ்வாமி! எழுதுவதற்கென்ன வுத்திரவு?" என்றுகேட்க, ராக்ஷஸன் அப்பொழுது ஸமீபத்தில் தியானத்தில் இருக்கும் க்ஷபணகனைப் பார்த்து அவனை வெளியில் போவென்பதற்கு தாக்ஷிண்யப்பட்டு "இவனோ விரக்தன். நமது ஆதரவினால் நம்மிடமன்றி சகலரிடமும் இவனுக்கு மௌன

விரதமானதாலும் லௌகிக விவகாரத்தால் இவனுக் காகவேண்டியது ஒன்றுமே யில்லை யானதாலும், இவனிருந்தால் பாதகமில்லையென்று நிச்சயித்து, "கேளுங்கள், மித்தர்களே! கூட மந்திரிகளிற் சிலர் நம்மிடம் சம்பளம் பெற்றுக் கொண்டு அன்னிய ராஜர்களிடம் வர்த்தகர்கள் போல் இருந்து அவர்களிடம் விசேஷ பிரீதியுள்ளவர்கள் போல நடந்து நமக்கு அடிக்கடி அங்குள்ள ராஜ்ய விசேஷங்களை அறிவிப்ப துண்டு. அவ்விதம் குலூத பதியிடமிருக்கும் தனகுப்தனுக்கும் மலயபதி ஸிம்ஹநாதனிடம் இருக்கும் கிருஷ்ணதாஸனுக்கும் காச்மீரபதியிடம் இருக்கும் ஹரிதாயனுக்கும் சிந்துபதியிடமிருக்கும் ஹீரதாஸனுக்கும் பாரசீக மன்னனிட மிருக்கும் மூகுந்த தாஸனுக்கும் காந்தாரபதியிட மிருக்கும் வச்சிரலாலனுக்கும் காம்போஜனிட மிருக்கும் பாலதாஸனுக்கும் நமது பெயர்வைத்து எழுத வேண்டிய தென்ன வென்றால்:—

"நீங்கள் ஸ்வாமி பக்தி யுள்ளவர்களானதால் நந்தர்களுக்குச் செய்யவேண்டியது என்னவெனின், நீங்கள் ஆசிரியித்திருக்கும் அரசர்கள் நந்தர்களுக்கு வைரியான சந்திரகுப்தனுக்கு சகாயமாகவரும் பர்வதேசனுக்கு அடங்கி, நந்தர்கள் மீது தண்டெடுத்து வருவது நீங்களறிந்த விஷயமே. ஆனதால், இச்சமயம் எவ்வளவு திரவியச் செலவு ஆனாலும் பாதகமில்லை. உங்கள் அரசர்களுக்கு எவ்விதம் உரைக்க வேண்டுமோ அவ்விதம் உடன்படுத்தி ஏதாவதொரு காரணத்தினால் சந்திரகுப்தனை சமயம் பார்த்துக் கொன்றுவிடுவது உத்தமோத்தமம். அது அஸாத்யமாகில் பருவத ராஜனை விட்டு நந்தர்கள் பக்ஷத்தில் வரும்படிசெய்யவும். இதுவும் முடியாவிடில் பர்வதேசனிடம் கலஹமிட்டு தத்தமது ஊருக்குச் செல்லும்படி செய்யவும். அதுவும் சரிப்படாவிட்டால் நந்த ஸேனைகளுக்கும் பருவத சைன்யங்களுக்கும் கலந்து யுத்தமாகும் ஸமயத்தில் நந்த சைந்யத்தின் மீது கைகலக்காமல் தடஸ்தர்களாயிருந்து விடச்செய்யவும். இவைகளில் ஒருவிதம் செய்து உங்கள் அரசர்களுக்கு நந்தர்கள் மேல் விசுவாசமுண்டாக்கி காரியத்தை முடித்தால், ஒருவனான பருவதேசன் எங்களால் மாண்டு விடுவது நிச்சயம். பிறகு அவ்வரசர்களுக்கு பிரதியுபகாரமாய் பருவதேசனது தேசகோசங்களை சமமாகப் பங்கிட்டுத் தருகிறோம்."

என்று இவ்விதம் தனித்தனியாய் ஒவ்வொருவனுக்கும் எழுதுங்கள்" என்றான். அவர்கள் எழுதி முடித்ததும் அவரவர்கள் விலாஸங்களை யெழுதி முத்திரை செய்து, நான்கு குதிரை வீரர்களை யழைத்து "தூதர்களே! நீங்கள் வாயு வேகமுள்ள உத்தமாசுவங்களில் ஏறி மாறுவேஷத்துடன் சென்று பருவதராஜன் ஸைன்யத்திலிருக்கும் வர்த்தகர்களிடம் இக்கடிதங்களின் விலாஸங்கள் போல் கொடுத்து, அவர்கள் தரும் பதில்களையும் வாங்கி வாருங்கள்" என்றனுப்பினான்.

ராக்ஷஸன் ஸமீபத்தில் தியானத்திலிருந்த க்ஷபணகனும் இவற்றையெல்லாம் அறிந்து சமாதியிலிருந்து விழித்துக்கொண்டவன் போல் அபிநயித்து "புத்தேச!" என்றான்.

ராக்ஷஸன் அது கண்டு "ஐயா க்ஷபணகரே! தாங்கள் உரைத்தவாறே ஜபத்திற்கு ஏற்பாடுகள் செய்துவிட்டேன். வெகு நேரம் நிஷ்டையில் இருந்துவிட்டீர்கள். உங்களுக்கு பிக்ஷா ஸமயம் மீறுகிறது. போய்வாரும்" என, க்ஷபணகனும் "நமது பிரபுவுக்கு ஜயமாகட்டும்" என்று எழுந்து சென்றான்.

செல்லும் வழியில் "இப்பொழுது ராக்ஷஸன் பருவதராஜனுக்குள் இருக்கும் அரசர்களை வேறுபடுத்தி ஜயமடைய வெண்ணி அம்மன்னர்களிடம் வர்த்தகர்கள் போலிருக்கும் தனது கூட மந்திரிகளுக்கு கடிதங்கள் அனுப்பியிருக்கிறான். அது பிரகாரம் அங்கு காரியம் கைகூடி ராக்ஷஸனுடைய பேதோபாயமே பலித்து விடுமாகில் சந்திரகுப்தனை வஹித்திருக்கும் சாணக்யரின் சங்கற்பம் நிஷ்பலமாகும். இவ்விராக்ஷஸனால் அனுப்பப்பட்ட கடிதங்கள் அவ்வர்த்தகர்களிடம் போய்ச் சேர்வதற்கு முன்னதாகவே நானிவற்றை சாணக்யருக்குத் தெரிவிக்காவிடில் நான் இங்கிருந்து பலனென்ன? சாணக்யருக்கும் மித்திரனாவேனோ?" என்று மனதில் ஆலோசித்துக் கொண்டு சென்று ராக்ஷஸனுடைய ஏற்பாடுகளை விவரமாக எழுதி அக்கடிதத்தைத் தனது சிஷ்யனாகிய வேகசர்மனிடம் கொடுத்து, "அடா சிஷ்யப் பிள்ளாய்! ராக்ஷஸனின் பேதோபாயத்தினால் சாணக்யருடைய சங்கல்பம் வேறுபடும் போல் இருக்கிறது. ஆகையால் இதோ யாருடையதோ ஓர் குதிரை ஜேணமிட்டுத் தயாராயிருக்கிறது. இந்த மையை நீயும் நெற்றியிலிட்டுக் கொண்டு அக்குதிரை

·க்கும் இட்டால் நீ ஒருவர் கண்ணிற்கும் தென்படமாட்டாய். இந்த சூரணத்தை தண்ணீரில்கரைத்து நீயும் உட்கொண்டு குதிரைக்கும் கொடுத்தால் பசி, தாகம் சிரமங்களொன்றும் ஒரு மாதத்திற்கு ஏற்படாது. நீ அக்குதிரையேறி ராஜமார்க்கம் விட்டு குறுக்காக அரண்ய மார்க்கமாய்ச் சென்று பர்வதராஜ ஸேனையிலிருக்கும் சாணக்யரைக் கண்டு உனது நெற்றியிலிருக்கும் மையை யழித்து விட்டு இக்கடிதத்தை அவரிடம் கொடுத்து அவர் உத்திரவு போல் நடந்து கொள். அங்கிருந்து வந்ததும் யோக்யனை உனக்கு வாத வித்தையை உபதேசிப்பேன்" என்று மையையும் சூரணத்தையும் தந்து அனுப்பினான். வேகசர்மனும் அவ்விதமே குதிரை யேறி அரண்ய மார்க்கத்தில் சென்று கொண்டிருந்தான்.

இங்கு ராக்ஷஸன் ஸ்நானாதிகளை முடித்துக்கொண்டு, ராஜஸ்தானம் வந்து, தன் மனதில் "முந்தி இந்நந்தர்கள் அகாரணமாய் மௌரியர்களை வதை செய்ததால் நமது ஸேனாபதிகள் முதலிய மூக்ய ஜனங்கள் இவர்களிடம் விசுவாஸம் தவிர்ந்து ஜீவனத்தின் பொருட்டு இவர்களிடம் பிரியமுள்ளவர்கள் போல் காட்டிக்கொண்டு இச்சமயம் தண்டெடுத்து வரும் சந்திரகுப்தன் மீது அனுராகம் வைத்திருக்கக் கூடும். சந்திரகுப்தனிடம் இருக்கும் அபிமானத்தால் அவன் சூத்திரஸ்திரீ பௌத்திரனாதலால் ராஜ பதவிக்கு அருகனல்லன் என்பதையும் எண்ணமாட்டார்கள். இதைப் பரிசோதித்து வேறு அதிகாரங்களில் மாற்றி விடலாம் என்றாலோ, ஸமீபத்தில் யுத்த காரியம் நேரிட்டிருக்கும் போது இதைப் பற்றி ஒன்றும் விசாரிப்பதற்கு இது ஸமயமில்லை. ஆனதால் அவர்களையே வஸ்திர பூஷணங்களால் ஸன்மானித்து உத்ஸாகப்படுத்தி சந்திரகுப்தனிடம் உபேக்ஷை வரும்படி செய்து யுத்தத்திற் கனுப்ப வேண்டும்" என்று நிச்சயித்து நந்தர்கள் உட்கார்ந்திருக்கும் ஸபாமண்டபம் வந்து பாகுராயணாதி ஸேனாபதிகளை யெல்லாம் வரவழைத்து, அவர்களை நோக்கி "ஸ்வாமிகாரிய துரந்தரர்களான ஸேனாபதிகளே! நந்தர்களுக்கு வைரியான சந்திரகுப்தன் யுத்தத்தினால் தான் ராஜ்யாதிபத்யத்திற்கு அருஹனல்லனானது பற்றி இவ்விராஜ்யத்தை சத்துருக்கள் வயப்படுத்த வெண்ணிப் பர்வதேசனை யழைத்துக் கொண்டு

வருகிறானும். நீங்கள் உங்கள் வம்ச பரம்பரையாய் வெகு கால மாக இச்சமஸ்தானத்திற்கு ஆப்தர்கள். நந்தர்களின் க்ஷேமமே உங்களுடைய தென்று எண்ணப்பட்டவர்கள். ஆகையால் மஹா சூரர்களாயும் அபிமானிகளாயு முள்ள நீங்கள் யுத்த முனையில் நின்றால், அப்பருவதேசன் எம்மாத்திரம்? அநேக யுத்தங்களில் ஸ்வாமி காரியங்களைச சாதித்து மஹா கீர்த்திமான்களான உங்களுக்கு இப்போது ஏற்பட்டிருக்கும் காரியம் அற்ப யத்தினத்தினாலேயே சாத்ய மென்றாலும் சத்துருக்களை யடக்கும் விஷயத்தில் யோசனையுடன் இரவும் பகலும் ஜாக்ரதையுடன் தக்க ஸமயத்தை எதிர்பார்த்து காரியத்தில் ஜயமடைந்து இன்னும் அதிக கீர்த்திமான்க ளாவதே முக்யம். உங்களைப் போல் நானும் ஒருவனல்லாது எனக்கு மட்டும் உங்களைக் காட்டிலும் இது விஷயத்தில் கவலை யில்லை. நீங்கள் செய்ய வேண்டிய காரியங்கள் என்ன வென்றால்:—

"பாகுராயண! நீ இரண்டு லக்ஷம் ஸேனைகளுடன் கோட்டை கொத்தளம் சுங்கச்சாவடி முதலிய விடங்களில் பீரங்கிகள், சூலங்கள், ப்ராஸங்கள், பட்டஸங்கள் குந்தங்கள் சதக்கினிகள், கட்கங்கள், துப்பாக்கிகள், பாணங்கள், மருந்துகள், குண்டுகள் முதலான யுத்த ஸாமக்ரியைகளை ஸேனைகளுக்கு உதவி, அதிக சம்பளங்களைக் கொடுத்து சைனிகர்களுக்கு உத்ஸாக முண்டாக்கி, பழைய உத்தியோகஸ்தர்களை மேலதிகாரத்தில் ஏற்படுத்தி, கவாலாளிகளுக்கு இருந்தவிடத்திலேயே அன்னபானாதிகளைக் கொடுத்து, அதே காரியமாக சுற்றிப் பார்த்துக்கொண்டு நகரத்தை ரக்ஷித்துக் கொண்டிருக்கவேண்டும்.

"டிங்கிராத பத்ர படர்களே! நீங்கள் உங்கள் வசமுள்ள இரண்டு லக்ஷம் ஸேனைகளுடனும், இரண்டு லக்ஷம் குதிரைகளுடனும், இரண்டாயிரம் மதயானைகளுடனும், மூன்று லக்ஷம் பதாதிகளுடனும், சத்துருக்கள் வரும் பாதைக்கு எதிராகச் சென்று ஸமயம் நேர்ந்தால் அவர்களுடன் யுத்தம் செய்தும், சத்துருக்களுக்கு குடிக்கத் தண்ணீர் கிடைக்காதபடி வழிகளிலிருக்கும் தீர்த்தங்களைக் கெடுத்தும், அஸாத்யமான மடுக்களில் விஷங்களை வாரி இறைத்தும், வைக்கோல் விறகு இவற்றிற்கு நெருப்பிட்டும் பசும்புற்களை யழித்தும், நிழல் கிடைக்காமல் செய்தும் அங்குள்ள தேசங்களின் பிர

ஜைகளுக்கு வரிப்பணத்தைத்தள்ளுபடி செய்தும், சத்துருக்களிருக்கும் வழியாய் விற்பனை சாமான்களைக் கொண்டு போகாது தடுத்து வேறு வழிகளால் அனுப்பியும், சத்துருக்களின் சைன்யத்திற்கு வரும் தானியங்களைக் கொள்ளை அடிக்கச் செய்தும், இரவு வேளைகளில் சத்துரு சைனியம்புகுந்து கொன்றும், சத்துருக்களின் வைத்யர்கள் பரிசாரகர்கள் வண்ணான்கள் முதலியவர்களை திரவியத்தால் கைவசப் படுத்திக் கொண்டு அவர்களைக் கொண்டு அன்னம் கந்தம் தாம்பூலம் ஜலம் வஸ்திரம் ஔஷதம் முதலியவைகளில் விஷ சூரண ப்ரயோகம் செய்தும், மத்யம் பங்கி புகையிலை துவர்ப்பு தித்திப்பு புளிப்பு முதலிய வைகளிலும் விஷ சூரணம் கலந்தும், சத்துரு சைன்யத்தில் இரவு வேளைகளில் மாறு வேடத்துடன் கடைகள் வைத்து விற்றும் பகல் வேளைகளில் கண்ணில் படாது ஒளிந்தும், இரவில் யானை குதிரைகள் இடும் லத்திகளில் விஷ சூரணங்களை வாரி யிறைத்து அக்காற்றினால் அவற்றைக் கொன்றும், காற்றுக்கெதிராக அவ்விஷ சூரணங்களை வாரியிறைத்து அதனால் சத்துரு சைன்யங்களில் க்ஷுத்திர ரோக முண்டாகச்செய்தும், இடுக்கான பாதைகளிலும் கணவாய்களிலும் வெடிமருந்துகளைக் கெட்டித்துச் சேனைகள் சமீபம் வரும் வரை யுத்தம் செய்வது போல் காண்பித்து, சமீபம் வந்ததும் புறங்காட்டி யோடுவது போலவந்து, வெடிமருந்துகளில் நெருப்பை யிட்டு அதனால் அளவற்ற சத்துரு ஸேனைகளை சம்ஹரித்தும், வழி பாதையில் இருந்துகொண்டிருங்கள்.

"சூரர்களான விஜயவர்ம பலகுப்தர்களே! சந்திரகுப்தன் சூத்திர ஸ்திரீ பௌத்திரன் ஆனதால் ராஜ்யத்திற்குத் தான் பாத்திய முள்ளவனல்லனாகிலும் சாணக்ய னென்ற வைதிகனுடன் ஆலோசித்துப் பர்வதேசனை யழைத்துக்கொண்டு வருகிறானாம். சந்திர வம்சத்திய ராஜ ராஜர்களால் வெகு நாளாக இன்று வரையிலும் ஆளப்பட்டு ஸிம்ஹாஸனாதிபதிகளால் பாலிக்கப்பட்டு வரும் இந்த ராஜ்யத்தை நிகிருஷ்டர்களும் தேவ பிராமண கண்டகர்களும் ஆன இராத மிலேச்ச பார்வதேயர்களின் வசமாக்கி இந்த அரசாட்சியில் அபிமானிகளா யிருக்கும் சூரர்களின் கொழுப்பை அடக்குவதாக வருகிறான். இத்தேசத்தில் பதிவிரதைகளும் சந்

திர சூரியர்களையும் இதுவரை பாராதவர்களுமான சூர பத்தினிகள் அனேகமாக இருக்கிறார்கள். பரஸ்திரீகளை சிறைப் பிடிப்பதே இப்போது வரும் சத்துருக்களின் சுபாவ குணம். இத்தேசத்தில் அவர்கள் ஸேனை புகுந்தால் மஹா ப்ரமாத முண்டாவதில் ஸம்சய மில்லை. மஹா சூரர்களான நீங்கள் இருக்குமிடத்தில் சத்துருக்களால் அவமானம் ஏற்படாதெனினும், நீங்கள் நமது ஸாமந்தர்களான பச்சிம தேசாதிபதிகளின் சேனையுடன் உங்களிருவர்களின் எட்டு லக்ஷம் சேனைகளையும் கூட்டிக் கொண்டு முந்திச் செல்லும் டிங்கிராத பத்ரபடர்களுக்கு சஹாயமாயிருந்து சத்துரு சைன்யம் ஸரயூ நதிக்கு கிழக்கில் வராதபடி ஸமயோசிதமாய் காத்துக் கொண்டிருக்க வேண்டியது.

"புத்தி சம்பன்னர்களான புருஷதத்த லோஹிதாக்ஷர்களே! இப்பொழுது பர்வதேசன் எதிராளியின் பலத்தைக் கவனியாமல் மதகஜத்துடன் சண்டையிட நினைக்கும் கோவேறுகழுதை போல், நம்முடன் கலகம் செய்து பிழைத்துச் சென்றுவிடுவோம் என்றெண்ணி வருகிறான். பள்ளங்களாலும் திட்டுகளாலும் கூடிய பர்வத ப்ராந்தங்களில் இருந்தும் செலவிற்கு இல்லாவிடில் கிராதத் திருடர்களைக் கூட்டிக் கொண்டு செடிகளின் ஓரமாய்மறைந்து வந்து இதரதேசத்தின்கிராமங்கள் உண்டிகள் இவைகளைக் கொள்ளையிட்டு ஓடிப்போய் செடிகள் அடர்ந்த காட்டில்ஒளித்தும், சோரவிருத்தியால் ஜீவித்துக்கொண்டிருக்கும் வேடர்களைக் கூட்டமாகக் கூட்டிக்கொண்டு தமது இக்கட்டான தேசம்விட்டு விஸ்தாரமாய் அரண்யமாயில்லாது ஸமவெளியாயிருக்கும் நமது ராச்சியத்திற்கும் வந்தால், ஜலத்தைவிட்டு வெளிவந்தஜலஜந்துககள் போல், நமது பாதையை சகிக்க முடியுமோ? புற்றிலிருந்து புறப்படும் தேள் கூட்டத்தைக் கை கால்களில் படாது நெருப்பிலிட்டு எரிப்பது போல உங்களது எட்டுலக்ஷம் ஸேனைகளை நான்கு பிரிவாகப் பிரித்துக்கொண்டு வியூஹம் வகுத்து சத்துரு சைன்யம் கங்காநதி தாண்டி கிரிவ்ரஜத்தின் வழியாக சோணபத்திரா நதியைத் தாண்டி வராமலிருக்கும்படி யுத்தம் செய்துகொண்டிருங்கள். வியூகத்தைக் கலைக்காமல் இருந்தால் இந்தவிஷயத்தை அறியாத சத்துருக்கள் முன்னேறி வர முடியாது. துர்ப்பலனான சத்துருவிற்கு இவ்வளவு பிரயத்தினம் எதற்கென்று அலக்ஷியமாக

இராமல் சத்துரு அல்பனுயிருந்தாலும் நாம் யுத்த விஷயத்தில் ஜாகருதையா யிருக்க வேண்டியது முக்யம்.

"ஐயா ராஜஸேன! சத்துருக்களுக்கோ, அல்லது சத்துரு சைன்யங்களுக்கோ பந்து மித்திரரானவர்கள் ஸேனையில் வேலைக்கு இருப்பார்களாயின் அவர்களை அதினின்றும் விலக்கி வேறிடம் செல்லாமல் இந்நகரத்திலேயே வேறு உத்யோகம் கொடுக்க வேண்டியதல்லாது அவர்களை சேனுநிகாரத்தில் வைக்கக்கூடாது. நீயவற்றை விசாரித்து நடத்த வேண்டியது.

"ஐயா சித்திரவர்மனே! நீ சமர்த்தர்களான கூட சாரர்களை சத்துரு ஸேனைகளில் அனுப்பிக் கூட்டமா கூடியிருக்கும் இடங்களிலும் பரிசாரர்கள் முதலியவர்கள் இருக்குமிடங்களிலும் இருந்து சத்துருக்களுடைய உத்ஸாகம், உபேக்ஷை, கோபம், யுத்தத்தில் முயற்சி, ஸ்வஜனங்களிடம் பிரியம், மதமடைதல், முதலியவற்றை அறிந்து அதற்குத் தக்கபடி பதில்காரியங்களை நடத்தியும், யுத்தபூமிகளிலிருக்கும் மேடு பள்ளங்கள் அறிந்து சமயத்திற்கேற்றபடி வியூஹம் வகுத்தும் சத்துரு ஸேனை கொஞ்சமாக இருந்தால் நீங்களதிகம் போல் காண்பித்தும், அதிகமாக இருக்கும் போது நீங்கள் ஸ்வல்ப ஜனங்களாகக் காண்பித்து நிக்ரஹித்தும், மேலும் மிஞ்சி சத்துரு சைனியம் பெருகுமாகில் பின்னுல் அதிக சைன்ய மிருப்பது போலக் காட்டிக்கொண்டும், யுத்தம் செய்ய வேண்டியது. வியூஹத்தை வகுப்பதில் சாமர்த்தியம் இருந்தால், தனக்கு கொஞ்சமாகஸேனை யிருந்தும் அதிகம் போல் காண்பிக்கலாம். அதிகமாயுள்ள சத்துரு ஸேனைகளையும் தோற்கடிக்கலாம். இவ்விதம் ராஜ காரியத்தை நிர்வகிக்கும் ஸேனுபதிகளே கீர்த்திக்குப் பாத்திரர் ஆவார்கள். நான் உங்களுக் கதிகம் சொல்ல வேண்டிய தில்லை. புத்திரர்களை சம்பாதித்து வரும் வஸ்துக்களால் பெற்ற தாய் அப்புத்திரர்களைப் போஷிப்பது போலும், உதகமானது சங்க முகத்தால் பாலனமாவது போலும் கோவின் போஷணைக்குத் தரும் வைக்கோலும் புல்லும், தண்ணீரும் தேவதைகளுக்கு யோக்யமான க்ஷீரமாவது போலும் பிரஜைகளால் ராஜ பொக்கிஷங்களில் சேர்க்கப்படும் வஸ்துக்களும் திரவியங்களும் மறுபடி அப்பிரஜைகளைக் காப்பாற்றும் நிமித்தமே யல்லாது, பிரபுவான அரசர்கள் டாம்பீகமாக சொந்தச்

செலவு செய்து கொள்வதற்கன்று. பிரஜைகள் சொத்தில் ஸ்வாதந்திரியமில்லாத அரசன் அரசனுவானு வென்றால் தோள் வலிமையால் சத்துருக்களிடம் இருந்து ஜயித்த தனமே ஸ்வாதீனமென்பது ரிஷிகளின் மதம். பிரஜைகளின் திரவியத்தால் அவர்களை சம்ரக்ஷித்து சத்துருக்களை தகைந்து கீர்த்தியையும் பொருளையும் சம்பாதிக்கும் அரசனே கீர்த்திக்குப் பாத்திரனுவான். அனேகம் ஸேனைகளை நிர்வகித்து அவர்களுடைய தைர்யத்திற்கும் ஸ்திரமான புத்திக்குமாக தக்க ஸமயங்களில் சம்பளத்தை அதிகப்படுத்தியும் ஸன்மானம் செய்தும் காரிய வாஹிகள் முன்னே கையாலாகாதவர்களை உயர்த்திப் பேசாதும், இவர்கள் முன்னிலையில் சூரர்களை யவமானப்படுத்தாமலும் தன்னிடம் பயம் விசுவாஸ மிரண்டும் இருக்கும்படி நடத்தியும்,உற்சாகம் குறையாது நம்பிக்கையை உண்டுபண்ணியும்,யுத்தகாலத்தில் தான் முன்னல் நின்று கைகலந்ததும் தான் பின் நின்று தனது ஜனங்களை யுற்சாகப் படுத்தி அவர்களாலே சத்துருக்களை நிக்ரஹித்து, தான் உயிருடன் இருந்து ஸ்வாமிக்கு கீர்த்தியையும் தனக்கு பெருமையையும் சம்பாதிப்பவனே சூரனெனப்படுவான். அவனே ஸேனதிபத்யத்திற்கு அருகனுமாவான் பிரஜைகளை சரிவர ரக்ஷிக்கும் அரசனுக்கும் சம்பளங்களால் திருப்தியடைந்து ஸ்வாமி காரியத்தில் வஞ்சனையற்று உண்மையாக உழைக்கும் ஸேவகர்களுக்குமே இங்கும் பரலோகத்திலும் கீர்த்தி உண்டாகும்.''

இவ்விதம் சமத்காரமாயும் சமயோசிதமாயும் ராக்ஷஸன் பாகுராயணுதி ஸேனுபதிகளுக்கு எடுத்துக்காட்டி பொக்கிஷத்திலிருந்து விலைமதிக்க முடியாத முத்தாரங்கள், தூரய்கள், வச்சிர கடகங்கள், ரத்ன கேயூரங்கள், மோதிரங்கள் இவைகளை வரவழைத்து அவர்களுக்குத் தானே அலங்காரம் செய்து, திவ்ய துகூவ, கந்த மாலிகைகளைத் தரிப்பித்து, கற்பூர தாம்பூல மளித்து ஸன்மானம் செய்தான்.

தண்டெடுக்கத் தயாராயிருக்கும் ஸேனுபதிகளை நந்தர்கள் பார்த்து ஸேனைபதிகளே! அமாத்யரின் உத்திரவு போலவே ஜாக்கிருதையுடன் ராஜ காரியத்தைச் சற்றும் வழுவின்றி நிர்வகிக்கவேண்டியது'' என்று ஆக்ஞாபித்தார்கள். அவ்வார்த்தைக்கு ''மஹாப்ரஸாதம்'' என்று நமஸ்கரித்து ஸேனைபதிகள் எல்லோரும் நந்தர்களிடமும் ராக்ஷஸனிடமும் உத்திரவு பெற்றுக்கொண்டு புறப்பட்டனர்.

பாருராயணன் தனது ஸேனைகளை யழைத்துக் கொண்டு யுத்த ஸாமக்ரியைகளுடன் கோட்டை கொத்தளங்கள் முதலான முக்கிய ஸ்தலங்களில் ஸேனைகளை அணிவகுத்து நிறுத்திப் புறத்தை ரக்ஷித்துக்கொண் டிருந்தான். எஞ்சிய சேனுபதிகள் எல்லாரும் யுத்த ஸன்னத்தர்களாக சத்துரு சேனைகளை எதிர்த்துச் சென்றார்கள்.

பிறகு நந்தர்கள் தூதர்களைப்பார்த்து "இவ்வளவுநாளும் நம்மால் பஹுமானங்க ளடைந்து இப்பொழுது சாக்குப் போக்குக் காட்டி யுத்தத்திற்கு செல்லாது நிற்கும் பேடிகள் ராஜாக்ஞை பிரகாரம் சிக்ஷிக்கப்படுவர் என்று நகர வீதிகளில் பறையறைவிக்க வேண்டியது. கங்கா ஸரயூ சங்கமத்தின் உத்திர பாகத்தில் திட்டாக இருக்குமிடம் பார்த்து அங்கு ராஜ கிருஹம் போல் ராஜ யோகங்களான கூடாரங்களைப் போட்டு அதைச்சுற்றிலும் கூரான சூலங்களை நாட்டி அதனைச் சுற்றிலும் ஈட்டியாள்களை நிறுத்தி, அதற்கு வெளியில் கட்க பாணிகளான குதிரை வீரர்களை நிறுத்தி அதற்கு வெளியில் பீரங்கிகளை ஜோடித்து, மருந்துகள் கெட்டித்து, அங்கு ஆட்களை நிறுத்தி, அதற்கு சுற்றிலும் ஆழமாக அகிழைத் தோண்டி, நதி ஜலத்தினால் நிரம்பச் செய்து சித்தப்படுத்தி யிருக்க வேண்டியது. புதன் கிழமை யன்று ஜயத்தின் பொருட்டு நாமே அங்கு வருபவர்களா யிருக்கிறோம். ராஜ புத்திரர்களும் தத்தமது வாஹநங்களில் ஏறி நம்முடன் கூட வர வேண்டியது" என்று ஆக்ஞாபித்தார்கள்.

பிறகு அமாத்ய ராக்ஷஸனைப்பார்த்து "அமாத்யரே! வேனிற் காலத்தில்விருத்தியடையும் அக்கினிக்கு சண்ட மாருதம் ஸஹாயமானது போல யுத்தத்தில் குதூஹலமுள்ள எங்களுக்கு உங்கள் புத்தி ஸஹாய மிருக்கும்போது சத்துருக்கள் திருண மாத்திரம். மஹா நாகம் போலிருக்கும் இக்கட்கத்தின் முனையால் சத்துருக்களை ஸம்ஹரித்து சத்துரு லக்ஷ்மிகளை இழுத்துவந்து விடுகிறோம்." என்றுரைத்து அனர்க்க வஸ்திர பூஷண கந்த மாலிகைகளால் உபசரித்து, கற்பூர தாம்பூலமளித்து ராக்ஷஸனை யனுப்பிவிட்டுத் தமது ஆயுதசாலை சென்று தங்களுக்குப் பிரியமான ஆயுதங்களை எடுப்பித்துப் பூஜித்துத் தத்தமது அந்தப்புரமடைந்தார்கள்.

# பதினைந்தாவது அத்தியாயம்.

## பகைவர்கள் வெளிப்படல்.

அங்கு, க்ஷபணக சிஷ்யனான வேகசர்மன் தனது குருவினால் கொடுக்கப்பட்ட கடிதமெடுத்துக்கொண்டு அரணியமார்க்கமாக சீக்கிரம் சென்று பருவதராஜ சேனையை யணுகிக குதிரை விட்டிறங்கி, சாணக்யரைக கண்டு தனது நெற்றி மையை அழித்துவிட்டு நமஸ்கரித்துக் கடிதத்தைக் கொடுத்தான். அதைப் படித்துக்கொண்ட சாணக்ய னும் சந்திரகுப்தனைப் பார்த்து "ஐயா குமாரனே! இப்பொழுது ராக்ஷஸன், பருவதேசனுக்கும அவன் கூட வந்திருக்கும் அரசர்களுக்கும் பேதமுண்டாக்கி, அநாயாஸமாகத் தான் ஜயமடைய வெண்ணி, இவ்வரசர்களிடம் வர்த்தகத் தொழிலிலிருக்கும் தனது கூட மந்திரிகளான தனகுப்தன் முதலிய எட்டுப் பேர்களுக்குக் கடிதங்களெழுதி சாரர்கள் மூலமாய் அனுப்பி யிருக்கிறானென்பதை யறிந்து, நமது மித்திரனான இந்துசர்மன் அவ்வர்த்தகர்களின் பெயரை விவரமாக எழுதி யனுப்பி யிருக்கிறான். இருக்கட்டும். இந்தக் கபடமே நந்தர்களின் நாசத்திற்குக் காரணமாகும். இப்பொழுதே இதைப் பருவதேசனுக் கறிவித்து இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். இப்பருவதேசன் சைன்யங்களைக் காட்டிலும் நந்தசேனைகள் அதிகமாகையால் சைன்யங்களை வென்று நந்தர்களை சங்கரிப்பதென்றால் அசாத்யமான காரியம். ஆகையால் நாகஸ்வரத்தின் தொனிக்கு ப்ரமித்துப் புற்றிலிருந்து வெளிப்படும் பாம்புகளைப் பாம்பாட்டி பிடிப்பதுபோல் கபடத்தினால் நந்தர்களை சேனையிலிருந்து வேறு படுத்தி அச்சமயத்தில் சங்கரிக்க வேண்டியதா யிருக்கிறது" என்று சொல்லி, வேகசர்மனைப் பார்த்து "நாம் அரசனிடம் சென்றுவருவோம். சற்று இங்குஇரு" என்று ஆஞ்ஞாபித்து விடுதியி லிருந்து வெளிவந்து, சேகரனை யழைத்து "சத்துருக்களிட மிருந்து கூட சாரர்கள் கடிதத்துடன் வருகிறார்கள். உபாயமாய்க் கண்டுபிடிக்க ஏற்பாடு செய்" என்று அதற்கு வேண்டியவற்றைச் சொல்லிவிட்டுப் பருவதேசன் விடுதி சென்று, அவனால் மரியாதை செய்யப்பட்டு உட்கார்ந்தான்.

உட்கார்ந்ததும் "ஐயா, அரசே! இக்காலத்தில் தனத்தினால் சத்துரு மித்துரு ஆகிறான். மித்துரு சத்துரு வாகிறான். இப்பொ

மூது பாடலீபுரத்தில் அமாதய ராக்ஷஸன நீ சநத களித்திருக்கும் அபய வாக்கினுல் சநதிரகுப்தனிடம் உனக்கு உபே க்ஷையுண்டாக்க முடியா தென்றறிந்து, உன்னிட மிருக்கும் அரசர் களுக்கும் உனக்கும கலஹமுண்டாக்கி அஸாத்யமாக ஏற்பட்டிருக் கும் ராஜ காரியத்தை ஸுலபமாக நிவர்த்தித்துக் கொள்ள எண் ணி இவ்விடத் தரசர்களிடமிருக்கும் வர்த்தகர்களுக்குக் கடிதமெழு தித் தூதர்களிடம் அனுப்பி யிருககிறுன் என்று தெரிவதால் அது விஷயத்தைப் பரிசோதிக்க வேண்டும்'' என்ருன்.

அச்சமயத்தில் வெளியே "ஹோ!" வென்று முறையிட்டுக் "கட் டவிழ்த்து விட்டு குடிக்கத் தண்ணீர் தந்தால் உண்மையைச செல் வேன்'' என்று சப்த முண்டாயிற்று. அது கேட்டு அரசன் என்ன வென்று தூதர்கள் முகம் பார்க்க, அவர்கள் விசாரித்துவந்து "ஸ்வா மி! இப்பொழுது கூவியவன் பாடலீபுரத்திய கூடசாரனும். இத்த ண்டில் சுஜனங்கள் பரதேசத்தியவர்கள் என்பதைக் கவனித்துவ ரும் சேகரனுடைய ஆட்கள் இவனைக்கண்டு பிடித்துக்கட்டிவந்தார் கள். இவன் பரதேசி வேஷத்துட னிருந்தவனும். இவனது கந்தை மூட்டையில் இக்கடிதங்க ளிருந்தனவாம்.'' என்று அவற்றை அர சன்முன் வைத்தான்.

அவற்றைப் படிக்கும்போது குலூதபதி சித்திரவர்ம னிடமிரு க்கும் தனகுப்தனுக்கும், காச்மீரபதியிடமிருக்கும் ஹரிதாஸனுக்கும், ராக்ஷஸன் எழுதிய கடிதங்களா யிருந்தன. அதையறிநத பருவதே சன், சாணக்யனைப் பார்த்து "புத்திமானுகிய சாணக்யரே! தாங்கள் ராக்ஷஸனைப் பற்றி சொல்லியவிஷயம் நிதர்சன மடைந்தது. இவ்வி தம் இன்னம் யார்யார்களுக்கு எழுதி யிருக்கிருனே தெரியவில்லை யே'' என்று அக்கடிதங்களைக்கொடுத்ததும், சாணக்யனும் தன்னிட மிருந்த கடிதத்தைக்கொடுகக, அதனுல் எட்டுப்பெயர் வர்த்தகர்கள், நந்தர்களின் கூடமந்திரிக ளென்றறிந்து, "இவர்களுக்கு யாது தண் டனை விதிக்க வேண்டியது?'' என்று கேட்டான்.

அதற்கு சாணக்யன் "ஐயா பருவதேசனே! உனக் கடங்கி யுத்தநிமித்தம் வந்திருக்கும் அரசர்களுக்குப்பிரீதி பாத்திரர்களான இவர்களைஇச்சமயம் சங்கதிகளை வெளிப்படுத்தித் தண்டித்தால் காரி

யும் கெட்டு விடுமாகையால் அவ்வர்த்தகர்களையொன்றும் செய்யாது அவ்வரசர்களைக் கொண்டே காவலிலிட்டுத் தமது தேசங்களுக் கனுப்பிவிடச் செய்வதே உசிதம்" என்றான்.

பருவதேசனும் சித்திரவர்மாதி எட்டு மன்னர்களை வரவழைத்து "அரசர்களே! உங்களிடமிருக்கும் இப்பெயர்கொண்ட வர்த்தகர்கள் நந்தர்களின் ஆட்களென்று தெரிய வந்திருப்பதால் இப்பொழு திவர்களை தண்டிக்கவேண்டாம். காவலிலிட்டு ஊர்களுக கனுப்பி விடுங்கள். விவரமான சமாசாரங்களைப் பிந்தி தெரிந்து கொள்ளலாம்" என்றதும் "உத்திரவு ப்ரகாரம்" என்று எட்டு வர்த்தகர்களையும் காவலிலிட்டு தமது தேசங்களுக் கனுப்பி விட்டார்கள். இதற்குள் பரதேசி வேஷத்துடன் வந்த கூடசாரனை மூக்கறுத்து அவன் செய்த பிசைநச சொல்லி அவனையு மிழுத்துச் சென்று பறையடித்துக் கொண்டு சேனைகளில் சுற்றியடிப்பது கண்டு மற்றக் கடிதங்கள் கொண்டு வந்த சாரர்களும் நமக்கும் இக்கதியே எற்படு மென்றஞ்சி உடனே தமதிடமிருககும் கடிதத்தைககிழித்து வாயில் போட்டு மென்று விழுங்கி விட்டுத் திரும்பி ஓடிவிட்டார்கள்.

இங்கு, சாணகயனும் பருவதேசனைப் பார்த்து "பேதோபாயத்தினால் தான் சுகமடைய வெண்ணி யிருந்த ராக்ஷஸனின் பிரயத்தினம், வெள்ளத்திற்கு மணலினால் அணைகட்டியது போலாயிற்று. இதுவே நீ ஜயமடைவதற்கு அடையாளம். இனி நீ பலருமறிய சில காரியங்களைச் செய்து ஜயத்தை யடையவேண்டும். அஃதெவ்விதமெனில், நந்தர்களுக்கு மித்திராகளான காசீ ராஜனுக்கும் மிதிலாதிபதிக்கும் மசசதேசத் தரசனுக்கும் "நீங்கள் சேனைகளுடன் வந்து எங்களுக்கு ஸஹாயம் செய்யவேண்டும்" என்றுநிருபங்களெழுதி நியோகிகள் கையில் கொடுத்தனுப்பு. அதனு லுண்டாகும் காரிய லாபத்தை நீயே கண்டு ஆச்சரியமடைவாய்" என்று சொல்லி அவனைக் கொண்டு காசீ தேசாதிபதி முதலிய மூன்றுஅரசர்களுக்கும் நிருபமெழுதச் சொல்லி இரு அரசர்களுக்கு சொல்லவேண்டியவற்றைச் சொல்லி ராஜ முத்திரையுடன் கடிதங்களை கொடுத்து வரும்படி இரு காரியஸ்தர்களை அனுப்பி விட்டுக் காசீ பட்டணத்திற்குக் கமலாபீடனென்னும் நியோகி கையில் ராஜ முத்திரையுடன் அவ்வரசன்

பேருக்குள்ள கடிதத்தைக்கொடுத்து, அவன் செய்ய வேண்டிய காரியங்களை ரஹஸ்யத்தில் தெரிவித்து அவனை யனுப்பிவிட்டு சாணக்யன் தானிருக்கு மிடத்திற்கு வந்தான். இது நிற்க.

அங்கு, பாடலீபுரத்திலிருக்கும் க்ஷபணகன், தன் மனதில் "ராக்ஷஸனுடைய கடிதங்கள் போய்ச் சேருவதற்கு முந்தியே என்னாலனுப்பப்பட்ட வேதசர்மன் சாணக்யரிடம் சென்று என் கடிதத்தைக்கொடுத்திருப்பானாகையால் ராக்ஷஸன் பிரயத்தனம் வீணாகப் போயிருக்கும். இவ்வர்த்தமானத்தை ராக்ஷஸன் அறிந்தால் இச்சங்கதிகள் புதிதாகப் பழக்கமுள்ள என்னாலேயே வெளிப்பட்டிருக்கலா மென்று சந்தேஹித்து எனது நடத்தையைப் பற்றி நேரிலும் மறைவிலு மிருந்து பரீக்ஷிக்காமல் இரான். அப்பொழுது எனது கபடம் சற்றேனும் வெளிப்படுமாகில் நானெடுத்த காரியங்களும் கெட்டு சாணக்யருடைய எண்ணங்களும் வீணாகி விடுமாகையால் நான் சில நாள் ஜாக்கிரதையா யிருக்க வேண்டும்" என்று நிச்சயித்துத் தனது சிஷ்யர்களையழைத்து "சிஷ்யர்களே! ஸமீபத்தில் ராக்ஷஸனுக்கு நம்மீது சந்தேகமுண்டாக இடம் இருப்பதால் நாம் சில நாள் ஜாக்கிரதையா யிருக்க வேண்டி யிருக்கிறது. ஆகையால் சில நாள் நீங்கள் என்னிடம் விசேஷமாய் வராமல் உங்கள்காரியங்களில் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுங்கள்" என்று நியமித் தனுப்பிவிட்டு ஊருக்கு வெளியிலிருக்கும் ஓர் சாவடியின் மேடையிலிருந்து கொண்டிருந்தான்.

அங்கு, சாணக்யன் தன்விடுதி வந்ததும் வேதசர்மனைத் தனியே அழைத்து, "அடா சிஷ்யா! பாடலீபுரத்தில் நம்மவர்கள் யாராரிடம் என்ன செய்துகொண் டிருக்கிறார்கள்" என்று கேட்டான். அதற்கு அவன் "ஸ்வாமீ உபாத்யாயரே! க்ஷபணக வேஷந் தரித்த எங்கள் உபாத்யாயர் அமாத்ய ராக்ஷஸனிடம் சோதிடம் முதலிய வித்தைகளில் தனக்கிருக்கும் சாமர்த்தியங்களைக் காண்பித்து மெத்த நம்பிக்கையுண்டாக்கி அங்குள்ள ராஜகாரியங்களை யறிந்து கொண்டு பரம ஆப்தர் போலிருந்து கொண்டிருக்கிறார். சித்தார்த்தகன் பாகுராயணனிடமும், சகடதாசனிடமும் வைத்யனாக இருந்துகொண்டு இருக்கிறான். மஸோபவாஸியும் நந்தர்கள் இறங்கு மிடத்திற்குச்

சற்று தூரத்தில் ஸரயூ ஸங்கமத்தின் பூர்வ பாகத்தில் ஏற்படுத்தி யிருக்கும் சத்ரு பலாயன ஜபசாலையில் ருத்விக ஆக இருந்து கொண்டு நான்கு சிஷ்யர்களுடன் ஜபங்கள் செய்பவன் போல் நடித்துக் கொண்டு தங்கள் வரவை யெதிர்பார்த்துக் கொண்டே யவ்விடமிருந்துவருகிறான். ஸமித்தார்த்தகன் ஸாமுத்ரிகா லக்ஷணங்களைச் சொல்லிக் கொண்டு பத்ர படாதிகளுடன் இருந்து வருகிறான். இவர்களெல்லோரும் அப்பபோதைக்கப்போது தாங்கள் அறியும் ராஜகாரியங்களை எங்கள் உபாத்யாயரிடம் தெரிவித்துக் கொண்டு பாடலீபுரம் முழுதும் சுற்றிக்கொண் டிருக்கிறார்கள். நான் உபாத்யாயரிட மிருந்துகொண் டிருக்கிறேன்" என்றான்.

"நான் முந்தி இந்துசர்மனிடம் சொல்லியனுப்பியது போலவே அவன் நந்த ஸம்ஹாரத்திற்கு ஸாதனங்களை ஏற்படுத்தி யிருக்கிறான். மேல் நடக்கும் காரியத்திற்கு மஸோபவாஸிக்கு நான்சொல்லியனுப்பவேண்டும்" என்று தீர்மானித்து "வேகசர்மனே! நீசொன்னது யாவும் அறிந்து கொண்டேன். ஜபசாலையி லிருக்கும் புத்திமானாகிய மஸோபவாஸிக்கு நாம் சொன்னதாக ரஹஸியததில் உரைக்க வேண்டிய தென்ன வென்றால், நந்தர்கள் நகர் விட்டுப புறப்பட்டு தண்டிலிருக்கும் கூடாரத்திற்கு வந்திறங்கும் ஸமயத்தில் சிஷ்யர்களுடன் சென்று அவர்களைக் கண்டு மந்திராக்ஷதைகள் கொடுத்து சமயோசிதமாய் மதுரமான வார்த்தைகள் பேசி ஏதேனும் ஒரு மனித வியாபாரத்தால் அவர்களைப் பிரமிக்கச்செய்து, அதற்கு மூன்றும் நாள் நடக்கும் ஹோமத்தின் பூர்ணாஹுதி செய்யப்படும் சமயத்தில் அதைத் தரிசனம் செய்வதற்கு நான்காவது ஜாமத்தில் ஜபசாலைக்கு நந்தர்களை வரும்படி ஏற்பாடு செய்து, ஜபசாலைக்குச் சுற்றிலும் சூத்திரர்களின் தரிசன மில்லா திருக்கும்படி செய்யச்சொல்லி, இவைகளெல்லாம் தயாராயிருக்கும் செய்தியை மறுபடி நமக்கு வந்து தெரியப்படுத்து. இநதுசர்மனை "உன்னிடம் ராக்ஷஸன் ஸந்தேஹப்படாவண்ணம் ஜாக்ருதையா யிரு" என்று நாமுரைத்ததாக சொல்" என்றுரைத்து, வேகசர்மனை யனுப்பி விட்டு ஆன்னிகம் செய்யப் போனான் சாணக்யன்.

அங்கு, சாணக்யனால் அனுப்பப்பட்ட கமலாபீடனென்னும் பருவதேசனின் நியோகி காசி பட்டணம் அடைந்து தன்து

தூதர்கள் இருவரை "பாடலீபுரம் செல்லும் மார்க்கத்திலிருந்து காசி ராஜன் தூதர்கள் பாடலீபுரம் போய் வருகிறதை எனக்குத் தெரியப்படுத்துங்கள்" என்று நியமித்தனுப்பித் தான் சென்று ரதம் விட்டிறங்கி காசீ ராஜன் சமுகமடைந்து "பருவதேசனின் காரியஸ்தன்" என்று சொல்லிக் காணிக்கைகளை ஒப்புவித்து சமயோசிதமாய் வார்த்தையாடித் தான் கொண்டு வந்த கடிதத்தை அரசன் கையில் கொடுத்தான். அதில்

"நமக்கு பரம ப்ரியரான ஸ்ரீமத் காசிமஹாராஜனுக்குப்பர்வதேசர் எழுதிக்கொண்டது:—இப்பொழுது சத்துருக்களுக்கு அஞ்சி நம்மை சரண மடைந்திருக்கும் சந்திரகுப்தனுக் கபயம்தந்து அவனுடைய பிதுரார்ஜிதமான ராஜ்யத்தை நந்தர்களிட மிருந்து ஜயித்து அவனுக்கு பட்டாபிஷேகம் செய்விக்கவேண்டி தண்டெடுத்து வந்திருக்கிறோம். இச்சமயம் நீங்கள் சேனா ஸமேதமாக வந்து நமக்கு ஸஹாயம் செய்தால் இதை மறவோம். அன்றியும் பாக்கி விஷயங்களும் நீங்கள் சொல்வது போலவே நடத்தப்படும்" என்றிருந்தது.

இது கண்டு "இக்கடிதம் வந்திருக்கும் செய்தியை நாம் நமக்குப் பிரபுக்களான நந்தர்களுக்கறிவிக்காமல் இருந்தால் என்னிடமுள்ள விசுவாசத்தையும் அவர்கள் துறப்பதுடன் நம்மீதும் கோபிப்பார்கள். ஆனதால் இப்பொழுதே இக்கடிதத்தை அனுப்ப வேண்டும்" என்று காசிராஜன் தீர்மானித்து நியோகியைப பார்த்து "ஐயா நியோகியே! நீர் இன்று விடுதியில் தங்கியிரும். நாளைய தினம் பதில் தருகிறோம்" என்று அவனுக்குத் தாம்பூலம் அளித்ததும், அந்நியோகியும் "சரி" யென்று கும்பிட்டு ராஜஸ்தானத்தின் வாயிலில் இரண்டு தூதர்களை நிறுத்தி நான் சென்றபின் இங்கு நடக்கும் விசேஷங்களை யறிந்து வாருங்கள்" என்றுரைத்துத் தன்

பிறகு காசீ ராஜனும் நந்தர்களுக் கொரு கடிதமெழுதிப் பருவதேசனின் கடிதத்தையும் அத்துடன் வைத்து,முத்திரையிட்டு இரண்டு குதிரை வீரர்கள் கைக்கொடுத்து, "நீங்கள் பாடலீபுரம்சென்று மந்திரி அமாத்ய ராக்ஷஸரிடம் கொடுத்து இதற்குப் பதில் கடிதத்தை வாங்கிக் கொண்டு நாளைத் தினமே இங்கு வந்து

சேர வேண்டியது" என்று உத்திரவிட்டு அனுப்பினான். அவ்வாறே அத்தூதர்களும் வேகத்துடன் பாடலீபுரம் சென்று அமாத்ய ராக்ஷஸனைக் கண்டு கும்பிட்டுக் கடிதத்தைக் கொடுத்தார்கள். அமாத்யனும் அதைப் படித்துக் கொண்டு நந்தர்களிடம் சென்று அக்கடிதத்தைக் கொடுத்தான். அதில்,

"ஸ்ரீமத் ராஜாதிராஜரான நந்த ஸார்வ பௌமருக்கு மித்திரனை காசி ராஜன் செய்து கொள்ளும் விக்ஞாபனம்: தங்களுக்கு நான் பிரேம பாத்திரன் என்பதை பர்வதராஜன் மூடத்தனத்தினால் அறியாது, தனக்கு என்னை யுதவியாக வரும்படி எழுதியிருக்கிறான். அக்கடிதத்தையும் அனுப்பி யிருக்கிறேன். அக்கடிதம் கொண்டு வந்திருக்கும் நியோகியைக் காவலிலிட்டு அங்கு அனுப்பி விடுகிறதா? அல்லது வெருட்டி விடட்டுமா? உத்தரவாக வேண்டும்." என்று எழுதியிருந்ததை நந்தர்கள் பார்த்து, இதற் கென்ன யோசனை? யென்று அமாத்யனைக் கேட்டார்கள். அதற்கு ராக்ஷஸன் அரசர்களே! நான் பருவத ராஜனுக்கும் அவனுடைய அரசர்களுக்கும் செய்திருக்கும் பேதோபாயம் அறிந்து கொள்ளாமல் பருவதேசன் நமது அரசர்களைத் தன் சகாயததிற்கு வரும்படி காசி ராஜனுக்கு நியோகியிடம் கடிதம் அனுப்பி யிருக்கிறான். இதென்ன காரணமோ?"வென்று சொல்லிக் கொண்டிருக்கும்போது இவ்விதமே மச்ச தேசத் தானிடமிருந்து தூதர்கள் கடிதம் கொண்டு வந்து கொடுத்தார்கள். அதையும் நந்தர்களிடம் கொடுத்து "இன்ன மிப்படி நமது பக்கத்தரசர் எத்தனைபேர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறானோ? இதென்ன யோசனையோ? தெரிய வில்லையே" யென்று யோசித்துத் தனக்குள் ஒரு விதம் தீர்மானித்து, அவ்வாலோசனையை நந்தர்களுக்கறிவித்து அவர்கள் சம்மதத்துடன் காசி ராஜனுக்கு ஓர் கடிதமெழுதி ராஜ முத்திரை யிட்டுக் காசி மன்னன் தூதர்களிடம் கொடுத்து "இன்றைய தினமே உங்களரசனிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும்" என்று உத்தரவிட் டனுப்பினான்.

அத்தூதர்களும் காசிபட்டணத்திற்கு வந்துகொண்டிருந்தார்கள். காசி ராஜனின் ஆஸ்தான வாயிலில் நின்றிருந்த தூதர்கள் தமது நியோகியிடம் சென்று "ஸ்வாமி! நாங்கள் இவ்விடம் வந்த

தும் குதிரை வீரரிருவர்கள் வெகு வேகமாய் இப்பட்டணத்தின் கிழக்கு வாயில் வழியாகச் சென்றார்கள்" என்று விளம்பினார்கள். அது கேட்டு நியோகியும் "சரி" யென்று மறுநாள் காலையில் அரச னுத்திரவு ப்ரகாரம் ஆஸ்தானம் சென்று தன் வரவை காசி ராஜனு க்கறிவித்ததும், பாடலீபுரத்திற் கனுப்பிய கடிதத்திற்குப் பதில் வராததினால் வேறு சாக்குச் சொல்லி "இன்று சமயமில்லை. ஒழிந்த தும் சொல்லி யனுப்புவோம்" என்று தூதர்களைக் கொண்டு தெரி வித்தான். இவைகளை யெல்லாம் அறிந்து கொண்ட நியோகியும் யாதும் அறியாதவன் போலச் "சரி" யென்று தன் விடுதி வந்து சேர்ந்தான்.

அத்தினம் சாயங்காலமே பாடலீபுரம் சென்ற குதிரை வீரர் இருவரும் வந்து சேர்ந்து அரசனிடம் அமாத்ய ராக்ஷஸனால் அனு ப்பப்பட்ட பதில் கடிதத்தைத் தந்தார்கள். அதில் பின்வருமாறு எழுதி இருந்தது:

"ஸ்ரீமத் காசிராஜருக்கு மித்திரர்களான நந்தர்கள் செய்யும் விக்ஞாபனம் மென்ன வென்றால்: "நீங்கள் அனுப்பிய இரு கடிதமும் கிடைத்துச் சகலசமாசாரங்களையும் அறிந்து கொண்டோம். நமக் குள் ளிருக்கும் சினேக பாவத்தை யறியாமல் மூடனாகிய பருவதே சன் எழுதி யனுப்பியது நமக்கு அனுகூலமே யாயிற்று. அஃதிரு க்கட்டும். நம்முடைய ஜயமே உங்களுடைய தென்று பருவதராஜன் உங்களுக் கெழுதி யிருப்பது போலவே நீங்களும் எழுதி யனுப்பி விட்டு, ஸேனைகளுடன் அவனுக்கு உதவி செய்யப் போவது போல் செல்ல வேண்டியது. பிறகு வழி மத்தியில் இறங்கிக்கொண்டு இரு ந்தால் இம்மட்டும் நமக்கு சகாயமாய் வந்தான் என்று சந்தோஷித் த பருவதேசன் உங்களை யெதிர் கொண் டழைத்துச் செல்லும்படி சந்திரகுப்தனையே அனுப்புவான். அவ்விதமானால் அச்சமயத்தில் சந்திரகுப்தனைக் கொன்றுவிட வேண்டியது. அப்படிக் கல்லாது தனது குமாரனான மலயகேதுவை அனுப்பினாகில் ஸர்வ ப்ரயத்த னத்தாலும் அவனைச் சிறைப் பிடித்து நாமிருக்கும் இடம் அழைத்து வர வேண்டியது. இவ்விரண்டு விதமு மல்லாது வேறு யாரை யனு ப்பினாலும் உடன்பட்டுச் சென்று பருவதேசன் ஸேனையில் இறங்கி க்கொண்டிருந்து சமயமறிந்து சந்திரகுப்தனைக் கொன்று விட்டால்

இச்சமயம் ஏற்பட்டிருக்கும் ராஜகாரியம் உங்களாலேயே விலகினது போலாகும். சமீபத்திலிருப்பவரும் நமக்கு ஆப்த சினேகிதரும் கால தேசம் அறிந்தவருமான தங்களுக்கு நாங்கள் அதிகம் சொல்ல வேண்டியதில்லை. இது முடிந்தால் உங்கள் மனம் போல் நாங்கள் நடந்து கொள்ளச் சித்தமா யிருக்கிறோம்"

இதைப் படித்தறிந்த காசி ராஜன் "இவ்வாலோசனை ராக்ஷஸ னுடையதே" யென்றறிந்து தனது மந்திரிகளுடன் ஆலோசித்து "இதுவே சரி" யென்று தீர்மானித்துக் கொண்டு பருவதேசனின் நியோகியை யழைத்து வரும்படி தூதர்களை யனுப்பினான்.

இதற்குள், காசீ மார்க்கத்தில் நின்றிருந்த பருவதேசனின் சாரர்கள் தமது நியோகியிடம் வந்து "ஸ்வாமீ! நேற்று இங்கிருந்து இரண்டு குதிரை வீரர்கள் பாடலீபுரம் சென்றவர்கள் இப்பொழுது தான் திரும்பி ஆஸ்தானத்தில் இறங்கினார்கள்" என்று சொல்லிக் கொண்டிருக்கும்போதே காசிராஜன் தூதர்கள் "ஆஸ்தானத்திற்கு வரும்படி அரச னுத்திரவா யிருக்கிறது" என்றார்கள்.

நியோகியும் உடனே சென்று அரசனை நமஸ்கரித்து உட்கார்ந்ததும் "ஐயா நியோகியே! குணஸம்பன்னரான பருவதேசன் நம்மை லக்ஷியம் செய்து சகாயத்திற் கழைத்திருக்கும் போது நாம் மீறக்கூடாது. ஸேனைகளுடன் நாளை புறப்படுகிறோம் என்று எழுதியனுப்புக" என்று உரைத்தான்.

அது கேட்டு நியோகியும் "ராஜாதிராஜரான காசிராஜரே! லோக பூஜ்யரான திவோதாஸ மஹாராஜாவின் வம்சத் துதித்தவராயும் குணவானாயும் சூரராயும் இருக்கும் தாங்கள் பருவதேசனின் சகாயத்திற்கு வரும்போது தங்களை மரியாதையுடன் அழைத்துச் செல்வதற்கு நமதரசரே எதிர்கொண்டு வரவேண்டியது. இல்லையாகில் சந்திரகுப்தனோ மலயகேதுவோ வரவேண்டியது அவசியம். ஆகையால் தாங்கள் ஸம்மதித்த விஷயத்தை நான் முந்தி யெழுதி யனுப்பிப் பதில் கிடைத்ததும் தாங்கள் புறப்படலாம்" என்றதும், அரசனும் சம்மதித்துத் தாம்பூலமளித்து அவனை விடுதிக் கனுப்பினான்.

உடனே நியோகியும் அவ்விடம் தான் வந்தது முதல் அது வரை நடந்த சகல சமாசாரங்களை விவரமா யெழுதி முத்திரை வைத்து "இதை யுடனே சாணக்யரிடம் கொண்டு போய்க் கொடு" வென்று தூதனிடம் அனுப்ப, அத்தூதனும் கடிதத்துடன் பருவத ராஜஸேனைக்குச் சென்று கொண்டிருந்தான்.

மறுநாள் காசிராஜன் பருவதேசனின் நியோகியை வரவழைத்து "ஏன் ஐயா உங்கள் அரசரிடமிருந்து பதில் கடிதம் வந்ததோ?" வென்று கேட்டான். அதற்கு நியோகியும் நாளை யேனும் அதற்கு மறு தினமேனும் வரக்கூடும். வந்ததும் தெரிவிக்கிறேன்" என்றான். இன்னொரு நாள் அரசன் கேட்டதற்கு, ராஜகாரியம் பலமாய் மார்க்கத்தில் தடையேற்பட் டிருக்கலாம். அதனாலேயே தாமசமாகிறது என்றான். இவ்விதம் கேட்ட பொழுதெல்லாம் ஏதேனும் தக்க பதில் சொல்லிக் கொண்டு காசிராஜனை யவ்விடம் விட்டுப் புறப்படா வண்ணம் சாணக்யருடைய ஆக்ஞைப்படி அவ் விடமே தாமதப் படுத்திக் கொண்டும் மணிகர்ணிகா ஸ்நானத்தில் ஆஸக்தனாக சாணக்யருடைய எண்ணப்படி காரியம் நிறைவேறு வதையே எதிர்பார்த்துக் கொண்டும், பருவதேசனின் நியோகியான கமலாபீடனும் காசிபட்டணத்தி லிருந்து கொண்டிருந்தான். நிற்க.

இங்கு,நியோகியின் தூதன் சாணக்யரிடம் கடிதம்கொடுத்ததும் அதைப் படித்துப் பார்த்துக் கொண்ட சாணக்யனும் தன் மனதில் "நான் எந்த உத்தேசங்கொண்டு காசீ மைதிலம் மச்சம் இம்மூன் றரசர்களும் ஸஹாயமாய் வரும்படி பருவதேசனைக் கொண்டு கடித மெழுதுவித்து,அதிலும் ஸமீபத்திலிருக்கும் காசீ ராஜனிடம் கமலா பீட னென்பவனை யனுப்பினேனோ அந்தக் காரியங்களெல்லாம் சௌ கரியப் பட்டிருக்கின்றன. எனது கபடத்தை ராக்ஷஸன் அறியா மல் காசிராஜனைக் கொண்டு என்னை ஏமாற்றப் போகிறதாக நினைத்திருக்கிறான். இச்சங்கதியை நந்தர்களும் அறிந்தே யிருப்பா ர்கள். இவ்விதம் நந்தர்கள் எண்ணியிருக்க வேண்டுமென்றே நான் இக்கபடம் செய்தேன். நந்தர்களுக்கும் அவர்கள் ஸேனைக்கும் பிரிவுண்டாவதற்கும் இதுவே காரணமாகலாம். என்னுத்திரவுப் படி நியோகி கமலாபீடனும் காசிராஜனைப் புறப்பட விடாமல் அங்

கேயே தேக்கிக்கொண் டிருப்பதால் நந்தர்களின் சம்ஹாரத்திற்கு இது முதல் ஸாதன மாயிற்று. மாஸோபவாஸியின் வாக்யம் இரண்டாவது சாதகமாகவேண்டும். சேகரனுடைய சேனை மூன்றுவது சாதனமாகும். இம்மூன்று ஸாதனங்களு மிருக்கும்போது நந்தர்கள் எந்தப் பாதாளத்தில் ஒளியக்கூடும்?" என்று தீர்மானித்துக்கொண்டு சந்தியா வந்தனாதி அனுஷ்டானம் செய்யச் சென்றான்.

## பதினாறாவது அத்தியாயம்.

# இந்து சர்மனைச் சோதித்தல்.

ராக்ஷஸன் இங்கு, முன் ராக்ஷஸன் அனுப்பிய பத்திரிகை கொண்டு சென்ற சாரன் பருவதராஜன் ஸேனையில் அகப்பட்டு மூக்கறுபட்டதையும், எட்டு வியாபாரிகளை யுடனே காவலிலிட்டு அவரவர்கள் தேசத்திற்கு அனுபபியதையும் கண்டு, தம்மிட மிருக்கும் கடிதங்களைக் கிழித்து வாயில் போட்டு மென்றுவிட்டு ஓடிவந்த எஞ்சிய தூதர்கள், பாடலீபுரம் வந்து, ராக்ஷஸனைக் கண்டு கும்பிட்டு சகல விருத்தாந்தங்களையும் உரைத்ததுமன்றி "ஸ்வாமீ! இங்கிருந்து சென்ற நமது டிங்கிராதன் ஸேனைகளும் சத்துருக்களின் ஸேனைகளும் நடுவில் ஆறு யோசனை தூரந்தான் இருக்கிறது. சத்துருக்கள் நெருங்கிவிட்டார்கள். இன்னும் இரண்டு நாட்களில் உபய ஸேனையும் கை கலக்கும் என்று தோன்றுகிறது" என்றார்கள்.

இது கேட்ட ராக்ஷஸனும் தன் மனதில் "நான் சத்துருக்கள் விஷயத்தில் செய்யும் பேதோபாயங்கள் இது வரை இத்தடவை போல பங்க மடைந்த தில்லை. இப்பொழுது சத்துரு ஸேனையில் அகப்பட்ட சாரன் கையிலிருந்த இரு கடித ப்ரகாரம் இரு வியாபாரிகள் வெளிபட வேண்டு மல்லாது எட்டுப் பேர்களையும் காவலிவிட்டு வெருட்டி விட்டதற்குக் காரணம் என்னவோ தெரியவில்லை. நமது ஆலோசனைகளைச் சத்துரு அறிய இட மில்லையே. மாயலக்காரர்கள் குல பரம்பரையாய் ஆப்தர்களானதால் அவர்களால் வெளிப்படாது. ராஜகாரிய ரஹஸிய ஆலோசனைகளில், கூட்டிலிருக்கும்

ளிகளும் அவ்விடம் இருக்கக் கூடாதென்று நீதி வாக்ய முண்டு. நான் இக்கடிதம் எழுதும் சமயம் க்ஷபணகன் தியானத்தி லிருந்தான். அவனிடம் கபடம் இருக்கும் பக்ஷத்தில் அதுவே இதற்குக் காரண மென்பதில் தடையில்லை. மிஞ்சிப் போன காரியத்தில் ஆராய்ச்சி செய்வதில் பயனில்லை. உபேக்ஷியாமல் க்ஷபணகனைப் பரீக்ஷித் தறிய வேண்டும்" என்று தீர்மானித்து "சந்திரகுப்தனுக்கு ஸஹாயமாய் வந்திருக்கும் சாணக்யன் மெத்த ஸாஹஸவான் என்று தோன்றுகிறது. இனிமேல், நந்தர்கள் அதிருஷ்டம் எவ்விதமிருக்கிறதோ" வென்று விஸனப் பட்டுக் கொண்டே புத்திசாலியான ஓர் பிராமணனை வரவழைத்து க்ஷபணகனின் நடவடிக்கைகளை நேரிலும் மறைவிலும் இருந்து நன்றாய்க் கண்டறிந்து வருமாறு அனுப்பிவிட்டு சாரர்களைப் பார்த்து "தூதர்களே! சத்துரு ஸேனையின் முன்பக்கம் வரும் ஸேனாதிபதி யார்? பின்புறத்தில் யார் யார் வருகிறார்கள்? சொல்லுங்கள்" என்றான்.

அதற்கு அவர்கள் "ஸ்வாமீ! நாங்கள் கண்ணால் கண்டதை விளம்புகிறோம். சத்துரு ஸேனை முன்பாகத்தில் பில்லமாதங்க னென்ற கிராதாதி பதியின் சேனை அனேகவித வியூகமும் வகுத்துக் கொண்டு கார்மேகக் கூட்டமோ, கலிபுருஷனின் பரிவாரமோ, வாயு வேகத்தால் நடுங்கும் தபால வனமோ, சலிக்கும் கால யமனின் படர்களோ, பாதாளத்தி லிருந்து பூமியைப் பேர்த்துக் கொண்டு வரும் ராக்ஷஸக் கூட்டமோ, அர்ச்சுன பாணங்களால் கஷ்டப் பட்டோடி பிசாசு உருக் கொண்ட நிவாத கவசர்களின் கும்பலோ, என்று பிரமிக்கும்படி நீல வர்ணத்துடன் கூடிய துவஜத்துடன் வந்துகொண்டிருக்கிறது. அதற்கடுத்துப் பின்புறம் ரக்த வஸ்திரத்துடன் விளங்கிய துவஜ பதாகைகளுடன் அதி ரௌத்திராகாரமாய் ஹூணஸேனை வந்து கொண்டிருக்கிறது. அதற்குப் பின்புறம் கதலிவன ஸமூஹம் போல் மயூர பிஞ்ச லக்ஷணத்துடன் கூடிய சிவப்புக் கலந்த மஞ்சள் நிற வஸ்திரத்துடன் கூடிய துவஜத்துடன் பயங்கரமான சீன ஸேனை வந்துகொண்டிருக்கிறது. அதற்கடுத்து பக்குவமாயுள்ள மாம்ச ராசிபோல் காஷாய வஸ்திரத்தினால் அலங்கரிக்கப்பெற்று திரிபுண்டரத்தினால் அடையாளம் செய்யப்பட்ட துவஜத்துடன் கூடி மிருத்துவின் பரிவாரமோ என்று நினைக்கும்படி

சக ஸேனை வந்துகொண் டிருக்கிறது. அதற்கடுத்து அரும்பு சமயத்தி லிருக்கும் நெற்கதிரைப் போல் பீத வஸ்திரத்துடனும் மான் குட்டியால் அடையாளம் செய்யப்பட்டுள்ள துவஜத்துடனும் கூடி அதிபயங்கரமாய் சிந்து பதி ஸேனை வருகிறது. அதற்கு வலப்பக்கத்தில் கபில வஸ்திரத்துடன் கூடிய கால த்வஜமுடைய மலயபதி சிம்மநாதன் ஸேனை வருகிறது. அதற்கடுத்து சித்திர வஸ்திரத்துடனும் சித்திர மிருகத்துடனும் கூடிய துவஜத்துடன் கூடி பிரளய கால பைரவக் கூட்டம் போல் சித்திரவர்மன் ஸேனை வந்துகொண்டிருக்கிறது. அதை யடுத்து சுப்பிர வஸ்திரத்துடனும் தூமரேகையுடனும் கூடிய பார்ப்பவர்களுக்குப் பயங்கரமான துவஜத்துடன் பாவதேயரின் ஸேனை வருகிறது. அதற்கடுத்துப் பாரசீகன் ஸேனைகளும் இன்ன மெவ்வளவோ சிற்றரசர்களின் ஸேனைகளும் வருகின்றன. எங்களால் கணக்கிட்டு முடியவில்லை" என்றார்கள். அதைக் கேட்டு ராக்ஷஸன் "ஆஹா சத்துரு சமீபித்துவிட்டான். இனி இந் நகரத்தை ரக்ஷிப்பதற்குத் தக்க ஏற்பாடு செய்யவேண்டும்" என்று யோசித்துக் கொண்டே நந்தர்கள் ஸமீபம் வந்தான்.

அப்பொழுது சர்வார்த்தஸித்தி ராஜன் ராக்ஷஸனை வழியிற் கண்டு அவனுடன் தனது புத்திரர்களிடம் வந்து உசித ப்ரகாரம் உட்கார்ந்ததும், தனதுபுத்திரர்கள் நமஸ்கரிக்க, அவர்களை ஆசீர்வதித்து அவர்களையும் ராக்ஷஸனையும் உட்காரச் சொல்லி "குழந்தைகளே! பருவதேசன் அநேகம் தேசாபதிகளுடன் கூடி நம்மீது தண்டெடுத்து வருகிறானாம். நீங்கள் சூரர்களே யானாலும் சத்துருக்கள் பலத்திருக்கும் ஸமயத்தில் சந்தி பேசிக்கொண்டு சில காலத்தில் பருவதேசனுக்கும் அவன் கைக் கீழ் இருக்கும் மன்னர்களுக்கும் பேதோபாயத்தினால் கலக முண்டாக்கிப் பருவதேசனைத் தனிப்படுத்திப் பிறகு அவன்மேல் தண்டெடுத்துச் சென்றால் சுலபமாய் ஜயித்து விடலாம். இது ராஜ தருமமே யொழிய நமக்கு அவமானமல்ல. நானோ கிழவனாய் விட்டேன். இந்த யோசனை உங்களுக்கும் அமாத்ய ராக்ஷஸனுக்கும் ஸம்மதமாகில்அவ்விதமே செய்யுங்கள்" என்றுரைத்தான்.

அதற்கு ராக்ஷஸன், "மஹாராஜ ஸ்வாமீ! தாங்கள் உத்திரவிட்டது உசிதமே. ஆனாலும் எனக்குத் தோன்றியதை விக்ஞாபித்துக்

கொள்ள இடந்தர வேண்டும்'' என்று கைகளைக் கூப்பிக்கொண்டு "அனேக ஸாமந்த மன்னர்களால் பூஜிக்கப்பட்ட பாத பத்மங்களையுடைய தங்கள் தேசத்தைச் சத்துருவாய் வந்திருக்கும் பருவதராஜன் மிதித்த வுடனேயே சந்தி பேசுவோமாகில் நாம் அசக்தர்கள் என்று மதித்து ராஜ்ய கோசங்களை விரும்புவான். இது கொஞ்சத்தில் முடிவு பெற மாட்டாது. அனேகம் சூரர்களுடன் கூடி நமது ஸேனை சத்துருக்கள் மீது சென்று யுத்தம் செய்தால் பருவதேசன் திரும்பி யோடி விடுவதில் ஸந்தேஹமே யில்லை. ஒருக்கால் ஸமமாகயுத்தம் நடந்தாலும் நமக்குச் சுதேசமாகையால் நம்முடன் அயல தேசம் வந்திருக்கும் அவனால் நெடுநாள் எதிர்க்க முடியாது. ஓடி விடுவான். அல்லது அவனே வலுவில் சந்தி பேச வருவான். அப்பொழுதும் நமக்கு ஜயமே. விதி வசத்தால் நமது ஸைன்யம் பின்னடைந்து நமக்கு அபஜய முண்டாகும் போல் இருந்தால் அச்சமயம் சந்தி பேசலாம். முந்தி சத்துருக்களிடம் நமது பராக்ரமத்தைக் காண்பிப்பதே முகயம்'' என்றான்,

அப்பொழுது நந்தர்கள் பிதாவை வணங்கி அப்பா! "முந்தி சில சத்துரு மன்னர்களால் தூண்டப்பட்டு நம்மைசசேர்ந்த பங்காள ஒட்ர மைதில மகத விந்திய கிராத கலிங்க தேசத்து மன்னர்கள் நம்மீதே தண்டெடுத்து வந்த போது உங்களால் ஸன்மானிக்கப் பட்ட நமது ஸேனைபதிகள் ஸேனைகளுடன் அவர்களை யெதிர்த்துத் தாங்கள் புறப்படும் முன்னமேயே அவர்களெல்லோரையும் சிறைப்பிடித்து வந்து தங்களிடம் ஒப்புவிக்க வில்லையா? அவர்கள் எல்லோர்களைக் காட்டிலும் பர்வதேசன் பலசாலியாவானோ? ஏன் உங்களுக்கு ஸந்தேஹம்? இப்பொழுது நாங்கள் சத்துருக்களை மடக்கி யுத்தம் செய்து பருவதேசனை யவன் பிள்ளையுடன் சிறைபிடித்து வருவதைக் கண்டு தாங்கள் ஸந்தோஷப் படப் போகிறீர்கள்.'' என்று சொல்லி அவரை அந்தப்புரத்திற்கு அனுப்பிவிட்டு ராக்ஷஸனைப் பார்த்து "ஐயா அமாத்யரே! நமது பிரயாணத்திற்கு சிலாக்கியமான முகூர்த்தத்தைத் தக்க ஜோதிடர்களைக்கண்டு நிச்சயித்துத் தாங்களும் புறப்படுவதற்குத் தயாராக இருங்கள்'' என்று உரைத்து அவனை யனுப்பிவிட்டு அந்தப்புரம் சென்றார்கள்.

இங்கு க்ஷபணகனைப் பரீக்ஷித்து அறியும்படி ராக்ஷஸனால் அனுப்பப்பட்ட பிராமணனும் ஊர் வெளியிலிருக்கும் சாவடி மேடையில் ஸ்தாணுவைப் போல் அசையாது உட்கார்ந்திருக்கும் க்ஷபணகனைத் தூரத்திலிருந்து கண்டு "இவன் எங்கு செல்கிறான்? என்ன செய்கிறான்? யார் யார் இவனிடம் வந்து போகிறார்கள்? என்றதை அறிய வேண்டும்" என்று ஒளித்திருந்து பார்த்துக் கொண் டிருந்தான்.

க்ஷபணகன் இரண்டு மூன்று நாட்கள் வரையில் அன்னுகார நித்திரைகள் இல்லாமல் மரக்கட்டை போல அசையாது உட்கார்ந் திருப்பதுகண்டு "இவன் எல்லோரையும் போல் சாதாரண யோகி யல்லன். மஹானாகத் தோன்றுகிறான். ஆனாலும் நான் இவனிடம் சிஷ்யனாக இருந்துகொண்டு இவன் சுபாவங்களை அறியவேண்டும்." என்று தீர்மானித்து அந்தப் பிரமாணனும் பௌத்தமதக்காரனைப் போல் சென்று க்ஷபணகனுக்கு ப்ரதக்ஷிண நமஸ்காரங்கள் செய்து கைகளைக் கூப்பிக்கொண்டு நின்றான்.

அவனைக் கண்டு க்ஷபணகன் தன் மயில் தோகையினால் உட் காரும்படிக்கும், எங்கு வந்தானென்றும் ஜாடைசெய்து கேட்டான். அதற்கவன் "குருவே! ஸம்ஸாராக்கினியால் தவித்துத் தங்கள் பாத த்தைச் சரணமடைந்து அத்தாபத்தி னின்றும் முக்தனாக வேண்டு மென்ற ஆசையினால் வந்தேன். என்னிடம் மௌனத்தைவிட்டு பரதத்துவத்தை யுபதேசித்து என்னைக் கிருதார்த்தனாக்க வேண் டும்" என்று க்ஷபணகனின் கால்களைப் பிடித்துக் கொண்டான்

அவனை யுற்றுப் பார்த்து க்ஷபணகன் பௌத்தர்கள் ஸலாட சூன்யர்கள் ஆனதால் இவன் நெற்றியில் திலகமிடும் அடையாள மிருப்பது கண்டு "இவன் பௌத்தனுமல்லன், உபதேசம் பெற எண்ணியவனும் அல்லன். நாம் முந்தி ஆலோசித்தபடி நம்மைப் பரிசோதிப்பதற்கு ராக்ஷஸனால் அனுப்பப்பட்டிருக்கிறான். இவனுக் குத் தக்கபடி உபதேசித் தனுப்பவேண்டும்" என்று தனக்குள் தீர்மானித்து மௌனத்தை விட்டு "ஐயா தத்துவாதிகாரியே! உன்னைப் பார்த்தால் குரு பக்தனாகத் தோன்றுகிறது. நீ இகம்பர

சித்தாந்த உபதேசம் பெறுவதற்கு யோக்கியனானையால், ஆதி ஸம்ஸ்காரத்தில் எந்த ஸம்பிரதாயத்தை அனுஸரித்து உனக்கு உபதேசம் செய்யப்பட்டிருக்கிறது? அதைச் சொல்" என்றான்.

அதற்கு அவன் பிரமித்து ஏதோ வொரு விதமாய்த் தப்புந் தவறுமாகப் பதிலுரைத்தும், அதை ஒப்புக்கொண்டவன் போல் க்ஷபணகன் நடித்து, இது கிருத்திரமம் என்பதை நிச்சயமாக அறிந்து, அவனை ஸமீபத்தில் அழைத்துத் தனது மயிற் பீலியால் தடவி அபிமந்திரித்தது போல் செய்து, அவன் தலையை மொட்டையடித்து அவன் அரையிலுள்ள துணி மணிகளை வழிப்போக்கர்களுக்குக் கொடுப்பித்து இன்னொரு மயிற்பீலியை அவன் கையில் கொடுத்து அன்னபானத்திற்குக் கப்பரையை யளித்து "மனது பரிபாகம் அடையும் வரை யாசிககாமல் ஜீவித்து சைதன்ய வந்தனதிகளைச் செய்து பக்தியுடனிருந்தால் மனது பரிபாகமடைந்ததும் உனக்குப் பர தத்துவத்தை உபதேசித்து நமது பீடத்திற்கும் பின்னால் உன்னை யேற்படுத்துவோம். நீ ப்ராதக்காலத்தில் பன்னிரண்டு நமஸ்காரம் செய்து. சைதன்ய வந்தனையை நூற்றெட்டுத் தரம் செய்து பிச்சை யெடுத்து வயிறு வளர்த்து இவ்விதமே மாலைப் பொழுதிலும் நடந்துகொண்டிரு" என்று உத்திரவிட்டு மறுபடியும் மௌன மடைந்தான்.

இதை யெல்லாம் கேட்டு அப்பிராமணனும் தனக்குற்ற துர்திசைக்கு விஸனமடைந்து "இச்சமயம் இவ்விதம்செய்யாமல் தீராது என்று க்ஷபணகனைப் பன்னிரண்டு நமஸ்காரங்கள் செய்து அவனுட்கார்ந்திருக்கும் மேடையை நூற்றெட்டு பிரதக்ஷிண நமஸ்காரம் செய்து வாடி வதங்கி நாவறண்டு கைகால் ஓய்ந்து கப்பரையையும் பிஞ்சத்தையும் எடுத்துக்கொண்டு குருவை நமஸ்கரித்து பிச்சை யெடுப்பதற்கு உத்திரவு பெற்றுக்கொண்டு, நிருவாணியாதலின் ஊருக்குள் வர வெட்கம் அடைந்து பக்கத்திலிருந்த காட்டிற்குள் ஓடி இருட்டும் வரையில் அங்கொளித்திருந்து இருட்டியதும் மரவுரியைக் கௌபீனமாகத் தரித்து கப்பரையையும் மயிற்பீலியையும் விட்டெறிந்து தன் வீடு வந்து சேர்ந்து வஸ்திரங் கட்டிக்கொண்டு தலையில் சவுக்கத்தைப் போர்த்துக்கொண்டு நடந்ததை

ராக்ஷஸனிடம் உரைக்க வெட்கி, "என்னசொல்லலாம்" என்றுஆலோசித்துக் கொண்டே அவனிடம் வந்து நமஸ்கரித்து, "ஸ்வாமீ அமாத்ய சிரேஷ்டரே! உத்திரவுப் பிரகாரம் எதிரிலும் மறைவிலும் இருந்து எவ்வளவோ பரிசோதித்தும் க்ஷபணகனிடம் எள்ளளவு தோஷமும் வித்தியாஸமும் கபடமும் காணப்படவில்லை. ஸர்வ சங்கத்தையும் துறந்த மகா யோகி அவனேயன்றி வேறில்லை. தோஷம் மனதினால் எண்ணினாலும் பாபம் சம்பவிக்கும்" என்றான்.

அதுகேட்டு ராக்ஷஸன் க்ஷபணகனிடம் கபடமில்லாததினால், "பருவதேசன் இரு கடிதங்களால் மற்ற வியாபாரிகளும் இவ்விதமே யிருப்பார்கள் என்று ஊகித்து மீதி ஆறு வியாபாரிகளையும் துரத்தி யிருப்பான்" என்று நிச்சயித்து க்ஷபணகனிடம் ஸம்சயமின்றி முன்போலவே நம்பிக்கை கொண்டு இதர காரியங்களைப் பார்த்துக் கொண் டிருந்தான்.

---

## பதினேழாவது அதிகாரம்.

# நவநந்தர் தம் நாயகிமாரிடம் விடைபெறல்.

---

அங்கு, பருவதேசன், நந்தர்களின் சேனைகள் தனது சைனியத்தைத் தடுத்து யுத்தம் செய்ய வருவது கண்டு வேறு வழியில் சென்று பாடலீபுரத்தை முற்றுகையிட வேண்டுமென்று தனது மந்திரி சபரவர்மனுடன் ஆலோசிக்க, அவனும் "ஸ்வாமீ! தாங்கள் சொன்ன உபாயம் சிலாக்கியமாக இருக்கிறது. நந்தர்கள் புதன் கிழமை யன்று பட்டணத்திலிருந்து புறப்பட்டு சைன்யத்திற்கு வருவதாக நமது ஒற்றர்கள் தெரிவித்ததால் அத்தினம் இரவில் பாடலீபுரத்தில் லங்கர் ஏற்றும் பொருட்டு நமது ஸேனைகளை இரு பிரிவாகப் பிரித்து ஒரு பாகத்தை நம்முடன் நிறுத்திக்கொண்டு மற்றப் பாதியை இரு பிரிவாக்கி ஒருபாகத்தை ஸரயூ நதியை யனுஸரித்துச் சென்று பாடலீபுரத்தின் மேற்கு தெற்கு (உத்திர பச்சிம) திக்குகளில் லங்கர் ஏற்றும்படிக்கும், மகத தேசத்தின் கிரிவ் ராஜ மார்க்கமாகச் சென்று கண்டகி நதி சோண பத்ரா நதிகளைத்

தாண்டி பாடலீபுத்திரத்தின் பூர்வ பச்சிம தக்ஷிண திக்குகளிலும் லங்கர் ஏற்றும்படிக்கும், நமது ஸேனாபதிகளுக்கு உத்திரவிட்டால் எதிரிகளின் பிரயத்தனத்திற்குப் பிரதிகூலமும் நமது காரியத்திற்கு அனுகூலமும் ஏற்படும்" என்று விக்ஞாபித்தான்.

அதற்குப்பருவதேசனும் ஸம்மதித்துச் சேகர முக்யர்களான அரசர்களை வரவழைத்து "சூரர்களான அரசர்களே! சமீபத்தில் நேர்ந்திருக்கும் ஸமயத்திலேயே நமது காரியங்களை ஸாதித்துக் கொள்ளவேண்டும். சத்துரு சேனைகள் நம்மை நெருங்கி வந்து இருப்பதால் இதே ஸமயத்தில் பாடலீபுரத்தை முற்றுகையிட்டு லங்கர் ஏற்றவேண்டியது. புதன்கிழமை நந்தர்கள் ராக்ஷஸனுடன் தண்டிறங்கி யிருக்கும் ஊர் வெளியிலுள்ள பாளையத்திற்கு வருகிறார்களாம். அத்தினம் இரவில் பாடலீபுரத்தை முற்றுகை யிடுவதற்குக் கிராத ஸேனையும் ஹூண சேனையும் ஸரயூ நதியை யனுஸரித்துச் சென்று கங்கா நதியைத் தாண்டி நகரத்தைப் பிடித்து உத்தர பச்சிம பாகங்களில் லங்கர் ஏற்றட்டும். சக சீன பதிகள் ஸமஸ்த ஸேனைகளுடன் கிரிவ்ரஜ மார்க்கமாகப் புறப்பட்டு கண்டகீ சோண பத்திரை யென்னும் நதிகளைத் தாண்டி பாடலீபுரத்தின் பூர்வ தக்ஷிண பாகங்களை முற்றுகை யிட்டு மீந்த அரசர்கள் சேனைகளெல்லாம் நம்முட னிருந்து நந்தர்களின் மூல பலத்துடன் சண்டை செய்துகொண் டிருக்கட்டும்" என்று ஆக்ஞாபித்தான். அந்த அரசர்களும் அவ்விதமே தமது ஸேனைகளுடன் சென்றார்கள். நிற்க.

நந்தர்கள் தமது அந்தப்புரத்தில் தத்தமது பத்தினிகளுடன் விலாஸத்துட னிருந்து பிறகு, "நாளை காலையில் எங்களுக்கு விஜய ப்ரயாணம்" என்று தத்தமது நாயகிகளிடம் தெரிவித்தார்கள். அது கேட்டதும் அந்த ஸ்திரீகள் பின்னால் உண்டாகப் போகிற சோக சமுத்திரத்தை எதிர்கொண் டழைக்கப் புறப்படும் நதிகளோ என்னப் பெருகும் கண்ணீர்களைச் சொரிந்தார்கள்.

"பிராண நாயக! இது வரையில் உன்னை விட்டு அரை நாழிகையும் பிரியாமல் இருந்த நான் இப்பொழுது நீ பிரிந்து சென்றால் பிறகு எவ்வாறு உயிர் தரிப்பேன்?" என்று ஓர் ஸுந்தரி வருந்தினாள். மற்றொருத்தி "என் ஜீவாதாரமே! உனது முகமாகிற சந்தி

ஏனால் மலரும் என் மனமாகிற குவளை மலரை வாடச் செய்து நீ யெங்கு செல்லப் போகிறாய்?" என்றாள். மற்றோர் சந்திர முகி "என்னுயிரே! அமிருத வர்ஷம் போன்ற உனது கடைக்கண் பார் வையினால் ஜீவித்து வரும் என்னைப் பிரிந்து செல்வ தழகோ?" வென்றாள். இன்னொரு பாலையானவள் "மன்னா! நான் ஆபரணங் கள் அணிந்து புஷ்பம் சூடுவதற்குள் நீ வந்து விடுவதானால் செல்ல லாம்" என்றாள். வேறொரு அழகி "காந்த! நான் ஸுகந்த ஸ்நா னம் செய்து தலை வாரி முடிந்து கொள்வதற்குள் நீ வராதிருந்தால் உன்னை நம்ப மாட்டேன்" என்றாள். இன்னொரு நாரீமணி யான வள் "பிராண ப்ரிய! எப்பொழுதும் பிரயாண மென்று சொல்லி என்னை ஏமாற்றுவதும் நான் விஸனப்படுவதும் போதும்" என் றாள். இன்னொரு ராஜ குமாரி யானவள் "இப்பொழுது நேர்ந் திருக்கும் ராஜ காரியம் அசாத்யமா யிருந்தாலும் முன் வைத்த காலைப் பின் வாங்காது யுத்தம் செய்வதே க்ஷத்திரிய தர்மமானதால் நமக்கு அதிருஷ்டமிருந்தால் மறுபடி இங்கு ஸந்திப்போம். இல்லை யெனின் நீ யிருக்குமிடம் நானும் வந்து சேர்ந்து விடுவேன்" என்றாள். மற்றொரு கோமளாங்கி "நாத! நாளைய தினம் எனக் கொரு விரத ஸமாப்தி யாகையால் நீயும் என்னுடன் இருந்துவிட்டு மறுநாள் செல்லலாம்" என்று கெஞ்சினாள். ஜேஷ்ட நந்தனின் பத்தினியானவள் தன் நாயகனைப் பார்த்து "ராஜேந்திரா! முன்பு தாரையின் சொல்லை மறுத்து யுத்தத்திற்குச் சென்ற வாலியைப் போல் என் பிரார்த்தனையை மறுக்காது உனது கஷ்ட சுகத்திற்கும் கீர்த்தி யபகீர்த்திக்கும் இம்மை மறுமைக்கும் பாத்தியப்பட்ட வளும் உனது க்ஷேமத்தையே கோர வேண்டியவளுமான என். வார்த்தையை நீ கேட்கவேண்டும். அதென்னவெனில்: முன் நிரபராதிகளும் உங்களுக்கு அனுகூலர்களும் சகோதர புத்திரர் களுமான மௌரியர்களையும் மௌரியரையும் கபடமாய் ஸம்ஹரித் தும், தெய்வ வசத்தால் உயிர்பிழைத்திருந்த சந்திரகுப்தனையாவது நீங்கள் அனுஸரித்து பக்ஷத்துடனும் நம்பிக்கையுடனும் நடத்தி வராமல் அன்ன ஸத்திராதிகாரத்தில் நியமித்தீர்கள். இத்துடன் நில்லாமல் வேண்டும் என்று ராஜாஸனத்தில் உட்கார்ந்திருக்கும் பிராமணன் விஷயத்தை யோசிக்காமலும், அல்லது, ஏதோ விப்ர

சிரேஷ்டன் தேஜஸ்வியாக இருக்கிறான், என்ற கௌரவ புத்தியால் பேசாது இருந்தது விடாமலும், அவனைப்பலவிதமாக அவமானப் படுத்தி, 'உங்களைக் கொல்லாது சிகையைக் கட்டுவதில்லை,' என்று குரூரமான சபதம் செய்தது கண்டும், அப்பிராமணனை சாந்தப் படுத்துவதற்கும் தக்க யோசனை ஒருவருக்கும் தோன்றவுமில்லை. அப்பிராமணனுடன் சந்திரகுப்தனும் சென்று விட்டதால் இதில் முந்தியே ஏதோ யோசனை நடந்திருக்கிறதென்றும்,ஸமீபத்தில் நமக்குக் கெடுதி யேற்படு மென்றும் அறிந்து கொண்டு யுத்தத்திற்கேனும் தக்க ஏற்பாடு செய்து வைத்தீர்களோ? அதுவு மில்லையே. சாணக்யனோ உங்களை சம்ஹரிப்பதற்குக் கங்கணம் கட்டிக்கொண் டிருக்கிறான். உங்களிடம் வெறுப்பும், கோபமும் கொண்ட சந்திரகுப்தனும் அவனைச் சரணம் அடைந்திருக்கிறான். பருவதேசனோ அபரிமித ஸேனைகளுடன் ஸமீபத்தில் வந்து விட்டான். உங்களுக்கு யுத்தத்திற்குத் தக்க ஸைன்யங்கள் ஸமீபத்திலில்லை.சாவகாசப் பட்டாலோ சத்துருக்கள் மிஞ்சி விடுவார்கள். நமது பராக்ரமத்தாலேயே ஜயித்து விடலாமென்றாலோ பிராமண சாபத்தால் தெய்வ பலம் குன்றியிருக்கிறோம். ஆனதால் அது முடியாதகாரியம். உங்களுக்கு ஸ்வஜனங்களைக்கடமாய்ஸம்ஹரித்த தோஷத்துடன் பிராமணனைப் பசி வேளையில் அவமதித்த தோஷமும் சேர்ந்திருக்கிறது. தனைக் கொல்ல வந்த பசுவையும் கொல்லலாமென்ற நியாயப்படி உங்களைக் கொல்ல உத்தேசிக்கும் சந்திரகுப்தனுக்கு தேஜஸ்வியான பிராமணன் ஸஹாயமும் கிடைத்திருக்கிறது. இப்பொழுதேனும் நீங்கள் யுத்த காரியங்களை நிறுத்தி அமாத்ய ராக்ஷஸரைக் கொண்டு சந்திரகுப்தனுடன் ஸந்தி பேசி, சாணக்யனையும் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அவர்களை யழைத்துக் கொண்டு வந்து மாமனூர் முன்னிலையில் சத்ய பூர்வமாய் ஒப்பந்தம் பேசி, அவன் தகப்பன் மௌரியனுக்கு, மாமனூர் கொடுத்திருந்த பிரதம ஸேனாதிபத்யத்தையும் கொடுத்து, பருவதேசனுக்கும் இது வரையிலுமான செலவுகளை ஒத்துக்கொடுத்து, அவனுடனிருக்கும் மீந்த அரசர்களையும் வஸ்திர பூஷணங்களால் ஸன்மானித்து அனுப்பி, ஒருவரிடமும் துவேஷமில்லாமல் க்ஷேமமாயிருப்பதே யுக்தமென்று எனக்குத் தோன்றுகிறது. இது உங்களுக்கு ஸம்மதமில்

லாவிடில் எங்கள் மங்கிலிய பலம் போல் ஆகட்டும். நான் இவ்விதம் உரைத்ததற்கு என்னிடம் கோபித்துக் கொள்ளாமல் நாளைய தினம் யுத்தத்திற்கு செல்லும் நீங்கள் இன்றிரவு முழுதும் என்னிடம் ஸந்தோஷத்துடன் இருந்து என்னை மன்னிப்பது உங்கள் கடமை" என்று நமஸ்கரித்தாள்.

நவநந்தர்களுக்குக் கால பாசம் கழுத்தில் விழுந்து விட்டதினால் தத்தமது பத்தினிகள் பலவிதமாகத் தடுத்தும் அதற்கு இசையாது சமயோசிதமாய் அவர்களுக்கு சமாதான வார்த்தைகள் உரைத்து அவர்களை யுடன்படுத்திக் கொண்டு அவ்விரவைக் கழித்துக்கொண் டிருந்தார்கள். நிற்க.

ராக்ஷஸன் அன்றிரவில் க்ஷபணகனை வரவழைத்து "ஐயா க்ஷபணகரே! நாளைய தினம் துலா லக்னத்தில் நந்தர்களுக்கு விஜய யாத்திரை ப்ராயணம் செய்ய நிச்சயிந்திருக்கிறது. லக்னபலன் ஸரியாயிருக்கிறதோ?" வென்று கேட்டான். அதற்கு, க்ஷபணகனும் "அமாத்யரே! லக்னதிபதி சத்துரு ஸ்தானத்தைப் பார்ப்பதால் விருச்சிக லக்னமே சிலாக்யமாக இருக்கிறது. அதில் புறப்பட்டால் சத்துரு நாச முண்டாகும்" என்று உரைத்து தன் மனதில் சத்துருவால் நாசமுண்டாகும் என்று சொல்லிக் கொண்டான். ராக்ஷஸனும் ஸமீபத்திலிருந்த புரோஹிதனைப் பார்த்து "இவர் சொன்ன லக்னம் உங்களுக்கும் நன்றாயிருந்தால் அதே லக்னத்தில் நாளைய தினம் நந்தர்களுக்கு விஜய யாத்திராதானம் செய்யுங்கள்" என்றான். அரை குறையாய்க் கற்றுஅரண் மனையில் பிழைக்கும் அப்புரோகிதனும் விருச்சிக லக்னமே சிலாக்ய மென்றதும் புரோஹிதனையும் க்ஷபணகனையும் அனுப்பிவிட்டு ராக்ஷஸன் தானும் நித்திரை செய்யச் சென்றான்.

# பதினெட்டாவது அதிகாரம்.

# நவநந்தர்கள் பெற்றோரிடம் விடைபெறல்.

அருணோதய ஸமயத்தில் பருவதேசன் சேனைகளுக்கும் நந்தர்கள் ஸைன்யத்திற்கும் கைகலந்து யுத்தம் நடந்து கிரிவ்ரஜத்தின் ஸமீபத்திலிருக்கும் சுந்தர ப்ரஸ்தமென்ற துர்க்கத்தை சத்துருக்கள் ஆக்ரமித்ததால் அத்துர்க்கத்தின் மேற் பாகத்தி லிருந்து பீரங்கிச் சப்தங்கள் உலகமே இரண்டாய் விடும்போல அஸாத்தியமாகக் கேட்டது. அதனால் ராக்ஷஸன் கண் விழித்து உண்மையறிந்து சீக்கிரமாக ஸ்நானம் செய்து ஜப தபங்கள் முடித்துக் கொண்டு அந்தணர்களுக்கு நித்தியதானம் அளித்து, நநதர்கள் சமீபம் வந்தான்.

அப்பொழுது ஒட்டகம் ஏறி வேகத்துடன் வந்த இரு தூதர்கள் ராக்ஷஸனிடம் ஓர் கடிதம் கொடுத்தார்கள். அதை ராக்ஷஸன் படித்துக்கொண்டு நந்தர்களைக் கண்டு "அரசர்களே! நேற்று ப்ராதக் காலத்தில் சத்துருக்கள் சேனைக்கும் நமது டிங்கிராதன் சைன்யத்திற்கும் கைகலந்து யுத்தம் நடந்ததில் சக ஸேனையில் இருபதினாயிரம் பேர்கள் மடிந்து பதினாயிரம் யானைகள் காயமடைந்தனர். நமது பீரங்கிகளில் அறுபது சத்துரு கையி லகப்பட்டதாம். அதற்குள் நமது பத்ரபடன் சேனை டிங்கிராதனுக்கு உதவியாய் சென்று எண்ணாயிரம் வில்லாளிகளைக்கொண்டு எதிரிகள் சேனை மீது பாண வர்ஷம் பொழிந்ததால் அவர்கள் விட்டதுவிட்டபடி கலைந்து ஓடினார்களாம். அவர்கள் வசமிருந்த நமது பீரங்கிகளை நம்மவர்கள் திருப்பிக்கொண்டு வருவது கண்டு சீனர்கள் சேனை குறுக்கிட்டுவந்து நமது சேனைகளை யடித்து மறுபடியும் பீரங்கிகளைக் கைக்கொண்டதாம். அதுகண்டு உடனே பத்திரபடனுடன் டிங்கிராதன் சேனையும்கலந்து அச்சீனர்களை ப்ரஹாரித்து பீரங்கிகளைக்கொண்டு இருசேனைகளுக்கும் யுத்தம் நடந்து கொண்டிருக்க சத்துரு சைன்யம் சுந்திரப்ர ஸ்தத்தை நெருங்கி வருகிறதாம். இதுவரை சம யுத்தமானாலும் சத்துருக்கள் துர்க்கத்தைக் கைப்பற்றி விடுவார்கள் போல்இருக்கிறதாம். டிங்கிராதன் இவ்வாறுஎழுதியிருக்கிறான்.

இப்பொழுதோ துர்க்கத்திலிருந்தே பீரங்கிச் சப்த முண்டாவதால் சத்துருக்கள் நெருங்கி விட்டார்க ளென்று தோன்றுகிறது. இரு ந்தாலும் துர்க்க பாலகனான சிவவர்மன் பராக்ரமசாலி யானதால் சத்துருக்களை நெருங்கவிட மாட்டான்" என்று சொல்லிக்கொண் டிருக்கும்போதே மற்றொரு குதிரை வீர னோடி வந்து கடித மொ ன்றுகொடுத்தான்.

"பிரபுக்களுக்கு பத்திரபடன் விஞ்ஞாபித்துக் கொள்வது: துர் க்கத்தைப் பிடிக்க வேண்டு மென்று வரும் சத்துரு சைனியத்திற் கும் எனது சேனைக்கும் யுத்தம் நடந்த போது டிங்கிராதனும் எனக்கு உதவியாக வந்து சக சேனையை முறியடித்து சற்று நின்ற னன். சத்துருக்கள் பழையபடி ஒன்று சேர்ந்து வந்து கவிந்துகொண் டதும் நாங்கள் பின்னடைவது போல வந்து ஸமீபத்திலிருக்கும் கணவாயின் கீழ் புதைத்திருந்த வெடி மருந்துகளுக்கு நெருப்பிட் டோம். வெடி மருந்து வெடிக்கவே அதனால் சமீபத்திலிருந்த சக சேனையில் எண்ணாயிரம் பேர் ஹதமடைந்தனர். மீந்தவர்கள் திரும்பி யோடினர். நமது சேனையால் துரத்துண்ட சிரமத்தால் தாகமெடு த்து நம்மால் விஷ சூரணங் கொட்டப்பட் டிருந்த மடுவின் ஜலத் தைக் குடித்து மூர்ச்சையடைந்த சக ஸேனைகளை நம்மவர்கள் சென்று ஸம்ஹரித்தார்கள். அதற்குள் சீனர்களின் சேனை குறுக் கில் வந்து எங்களை யெதிர்க்காது துர்க்கத்தைப் பிடிக்க வேண்டி அதின் சமீபத்திலுள்ள சுங்கச் சாவடி யாள்களைக் கொன்று அவ் விடமே இறங்கி இருக்கிறது. இன்று மாலையவர்கள் சாப்பிடும் சம யம் பார்த்து வளைந்துகொண்டு யுத்தம் செய்கிறேன்"

என்று அதில் எழுதியிருந்தது. இச்செய்தியை நந்தர்க ளுக்கு ராக்ஷஸன் தெரிவித்து" இனி நாம் சீக்கிரமாய் மூலபலங்களு டன் தண்டிறங்கியிருக்கும் பாளையத்திற்குச் செல்ல வேண்டும்" என்றான்.

அதைக் கேட்ட நந்தர்கள் ஸ்நானாதிகளை முடித்துக் கொண்டு அனேகம் திரவியங்களையும் சுவர்ணங்களையும் ரத்தினங்களையும் அந்தணர்களுக்கு யாத்திரா தானம் செய்து பந்து மித்திரர்களான ராஜ குமாரர்களுடன் போஜனம் செய்து, பிறகு திவ்யமாலிகைக ளாலும் ஆபரணங்களாலும் அனுலேபனங்களாலும் அலங்கரித்துக்

கொண்டு விப்ரர்களின் மங்களாசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு தாய் தகப்பன்மாரை நமஸ்கரித்தார்கள்; அவர்களும் பிள்ளைகளைத் தடவிக் கொடுத்து உச்சிமுகர்ந்து கட்டிப்பிடித்து மடியி லுட்கார வைத்து ஒவ்வொருவரையும் தனித்தனியாக ஆசீர்வதித்தார்கள். "பெற்றமனம் பித்து" என்ற வழக்கப்படியும் "மாதா பூர்வ ரூபம்" என்ற சுருதி வாக்யப்படியும் பிரியத்திலும் ஆதரவிலும் அதிகங் கொண்ட தாயாகிய சுநந்தா தேவியானவள் பிள்ளைகளைப் பார்த்து சிரஞ்சீவிகளான குமாரர்களே! இப்பொழுது நேர்ந்திருக்கும் காரி யம் பிரபலமா யிருக்கும்போ லிருக்கிறது. இச்சமயம் நீங்கள் நேரில் செல்ல வேண்டிய தவசியமானாலும் எல்லொரும் சேர்ந்து செல்லாமல் நான்கு பேர்கள் இவ்விடமிருந்து நகரத்தை ரக்ஷித்துக் கொண் டிருந்தும் ஐந்து பேர்கள் தண்டிவிறங்கி யிருந்து ஸமயத் திற்குத் தக்கபடி ஸேனைகளை யனுப்பி யுத்தம் செய்வது உசிதமாய்த் தோன்றுகிறது. உங்களுடைய சுகிர்தமானது உங்களைக் காப்பாற் றட்டும்" என்று கண்ணீர் சொரிந்தார்கள்.

அதற்கு நந்தர்கள் "அம்மா! தாங்கள் இவ்வளவு கவலை யடையும்படியாக ஒன்றையும் காணோமே. இப்பொழுது வந்திருக் கும் சத்துருவைக் கண்டு அவ்வளவு தூரம் பயப்பட இடமே இல்லை. நமது ஸேனாதிபதிகளைக் கொண்டே பருவதேசனை நிக்ர ஹிக்க முடியும் ஆகையால் எங்கள் வரையில் யுத்தம் எட்டுவதாகத் தோன்ற வில்லை. ஆப்தனாகிய ஸேனாபதி பாகுராயணன் சூர பரி வாரங்களுடன் இந்நகர ரக்ஷணத்தில் ஜாக ரூகனா யிருக்கிறான். நாங்கள் எக்காரியத்திலும் ஒருவரை யொருவர் பிரிவதில்லை, என் றும் மீறுகிறதும் இல்லை யென்றும், பிரதிக்கினை செய்துகொண்டிரு ப்பதால் ஒருவரை விட் டொருவர் பிரிய மனமும் வராது. நாங்கள் ஸமீபத்திலேயே இருக்கிறோம். அடிக்கடி வந்து போய்க்கொண் டிருக்கிறோம். தாங்கள் சற்றும் கவலை கொள்ள வேண்டாம்" என்று தாயாரை சமாதானப்படுத்தி, அஸ்தமன திசையை யடையும் சந்திரனைக் கண்டு மலரும் செந்தாமரை போல, பதி ப்ரயாண துக் கத்தினால் சிவந்திருக்கும் விசால நேத்திரங்களி லிருந்து கண் ணீரைப் பெருக்கிக் கொண்டிருக்கும் பத்தினீ ஸமூஹங்களை ஸமாதானப் படுத்தி நந்தர்கள் அந்தப்புரம் விட்டுப் புறப்பட்டனர்.

## பத்தொன்பதாவது அத்தியாயம்.

# மாலேயபவாசியைத் தரிசித்தல்.

புறப்படும் சமயத்தில் அசுவங்களில் ஆரோஹணித்திருக்கும் ராஜகுமாரர்களின் ஆபரண காந்தியால் ராஜத்வாரத்தின் முன்பக்கம் மயில் தோகையால் அலங்கரிக்கப் பட்டது போலிருந்தது. சிறந்த மதயானைகள் அலங்கரித்து வந்து நின்றன. ஈட்டி வீரர்கள் முன் னல் நடக்க ஸாமந்த நரபதிகளின் சத்திர நிழலினால் ராஜ மார்க்க மெல்லாம் ஸூரிய வெளிச்ச மில்லாதிருக்க, பிரயாண பேரிகைகள் முழங்க, அஷ்டா தச வாத்தியங்கள் ஒலிக்க நந்தர்களும் தத்தமது யானைகள் மீதேறினார்கள். அப்பொழுது ஸ்துதி பாடர்களின் சப் தமும், கட்டியக் காரர்களின் பிருது வாக்கியங்களும் ஆகாயத்தை எதிரொலிக்கச் செய்தது. உப்பரிகைகளின் சாளரங்களில் நின்று பார்க்கும் பௌர ஸ்திரீகளின் பார்வையால் சுவேத சத்திரங்க ளெல்லாம் நீலோற்பலங்கள் போல் தோன்றின. காற்றினால் அசை க்கப்பட்ட கொடிகளிலிருந்து இறைக்கப்பட்ட புஷ்பங்களால் பிர காசிக்கும் வனமத்யம் போலும், நக்ஷத்திரங்களுடன் விளங்கும் ஆகாயம் போலும், பௌர கன்னிகைகளால் வாரி யிறைக்கப்படும் குசுமங்களால் ராஜ வீதியானது நிறைந்து விளங்கிற்று. அச்சமயம் நவநந்தர்கள் ராஜ மார்க்கத்தை யனுஸரித்துக் கோட்டை வாசலைத் தாண்டி வந்துகொண் டிருக்கும் போது அவர்களுக்கு அசுபக்குறி யாக இடது கண்களும் இடது தோள்களும் துடித்தன. பருந்து கள் வட்டமிட்டு நந்தர்களின் சுவேத சத்திரத்தின் மீது உட்கார் ந்தன. இவ்விதம் அனேக விதமான அபசகுனங்கள் ஏற்படுவது கண்டு ஜனங்கள் அதை யரசருக் கறிவிக்கப் பயந்து பேசாது இரு ந்து விட்டார்கள். நவநந்தர்களுக்குப் பின்னால் வந்த அமாத்ய ராக்ஷஸனும் இதைக் கவ

அச்சமயம் பத்திரபடனால் அனுப்பப்பட்ட தூதர் இருவர் கள் வந்து "ஜயம் ஜயம்" என்று உரைத்து நந்தர்களைக் கண்டு கும்பிட்டு "மஹா ஸ்வாமிகளே! இத்தினம் காலையில் எதிரிகளின் சின சேனையானது சுந்தர துர்க்கத்தைப் பிடிக்கக் கருதி மெத்தக்

கடினமாக யுத்தம் செய்து துர்க்கத்தை முற்றுகை யிட்டதும், துர்க்கபாலகனான சிவவர்மன், சத்ருக்கள் சமீபம் வரும் வரையில் பேசாதிருந்து, உடனே கோட்டை மீதுள்ள பீரங்கிகளை யடித்து லக்ஷாப லக்ஷம் ஸைன்யங்களைத் துண்டு துண்டாக்கி விட்டான். மீந்திருந்த சேனைகளை அடிவாரத்திலிருந்த பத்திர படனும் எதிர்த்துக் கொடுமையாய் பீரங்கிகளைக் கொண்டு நிபாதம் செய்ததால் துர்க்கத்தைப் பிடிப்பது அஸாத்ய மென்று சீன ஸேனைகள் துர்க்கத்தை விட்டு மூன்று நாழிகை வழி தாண்டி வந்திறங்கி யிருக்கிறது இன்றைய யுத்தத்தில் மஹா ஸ்வாமிகளுக்கு ஜயம்." என்றார்கள்

அது கேட்டு நந்தர்கள் ஸந்தோஷித்து அவர்களுக்கு வெகுமதி கொடுத்து பத்ரபடனுக்கும் சிவவர்மனுக்கும் வெகுமதியாய் வஸ்திர பூஷணங்கள் அளித்து விட்டு முன் செல்லும்போது, அமாத்ய ராக்ஷஸன் நந்தர்களை யணுகி "ராஜ புத்திரர்களே! சிவவர்மன் என்பவன் துர்க்க பாலகனானதால் இன்று நமக்கு ஜயம் கிடைத்தது. இதுவே நமக்கு நற்சகுனம். பாகுராயணன் நகர ரக்ஷணத்தில் எவ்விதம் ஏற்பாடு செய்திருக்கிறானென்பதை நான் நேரில் சென்று பார்த்து வருகிறேன். தாங்கள் எல்லாரும் தண்டின் பாளயத்திற்குத் தயவு செய்யலாம்" என்றுரைத்து சற்று தூரம் பின்னோடு சென்று அவர்களை யனுப்பிவிட்டுக் குதிரை மீதேறிக்கொண்டு தனது பரிவாரங்களுடன் பாகுராயணன் செய்திருக்கும் யுத்த ஸந்நாகத்தைப் பார்க்கும் நிமித்தம் ஊர் வெளிப்புறத்தில் சுற்றி வந்து கொண்டிருந்தான்.

அப்பொழுது நந்த ஸேனைகளிலிருந்து எழுந்த தூளிகளின் கூட்டமானது உத்பாத சூசகமா யுண்டாகிச் சூரிய கிரணங்களை மூடும் அகால மேகம் போலும், வீர லக்ஷ்மியின் விலாஸ கிருஹத்திலுள்ள திரைச்சீலையே போலும், ஆகாய வழியை மூடி இருட்டு உண்டாக்கியது. அப்பொழுது தாண்டிக் குதிக்கும் அசுவங்களின் வியர்வைத் தண்ணீராலும் மதங்கொண்ட யானைகளின் மதஜல வர்ஷத்தாலும் அத்தூளிக ளடங்கி பூமி சேறு அடைந்து திக்குகள் பிரஸன்ன மானதும், நந்தர்கள் ஸேனைகளுடன் கங்கா ஸரயூ சங்கமத்தி னருகில் வந்துகொண் டிருக்கும் போது, வட

க்குத் திக்கில் உன்னதமாய் சற்று தூரத்திலிருக்கும் ஜபசாலையைக் கண்டு "இஃதென்ன?" வென்று தூதர்களைக் கேட்டார்கள்.

அவர்கள் கும்பிட்டு "ஸ்வாமீகாள்! அமாத்ய ராக்ஷஸரின் உத்திரவினால் ஏற்படுத்தி யிருக்கும் சத்துரு பலாயன ஜபசாலை அது. அங்கு ஜபம் செய்யும் பிராமணர்கள் பல மந்திராக்ஷதைகளுடன் வந்து சன்னிதானத்தைக் காண வேண்டுமென்று காத்துக்கொண் டிருக்கிறார்கள்" என, அப்பிராமணர்களைப் பார்த்து "பிராமண சிரேஷ்டர்களே! சிரத்தையுடன் ஜப ஹோமங்களை செய்யுங்கள். இப்பொழுது வந்திருக்கும் சத்துருக்களின் கூட்டம் ஓடி விட்டால் உங்களுக்கு ஸ்திரமாக மான்யங்கள் அளிக்கிறோம்" என்று உரைத்துத் தமது கூடாரங்களை நெருங்கி யானைகளி லிருந்து இறங்கினார்கள்.

அதற்குள் தரையில்புரளும் ஜடைகளுடனும், தர்ப்பை பவித்திரங்கள் அணிந்த விரல்களுடனும், விரல் நகத்தால் சுற்றி வரும் ஜபமாலை யுடனும், வக்கிராசாரமே பூமியில் அவதரித்து வந்தது போல விபூதியால் திரிபுண்டரமிட்ட நெற்றியாலும் கக்கத்தில் இடுக்கி யிருக்கும் யோக தண்டங்களாலும் கால்களில் மாட்டியிருக்கும் பாதுகைகளாலும் தரையில் விழுவது போலப் புரளும் கிருஷ்ணாஜின உத்தரீயத்தாலும், மானுஷ யோகி வேஷந்தரித்து மந்திரம் ஜபிக்கும் மாரீசனோ வென்னும்படி, யோகி வேஷந்தரித்து பார்க்கும் ஜனங்கள் "இவன் மஹா யோகீசுவரன் தான்" றெண்ணும் படியாய் சிஷ்யர்கள் கையிலிருக்கும் செம்புகளிலிருந்து தர்ப்பங்களால் வழியைப் பரிசுத்தப்படுத்தும் வண்ணம் ப்ரோக்ஷிக்கப்படும் கோமயத்தால் நனைந்த இடங்களிலேயே கால்வைத்து நடந்துவந்து கொண் டிருக்கும் மலோபவாஸியைப் பார்த்துக்கொண்டே நந்தர்கள் வீதி சென்று ஸமீபத்தில் வந்த அவனைக்கண்டு "இந்த யோகீசுவரர் யாவர்?" என்று அயன் சிஷ்யர்களை வினவினார்கள்.

அதற்கவர்கள் "அரசர்களே! இவர் மாலோபவாஸி யென்னும் மஹா முனிவர். பிரயாகையில் தத்தாத்திரேய முனியைத் தரிசனம் செய்து விட்டு இவ்வழியாய் வரும்போது பாகுராயணன்

என்ற ஸேனாதிபதியால் சத்துரு பலாயன ஜபத்திற்கு ருத்விக் ஆக இருக்கும்படி பிரார்த்திக்கப்பட்டு மிலேச்சர்களால் பருவதேயர்களால் பூசுரர்களுக்கெல்லாம் தொந்தரவுண்டாகதபடிக்கும் தங்களுடைய க்ஷேமத்தின் பொருட்டும் சத்துரு பலாயன ஜபம் செய்து வருகின்றார்" என்றார்கள்.

அது கேட்டு விநந்தன் "புத்திரனை யபேக்ஷித்த எங்கள் தந்தைக்கு ரிஷிகளின் அனுக்ரஹத்தாலேயே நாங்கள் பிறந்தோம். அது போல சத்துரு பலாயன ஜபத்திற்கும் இம்மகா முனிவர் ருத்விக் ஆக ஏற்பட்ட பின் நமது சத்துருக்கள் ஓடிவிடுவதில் சந்தேஹமில்லை. ஆனாலும், என்றைக்குச் சத்துருக்கள் ஓடுவார்கள் என்று தெரிந்து சொல்ல வேண்டும். முனிகளுக்கு மௌந விரதமோ" என்றான்.

அதற்கு மஸோபவாஸி " ஐயா அரசனே! சாதாரண ஜனங்களிடம் மௌனமல்லாது மஹாத்மாக்களிடமும் பக்தர்களிடமும் மௌநம் வைக்க முடியுமோ? சத்துரு நாசத்தின் பொருட்டுச் செய்யும் சூலினீ ஜப ஹோமங்கள் வெள்ளிக்கிழமை சாயங்காலம் முடிவு பெறுவதால் ஹோமத்திற்குப் பூர்ணாஹுதி செய்யும் ஸமயத்தில் சத்துரு நாசத்திற்குரிய அடையாளங்கள் ஏற்படும்" என்றான்.

அது கேட்டு நந்தர்கள் "அஃதெவ்விதமா யிருக்கும்?" என்று கேட்க, மஸோபவாஸி "பூபதிகளே! ஹோமத்தின் முடிவில் தேவியைத் தியானம் செய்து பூர்ணாஹுதி கொடுக்கும் ஸமயத்தில் திவ்ய வாசனையுடன் குளிர்காற்று வீசும். ஜனங்களெல்லாம் பார்க்கும்படி ஜோதி ஒன்று உண்டாகும். பிறகு அக்கினி குண்டத்திலிருந்து சூலினீ தேவியின் கரங்கள் தோன்றி பூர்ணாஹுதியைத் தானே ஸ்வீகரிக்கும். அத்தரிசன விசேஷம் சுகிருதமுள்ளவர்களுக்குத் தான் கிடைக்கும்" என்றான். நந்தர்கள் அதுகேட்டு முனி சிரேஷ்டரே! அத் தேவதையின் ஹஸ்த தரிசனத்திற்கு நாங்களெல்லோரும் வரலாமோ?" என்று கேட்டார்கள்.

"தங்களுக்குக் குதூஹல மிருந்தால் பந்து மித்திரர்களுடன் வந்து தரிசனம் செய்யலாம். தேவதையின் கை மறைந்து தாங்கள் பிரஸாதத்தைப் பெற்றுக்கொண்டு திரும்பி வீடுகளுக்கு வருமுன்

சத்துருக்களுக்கு வயிற்று வலி யுண்டாகி , பாதிப் பெயர் மரணம் அடைந்து விடுவார்கள். ஒரு ஜாமத்திற்குள் சத்துரு சைன்யம் ஹதமாகி மீந்திருப்பவர்களும் ஓடி விடுவார்கள். இதற்குத் தாங்கள் அளிக்கும் ஜப தக்ஷிணை யென்ன வென்றால், பிராமணர்களிடம் கௌரவ மிருக்க வேண்டியதொன்றேயாகும்; நாங்கள் மற்ற எதற்கு மே ஆசைப படுபவர்களல்லர். தாங்கள் வருவதனால் ஜப சாலைபைச் சுற்றிலும் சூத்திராதிகள் வரக் கூடாது. அவர்களை நாங்கள் அச்சமயம் பார்க்கவும் கூடாது" என்றான்.

நந்தர்கள் யோகீசுவரரைப் புகழ்ந்து பூர்ணாஹுதி ஸமயத்திற்கு சொல்லியனுப்பும்படி பிரார்த்தித்து மலோபவாஸி மகாமுனிவரை நமஸ்கரித்து அனுப்பி விட்டு, ஜப சாலையைச் சுற்றிலும பிராமண அதிகாரர்களைக் காவலிருக்கும்படி ஆக்ஞாபித்து, சுவர்ண கலசங்களால் விளங்கும் ஸ்ரீமோத்பர்வதம் போல் அதியுன்னதமாய் நவரத்தினங்களால் இழைக்கப்பட்டு விளங்கும் உப்பரிகைகளையுடைய தேவேந்திர மாளிகை யென்ன விளங்கும் தமது விடுதிகளிற் பிரவேசித்து, மிருது சயனங்களி லுட்கார்ந்து, ராஜபோகங்களை யனுபவித்துக் கொண் டிருந்தார்கள்.

## இருபதாவது அத்தியாயம்.

# பாகுராயணனைப் பேதித்தல்

இவ்வித மிருக்கும் போது, பாடலீபுரத்திலிருக்கும் ஜனங்கள் சத்துருக்கள் வருவதைப் பற்றித் தோன்றியவாறெல்லாம் பேசிக் கொண் டிருந்தார்கள். வர்த்தகர்கள், வியாபாரத்தின் ஏற்றுமதி இறக்குமதி, யுத்தத்தினால் நின்று போனது பற்றி உண்டான நஷ்டங்களைப் பற்றி பேசிக்கொண்டார்கள். வைதீகர்கள் பருவதராஜன் கயாவில் தனது தாயாரின் ஆப்தீக சிரார்த்தம் செய்ய வருகிறானாம். மிகவும் விதரண சாலியாம். நாம் காசிக்குச் சென்றால் வேண்டியபடி நல்ல சாப்பாடும் தக்ஷிணையும் கிடைக்குமென்றும், மூட ஸ்திரீகள் பருவதேசன் இவ்வூரிலுள்ள ஸ்திரீகளைச் சிறைப் பிடிக்க வருகிறானாம். அவன் ஸேனைகளுக்கு இளங்குழந்தைகள் தான் ஆஹாரமாம்

என்றும், கற்றறிந்தவர்கள் நந்தர்கள் சத்திரத்தி லுட்கார்ந்திருந்த பிராமணனை யவமதித்தனாலேயே இவ்வாபத்தென்றும், அதிகாரிகள் வீட்டிலுள்ளோர் மௌரியர்களைக் கொன்றும் சந்திரகுப்தன் பிழைத்துக்கொண்டதால் பருவதேசனுடன் யுத்தத்திற்கு வந்திருக்கிறான் என்றும், சோம்பேறிகள் நந்தர்கள் ஜயித்தாலும் சந்திரகுப்தன் பட்டாபிஷேகம் செய்து கொண்டாலும் அநேக பிராமணபோஜனங்கள் நடக்குமாகையால் இன்று திரியலாமென்றும், இவ்விதம் பேசிப் பொழுது போக்கினார்கள். க்ஷபணகன், நந்தர்கள் வெள்ளிக்கிழமை மாலையில் ஜப சாலைக்கு வருகிறதை வேகசர்மன் மூலமாகச் சாணக்யருக் கறிவித்தான். நிறக.

ஸித்தார்த்தகன், க்ஷபணகன் வார்த்தையை நினைத்து நாளைய தினம் பருவதராஜனுக்கும் நந்தர்களுக்கும் நெருங்கி யுத்தம்நடக்குமென்றறிந்து, இச்சமயத்திலேயே பாகுராயணன் முதலிய ஸேனாபதிகளுக்கு நந்தர்களிடம் வெறுப்புண்டாக்கி பாக்கிக் காரியங்களையும் சரிப்படுத்த வெண்ணி, ராக்ஷஸன் வீடு சென்று, கணக்குப் பிள்ளையான சகடதாசன் என்னும் காயஸ்தனிடம் சற்றுப் பேசுவதுபோல் தாமதித்து, ராக்ஷஸனின் மெய் காவலருக்கு அதிகாரியும், ராஜ பீஜோத்பன்னனுமான விநதன் என்பவனைக் கண்டு, ரகஸியத்தில் "தக்கஸமயத்தில் ராக்ஷஸனை யுத்தத்திற்குச் செல்லாமல் தடுத்து விடு" என்று சொல்லி, அவனிட மிருந்து சில ராஜ காரிய ரஹஸியங்களை யறிந்து கொண்டு, பாகுராயணனிடம் வந்து உட்கார்ந்து, ரஹஸியமாய் "ஐயா பாகுராயண! ரஹஸியத்தில் நான் அறிந்த விஷயத்தை உன்னிட மிருக்கும் சிநேகத்தால் தெரிவிக்கிறேன்: என்னவெனில், சந்திரகுப்தனுக்கு உன்னிடம் விசுவாஸமிருக்கும் போது உனக்கும் அவனிடம் பிரீதி யிருக்கும் என்பதில் ஸந்தேஹமே யில்லை. உங்களுடைய சகாயத்தைக்கொண்டே சந்திரகுப்தன் பர்வதராஜனிடம் சென்று ஏதோ ஒரு கடிதத்தைக் காட்டி அதினாலும் சாணக்யனின் வாக் சாதுரியத்தாலும் பருவதேசனை அழைத்துக்கொண்டு யுத்தத்திற்கு வந்திருக்கிறான். "நந்தர்களுக்கு ராக்ஷஸனைப்போல், பின்னர் எனக்கு பாகுராயணனே ஆப்தன்" என்று அடிக்கடி அவன் சொல்லிக் கொள்ளுகிறான். எந்த விதத்திலும் சாணக்யன் சந்திரகுப்தனுக்கு இந்த ராஜ்யத்தை பட்டாபிஷே

கம் செய்து வைப்பது நிச்சயம். நந்த ஸேனைகளைக் காட்டிலும் சத்துரு சேனை யதிகமென்றறி. சாணக்யனின் கபடோபாயத்திற்கு நந்தர்களாலும் ராக்ஷஸனாலும் எதிர் நின்று தாங்க முடியாது. ராக்ஷஸனின் பேதோபாயமும் பங்கமடைந்து விட்டது. நாளை யுத்தம் நடக்கப்போகிறது. ஜயாபஜயம் எவ்வித மிருக்குமோ? சத்துருக்களின யத்தினத்தைப் பார்த்தால் நந்தர்களுக்குத் தான் அபஜயம் நேரிடும்போ லிருக்கிறது. அல்லது சம யுத்தமானாலும் பின்னால் நந்தர்கள் அபஜயப்படுவதே நிச்சயம். சாணக்யனின் கபடோபாயம், சந்திரகுப்தனின் நற்குணம், பருவதேசன் சௌரியம், அநேக தேச மன்னர்களின் உதவி, இவையாவும், நந்தர்களின் நாசத்தைக் குறிப்பிடுவன வல்லாது வேறில்லை. சாணக்யனும் சந்திரகுப்தனுக்கு இஷ்டமானவர்களுக்கு மந்திரி பதம் ஏற்படுத்தித் தான் தபோவனம் செல்லப் போகிறானாகையால் இச்சமயம் சந்திரகுப்தனுக்குஉன்னிடமிருக்கும் விசுவாஸத்தைத்திடப்படுத்திக் கொள். நான் சொல்வனவற்றை யெல்லாம் சந்திரகுப்தன் நேரில் சொல்வதாகப் பாவித்து உன்னாலான சகாயம் செய்து கீர்த்தியை அடைவதில் எண்ணங்கொள். சாணக்யருடைய உபாய சாதுரியத்தால், ஜலத்திற்கும் பாலுக்கும் வேற்றுமையும், கஜத்திற்கும் சிம்மத்திற்கும் ஒற்றுமையும் உண்டாகு மாகில், பருவதேசனை யழைத்து வந்ததும் ஆச்சரியமோ? நந்த ஸேனைகளாகிய இரு புஜத்தில் ஒரு புஜம் சாணக்யருடையது என்று அறிந்து கொள். இச்சமயம் நீ சும்மாவிருக்க கூடாது என்று தெரிவித்தேன். இவ்வார்த்தைக்கு இன்றிரவு இவ்விடத்திற்கு ஸமீபம் நடக்கும் யுத்தமே அடையாளம். உன் மனமெப்படி?" என்று கேட்டான்.

இவைகளை யெல்லாம் கேட்டுக்கொண் டிருந்த பாகுராயணன் "இந்த சித்தார்த்தகன் வைத்யன் போலிருந்தாலும் சந்திரகுப்தனுக்கு மித்திரனாக யிருக்கலாம்." என்று தனக்குள் நிச்சயித்து "ஐயா சித்தார்த்தகனே! சந்திரகுப்தனுக்கு ராக்ஷஸனைப் போல் நாங்க ளெல்லாரும் துரோகிகளல்லர். அவனுக்கு நாங்கள் வெளிப்படையாய் சகாயம் செய்தால் லோகாபவாத முண்டாவதுடன் அவ்வளவு அனுகூலமும் ஏற்படாது. ஆகையால் இனி நாங்கள் இங்கிருந்து கொண்டே செய்யும் உதவியால் சந்திரகுப்தன்

ஜயமடைந்து அதனால் அவன் எங்களுக் கிருக்கும் பிரியத்தை அறிந்து கொள்ளக் கூடும். தற்போதைக்கு இதமான ஸஹாயங் களை நாங்கள் செய்து வருகிறோம். சந்திரகுப்தன் முன்னம் இவ்வூர் விட்டுச் செல்லும்போது ஏதோ வொரு தர்ம கார்யத்திற்கு என்று முக்ய ஸேனாபதிகளான எங்களின் சுகஸ்தாக்ஷர சம்மதி யைக் கேட்டான். சந்திரகுப்தன் தகப்பனால் நாங்கள் அடைந்த உபகாரத்தையும் சந்திரகுப்தன் இச்சமயமிருக்கும் துர்திசையை யும் எண்ணிப்பார்த்து விசனமடைந்த நாங்கள் எப்படி யிருந்தா லும் இருக்கட்டும் என்றே "சந்திரகுப்தனுக்கு அபிமதமான காரியத்தில் எங்களுக்கும் சம்மதமே" என்று சுகஸ்தலிகிதமாய் சம் மதிக் கையெழுத்திட்டுக் கொடுத்தோம் அக்கடிதமே யவனுக்கு உதவியா யிருந்திருக்கலாம். இருக்கட்டும். போய்வருக" என்று சித்தார்த்தகனை யனுப்பி விட்டு மிகவும் ஆபதனான ஓர் தூதனைக் கொண்டு ரகஸியத்தில் பத்ரபடாதி சேனாபதிகளை, "சத்துருக்க ளின் மீது கவிந்து யுத்தம் செய்யாது சிற்றரசர்களை முன்னிறுத்தி யுத்தம் செய்யுமபடி ஏற்பாடு செய்து சத்துருக்களைத் தடுக்காமல் ஜாண்டாய் விட்டுவிட வேண்டியது" என்று சொல்லி யனுப்பி னான்.

பாகுராயணன் சொற்படி பத்திரபடாதி ஸேநாதிபதிகள் பொருத்து யுத்தம் செய்யாது மேலுக்கு யுத்தம் செய்பவர்கள் போலிருந்து வருவதை யறிந்து கொண்டு பருவதேசனின் ஸேனா பதிகள் தமது அரசனுக் கறிவித்தார்கள். இதைக் கேட்டுப் பருவ தேசனும் "ஸேனாபதிகள் முன்னைய கடிதப்படியே இப்பொழுதும் அந்தரங்கத்தில் சந்திரகுப்தனுக்கு ஸகாயமாகவே இருந்து வருகி றார்கள் போலும். ஆனதால் இனி நமது சேனைகளைத் தடுக்காது விட்டு விடுவார்கள்" என்று தன் மனதில் தீர்மானித்துக் கொண்டு அரசர்களையழைத்து "மன்னர்களே! நீங்கள் உங்கள் ஸேனைகளுடன் ஓடோடிச் சென்று கங்கா ஸரயூ சங்கமம் தாண்டி இன்றிரவே பாடலீபுரத்தை முற்றுகை யிடுங்கள்" என்று ஆக்ஞாபித்தான். அவர்கள் எல்லோரும் அவ்விதமே புறப்பட்டு வந்துகொண் டிருந் தார்கள்.

## இருபத்தோராவது அத்தியாயம்.

## ராக்ஷஸனின் வெற்றி.

பாகுராயணன் புர ரக்ஷணத்தின் நிமித்தம் செய்திருக்கும் யுத்த ஸன்னாஹத்தைப் பார்க்கச் சென்றிருந்த ராக்ஷஸன் எல்லா வற்றையும் சுற்றிப்பார்த்து"இவ்வளவு ஏற்பாடுகள் போதா" என்று போஜபதியை அவன் ஸேனைகளுடன் கிழக்கு வாயிலிலும் அவந்தி தேச மன்னனைத் தெற்குப் புறத்திலும் கலிங்க மன்னனை தக்ஷிணத்திலும் ஸௌராஷ்டிர மன்னனை மேற்குப் புறத்திலும் நிறுத்தி, அவர்களை மிகவும் கொண்டாடி உத்ஸாகப்படுத்தி விட்டுத் தன் ஸமீபம் வந்த பாகுராயணனிடம் "ஐயா சூர ஸேனாதிபதியே! இப்போது நீ இவர்களையும் இவர்கள் ஸைன்யங்களையும் உதவியாய் வைத்துக் கொண்டு மெத்த ஜாக்ரதையுட னிருந்து வரவேண்டும். சத்ரு ஸேனைகள் அதிகமாக இருப்பதால் இம்மன்னர்களை யுனக்கு உதவியாக நிறுத்தி யிருக்கிறேன். இன்றிரவிலேயே சத்துருக்கள் பட்டணத்தை முற்றுகை யிடுவதாகத் தீர்மானித்திருப்பதை நமது ஒற்றர்கள் அறிந்து வந்து சொன்னபடியால் சற்றும் அசிரத்தையாக இருக்கக்கூடாது" என்று எச்சரித்து விட்டு நந்தர்களிடம் வந்து தான்கோட்டை மேற்புறங்களிலும் உள்ளிலும் மதில்களுக்கு வெளியிலும் செய்திருக்கும் ஏற்பாடுகளைத் தெரிவித்தான்.

அது கேட்டு நந்தர்கள் சந்தோஷித்து "ஐயா அமாத்யரே! முந்தி நமது காரியத்தின் பொருட்டு காசி ராஜனுக்குக் கடிதமெழுதியிருந்தீர்க ளல்லவா? அவன் அது போல் செய்வானா?" வென்று கேட்க, ராக்ஷஸன், "ராஜ குமாரர்களே! காசிராஜன் நமக்குப் பரம மித்திரனும் காரியத்தை முடிப்பதில் சாமர்த்தியவானு மாகையால் தெய்வ ஸஹாயம் மட்டும் இருந்தால் நமதாலோசனைப் படிக்கே காரியத்தை முடித்து விடுவான். அவ்விதமே நடந்து விட்டால் பிறகு யுத்தமென்பதே கிடையாது. சத்துருக்களை ஜயிப்பதற்கு இங்ஙனம் அனேக விதத்தில் பிரயத்தினப்பட்டால் ஏதேனும் ஓர் விதம் கை கூடி தெய்வானுக்ரஹத்தினால் ஜயமுண்டாகலாம்" என்று சொல்லிக்கொண் டிருக்கும்போதே அஸ்த மனமாக, நவநந்தர்கள் கொலுவில் அமர்ந்தார்கள்.

அச்சமயம் ரத்தம் படிந்த வஸ்திரங்களுடன் இரு தூதர்களோடிவந்து "ஸ்வாமீ! தாமதப்பட்டால் ராஜ காரியம் கெட்டுவிடும் என்று கூவினார்கள்.

அது கேட்டு நந்தர்கள் அவர்களை ஸமீபத்தில் வரச் செய்து "என்ன?" வென்று கேட்க, "ஸ்வாமீகாள்! இன்று சூரியோதயம் முதல்இதுவரையிலும் நமது டிங்கிராத பத்ரபடர்கள் சமீபமுள்ள சிற்றரசர்களின் சேனைக்கும் சத்துருக்களின் சக சீன சைன்யங்களுக்கும் எட்டுத்தரம் யுத்தம் நடந்தது. கண்டகீ நதி ஸங்கமம் வரையில் ரத்த வெள்ளம் ஓடிற்று. இன்னும் முடியவில்லை. அவர்களின் பீரங்கிகளில் இருநூற்றைம்பது நம்மவர்களுக்குக் கிடைத்தது. நமது பக்கத்திய ஐம்பதினாயிரம் அசுவங்களைச் சத்துருக்கள் கைப்பற்றினார்கள். அதற்குள் சக நாயகனுக்கும் நமது ஓட்ர தேசாதிபன் வீரவர்மனுக்கும் யுத்தம் நடந்தது. வீரவர்மனின் பாணங்களால் சக நாயகனின் குதிரைவீரர்கள் எல்லாரும் மடிந்தார்கள். இதுகண்டு கோபித்த சக நாதன் தான் உட்கார்ந்திருந்த குதிரையை வெருட்டிக் கொண்டு வந்து தனது கையீட்டியினால் வீரவர்மனை யடித்துக் கொன்று விட்டான். அவ்விதமே நமது மிதிலா மன்னனுக்கும் சீன தேசாதிபன் தம்பியான ஜீமூதனுக்கும் பெருத்த யுத்தம் நடந்தது. மிதிலேசன் தனது கைக் கட்கத்தினால் ஜீமூதன் தலையைத் துண்டித் தெறிந்தான். இன்று விசேஷமாக மகதபதிக்கு ஞாதியான ருத்திரவர்மன் பிரபு கடாக்ஷத்திற்குப் பாத்திரமாக வேண்டும் என்று, சத்துருக்களின் ஆயிரக்கணக்கான குதிரை வீரர்களை சம்ஹரித்து, நின்ற விடத்தில் நில்லாது சித்திர யுத்தம் புரிந்தான். அவன் அரை நாழிகையும் சிரமபரிகாரம் செய்து கொண்டவன் அல்லன் இன்று மத்தியானம் இருந்து நமது ஸாமந்த மன்னர்களின் சேனைகள் சத்துருக்கள் சோணா நதி சங்கமத்திற்கு வராது கண்டகீ ப்ராந்தத்தில் காத்துக் கொண்டிருக்கின்றன. பத்ரபடாதிகள் சேனை பின்னால் தூரத்திலேயே இருந்துகொண் டிருக்கிறது. சத்துருக்கள் சோணா நதிக் கரைக்கு வந்து கொண்டிருக்கிறார்கள். இங்கிருந்து அதிக சைன்யம் உதவிக்குச் செல்லாவிடில் அவர்கள் சோணா சங்கமத்தைத் தாண்டி வந்து விடுவார்கள்." என்றார்கள்.

இது கேட்டு நந்தர்கள், ஐயா அமாத்யரே! "இன்றைய யுத்தத்தில் நமது சிற்றரசர்கள் யுத்தம் செய்திருக்கிறார்கள் அல்லாது பத்ரபடாதிசேனாபதிகள் மனம் வைத்து யுத்தம் செய்ததாகத் தெரியவில்லை. ஆகையால் சத்துருக்கள் இவர்களை யுடன்படுத்திக் கொண்டார்கள் போல் இருக்கிறது" என்றார்கள்.

அதற்கு ராக்ஷஸன் "அரசர்களே! இச்சேனா வீரர் நமக்கு வெகு நாட்களாக ஆப்தர்கள். மேற்காரியத்தை ஆலோசித்து சாமந்த மன்னர்களை அனுப்பிவிட்டுத் தாங்கள் தனித் திருந்திக்கலாம். சேனைகளை உற்சாகப படுத்துவதின் நிமித்தம் சத்துருக்கள் அற்பமென்று சொல்வதல்லாது உண்மையில் இப்பொழுது நேர்ந்திருக்கும் ராஜ காரியம் அசாத்ய மாகவே இருக்கிறது" என்று சொல்லிக்கொண் டிருக்கும் போதே, இரு குதிரை வீரர்கள் ஓடி வந்து, நந்தர்களைக் கும்பிட்டு, "ஸ்வாமிகாள்! கட்கபாணிகளான சத்துருக்களின் பதாதிகள் ஸோபாசிரம வியாபார சோண பத்ரையிலிருக்கும் நமது ஓடக்காரர்களைக் கொன்று அவ்வோடங்களில் தாங்களேறி வந்து இக்கரையில் த்வஜத்தை நாட்டி வியூகம் வகுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் பின் பலமாக காம்போஜ பதியின் சேனையும் பாரசீக பலமும் வந்துகொண் டிருக்கின்றன. கண்டகீ பிராந்தத்தி லிருக்கும் நமது சைனியம் குறுக்கில் வந்து தகைந்தா லொழிய பட்டணத்திற்குத் தீங்கு உண்டாகும்" என்றார்கள்.

இதைக் கேட்ட நந்தர்கள் "ஐயா அமாத்யரே! நமது சேனாதிபதிகள் சத்துருக்களைத் தாக்காது சோணபத்திரா நதி தாண்டுவதைப் பார்த்துக்கொண்டிருந்தார்களென்று தோன்றுகிறது. முந்தி நீங்கள் சொன்னதுபோல் நடக்கவில்லை. நமது மூலபலத்திற்கும் சத்துரு சேனைக்கும் சமீபமாய் விட்டது. இது ஒரு கபடமாகவே இருக்கிறது. இப்பொழுது கோபிப்பது சரியல்ல. ஆனாலும் நமதுசேனைகளைக் கண்டகீ பிராந்தம் விட்டு சோணபத்திரா நதியைத் தாண்டிக் குறுக்கில் வந்து சத்துருக்கள் மிஞ்சி வராமல தகையும்படி சொல்லி யனுப்புங்கள். அவர்கள் அதை மீறி வந்துவிட்டால் நமது பட்டணத்திற்கு அபாயமுண்டாகும். நாளையதினம் சத்துருக்கள் மீது யுத்தம் நடக்கட்டும். சித்திரவர்மனை நமது டிங்கிராதனும்,

மலையபதியை நமது பத்திரபடனும் எதிர்க்கட்டும். புஷ்கராக்ஷனை நமது பலகுப்தனும் சிந்துஷேனனை நமது ராஜஸேனனும், மடக்கட்டும். மேகநாதனுடன் நமது புருஷதத்தனும் சேகரன்மீது நமது லோகிதாக்ஷனும் செல்லட்டும். மத்த காந்தார சக சீன ஹூண மன்னர்களுக்கு நமது சாமந்தர்களான பங்காள மைதில ஒட்ர கூர்ச்சர விதர்ப்ப நாயகர்கள் எதிராகட்டும். எதிரிகளின் கிராதசேனை மீது நமது விந்திய வனத் தரசனான பத்திரகன் தனது வேடர்கள் சேனையுடன் நடக்கட்டும். பர்வதேயர் சைன்யத்தின்மீது நாங்கள் மூலபலத்துடன் யுத்தத்திற்குச் செல்கிறோம்" என்று ஆக்ஞாபித்துக் கொண்டிருந்தார்கள்.

இதற்குள் இன்னமிரண்டு தூதர்கள் ஓடிவந்து "ஸ்வாமிகாள்! ஸரயூநதிமார்க்கமாகப் பதினாயிரம் ஓடங்களேறிச் சத்துருக்கள் ஸேனாஸமேதர்களாககங்காசங்கமம்வந்து கங்கையைத்தாண்டி நமது பட்டணத்தை முற்றுகையிடும்படி வந்து இறங்கிவிட்டார்கள். இன்னும்வந்து கொண்டிருக்கிறார்கள். நதியின் இரு கரையிலும் நதியிலும் எங்கும் ஸைன்யங்களாகவே இருக்கின்றன. மீறி வந்தால் நமது சங்கிலிப் பாலத்தையும் பிடித்து விடுவார்கள்" என்றுசொன்னார்கள்.

அப்பொழுது ராக்ஷஸன் நந்தர்களைப்பார்த்து "அரசர்களே! சத்துருக்கள் யுத்தம் செய்வது போலமுன்பக்கம் சேனைகளை நிறுத்திவிட்டு பின்புறமாக நமது பட்டணத்தை முற்றுகையிட எண்ணி வந்திருக்கிறார்கள். கவலையேன்? வழக்கம்போல் நான்மூலபலத்துடன் சென்று யுத்தம் செய்வதையும் என் சாகஸத்தையும் நீங்கள் பாருங்கள். நான் ஸ்வாமி பக்தனென்பது ஸத்யமானால் உங்களுக்கு ஜயத்தையுண்டாக்கி விட்டு மறுகாரியம் பார்க்கிறேன்" என்று உரைத்துக் கவசமணிந்து குதிரைஏறி ஈட்டியைக்கைப்பிடித்து தனது மெய்காவலரான லக்ஷம் குதிரைவீரர்களுடன் சக்திஆயுதம் தரித்து தேவ சேனைகளுடன் அசுரர் மீதுயுத்தத்திற்குச் செல்லும் குமாரக் கடவுளைப்போல சென்றுகொண்டிருந்தான்.

அப்பொழுது முழங்கிய ரணபேரிகையின் சப்தம் சத்துருக்களின் இருதயத்தைப் பிளக்கச்செய்தது. சக ஹூண கிராதசேனை

கள் கங்காநதி தாண்டி பாடலீபுரத்தின் பச்சிம திக்கிலும் தெற்கு வடக்கிலுமாக வியாபித்து நகர சமீபம் வந்து கொண்டிருந்தன, இதையறிந்து நகர ரக்ஷகர்கள் யுத்தத்திற்குத் தயாராயிருந்தனர். கோட்டை கொத்தளங்கள்மீது விளங்கும் விளக்குகள் தீவர்த்திகள் முதலியவற்றின் பிரகாசத்தால் ஆயிரம் சந்திரனுதித்திருக்கும் நகர்போலும், அதை நெருங்கிவரும் சத்துருக் கூட்டங்கள் விளக்கு விட்டில்கள்போலவும் தோன்றின.

அப்பொழுது ராக்ஷஸன்,பிராணிகளை சம்ஹரிக்கும் மிருத்யுவைப்போல்,கலித்துவரும் சத்துருக்களின் சேனைமீதுபாய்ந்து யுத்தம்செய்து கொன்றுவந்தான். அவனுடைய ஸாமர்த்யத்திற்கு எதிரிகள் தாங்கமாட்டாது பின்னிடுக் கொண்டும், சமயம வந்தபோது முன்னிட்டும் வந்துகொண்டிருந்தார்கள். தெற்குக் கோட்டை வாயிலைக் காக்கும் அவந்தி தேசாதிபன் சத்துருக்கள் மீது கவிந்து யுத்தம் செய்யும்போது ராக்ஷஸன் அங்கு வந்து கடுமையாகவும் ஜாக்ரதையாகவும் யுத்தம் செய்யும்படி அவனுக்குக் கட்டளையிட்டுத்தெற்கு வாயில் வழியாகவே ப்ராகாரத்தின் மீதேறிக் கடல் போல் திரண்டு வரும் சத்துரு சைன்யங்கள் மீது லக்ஷோப லக்ஷங்களாக பிரங்கிக் குண்டுகளைப் பொழிந்து கோட்டையின் அடிவாரத்தைச் சத்துருக்கள் அணுகாதபடி யுத்தம் செய்து, தனது லக்ஷம் பதாதிகளை அங்கு காவலாக நிறுத்தி நின்றவிடத்தில் நில்லாது மேற்குக் கோட்டை வாயில் வழியால் கீழிறங்கி அவ்விடமிருக்கும் ஸௌராஷ்டிராதிபதியை எச்சரித்து, சத்துரு ஸேனை மத்தியில் புகுந்து ஒவ்வொரு வீச்சிற்கு நாலைந்து தலைகளும், ஒவ்வொரு வெட்டிற்கு எழெட்டுக் குதிரைகளும் ஒவ்வொரு அடிக்கு இரண்டொரு யானைகளுமாகத் தன்கைக் கத்தியால் வெட்டி வீழ்த்திக் கொண்டு வந்தான்.

சத்துருக்கள் பிராகாரத்தைப் பிடிக்காதபடி இவ்விதம் ராக்ஷஸன் யுத்தம் செய்வதைக் கண்டு நந்த ஸேனைகளும் ஸாமந்த மன்னர்களும் வெகு உற்சாகத்துடன் கடும் போர் புரிந்தார்கள். மேகங்களின் நடுவில் விளங்கும் சூரியன் போல் ராக்ஷஸன் வடக்குக் கோட்டை வாயில் வந்து சூலாயுதத்தால் அனேகமாகச் சத்துரு சைனியத்தை மடித்து அங்கு ஜாக்ரதையாயிருக்கும்படி கலிங்க

ராஜனுக்குக் கட்டளையிட்டுத் தன் கையிலுள்ள சூலாயுதங் கொண்டே சத்துரு ஸேனாபதிகளை வீழ்த்தியும் ஓடுகிறவர்களை வெருட்டியும், வெருட்டி வருகிறவர்களைச் சங்கரித்தும், ப்ராகாரமேறி நின்று ராஜ த்வாரத்திலிருக்கும் ஸேனைகளை எச்சரித்துப் பட்டணத்து ஜனங்களுக்கு தைர்யம் சொல்லியும், சத்துருக்களின் ஆயுதங்களைக் கொண்டு வந்தவனுக்கு நான்கு மொஹராக்களும், தலை கொணர்ந்தவனுக்கு நூறு மொஹராக்களும், யானைவீரர்களைக் கொன்றவனுக்கு ஆயிரம் மொஹராக்களும், சேனாபதிகளின் தலை கொணர்ந்தவர்களுக்கு லக்ஷம் மொஹராக்களும் அளித்தும் பிராகாரத்தின் மீது சுற்றி வந்தான்.

அகாரணமாய் பொய் சொல்பவனை யணுகும் பாவம் போலும், தனது கூண்டை மறுபடி மொய்க்கும் தேனீக்கள் போலும், சத்துரு சேனைகள் திரும்பித் திரும்பிக் கூட்டம் கூட்டமாக வந்து பிராகாரத்தின் அடிவாரம் நெருங்கி ஏணிகளைச் சார்த்தி லங்கா ஏற்றுவதற்குப் பிரயத்தனம் செய்து கொண்டிருந்தன. அச்சமயங்களில் நந்த சேனைகளால் இறைக்கப்படும் வெடி குண்டுகளாலும் பாண வருஷங்களாலும் கட்கத்தின் வீச்சினாலும், இடி விழுந்ததால் வேருடன் சாயும் விருக்ஷங்கள் போல் சின்னாபின்னமாக அடிபட்டு ரத்த மடுக்களைத் தாண்டி சத்துரு சேனைகள் பின்னிட்டன.

அதுகண்டு ராக்ஷஸன் மெத்தக் கோப மடைந்து துஷ்ட க்ஷத்திரியர்கள் மீது நடக்கும் பரசுராமன் போல ரதமேறிச் சென்று தனது மெய்காப்பாளருடன் மேகங்களைக் கலைக்கும் சுழல் காற்றுப் போல ரதத்தை வேகத்துடன் ஓட்டி, ஒவ்வொரு பாணத்தினால் பத்துத் தலைகளை வீழ்த்தியும் "அடி அடி" என்று உரைத்தும், "பிடி பிடி" என்று கூவியும், சத்துரு சேனைகளைப் பேதித்து, நின்றவிடத்தில் நில்லாது சுற்றி வந்து காற்றினால் உதிரும் காய்ந்த சருகுகள் போல தனது பாணங்களால் சத்துருக்களின் தலைகளை ஆகாசத்தில் பறக்கும்படி செய்தான்.

இது கண்டு சத்துரு ஸைன்யம் ஓட்ட மெடுத்தது. ராக்ஷஸனின் ரதம் நின்ற விடம் நில்லாது எங்கும் சக்கிராகாரமாய் சுற்றி சத்துரு ஸைன்யத்தைக் கலக்கும்போது ஆ!! ஆ!! இவன் வீர

னே! சூரனே! அர்ச்சுனனே! இவனைப்போல் வீரனான வில்லாளி இவ்வுலகில் உண்டோ?" என்று மகா வீரர்கள் புகழ்ந்தார்கள். ராக்ஷஸன் சத்துரு சேனை மத்தியில் ரத்த வெள்ளமாக்கி ரௌத்திராகாரமாய் யுத்தம்செய்து வெருட்டி யடித்து விட்டுக் காயமடைந்த தனது ஸைன்யங்களைப் பார்க்கும் பொருட்டுக் குதிரையேறி ராக்ஷஸன் பட்டணத்திற்குள் நுழைந்தான்.

இதுகண்டு எதிரிகள் இதுவே ஸமயமென்று கும்பல் கூடி வந்து மத யானைகளின் கண்களைக் கட்டி அவைகளை வெருட்டி யோடச் செய்து அவைகளை அகழில் வீழ்த்தி அவைகளாலேயே அகாதமான அகழைத் தூர்த்து அவற்றை மிதித்துக் கொண்டு வந்து ஏணிகளைக் கொண்டு லங்கர் ஏற்றி ப்ராகாரத்தின் மீது சென்று தங்கள் துவஜத்தை நட்டு ஜய பேரிகை யடித்தார்கள்.

இதைக் கேட்டு ராக்ஷஸன் கோட்டைக்குள்ளிருந்து தனது சேனைகளை யழைத்துக் கொண்டு, மதிலேறி அங்கிருக்கும் சத்துருக்களை மடக்கித் தனது கத்தியினால் கை வேறு கால் வேறு தலை வேறு உடல் வேறு [illegible] ஜய பேரிகைகளைக் கிழித்தும் தூரத்தி யடித்து, அவர்களை, ஏறி வந்த வழியே இறங்கச் செய்ததோடு, ஓடும் அச்சேனைகளை மடக்கி யடித்தும், போஜபதியின் சேனைகளைப் பின் துணையாகக்கொண்டும் கோரமான யுத்தம் செய்தான். அப்பொழுது இவனெதிர் நிற்க மாட்டாது " ஆ! " இவன் அமாத்ய ராக்ஷஸனல்லன். பிரத்யக்ஷ ராக்ஷஸன் தான்" என்று சொல்லிக்கொண்டு சத்துரு சேனை புறங்காட்டி யோடிற்று. உடனே கோட்டை மதிலின் மீது ஜய பேரிகைகள் முழங்கவே பட்டணத்திலுள்ள ஜனங்கள், "சத்துருக்கள் ஓடிவிட்டார்கள்" என்று அறிந்து பயம் தெளிந்து சந்தோஷித்து அமாத்ய ராக்ஷஸனுடைய சௌரியத்தை மிகவும் கொண்டாடினார்கள். ராக்ஷஸனும் சத்துருக்கள் வெகு தூரம் ஓடி விட்டார்கள் என்று அறிந்து, தனது சேனைகளை முன்போல் கோட்டை வாசல்களைக் காத்துக்கொண் டிருக்கும்படி நியமித்துத் தன் விடுதிக்கு வரும்போது அருணோதய மாயிற்று.

அப்பொழுது அவன் தன் தேக சிரமத்தை லக்ஷியம் செய்யாது நிவாத கவசர்களை வென்று தந்தையான தேவேந்திரனைக் காண வரும் அர்ச்சுனனைப் போல், நவநந்தர்கள் சமீபம் வந்தான். இது வரை ராக்ஷஸன் யுத்தம் செய்த பராக்கிரமத்தை யானைகள் மீதேறிப் பார்த்துக் கொண்டிருந்த நந்தர்கள் தமது யானை விட்டிறங்கி ஸமீபம் வந்து கை கூப்பிக் கொண்டு நிற்கும் ராக்ஷஸனை ஆலிங்கனஞ் செய்து கொண்டு "ஐயா, அமாத்யரே! இன்று பெரிய காரியத்தை நிர்வகித்தீர். உங்களை மந்திரியாக அடைந்த எங்கள் புண்ணியம் சொல்லி முடியாது. நீங்க ளிருக்கும் போது எங்களுக்கு சத்துரு பயம் உண்டோ? பருவதேசன் உங்களுக் கெதிரில் நிற்க மாட்டுவானோ? இனி தங்கள் சொல்லை யனுஸரித்து நாங்கள் நடப்பவர்க ளல்லாது வேறில்லை" யென்று சொல்லி ரத்தத்தினால் நனைந்திருக்கும் அவன் கவசத்தைத் தாங்களே யவிழ்த்து விட்டு தேஹத்திலிருக்கும் காயங்களுக்கு ஔஷதம் போட்டு "நீங்கள் சற்று சிரம பரிகாரம் செய்து கொள்ளுங்கள். இனி சத்துருக்கள் தகைந்தால் நாங்களே செல்லுகிறோம்" என்றார்கள்

அதற்கு ராக்ஷஸன் "ராஜகுமாரர்களே! ராத்திரி நிற்கமாட்டாமல் புறங்காட்டி யோடிய சத்துரு சைன்யங்களைப் பழையபடி எதிர்த்து நானே யுத்தம் செய்தால் பாளையத்தை விட்டோடி விடுவார்கள். ஆகையால் நானே செல்லவேண்டும். நீங்களும் பின் துணையாய் வாருங்கள்" என்றான்.

அதற்கு நந்தர்கள் "நீங்களில்லாது யுத்தமுண்டோ? சிரமடைந் திருப்பதால் சற்று சிரம பரிகாரம் கொள்ளச் சொன்னதல்லாது வேறில்லை. பழையபடி சத்துருக்கள் தகைந்தால் தாங்களே யுத்தம் செய்ய வேண்டும். தங்களிடமிருக்கும் நம்பிக்கை எங்களுக்கு ஸேனாதிபதிகளிடம் இல்லை. ஆகையால் ஸேனைகளை எங்கு எவ்விதம் நிறுத்த வேண்டுமோ, அவ்விதம் நீங்களே நிறுத்துங்கள். யானை வீரர்கள் குதிரை வீரர்களுக்கு ஸன்மானம் செய்யுங்கள். யுத்தம் செய்யப் பின் வாங்கினவர்களைத் தண்டியுங்கள். பத்ரபடன் டிங்கிராதன் முதலியவர்களுக்குத் தைரியம் சொல்லுங்கள். நமது சிற்றரசர்களை உற்சாகப்படுத்துங்கள். பலகுப்த விஜயவர்மா திகளின் மனோபாவங்களையறிந்து யுத்தத்திற்கு அனுப்புங்கள்" என்றார்கள்.

ராக்ஷஸன் "சரி" யென்று உரைத்துத் தனது ஸேனாபதிகளை வியூகம் வகுத்துக்கொண்டு முன்செல்லும்படி கட்டளையிட்டுத் தூதர்களை யழைத்துத் "தூதர்களே! இரவு யுத்தத்தில்முன் சென்று யுத்தம் செய்யாது சக ஸேனையைக் கண்டு பயந்து ஓடிய நமது மார்வாட தேசாதிபதியின் சைன்யங்களை அழைத்து வந்து, கலிந்து யுத்தம் செய்து ஜயம் பெற்ற நமது விந்திய வன வாஸிகளான வேடர்களின் சைனியங்கள் தமது வாயிலுள்ள தம்பலத்தை அவர்கள் முகத்தில் உமிழும்படி செய்யுங்கள். பின்னும் சத்துருக்கள் மீது யுத்தத்திற்குச் சென்ற நமது கொங்கணபதி ஸேனைகள் எதிரிகளுடன் யுத்தம் செய்யாது தமக்கு அவர்கள் பந்துக்களென்று யோக க்ஷேமம் விசாரித்து வம்படித்துக் கொண்டு இருந்தார்க ளானதால் அவர்களைப் பீரங்கி வாயில் கட்டிச் சுட்டுக் கொல்லும்படி செய்ய வேண்டியது. அந்தக் கொங்கண ராச்சியத்தை நமது போஜ ராஜன் வசப்படுத்தட்டும். ஆந்திர தேசத்தைக் கலிங்கராயன் வசம் செய்ய வேண்டியது" என்று ஆஞாபித்துக்கொண் டிருக்கும்போது, இரவில் கொடும் யுத்தம் செய்து சத்துருக்களை வெருட்டி யடித்த பராக்ரமசாலியான ராக்ஷஸனைத் தானும் கண்டு களிக்க எண்ணினவன் போல் சூரியன் உதயமானான்.

---

## இருபத்திரண்டாவது அத்தியாயம்.

# பர்வதேசனின் அதைரியம்.

---

அப்பொழுது நந்தர்கள் எழுந்து ஸ்நானாதி நித்யகர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு திவ்யாலங்கார பூஷிதர்களாக, அலங்கரிக்கப்பட்டுத் தயாராயிருக்கும் யானைகள் மீதேறிச்செல்ல, அவ்விதமே அமாத்ய ராக்ஷஸனும் தனது யானை மீதேறி முன் சென்றான். அச்சமயம் சத்துருஸேனைகள் எதிர்த்துவந்ததும் பரஸ்பரம் ரோஷாவேசத்தால் சுழற்றும் ஆயுத காந்திகள் சமுத்திர தரங்கங்களில் தோன்றும் சூரிய ப்ரபைபோல் விளங்கிற்று.

"நான் முன்னே, நான் முன்னே" என்று முன்வரும் வில்லாளிகளுடைய கோதண்டங்களிலிருந்து புறப்படும் சரக்கூட்டங்கள்

மேகத்தி லிருந்து பொழியும் ஜலம்போல் ஆகாசம் பூமி முழுவதை யும் வியாபித்து இரு சேனைகளையும் மூடி எங்கு பார்த்தாலும் சரக் கூடம் கட்டியது போல் இருந்தது. இவ்விதம் வரும் பாணங் களைக் குதிரை வீரர்கள் தமது கைக் கத்திகளால் தடுத்தும், வில் லாளிகளைக் கத்தியால் வெட்டி வீழ்த்தியும், பாய்ந்துவரும் வீரர்க ளைத் தமது கையீட்டிகளால் மாரில் குத்திக் கொன்றும், தம்மீது படும் அடிகளைக் கேடயத்தால் தடுத்தும், வீராவேசத்துடன் யுத் தம் செய்தார்கள். யானை வீரர்கள் கூட்டங் கூட்டமாகக் குதிரை வீரர்களைத் தமது பாணங்களினால் ஸம்ஹரிக்க, அந்த யானை வீரர் களைப் பீரங்கிப் படைகள் தம் பீரங்கிக் குண்டுகளால் தாக்கி யானை களுடன் துண்டு துண்டாக்கி மடித்தார்கள். இதைக் கண்டு தேர்வீரர்கள் தமது ரதங்களை சக்ராகாரமாய் சுழன்று வரச் செய்து தமது வில்லினின்றும் புறப்படும் ஒன்று பத்து நூறு ஆயிரம் பதினாயிரக் கணக்கான பாணங்களை வருஷித்துப் பீரங்கிக்காரர்களை நிபாதம் செய்தார்கள். வில்லாளிகளுடன் வில்லாட்களும், யானை வீரருடன் யானை வீரரும், குதிரைப் படைகளுடன் குதிரைப படைகளும், ஈட்டி வீரர்களுடன் ஈட்டி யாட்களும், தேராட்க ளுடன் தேராட்களும் கலந்து, கைகலந்து தமது உயிரை லக்ஷியம் செய்யாது, கீர்த்தியையும் தமது அரசனின் ஜயத்தையுமே கோரி னவர்களாக யுத்தம் செய்தார்கள்.

அப்பொழுது அந்த ரணரங்கமானது பொடிப்பொடியான கத்தி களாலும் நொறுங்கிய சத்திர சாமரங்களாலும், துண்டு துண்டாக் கப்பட்ட ஆயுதங்களாலும் நிறைந்திருந்தது. வெட்டி வீழ்த்தப் பட்ட தேர்ப்பாகர்கள் பதாதிகள் இவர்களின் தேகங்களினின்றும் ரத்த வெள்ளம் பெருகிப் பார்ப்பவர்களுக்குப் பயங்கரமாக இருந்தது. இரு பக்கத்திய சேனா வீரர்களும் தமது கக்ஷியில் அதிக உயிர் நஷ்டம் நேர்ந்தது கண்டு கோபாவேசத்துடனும் ரோஷத்துடனும் யுத்தம் செய்யும்போது அவர்களுடைய ஹுங்கார வொலியானது எங்கும் வியாபித்திருந்தது.

இவ்விதம் கொடுமையாய் யுத்தம் செய்யும்போது ரண ரங் கத்தில் ரண பேரிகை சப்தம் அடங்கி ஆயுதங்களின் ஓசையே அதி

கமாகக் கேட்டது. ஆயுத ப்ரஹாரங்களால் காயமடைந்த மத யானைகளின் வயிற்றிலிருந்தும், வெட்டி வீழ்த்தப்பட்ட பதாதிப் படைகள் வில்லாட்கள் தேராட்கள் தேர்ப்பாகர்கள் முதலியவர்களின் கழுத்தில் நின்றும் அடிபட்ட யானை வீரர்களின் மண்டைகளிலிருந்தும், உயிர் துறந்து கிடக்கும் குதிரைவீரர்களின் வாய்வழியினின்றும் பெருகி வரும் ரத்த நதி ப்ரவாஹங்கள் மேன்மேலும் அதிகரித்தன. அஞ்சி யோடும் ஜனங்கள் அந்த ரத்த நதிகளைத் தாண்ட முடியாது அதனுள் முழுகித் தலைதூக்கி அதில் மிதந்து வரும் கவந்தங்களைப் பிடித்துக் கொண்டு தாண்டி யோடிக் கொண்டிருந்தார்கள். அச்சமர்க்களமானது வீர லக்ஷ்மியின் பொழுது போக்குக்காக ஏற்படுத்தப்பட்ட மஞ்ஜன மடுவோ என்னப் பயங்கரமாகத் தோன்றிற்று. இரு கக்ஷியிலும் பாதி சைன்யங்கள் மடிந்தன. மீந்திருப்பவர்கள் சற்று சிரம பரிகாரம் செய்துகொண்டு மறுபடி யுத்தத்திற்கு ஆரம்பிக்கும் தருணம் இந்தக் கடுஞ் சமரைக் கண்டு பயந்து ஓடுபவன் போல் இரவியும் அஸ்தகிரி அடைந்தான்.

அப்பொழுது இரு பக்கத்து அரசர்களும் தமது ஸேனாபதிகளை யழைத்து "சூரர்களே! இப்பொழுது யுத்தத்தை நிறுத்திச் சிரமபரிகாரம் செய்து கொள்ளுங்கள். நாளைக்கு ஆகட்டும்" என்று ஆக்ஞாபிக்க அவ்விதமே இரு சைன்யாதிபதிகளும் யுத்தத்தை நிறுத்தும்படி தமது ஸேனைகளுக்கு அறிவித்துத் தத்தமது ஸேனைகளுடன் பாளையம் வந்து சேர்ந்து வாஹனங்களை விட்டிறங்கிக் கவசத்தை அவிழ்த்துத் தமது விடுதிகளில் வந்து சிரமபரிகாரம்செய்து கொண்டிருந்தார்கள்.

நந்தர்களும் தமது விடுதி வந்து ஸ்நான போஜனாதிகளை முடித்துக்கொண்டு ராஜகுமாரர்களுடன் யுத்த செய்திகளைப் பேசிக்கொண்டிருக்க, ராக்ஷஸனும் அவ்விதமே யுத்த உடைகளைக் களைந்து ஆஹாராதிகளை முடித்துக் கொண்டு நந்தர்களிடம் வந்து கொண்டிருந்தான்.

அச்சமயம் தூதர் இருவர் வந்துகும்பிட்டு "ஸ்வாமீ! அமாத்யரே! தங்களுத்தரவு ப்ரகாரமே தக்ஷிண திக்கிலிருந்த ஸேனைகள் நான்கு யோஜனை தூரத்தில் வந்து கொண்டிருக்கின்றன. இன்

னம் இரண்டு மூன்று தினத்தில் நமது சேனைகளுடன் சேரக்கூடும்" என்றார்கள்.

அது கேட்டு ராக்ஷஸன், ஸந்தோஷப்பட்டு "தூதர்களே! அச்சேனைகளை சீக்கிரம் அழைத்து வந்து நமது நகருக்குச் சமீபத்தில் இறங்கச் செய்யுங்கள்" என்று உத்தரவிட்டு இரண்டடி நகர்ந்ததும், தசார்ண சூர ஸேனாபதிகள் தேசம் சென்றிருந்த தூதர்கள் திரும்பி வந்து, குதிரைவிட்டிறங்கி ராக்ஷஸனைக்கும்பிட்டு "ஸ்வாமீ! தங்களுத்தரவு ப்ரகாரம் தசார்ண தேசாதிபதியும் சூர ஸேன மன்னனும் பருவத ராஜ்யத்தை முற்றுகையிட்டுக் கொள்ளையிடும் படிக்குச் சென்றார்கள். அவர்கள் கொடுத்த பதில் கடிதம் இது" என்று ஒரு கடிதம் கொடுத்தார்கள்.

அதை ராக்ஷஸன் படித்துப்பார்த்து "நமது உத்தேசப்படியே காரியங்கள் நடந்து வருகின்றன. பருவத ராஜ்யம் முற்றுகையிடப் பட்டிருக்கலாம்" என்று உத்ஸாஹத்துடன் நந்தர்கள் ஸமீபம் வந்து அவர்களை ஏகாந்தத்தில் அழைத்து "ராஜபுத்திரர்களே! இத்தின யுத்தத்தில் இரு பக்கத்திலும் பாதி ஸேனைகள் மடிந்து ஸம யுத்தமாயிற்று. எவ்வளவு ஸாஹஸம் செய்தும் சத்துருக்கள் தாங்களிறங்கிய பாளையம் விட்டுப் பின்னுக்குச் செல்லவில்லை. இன்னமும் யுத்தத்திற்கு ஏற்பாடு செய்து கொண்டிருப்பதாகவே தெரிகிறது. அவ்விதமானால் ஜயம் யார் பங்கிலிருக்குமோ தெரியமாட்டாது. ஆகையால் மேல் விழுந்து சண்டையிடாமல், யுத்தத்திற்கு யத்தனப்படாமல் ஸந்தி பேசுவது போல, சத்துருக்களுக்குக் காட்டி, நமக்கிதுவரையில் நஷ்டம் அடைந்த சேனைக்குப் பதிலாக நமது தக்ஷிணதேசத்து ஸேனைகள் வந்து சேர்ந்ததும் யுத்தத்திற்கு ஆரம்பித்தால் நமக்கு ஜயம் கிடைக்கும். நம்மால் அனுப்பப்பட்ட தசார்ண சூர ஸேன தேச மன்னர்கள் பருவதராஜ்யத்தின்மீது தண்டெடுத்துச் சென்றிருப்பதால், பருவதேசனுக்கு மேல்பலமாக தனது ராச்சியத்திலிருந்து வந்து உதவ முடியாது. நம்மால் ஸேனைகளுடன் நாசமடைவது நிச்சயம். நாம் சற்றுக் காலதாமதம் செய்வதற்குள் காசீராஜனும் நாம் சொல்லி யனுப்பித்தபடி காரியத்தை முடித்துவிட்டால் நமக்கு யுத்தம் செய்வதே லாபமாய் விடும். இவ்

விதம் செய்து நமது காரியத்தை அனுகூலப் படுத்திக் கொள்ளவே ண்டுமல்லாது அவசரப்படுதல் கூடாது" என்றுசொல்லி அவர்கள் சம்மதி பெற்று "விஷ்ணுதாஸன்" என்ற நியோகியையழைத்து அவ னிடம் ரஹஸியத்தில் ராஜ காரிய தந்திரத்தைத் தெரிவித்துப் பரு வதராஜன் ஸமீபத்திற்கு அனுப்பி விட்டுத் தனது சைன்யங்கள் இரு க்கும் இடம் மாறு வேடத்துடன் சென்று, அங்கு பேசிக்கொள்ளும் வார்த்தைகளைக் கவனித்தும், ஸேனாபதிகளிடம் தனது சங்கேதவார் த்தைகளைக் கேட்டு அதற்குத்தக்க பதிலில்லாவிடில் சத்துரு சேனை யைச் சேர்ந்தவன் என்று அறிந்து இவ்விதம் சந்தேகமேற்படும் ஜனங்களைத் தனது கைக் கத்தியைக் கொண்டு நிக்ரஹித்தும் சுற்றி வந்து கொண் டிருந்தான். நிற்க.

அதே சமயம் க்ஷபணகன் சிஷ்யனாகிய வேகசர்மனும் சாண க்யரைக கண்டு நமஸ்கரித்து "நாளையதினம் சாயங்காலத்தில் நந்த ர்களை ஜபசாலைக்கு வரும்படிக்கு மாஸோபவாஸி ஏற்பாடு செய்திரு க்கிறார்" எனத் தெரிவித்தான்.

உடனே சாணக்யன், சேகரன் என்னும் ஸேனாபதியை யழை த்து ரஹஸியத்தில் "ஐயா தளபதியே! இதுவரை இரு கக்ஷியிலும் பாதி சைன்யம் ஹதப்பட்டும் நந்தர்களில் ஒருவனாவது மடியவில்லை. மறுபடியும் யுத்தம் ஆரம்பித்தால் ஜய லாபம் எப்படியிருக்குமோ? ஆகையால் நீ இன்றிரவிலேயே உன்னிட மிருக்கும் சேனையில் முப் பதினாயிரம் குதிரை வீரர்களுக்குக் காசிராஜன் சைன்யம் போல் வேஷம் போட்டுப் பாடலீபுரமிருந்து காசிபட்டணம் செல்லும் வழி யில் இறங்கிக் கொண் டிருந்து நாளை நமது உத்திரவுப்படி நடந்து கொள்ளும்படி ஏற்பாடு செய். இவர்களில் ஆறு குதிரை வீரர்களை நம்மிட மிருக்கச் செய். இவர்களெல்லோரும் சூரர்களாயும் தைரிய சாலிகளாயும் புத்திமான்களாயு மிருக்க வேண்டும். இவர்களில் தலைவனுக்கு ஆயிரம் மோகராவையும் மற்ற அதிகாரிகளுக்கு நூறு ஐம்பது மோகராக்களையும் "சந்திரகுப்த னுங்களுக்கு தனது காரி யத்தின் நிமித்தம் இனும் அளித்தான்" என்றுகொடுத்து உற்சாகப் படுத்தி இப்பொழுதே அனுப்பு. நாளை முதல் உனக்கு விசேஷமாய் ஜயமுண்டாகப் போகிறது" என்றான்.

சேகரனும் "சாணக்யர் ஏதோ பெரிய காரியத்தை ஆலோசித்திருக்கிறார். இதன் நன்மை கடைசியில் தெரிய வருமல்லாது இப்பொழுது தெரியாது" என்றெண்ணிக் கொண்டே தனது சேனைகளிடம் சென்று, சாணக்யன் உத்திரவுப்படியே முப்பதினாயிரம் குதிரை வீரர்களை விபூதி ருத்ராக்ஷங்களால் அலங்கரித்துக் காசி ராஜன் சைன்யம் போலவே உடை முதலியன உடுத்தச் செய்து, ருத்திர பரிவாரம் போல் விளங்கும் அவர்களுக்கு யோக்யதைக்குத் தக்கபடி ஸன்மானம் செய்து "பாடலீபுர மிருந்து காசிக்குச் செல்லும் வழியில் சற்று ஸமீபமாகவே இறங்கிக் கொண் டிருந்து நாளைய தினம் உத்திரவுபோல் நடவுங்கள்" என்று அனுப்பினான். அவர்களும் "சரி" என்று உடனே சென்றார்கள். இச்சமயம் குதிரை வீரரிருவர் பருவத தேச மிருந்து வேகமாக வந்து பருவதேசனிடம், சாஹாரீ நகரத்தை ரக்ஷித்துக் கொண் டிருக்கும் அங்கார வர்மன் கொடுத் தனுப்பிய கடிதத்தைக் கொடுத்தார்கள். பருவதேசனும் அதைப் படிக்கும் அளவில், அதில்,

"தசார்ண சூர ஸேனாபதிகள் நமது தேசத்தை முற்றுகையிட்டு வந்து தலை நகரையும் கொள்ளையிடச் சித்தமா யிருக்கிறார்கள். தாங்கள் எந்த விதமேனும் அவ்விடத்திய காரியத்தை முடித்துக் கொண்டு உடனே இவ்விடம் வந்து சேராவிடில் நமது ராஜ்யத்தையும் தலை நகரையும் சத்துருக்கள் ஆக்ரமித்து விடுவார்கள்" என்று எழுதி யிருந்தது கண்டு யோசித்துக் கொண்டிருக்கும் போதே, ஒற்றர்கள் வந்து கும்பிட்டு "ஸ்வாமி! நந்த சைன்யங்களுக்கு மேற்பலமாக தக்ஷிண திக்கிலிருந்து ஸமீபத்தில் இறங்கி இருக்கும் சைனியம் மூன்று யோஜனை விஸ்தீரணத்தில் இருக்கிறது. நாளை நாளன்று நந்த சைன்யத்துடன் கலக்கும்" என்று விக்ஞாபித்தார்கள்.

இவ்விரண்டு சமாசாரங்களாலும் சேற்றில் விழுந்த மதகஜம் போல் பருவதேசன் ஒன்றும் புத்திக்குத் தோன்றாது மனங்கலங்கி, தூக்க முறாமல் ஆதங்க மடைந்து, தனது மந்திரியாகிய சபரவர்மனை அழைப்பித்து ஏகாந்தத்தில் "ஐயா சபரவர்மனே! வயதிலும் அறிவிலும் முதிர்ந்தவனுயும் நமக்கு ஆப்தனுயுமுள்ள மந்திரி உனுகனின் வார்த்தையைக் கேளாது இச் சாணக்யன் வார்த்தைக்கு

மயங்கி நாம் சகல சேனைகளுடன் நகர் விட்டு வந்தது நமக்குப் பெருத்த ஆபத்தை விளைவிக்கும் போல இருக்கிறதே. அங்காரவர் மன் தன்னால் இனி நகரை ரக்ஷிக்க முடியாதென்று எழுதி யிருக் கும் கடிதத்தைப் பார். நந்தர்களுக்குச் சகாயமாய் தக்ஷிண திக்கி லிருந்து அளவற்ற சேனை வந்துகொண் டிருக்கிறது. சமீபத்தில் அதுவும் வந்து சேர்ந்து விட்டால் நம்மால் என்ன முடியும்! முந் தைய நாளிரவு யுத்தத்தில் மஹா சூரர்களான நமது அரசர்கள் பாட லீபுரத்தை முற்றுகை யிட்டும் லங்கர் ஏற்ற விடாது அமாத்ய ராக்ஷஸ னொருவனே யுத்தம் செய்து வெருட்டி யடித்து விட்டான். நமக்கு ஊரிலிருந்து அதிக சைன்யம் வந்து உதவ முடியாது. நமது பட்டணத்தையே தசார்ண சூர ஸேனாபதிகள் முற்றுகை யிட்டிருக்கிறார்கள். முன்னம் தசார்ண சூரஸேன மன்னர்களால் நம்க்குத் தொந்தரவுண்டான ஸமயம் அமாத்திய ராக்ஷஸன் ஸந்தி பேசி யுத்தம் நடவாது நய பயங்களால் அவர்களை ஸமாதானப் படுத் திய உபகாரத்தை நாம் மறந்து சாணக்யன் பாதி ராஜ்யம் தருவதாகச் சொன்ன வார்த்தைக்கு மயங்கி நாமிங்கு வந்தோமே! நமது ராச்சி யமே கைவிட்டுப் போகும் நிலைமையி லிருக்கிறதே!" என்று சொல் லிக்கொண் டிருக்கும்போதே சூரியன் உதயமானான்.

அப்பொழுது ராக்ஷஸனால் அனுப்பப்பட்ட விஷ்ணுதாஸ னென்னும் நியோகி யானவன் தன் வரவை இவ்வரசனுக்குத் தெரிவி த்து உத்தரவு பெற்று அரசனைக் கண்டு மரியாதையுடன் உட்கார் ந்து கொண்டு "ஸ்வாமி! பூபதிகளான பருவதேசுவரரே! ஸார்வ பௌமரான நந்தர்கள் தங்கள் க்ஷேமத்தை விசாரித்தார்கள். சூத் திர ஸ்திரீ பௌத்திரனை சந்திரகுப்தன் ஞாதி மத்ஸரத்தினால் உங்களை யுடன்படுத்தி இவ்விடம் அழைத்து வந்ததால் உங்களுக்கும் நஷ்டமுண்டாகி எங்களுக்கும் என்று மில்லாத துவேஷம் பார்வ தேயரிட முண்டாயிற்று. இந்த அற்ப மனுஷனின் பொருட்டுப் பெருத்த காரியத்தை யாரம்பித்து மெத்த நஷ்ட மடைந்ததை அறிந்து "இனி சந்திரகுப்தனை எங்கள் வச மொப்புவித்து விடுங்கள். அவன் உங்களுக்கு ஏற்படுத்துவதாகச் சொன்ன பிரயோஜனத்தை நாங்களே தருகிறோம். வீண் சிரமத்தினால் பயனில்லை. என்று

நவநந்தர்கள் உங்களுக்குத் தெரிவிக்கவும் நீங்கள் உரைக்கும் பதிலைக் கேட்டுக் கொண்டு வரவும் சொன்னார்கள்” என்றான்.

இவற்றைக் கேட்ட பர்வதேசன் தன் மனக்கவலையை இந்த ஸமாசாரத்தினால் சற்று மறந்து, அவனைப் பார்த்து “ஐயா நியோகியே! நாங்கள் சந்திரகுப்தனைக் காரணமாக்கி நந்தர்களின் ராஜ பொக்கிஷங்களை யபகரிக்க வெண்ணி வரவில்லை. சத்துருக்களைக் கண்டு பயந்து எங்களைச் சரணமடைந்த சந்திரகுப்தனுக்கு வாக்களித்த ப்ரகாரம் அவன் ப்ரபிதாமஹார்ஜிதமான ராஜ்யத்தை யுத்தத்தின் மூலமாகக் கொடுப்பிக்க வெண்ணியே வந்திருக்கிறோம். இனி யுத்தத்தை நிறுத்தி உங்கள் ராஜ்ய கோசங்களில் பாதியைச் சம பாகமாக சந்திரகுப்தனுக்குக் கொடுப்பது ஸத்யமானால் யுத்தத்தை நிறுத்தி விடுகிறோம். இதை உங்கள் அரசருக்கு அறிவிப்பதுடன் அமாத்ய ராக்ஷஸருடையவும் நந்தர்களுடையவும் க்ஷேமத்தை நாங்கள் விசாரித்ததாகவும் சொல்ல வேண்டியது” என்று சொல்லித் தாம்பூலம் கொடுத் தனுப்பிவிட்டு மறுபடி மந்திரி சபர வர்மனைப் பார்த்து “ஐயா மந்திரியே! நந்தர்கள் நய பய பூர்வ மாக நமக்குச் சொல்லி யனுப்பி யிருப்பதை நீயும் கேட்டுக் கொண்டிருந்தாயன்றோ? இப்பொழு திருக்கும் நமது நிலைமைக்கு நாமே சந்தி பேச வேண்டியிருக்க ராக்ஷஸனே சொல்லி யனுப்பி யிருப்பது நமக்கு நன்மையானதே. நமது பட்டணத் தை இப்பொழுது காப்பாற்ற வேண்டும். தக்ஷிண திக்கிலிருந்து வரும் சைன்யங்களை நந்தர்கள் மூல பலத்துடன் கலக்க விடாது வழி மறைக்க வேண்டும். இவ்விடம் யுத்தம் செய்ய வேண்டும். இம்மூன்று காரியமும் ஒரே சமயத்தில் நேரிட்டிருப்பதால் நமது சைன்யம் ஒன்றுக்கும் ஈடு கொடுக்க மாட்டாது. ஆகையால் ராக்ஷ ஸன் இஷ்டப்ரகாரமே இப்பொழுது நடந்து கொள்வதே நமக்கு நன்மை. இது தவிர்த்து வேறு வழியில்லை” என்றான்.

இது கேட்ட சபரவர்மன் தனக்குள் “இப்பொழுது ராக்ஷஸன் செய்திருக்கும் பிரயத்தினத்திற்கு நமது அரசன் பயந்து லோகாப வாதத்தை எண்ணாது “சரணம்” என்று அடைந்த சந்திரகுப்தனை அவன் சத்துருக்கள் வசம் ஒப்பிவித்துத் தான் சுக மடைவதையே

கோரியிருக்கிறான். இச்சமாசாரம் சந்திரகுப்தனை வஹித்திருக்கும் சாணக்யர் அறிந்தால் அவருடைய கோபத்தால் பார்வதேயரின் ஐசுவரியத்திற்கு ஹானி நேரிடுவது திண்ணம். இந்தக் கஷ்டத்தை யெல்லாம் நான் பாராது யுத்த முகத்தில் நற்கதி யடைய வேண்டும்" என்று தீர்மானித்து, அரசனைப் பார்த்து "ஸ்வாமி! தாங்கள் உரைத்தது இச்சமயத்திற்கு உசிதமானாலும் இதைச் சாணக்யருக்கு அறிவித்து அதற்கு அவரும் தங்கள் மனம்போல் பதில் சொன்னால் அவ்விதம் நடத்தலாம். இல்லை யெனில் தங்கள் மனம் போல் நடக்கலாம்" என்றான். அரசனும் சாணக்யரை யழைத்து வரும்படி தூதர்களை யனுப்பி விட்டு ஸ்நான அறை சென்றான்.

---

## இருபத்துமூன்றாவது அத்தியாயம்.

## பர்வதேசனின் பயநீக்கம்.

---

சபரவர்மனும் தனது விடுதிக்கு வரும்போது தனக்கெதிரில் ராஜ ஸபைக்கு வந்துகொண் டிருக்கும் தூதர்களுடன் கூடிய சாணக்யரைக் கண்டு "இவர் நம்மைக் கண்டு, அரசன் உன்னை இச்சமயம் அழைப்பித்த காரண மென்ன?" வென்று கேட்டால் நான் என்ன வென்று உரைக்கிறது? ராஜ ஸபையில் நடந்ததை வெளிப்படுத்துவதும் மந்திரிகளுக்குத் தர்ம மில்லை. மஹான்களிடத்தில் மறைத்தும் பேசவும் கூடாது. இப்பொழுது மறைந்து கொள்வதே சரியானது" என்று நிச்சயித்து ஸமீபத்திலிருந்த கூடாரத்தின் பக்கத்தில் மறைவாகச் சென்றான்.

தூரத்திலிருந்தே இதைப் பார்த்துக் கொண்டு வந்த சாணக்யன் "இதென்ன காரணமோ! சபரவர்மன் வழியில் வந்துகொண்டு இருந்தவன் என்னைக்கண்டதும் மறைந்து கொண்டதை யோசித்தால் பருவதேசன் நமக்கு சம்மத மற்ற விஷயத்தையும் சத்துருக்களான நந்தர்களுக்கு சம்மதமான வார்த்தைகளையும்

சொல்லியிருப்பான் என்று தோன்றுகிறது. நந்தர்களுக்கு சந்திர குப்தனின் நாசமே அவசியமானதால் அமாத்ய ராக்ஷஸன் நயபயங் களைக் காட்டி, கபடமாகச் சந்தி பேசி வரும்படி காரியஸ்தனை அனு ப்பி யிருக்கக் கூடும். அதற்குச் சம்மதமற்றுத் தனது சொல் அங்கு நடக்காததினுல் வருத்தமுற்று தன் வீடுதிக்கு வந்து கொண்டிரு ந்த சபரவர்மன் நம்மைக் காண வெட்க மடைந்து ஜாடையாய் ஒளித்துக்கொண்டான் போலும். இவனைக் கண்டு அரசனின் எண் ணத்தை அறிந்து கொண்டே அரசனிடம் செல்லவேண்டும்” என்று தீர்மானித்துப் பின்னேடு வரும் தூதனைப் பார்த்து “அடா! இக் கூடாரத்தின் மறைவில் சபரவர்ம னிருக்கிறான். நாம் அழைக்கிறே மென்று அழைத்து வா” என்றான்.

அவ்விதமே அவனும் அழைக்க, சபரவர்மன் வந்து நமஸ் கரித்து மனவருத்தத்துடன் நின்றான். அவனைப் பார்த்து சாணக் யன் “என்ன ஐயா மந்திரி சிரேஷ்டனே! ஆஸ்தானத்தில் உனதர சன் நமக்குச் சம்மதமற்ற காரியத்தைச் சொல்ல, அதைக் கேட்டிரு ந்த நீ, மந்திரி தர்மத்தின் படி என்னுடன் சொல்ல முடியாது கண் மறைவாகச் சென்றாய் போலும்!. சத்துருக்களின் நயம், பயம், கப டம் இவைகளுக்கு அஞ்சி அவர்க ளிஷ்டத்தை நடத்திக் கொடுக்க அரசன் சம்மதித்திருக்கிறானே? அரசர்கள் தமது க்ஷேமத்தை உத் தேசித்து ஸமயத்திற் கேற்றபடி நடப்பதுண்டு” என்றான்.

அதற்குச் சபரவர்மன் “ஸ்வாமீ! ஆசாரியரே! யூகத்தினல் அறிவது போல, பிறர் எதிரில் இருந்தாலும் அறிந்து கொள்ள முடியாது. இதற்கு மேல் நான் விக்ஞாபிக்க வேண்டிய தென்ன விருக்கிறது? பீதி யடைந்தவனுக்குக் காரியா காரிய விவேகம் இராது. ஆகையால் பிசகான காரியத்திற்குச் சம்மதிக்காதவனும், காரியத்தில் சாமர்த்திய சாலியுமான ஸேனுபதி சேகரனிடம் சந் திரகுப்தனை யொப்புவித்து உசிதம் போல் காரியத்தை நடத்த வேண்டியதே” என்று சொல்லி விட்டுச் சென்றான்.

சாணக்யனும் தனக்குள் “சபரவர்மன் சொன்னதை யாலோ சித்தால் பருவதராஜன் சந்திரகுப்தனை நந்தர்கள் வச மொப்புவிக்க யத்தனிக்கிறான் போலவே தோன்றுகிறது. ஆனல் சேகரன் இதற்

குச் சம்மதியான். இதனால் பரஸ்பரம் மனஸ்தாப முண்டாகி சேனைகள் கலகத்தினால் நஷ்ட மடைந்தாலும் "சரணம் அடைந்தவனைச் சத்துருக்கள் வச மொப்புவித்தான்" என்ற அபவாதம் பருவதேசனுக்குண்டாகக் கூடாதென்பதே இவனுடைய அபிப்பிராயம். இது பற்றி நமக்குக் கவலை யில்லை. அரசனை நேரில் கண்டு அவன் அபிப்பிராயத்தை அறிந்து பிறகு செய்ய வேண்டியதை சீக்கிரம் நடத்தி விடுவோம்" என்று நிச்சயித்து ஆஸ்தானம் சென்றான்.

அதற்குள் ஸ்நானாதிகளை முடித்துக் கொண்டு ஆஸ்தானம் வந்த பருவதேசனும் சாணக்யனை யுட்காரச் செய்து தானும் உட்கார்ந்து கொண்டு "ஐயா சாணக்யரே! நந்தர்களிடமிருந்து நியோகி வந்திருந்தான். அவன் சொன்னதாவது:-- பார்வதேயர்களுக்கும் பாடலீபுரத்திய மன்னர்களுக்கும் என்று மில்லாத பகை இப்பொழுது சந்திரகுப்தனா லுண்டாயிற்று. வீண் ஆலோசனையால் பயனில்லை. எமது ஞாதியை எங்கள் வசப்படுத்தினால் அவன் உங்களுக்குச் சொல்லி யிருக்கும் ஏற்பாட்டை நாங்களே முடித்துத் தருகிறோமென்று நந்தர்கள் சொல்லி யனுப்பினார்கள்." என்பதே. இதற்கு ஸமயோசிதமாகப் பதில் சொல்லி யனுப்பினேன். அஃதிருக்கட்டும். முந்தைநாள் இரவு யுத்தத்தில் நமக் கபஜயம் உண்டாயிற்று. நேற்று சமயுத்தமாயிற்று. மறுபடியும் யுத்தம் ஆரம்பித்தால் ஜயாபஜயம் எப்படி யிருக்குமோ? இப்பொழுது அவர்களே ஸந்தி பேச முற்பட்டிருக்கின்றனர். நாம் அதற்கிசைந்தால் நமக்குச் சில தேசகோசங்கள் கிடைக்கும். அதற்குச் சந்திரகுப்தனை அதிபதியாக்கி அவர்களுக்குள்ள வைரத்தைச் சாந்தப்படுத்தி இப்புகழை நாம்பெற்று நமது தேசம் செல்லலாமோ? அல்லது வேறேதேனும் யோசனையுண்டோ?" என்று கேட்டான்.

அது கேட்டு சாணக்யன் கோபத்தால் புன் சிரிப்புக் காட்டிக் கொண்டே "சபாஷ்! பலே! கபட ராக்ஷஸ! உன்னைப் போல் ஒத்த மந்திரியை யடைந்த வரசர்களுக்கு, ஐசுவரியத்திற்கும் சூரத்தனத்திற்கும் குறைவுண்டோ? உன்னாலேயே இதுவரை நந்தர்களை, சகல மன்னர்களும் கீழ்ப்படிந்து நடக்கும்படி ராஜ்யபாரம் புரிந்து வந்தார்கள். இப்பொழுதவர்கள் அநியாய வழியில் பிரவேசித்ததால்

தெய்வ பலங் குன்றி என்னையும் பிரதிக்ஞை செய்யச் செய்து கால பாசத்தினால் கட்டுண் டிருக்கிறார்கள். உனது கபட யோசனைகள் எங்கும் சென்று ஜயமடைவது போல என்னிடமும் நடக்குமோ? சகல புஷ்பங்களிலும் சஞ்சரித்துத் தேனைக் குடிக்கும் வண்டுகள் சம்பக புஷ்பத்தில் எவ்விதம் சஞ்சரிக்க முடியும்? நான் சர்வ வித த்திலும் ஜாக்ரதையுடன் உன் ஹிருதயத்திலேயே இருந்து கொண்டு உனது யோசனைகளை அறிகிறேன் என்பதை மட்டும் நீ அறியவில்லை போலும்" என்று தனக்குள் பேசிக் கொண்டு, பருவ தேசனைப் பார்த்து "ஐயா, அரசே! உலகில் பலமற்றவர்கள் பல சாலிமை பிரார்த்திப்பார்க ளென்பது ப்ரசித்தமா யிருக்க, முதல் நாள் யுத்தத்தில் ஜயமடைந்து மறுநாளில் ஸமயுத்தம்செய்து பலிஷ்டராயிருக்கும் நந்தர்கள் இப்போது சந்தி பேசுவது உண் மையோ, அல்லது கபடமோ?. நீயே யோசித்துப் பார். இவ்விதம் ஸாம மென்ற பேச்சைப் பேசி, யுத்தம் நடக்காது தாமதப்படுத்தி, தனக்கு நஷ்டமான சேனைகளுக்குப் பதில் சேனை வந்து உதவும் வரையில் காத்திருந்து சேனைகள் வந்து சேர்ந்ததும் மறுபடியும் யுத்த மாரம்பித்து, ஜயிக்கவெண்ணி யிருக்கும் ராக்ஷஸனுடைய கபட யோசனையினால் ஏற்பட்ட ஸந்திப்பேச்சே அல்லாது இது உண் மையாமோ? இது கிடக்க. பூர்ண சந்திரன் போல் பிரஸன்னமா யிருக்கும் உன் முகம் வாட்டமா யிருப்பது கண்டால் ஏதோ பெரு த்த கவலையால் இரவு முழுதும் தூக்கமின்றி வருந்தியவனாகத் தோன்றுகிறாய். யாது காரணம்?" என்று வினவினான்.

"ஐயா விப்ரசிரேஷ்டரே! 'இப்பொழுது ராக்ஷஸனுடைய தூண்டுதலால் நமக்குப் பூர்வ சத்துருக்களான தசார்ண சூரசேனபதி கள் நமது ராச்சியத்தைக் கொள்ளையிட்டு அவ்விடத்திலிருந்து நம க்குஉதவியாக சைன்யம் வரவொட்டாது யுத்தம் செய்து கொண்டி ருப்பதுடன் தலைநகரையும் பிடித்து விடுவார்கள்போலிருக்கிறது' என்று நமது நகர ரக்ஷகனாகிய அங்காரவர்மன் கடித மெழுதி யிருக் கிறான். நந்தர்களுக்கு உதவியாக தக்ஷிண திக்கிலிருந்து அபரிமித மான ஸேனைகள் ஸமீபத்தில் வந்து கொண் டிருக்கின்றனவாம். நமது தலைநகரைக் காப்பாற்ற இங்கிருந்து நம் சேனை செல்ல வேண்டிய அவசியம். நந்தர்களுக்கு உதவியாய்வரும் சைன்யத்தை இங்கு வர

விடாது தடுப்பது அதனினும் அவசியம். இங்கு சத்துருக்களுடன் போர் செய்வதோ எல்லாவற்றினும் அதிக அவசியம். இவ்விதம் மூன்று விதமாக ஏற்பட்டிருக்கும் காரியத்திற்கு ஒரே சமயத்தில் நமது சைன்யங்கள் ஈடு கொடுக்க முடியாத தாயிருக்கிறதே என்ற கவலையால் தூக்கமின்றி இருந்தேன்" என்றான் பர்வதேசன்.

அதற்குச் சாணக்யன் "ஐயா மன்னனே! "பூச்சாண்டி"யென்று குழந்தைகளை பயமுறுத்துதல் போல் ராக்ஷஸன் காட்டியிருக்கும் பயத்திற்கு "பருவதேசன்" என்ற பெயரையுடைய நீ அஞ்சி நடுங்கலாமோ? நான் சத்துருககளை ஜயிப்பதற்கு இவ்வளவு சைன்யத்தை அபேக்ஷித்த துண்டோ? யுத்தத்தி லாசைகொண்ட நீ,சமரில் அனேகமாக சேனைகளை நஷ்டப்படுத்திக் கொண்டா யல்லாது இதனால் எனககுச சற்றும் பிரயோஜனம் ஏற்படவில்லை. ஜயத்தை அபேக்ஷிக்கும்போது சேனைகள் மேல் விழுந்தே யுத்தம் செய்யும். கொஞ்சம் நஷ்ட மடைந்தாலோ பெருங் காற்றினால சிதறும் மேகங்கள் போல் சிதறிவிடுவது சகஜமே யாகும். இது இருக்கட்டும். நீ இப்பொழுது அங்காரவர்மனுக் கெழுதி யனுபப வேண்டிய தென்ன வென்றால்,

"உன் கடிதம் கிடைத்தது. இங்கு நேற்றை யுத்தத்தில் நந்தர்களை சம்ஹரித்துப் பாடலீபுரத்தையும் கைவசப்படுத்திக் கொண்டுவிட்டோம். அமாத்ய ராக்ஷஸன் மட்டும் எங்கேயோ ஓடியொளிந்திருக்கிறான். இன்னம் அகப்படவில்லை. நமது தேசங்களில் எங்காவது ஒளித்திருந்தால் அவனைப் பிடித்துத் தருபவர்களுக்கு லக்ஷோப லக்ஷம் பொன்னும், நூற்றுக் கணக்கான கிராமங்களையும் வெகுமதி யளித்து, அவனைச் சிறையில் வைத்து நமது தேசங்களிலெல்லாம் ஜய பேரிகை யடித்து, ஜனங்கள் உற்சவம் கொண்டாடி வரும்படிக்கும் கோவில்களில் அபிஷேக ஆராதனங்கள் செய்யும்படிக்கும் தெருக்களில் சர்க்கரை வழங்கும்படிக்கும் ஏற்பாடு செய்ய வேண்டியது".

என்றெழுதி உனது முத்திரை வைத்து அனுப்பு. உனது தேசத்தில் ஜயோற்சவம் கொண்டாடி ஜய பேரிகைள் முழங்க வாரம்பித்

தரும், தப்பட்டை யோசை கேட்டோடும் அற்ப மிருகங்கள் போல் அங்கு சூழ்ந்திருக்கும் சத்துரு சைன்யங்கள் ஓடிவிடும். இது நிச்சயம்" என்றான்.

அதற்கு அரசன் "ஆமாம்! இவ்விதம் செய்தால் சத்துருக்கள் ஓடக் கூடு மானாலும் இப்பொழுது தக்ஷிண திக்கிலிருந்து நந்தர்களுக்கு உதவியாய் வரும் சேனைகளுக்கு வழியென்ன?" என்றான்

அதற்குச் சாணக்யன் "ஐயா, மன்னனே! பஞ்சாக்ஷர ஜபத்தால் பறந்து ஓடும் பாபங்கள் போல், இன்று, நாளையில், அச்சேனைகளும் ஓடிவிட்ட செய்தியை நீ கேள்விப்படப் போகிறாய்" என்றான்.

என்னலும், அரசன் "ஐயா அந்தண சிரேஷ்டரே! நீங்கள் சொல்வதெல்லாம் மெத்த ஆச்சரியமா யிருக்கிறது. அவ்விதம் அச்சேனைகள் ஓடாது நந்தர்களின் மூல பலத்துடன் கலந்து விடும் பக்ஷத்தில் அப்பொழுதேனும் நமது க்ஷேமத்தைக் கருதி ஸந்திப் பேசசிற்குக் கட்டுப்பட்டு நந்தர்களின் அபிப்பிராயத்தை நிறைவேற்றிக் கொடுக்கும் படி நேருமல்லவா?" என்றான்.

சாணக்யன் இது கேட்டு "ஐயா வேந்தனே! வெளிப்படையாகச் சொல்ல வெட்கி மறைபொருளாகச் சொல்கிறாயே. சந்திரகுப்தனைத் தங்கள் வசமொப்புவிப்பது என்பதைக் காட்டிலும் நந்தர்களுக்கு வேறு அபிமத மென்ன விருக்கிறது? இது தானே?" யென்று கேட்டான்.

"இதைத் தாங்கள் அறிந்திருக்கும்போது நான் சொல்ல வேண்டிய தென்ன விருக்கிறது?" என்று அரசன் பதில் சொல்ல, சாணக்யன் கை கொட்டி நகைத்து "என் ஐயா பிரமாதமான காரியத்தைச் செய்ய எண்ணி யிருக்கிறாய்? இச்சங்கதி இந்த யுகத்தில் நடக்குமோ? நான் மரணமடைந்து எனது பௌருஷமும் நஷ்டப்பட்டு எனது தபஸாகிற சஸ்திரத்தின் முனையும் மழுங்கி விட்டா லல்லவோ இது பற்றி யோசிக்கலாம்? நான் உயிருடன் இருக்கும்போதே இவ்வித காரியம் நடக்குமாகில் வேறு இந்திரனைச் சிருஷ்டிப்பேன். அல்லது சுவர்க்கத்திற்கு இந்திரனில்லாமலும் செய்வேன்" என்று கர்ச்சித்து 'துஷ்டர்களா யிருந்த கார்த்த வீரியன் முதலிய க்ஷத்திரியர்

களைத் தன்று கைக் கோடாலியால் இருபத்தொரு தரம் க்ஷத்ரியர்களை வதைத்து அவர்கள் தேஹ ரத்தமாகிற உதகத்தில் அவர்கள் தலை மயிராகிற தர்ப்பைகளைக் கொண்டு பிதுரு தர்ப்பணம் செய்த பரசுராமன் போல் நவநந்தர்களையும் அவர்களுக்கு உதவியா யிருக்கும் துஷ்டர்களையும் நமது ஹுங்காரத்தினாலேயே சாம்பராக்கி விடுவோம்" என்று சொல்லிக் கொண் டிருக்கும் அளவில், இரு ஒற்றர்கள் வந்து பருவதேசனைக் கும்பிட்டு "காமரூபாதிபதிக்கும் லம்பாக மன்னனுக்கும் கோரமான யுத்தம் நடந்தது. லம்பாக மன்னன் தோற்றுப் போய் காமரூபாதிபதியுடன் ஸந்தி பேச எத்தனித்திருக்கிறான்" என்றார்கள்.

இது கேட்டு ஸந்தோஷித்த பருவதேசன் "சாணக்யராலேயே நமக்கேற்பட்டிருந்த துன்பம் இவ்விதம் விலகிற்று" என்ற எண்ணத்துடன் சாணக்யருடைய முகத்தைப் பார்த்தான். சாணக்யன் அது கண்டு "ஐயா, ஜயத்தையே எதிர் பார்க்கும் மன்னனே! இதென்ன சந்தோஷ சமாசாரம்? இன்று கிடைக்கப் போகும் ஜயத்தையும்ஸந்தோஷத்தையும் பார்க்க வேண்டுமானால் சேகரனென்ற ஸேனாபதிக்கு சகல ஸேனாதிபத்யத்தையும் கொடுத்து நானிருக்கும் இடத்திற் கனுப்பு" என்று சொல்லி விட்டு ஆஸ்தானம் விட்டெழுந்து தனது விடுதிக்கு வரும்போது,தனக்குள் "பருவதேசன் ராக்ஷஸனுடைய கபடத்தை அறியாது கலங்கி சத்துருக்களிடம் சந்திரகுப்தனை யொப்புவிக்க வெண்ணியது அவன் வாயைக்கொண்டே வெளி வந்து விட்டது. அரசர்களின் சித்தம் எச்சமயத்தில் எப்படி யிருக்குமோ" வென்று யோசித்துக் கொண்டே தன்னிருப்பிடம் வந்து சேர்ந்தான்,

தன் விடுதி வந்து சேர்ந்த சாணக்யன் ஸ்நானம் செய்து ஸந்தியாவந்தனாதி ஜபதங்களை முடித்துக் கொண்டு ஸேனாதிபதியான சேகரனின் வரவை எதிர் பார்த்துக் கொண்டிருந்தான்.

# இருபத்துநான்காவது அத்தியாயம்.

## சேகரனை ஸர்வ ஸேநாதிபதியாக்கல்.

---

அங்கு, பர்வதேசன் தன்மனதில் 'நந்தர்களிடம் சந்திரகுப்தனை யொப்புவித்து விடலாமா?'வென்று ஜாடையாய் நாம் கேட்டதிலேயே சாணக்யருக்கு மஹா கோப முண்டாகிப் படமெடுத்த மஹா ஸர்ப்பம் போலும் பசித்தெழும் பதினாறடி வேங்கை போலும் கர்ச்சித்தார். அச்சமயம் அவர் முகத்தில் பிரளய கால ருத்திரன் போல் கோபம் பிரகாசித்ததே! நமக்குப்பெருத்த நஷ்ட கஷ்டங்களுக்கிடமாக ஏற்பட்டிருந்த லம்பாக பதியின் கர்வபங்கம் இவருடைய ஆலோசனையாலேயே ஏற்பட்டிருக்கிறது. இப்பேர்ப்பட்டவரை அடைந்திருக்கும் சந்திரகுப்தனுக்கு அஸாத்யமான காரியம் ஒன்றுமே இல்லை. சாணக்யரைப் பார்த்தால் நமது ஸஹாயம் காரணமாத்திரமன்றி உதவிக்காகத் தோன்றவில்லை. அங்கு ராக்ஷஸனுடைய தந்திரங்களையும் யுத்தத்தின் ஸாமர்த்தியத்தையும் பார்த்தால் நந்தர்களின் ஐசுவரியத்திற்குக் குறைவு நேரிட மாட்டாதென்றே தோன்றுகிறது. இதற்கென்ன செய்யலாம்?" என்று யோசித்துத் தனக்கு மித்திரனும் ஸேனாதிபதிகளில் முக்யமானவனுமான சேகரனையழைத்து ஏகாந்தத்தில் உட்கார வைத்துக் கொண்டு, ராக்ஷஸன் நியோகியை யனுப்பியது முதல் சாணக்யர் எழுந்து போனது வரையிலுள்ள சமாசாரங்களை யெல்லாம் சொல்லி "ஐயா, சேகர! சந்திரகுப்தனை நந்தர்களிடம் ஒப்புவித்து அவர்களால் கிடைக்கும் பாதி ராச்சியத்தை உனக்குப்பட்டாபிஷேகம்செய்து,நான அமாத்யராக்ஷஸனுடைய சிநேகத்தை விருத்தி செய்து கொண்டு க்ஷேமமாய் ஊர் செல்லலாமென்று தீர்மானித் திருக்கிறேன். உன் அபிப்பிராயம் என்ன?" என்றான்.

இது கேட்டுப் புத்திமானும் காரியாகாரிய நிபுணனுமாகிய சேகரன் தனக்குள் "ஓஹோ! ஏதோ விநாச காலத்திற்கல்லவோ நமது அரசனுக்கு இவ்விதம் துர்ப்புத்தி யுண்டா யிருக்கிறது? சரணம் என்று தன்னை நம்பி வந்து அநாதனா யிருக்கும் சந்திரகுப்தனுக்குத் தான் முந்தி யளித்த வாக்கை மறந்து இப்பொழுதுதான் உயிருடன் இருக்கும் போதே தானே யவனைச்சத்துருக்கள் வசம்

நுப்புவிக்க எண்ணி யிருக்கிறானே. இப்பாபத்திற்குப் பிராயச்சித்த முண்டோ? பார்வதேச வம்சத்திற்கே பெருத்த அபகீர்த்தி யுண்டாய் விடும்போ லிருக்கிறதே! நாம் இச்சமயம் பேசாதிராது புத்தி மதி சொல்லுவோம். அதைக் கேட்காவிடில் நாம் சகல ஸேனைகளுடன் சாணக்யருக் களித்த வாக்கு ப்ரகாரம் உதவி செய்வதே முடிவான தீர்மானம்" என்று நிச்சயித்து, அரசனுக்கு நயபயங்கள் காட்டி அனேக இதிகாச புராண கதைகளையும் சொல்லி மனதைத் திருப்பினான்.

அதனால் மனந்தெளிந்த பருவதேசனும் "ஐயா ஸேனாபதியே! நீ யெனக் கிவ்வளவு தூரம் நல்லுபதேசம் செய்தது எனக்கு க்ஷேமத்தையும் என் குலத்திற்கு அதிக கீர்த்தியையும் கொடுத்தது" என்று சொல்லித் தனது அரசர்களையும் சிற்றரசர்களையும் வரவழைத்து "இன்று சேகரனுக்குப் பெருத்த ராஜ காரியத்தின் பொருட்டு சகல ஸேனாதி பத்யம் அளித்திருக்கிறோம். ஆகலால் நீங்கள் அனைவரும் உங்கள் சேனைகள் உட்பட சேகரனின் உத்திரவு ப்ரகாரம் நடந்து கொள்ள வேண்டியது" என்று ஆக்ஞாபித்து, வஸ்திர பூஷணங்களால் சேகரனை ஸன்மானித்துத் தாம்பூலம் அளித்து "ஐயா ஸகல ஸேனாதிபதியே! நீ சாணக்யரிடம் சென்று அவர் கட்டளையின்படி நடந்து கொள்" என்று சொல்லி யனுப்பினான். சேகரனும் சகல ஸேனாதிபத்யத்தை வகித்து மன்னர்களும் ஸாமந்த நரபதிகளும் "ஜய ஜய" வென்று வணங்கும் மரியாதையைப் பெற்றுக் கொண்டு, சாணக்யரிடம் சென்று நமஸ்கரித்து அவர் உத்திரவின் மேல் உட்கார்ந்து கொண்டான்.

அப்பொழுது சாணக்யன் திருப்தி யடைந்து சேகரனைப் பார்த்து ரஹஸியத்தில் "ஐயா ஸர்வ ஸேனாபதியே! மலயகேதுவைப் போலவே ஜாடையும் பாவனையுமுள்ள புத்திசாலியான ஒரு புருஷனை ராஜ யோக்யமான பூஷணங்களா லலங்கரித்து அவனை யானை மீதேற்றி நமது பரிவாரங்களுடன் நேற்று காசி ராஜனின் சேனைகள் போல் வேஷந்தரித்து காசி மார்க்கத்தில் இறங்கி யிருக்கும் சேனையால் அனுப்பிவரும்" என்று ஆக்ஞாபித்தான்.

சேகரனும் "உத்திரவு" என்று எழுந்து சென்று ஒருவனை அலங்கரித்து "மலயகேது" வென்று பெயரிட்டு யானைமேல் உட்கார வைத்துப் பார்வதேயரின் சேனைகளுடன் காசி மார்க்கத்திற் கனுப்பி விட்டு வந்து சாணக்யருக்கு அறிவித்தான்.

சாணக்யனும் தன்னிட மிருக்கும் ஆறுகுதிரை வீரர்களில் இருவரை யழைத்து "இன்றுநந்தர்கள் ஜபசாலைக்கு வந்ததும் நீங்கள் காசி ராஜ தூத வேஷத்துடன் நந்தர்களிடம் இவ்விதம் சொல்லுங் கள்" என்று ரஹஸியமாய்ச் சில சொல்லி அனுப்பிவிட்டு, "நீங்கள் இந்த வேஷத்துடன் காசி ராஜனின் ஸேனைகள் ஜபசாலைக்குப் புற ப்பட்டவுடன் நந்தர்களிடம் வந்து இவ்விதம் சொல்லுங்கள்" என்று இன்னுமிரு குதிரை வீரர்களை யனுப்பி விட்டு, மீந்த இருவரையும் அழைத்து "நீங்கள் காசி மார்க்கத்தி லிருக்கும் சேனையிலிருந்து கொண்டு நந்தர்கள் ஜபசாலை வந்ததையும் சேகரனுடைய ஸங்கேத த்தையும் அறிந்து அதன் பிறகு இவ்விதம் செய்யுங்கள்" என்று ஆக்ஞாபித்து அவர்களை யனுப்பி விட்டு, சேகரனை ஏகாந்தத்தில் அழைத்து "ஐயா சேகர! நந்தர்கள் ஜபசாலை வந்ததும் அதைக் காசி மார்க்கத்தி லிருக்கும் நமது ஸேனைகள் அறியும்படி த்வஜத்தைக் கைப் பிடித்துக் குதிரை வீரர்களை வழியில் நிற்கும்படி ஏற்பாடு செய். நந்தர்களுடன் யுத்தம் ஆரம்பிக்கும் போதே ஜய பேரிகை யை முழக்கும்படிக்குக் கட்டளையிடு. ஜபசாலையில் நெருப்புப் பிடி த்து எரிய ஆரம்பித்த வுடன் நமது மீதி சேனைகளை, நந்தர்கள் சேனைகளைத் துரத்திக் கொண்டு சென்று திரும்பி சகாயத்திற்கு வராது தடுத்து யுத்தம் செய்யச் சொல்லு. ஸேனாபதிக ளெல்லாம் சித்தமாய்க் காத்திருக்கட்டும். அங்கங்கு ஒற்றர்களை நிறுத்தி அப் போதைக் கப்போது நடக்கும் ஸமாசாரங்களை நமக்கு அறிவிக் கும்படி உத்திரவு செய். இன்று மெத்த ஸாமர்த்தியமாகவும் ஜாக் ரதையுடனும் இக் காரியங்களை முடிக்க வேண்டியவன் நீ தான்" என்று உபசாரமாய்ச் சொல்லி யனுப்பினான். சேகரனும் அவ்விதமே சகல ஏற்பாடுகளையும் செய்து முடித்துத் தயரா யிருந்து கொண் டிருந்தான்.

# இருபத்தைந்தாவது அத்தியாயம்.

# நவநந்தர்கள் அகப்பட்டுக் கொள்ளல்.

பிறகு, சாணக்யன் "நான் பிராமண சிரேஷ்டனா யிருப்பதும் சுக்கிராச்சாரியருக்கு சிஷ்யனாக ஏற்பட்டதும், யாதொரு கதியு மற்றுசத்துரு மத்தியில் கஷ்டப்பட்டுக் கொண் டிருந்த சந்திரகுப்த னுக்கபயம் அளித்ததும் துஷ்டர்களான நந்தர்களை சம்ஹரித்து, க்ஷத்திரிய வமசத்தை இதோடு ஸமாப்தி செய்து, தருமத்தை நிலை நிறுத்த வெண்ணிச் சபதம் செய்ததும் சத்யமானால், இச்சமயம் ராக்ஷஸனுக்கும் நந்தர்களுக்கும் பிரிவு ஏற்படட்டும்" என்று தன்னு டைய குருவையும் குல தெய்வங்களையும் பிரார்த்தித்துக் கொண்டு தக்க ஸமயத்தை எதிர் பார்த்துக் கொண் டிருந்தான்.

அங்கு, நந்தர்கள் தமது கூடாரத்தில் ஸ்நானம் செய்ததும், பின்பு, பர்வத ராஜனிடம் அனுப்பி யிருந்த விஷ்ணுதாஸன் என்ற நியோகி சொன்ன வார்த்தைகளைக் கேட்டு, ராக்ஷஸனை ஸ்நானத்தி ற்கு அனுப்பி விட்டு, ராஜகுமாரர்களுடன் மிருஷ்டான்னம் புசித்து, கந்த மாலைகளால் அலங்கரித்துக் கொண்டு 'ஸமீபத்தில் யுத்தம் கிடையாது' என்று எண்ணிக் கவலையற்று, பஞ்சணைகளில் படுத்துத் தூங்கிக் கொண் டிருந்தார்கள்.

அப்பொழுது ராக்ஷஸனும் தனது நியோகியிடம் பருவதேச னுரைத்த வாக்கியத்தால் கொஞ்சம் தாமதம் உண்டா யிருக்கிற தென்று ஸந்தோஷித்து, போஜனாதிகளை முடித்துக்கொண்டு, தனது தூதனை யழைத்து, "அரசர்களின் ஸமய மறிந்து வா" வென்று அனு ப்ப, அவனும் சென்று திரும்பி வந்து "ஸ்வாமீ! அரசர்கள் நித்திரை யிலிருக்கிறார்கள்" என்று பதில் சொன்னான்.

ராக்ஷஸன், ஸமீபத்தில் சத்துரு பயம் இல்லாம லிருந்ததாலும், நவநந்தர்களுக்குத் தெய்வ பலம் தப்பிக் காலமிருத்யு குறுகி விட்ட தாலும், சாணக்யரின் பிரார்த்தனையால், நித்திரா தேவியின் வச மடைந்து இரண்டு நாள் யுத்தத்தினால் மெத்தக் களைபபடைந் திரு ந்ததால் பிரக்ஞை யற்றுப் படுத்துறங்கிவிட்டான்.

சற்று நேரங் கழிந்ததும் நந்தர்கள் தூங்கி யெழுந்து ராஜ காரிய மில்லாததினால் பொழுது போக்குவதற்குச் சொக்கட்டா னுட யத்தனித்துக் கொண்டு இருக்கும்போது ஜப சாலையிலிருந்து மாஸோபவாஸியின் சிஷ்யர்கள் இருவர்கள் தமது கமண்டலுவி லிரு ந்து, தமது கைத் தர்ப்பைகளால் ஜலத்தை எடுத்து நடக்கும் வழி

யிற் ப்ரோக்ஷித்து அதில் கால்கள் வைத்து நடந்து கொண்டு, நந்தர்களை யழைக்க வரும் கால மிருத்யுவின் தூதர் போல, கூடாரத் தருகில் வந்து, வாயிற் காப்போரைக் கொண்டு தங்கள் வரவை நந்தர்களுக் கறிவித்தார்கள். பிறகு நந்தர்களின் உத்தரவினால் உள்ளே சென்று, அரசருக்கு "மங்கள முண்டாகட்டும்" என்று வாழ்த்தி "ஐயா பூபதிகளே! சத்துரு பலாயன ஜபசாலையில் அனுஷ்டானம் செய்து வரும் மாஸோபவாஸி மஹரிஷியின் சிஷ்யர்கள் நாங்கள். இன்று வெள்ளிக் கிழமை யானதால் ஜப ஹோமங்கள் முடிவடைகின்றன. பூர்ணாஹுதி ஸமயத்தில் உண்டாகும் தேவதையின் தரிசனத்திற்கு "நாங்களும் வருகிறோம்" என்று சொல்லி யிருந்தீர்களாம். அதற்கு இதுவே சமயம். தேவதா தரிசனத்திற்கு முன்னதாக உண்டாகும் சுப சகுனங்க ளெல்லாம் காணப்படுகின்றன. எங்கள் குருவானவர் த்யானத்திலிருக்கிறார். சீக்கிரம் விஜயம் செய்யுங்கள்" என்றார்கள்.

இது கேட்டு நந்தர்கள் தமக்கு வாழ்நாள் குறுகி விட்டதை யறியாமல் கால வசத்தினால் புத்தி மயங்கி, "சரி. நாமெல்லோரும் செல்வோம்" என்று சொல்லிக் கொண்டு அமாத்ய ராக்ஷஸர் யாது செய்கிறார் என்று விசாரித்து, அவர் நித்திரையிலிருக்கிறார் என்பது அறிந்து "இரண்டு நாள் யுத்தத்தில் சிரமப்பட்டு அலுப்படைந்து தூங்குகிறார். அவரை ஏன் எழுப்ப வேண்டும்? நாமே செல்வோம்" என்று தீர்மானித்து திவ்யாபரண பூஷிதர்களாகத் தத்தமது குதிரைகளில் ஏறும்போது வழக்கப்படி மெய் காவலாளிகள் வந்து நின்றார்கள்.

இது கண்டு மாஸோபவாஸிகளின் சிஷ்யர்கள், சூத்திரர்களைக் கண்டு, தமது தீர்த்தத்தை ஒருவர் மேல் ஒருவர் வாரி யிறைத்துக் கொண்டு பின்னுக்குச் சென்றதும், நந்தர்கள் அது கண்டு தாங்கள் முன் சொன்ன வார்த்தையை நினைந்து, சூத்திரர்கள் ஜபசாலைக்கருகில் வர வேண்டா மென்று தடுத்து விட்டு, வலுவில் வந்தடையும் பாக்ய லக்ஷ்மியை உதைத்துத் தள்ளும் நிர்ப்பாக்யன் போல், யாதொரு திக பலமு மில்லாது, இரண்டொரு ராஜ குமாரர்களை

யழைத்துக் கொண்டு, நல்முத்துக் குடைகளுக்கும் வெண் சாமரங் களுக்கும் இடையில், நக்ஷத்திர மத்தியில் பிரகாசிக்கும் சந்திரன் போல், எல்லோரும் குதிரைகளில் ஏறிச் சென்று, சத்துரு பலாயன ஜபசாலையை யடைந்து, குதிரை விட்டிறங்கி ஜபசாலைக்குள் பிரவே சித்ததும், அச்சமயம் பச்சிம திக்கில் காசீ மார்க்கத்தில் ஆகாயம் பூமியிரண்டும் பிளந்து விடும்போல் பீரங்கிகளின் சப்தம் கேட்டது. கேட்கவே, "ஓஹோ! நாம் சொல்லியிருந்த பிரகாரம் காசீ ராஜன் காரியத்தை முடித்து, பருவதேசனின் ஸேனைகளுடன் யுத்தம் செய் கிறான்" என்று பேசிக் கொண்டே தியானத்தி லிருக்கும் மாலோப வாஸி மஹா முனிவரை நமஸ்கரித்து ஹோம குண்டத்தைப் பிரத க்ஷிணமாகச் சுற்றி வந்தனர் அப்போது கையில் ஆயுதமில்லாது காசீ ராஜனின் தூதர்கள் இருவர் குதிரை மீதேறி, ஓட்டமாய் ஓடி வந்து "ஜயம்" "ஜயம்" "ஜயம்" என்று உரக்கக்கூவினர். அதுகேட்டு நந்தர்கள் ஜபசாலை விட்டு வெளியில்வந்து அத்தூதர்களைப் பார்த்து "என்ன விசேஷம்"? என்று கேட்டார்கள்.

அதற்கு அந்தக் கபட தூதர்கள் "ஸ்வாமீ! நாங்கள் காசீ ராஜனின் தூதர்கள். எங்கள் அரசர் பருவதேசனுக்கு ஸஹாயமாய் வந்து வழியி லிறங்கிக்கொண் டிருந்ததும், பருவதராஜ குமாரனை மலயகேது வென்பவன் எங்கள் அரசரை எதிர் கொண் டழைக்க வந்தான். இருவர்களும் மரியாதையுடன் குசலம் விசாரித்துக் கொண்டு ஒரே அம்பாரியில் உட்கார்ந்துவரும்போது யானையானது பாடலீபுரம் நோக்கி வருவது கண்டு, "இதென்ன?" வென்று மலய கேது கேட்டான். அதற்கு எஙகள் அரசன் இவ்வழியாய்ச்சென்றால் உங்கள் ஸேனை இறங்கி யிருக்குமிடத்திற்குச் சீக்கிரம் போய்ச் சேர லாம்"என்று சொல்லித் தனக்குள் சிரிப்பு அடங்காது புன்னகைபுரிந் தார். இது கண்டு ஏதோ மோசமாக இருக்கிறதென்று மலயகேது தன் அம்பாரியை விட்டுத் தரையில் குதித்து விட்டான். அவன் ஸேனைகள் கொஞ்சமே ஆகையால். எங்களரசன் உடனே . மலயகே துவைச் சிறைப் பிடித்து விட்டார். மலயகேதுவின் பரிவாரங்கள் ஓடிவிட்டன. பருவதேசன் கூடிய சீக்கிரம் இச்சமாசாரம் அறி

ந்து சேனைகளுடன் வந்து விடுவான். ஆகையால், இங்கிருந்து தக்க படி சைன்யங்கள் உதவிக் கனுப்பும்படி சொல்லி விட்டுவாருங்கள் என்று எங்களை எங்களரசன் அனுப்பியிருக்கிறார். இங்கிருந்து உடனே சைன்யங்கள் சென்றாலன்றி முழுவதும் நமக்கு ஜயம் கிடைக்காது'' என்றார்கள்.

அது கேட்டு நந்தர்கள் "காசிராஜன் நமக்கு மித்திரனானதால் மலயகேதுவைப் பிடித்துக் காரியத்தைச் சாதித்து விட்டான். மலய கேது பிடிபட்டதினால் சந்திரகுப்தனே யகப்பட்டது போல் ஆயிற்று. சத்துரு பலாயன ஜயம்செய்யும் இம்மாஸோபவாஸி, மஹான் என்பதில் ஆக்ஷேபமில்லை. இவர் ஜயம் செய்வதாலேயே நமக்குஇவ் விதமாகக் காரியம் கை கூடிற்று'' என்று சந்தோஷப்பட்டுக் கொண்டு பத்திரபடாதி ஸேனைகளையெல்லாம் அவர்கள் முழுஸேனை களுடன் சென்று பருவதேசன், காசி ராஜன் மீது வந்து கவியாமல் குறுக்கிட்டு நின்று யுத்தம் செய்யும்படி தூதர்களைக் கொண்டு சொல்லி அனுப்பியதும், அச்சேனா நாயகர்களும் அவ்விதமே ஸகல சேனைகளுடன் புறப்பட்டு பாடலீபுரத்திற்குத் தக்ஷிண திக்கை நோக்கிச் சென்றார்கள். மறுபடி நந்தர்கள் அக் கபட தூதர்களைப்பார்த்து "காசிமார்க்கத்தில் பீரங்கி சப்தமுண்டாகக் காரணமென்ன?'' வென்று கேட்க, அவர்கள், "ஸ்வாமீ! மலயகேதுவைச் சிறைப் பிடித்த ஸந்தோஷத்தினால் எங்கள் ஸேனையில் பீரங்கிகளை வெடி தீர்த்தார்கள்'' என்றார்கள்.

இதற்குள், மலயகேதுவை மூடுபல்லக்கில் உட்கார வைத்துக் காசி ராஜனின் சேனைகள் சகல ஆயுதங்களுடனும் தக்கபடி காப் புடன் கொண்டு வரும்போது பழையபடி இரு கபட தூதர்களான ஒட்டகை வீரர்கள் நந்தர்களிடம் ஓடி வந்து "ஜயம்'' "ஜயம்'' "ஜயம்'' என்று கூவினார்கள்.

நந்தர்கள் இதுகேட்டு"என்ன''வென்றுவிசாரித்ததும்,"ஸ்வாமிகாள்! காசி ராஜர் மலயகேதுவைப் பிடித்துப் பல்லக்கில் உட்கார வைத்துக் கொண்டு ஆயுத வீரர்களைக் காவலிட்டு ஸகல சேனைகளை

யும்சூழ்ந்து செல்லும்படி அனுப்பி விட்டுத் தான் பிந்தி வருகிறார். மஹா ஸ்வாமிகளுக்கு ஜய முண்டாயிற்று" என்றனர்.

நந்தர்கள் ஸந்தோஷித்து அத்தூதர்களுக்கு வெகுமதி யளிக்கும்படி கட்டளையிட்டு மறுபடி ஜபசாலைக்குச் சென்றார்கள். அத ற்குள் மூடி போட்ட பல்லக்கைச் சுற்றிலும் ஆயுதபாணிகளான குதிரை வீரர்களும் பதாதிகளுமாகச் சூழ்ந்து, காவலுடன் வரும் போது நந்தர்கள் விடுதிக்கு அருகில் நின்று, "மலயகேது காசி ராஜனால் சிறைப் பிடிக்கப்பட்டான். அவனைக் காவலுடன் கொண்டு வந்திருக்கிறோம். நந்த மஹாராஜர்களிடம் ஒப்புவிக்க வேண்டும். தெரியப் படுத்துங்கள்" என்றார்கள்.

இது கேட்டு அவ்வாயுத கூடாரத்தைக் காத்துக் கொண்டிருக்குந்தளபதி யானவன் "நந்த பூபதிகள் ஜப சாலையில் இருக்கிறார்கள். நான் மலய கேதுவைப் பார்க்கலாமோ?" வென்று சொல்லிக் கொண்டே பல்லக்கின் அருகில் செல்வதைக் கண்டு, கூடாரத்தைப் பாதுகாக்கும் சைன்யம் முழுவதும் "நாமும் சென்று பார்ப்போம்" என்று தமது கைகளிலிருக்கும் ஆயுதங்களை அவ்விடம் வைத்து விட்டு பல்லக்கின் அருகில் சென்று கொண்டிருந்தார்கள். பல்லக்குக் காரரும் அதைச் சூழ்ந்து வரும் சைன்யத்தின் அதிபதியும் நந்தர்களின் ஸேனாபதியும் ஸேனைகளும் ஆயுதமின்றிக் கூட்டம் கூட்டமாகத் தொடர்ந்து வருவது கண்டு "எல்லோரும் சேர்ந்து வாருங்கள். ஒரே முறை தான் பல்லக்கைத் திறக்க முடியும்" என்று சொல்லி ஜப சாலையை நோக்கிச் செல்லும்போதே பல்லக்கின் திரையைச் சற்று சற்று விலக்கி, திவ்யாபரண பூஷிதனாக அதற்குள்ளிருக்கும் புருஷனைக் காண்பித்து, "இவனே மலயகேது. பார்ப்பவர்கள் எல்லோரும் பார்க்கலாம்" என்று சொல்லிக்கொண்டே நடந்தார்கள். நந்தர்களின் ஸேனைகள் தளபதியுடன் கூடாரத்தின் நினைவை மறந்து, தமக்குள் மலயகேது சிறைப்பட்டதைப் பற்றிப் பேசிக் கொண்டே சென்றனர். ஜபசாலையை நெருங்கிப் பல்லக்கு வந்ததும் பல்லக்கிற்குப் பின் புறம் வந்து கொண்டிருக்கும் சைன்யங்கள் கூடாரத்தில் நுழைந்து கொள்ளையிட்டு அங்கு சார்த்தப்பட்டிருக்

கும் ஆயுதங்களில் தங்களுக்கு வேண்டியதை யெடுத்துக் கொண்டு, மீந்திருப்பனவைகளை யொடித்து அகழி லெறிந்து விட்டு வரும்போது, பல்லக்குடன் சென்ற தளபதி தனது சேனையுடன் கூடாரத்தை நோக்கி நிராயுதனாகத் திரும்பி வருவதைக்கண்டு, அவனை அவன் சைன்யத்துடன் கத்திகளால் வீசிக் கொன்று விட்டு பல்லக்கை நெருங்கி வந்து விட்டார்கள்.

பின்னால் பரிமிதமாகப் பருவதேசன் ஸேனை வந்து கொண்டு இருந்தது. பல்லக் காட்கள் தமது மூடு பல்லக்கை ஜய சாலைக்கு முன்பாக இறக்கி "நந்த பூபதிகளுக்கு ஜயம். இதோ மலயகேதுவைக் கொண்டு வந்து விட்டோம்" என்று கூவிச் சொன்னதும், உள்ளிருந்த நந்தர்கள் இது கேட்டு வெளியில் வந்தனர் பல்லக்கினுள் உட்கார்ந்து இருப்பவனை மலயகேதுவே என்று நினைத்து, "ஏனப்பா, மலயகேது! புத்திஹீனத்தினால் அல்லவா நீ யிவ்விதம் சிறைப்பட வேண்டிய தாயிற்று?" என்று நந்தர்களில் மூத்தவன் கேட்டான்.

அதற்கு அந்தக் கபட மலயகேதுவும் "என் தந்தை நிர்ப்பாக்யனை சந்திரகுப்தனுக்கு உதவி புரிந்ததினாலேயே எனக் கிவ்விதமான ஆபத்து நேர்ந்திருக்கிறது. நான் உங்கள் கையிலகப்பட்ட பின் என்னால் செய்யக் கூடிய தொன்றுமே யில்லை" என்றான்.

அதற்கு நந்தர்கள், "ஆமப்பா அரசர்களுக்குள் பரஸ்பரம் மனஸ்தாப முண்டானால் ஜயாபஜய மிரண்டும் ஸகஜமே. இப்போது சந்திரகுப்தனை யெங்களிடம் ஒப்புவிக்கும்படி நீ யுனது தந்தைக்குத் தெரிவித்து அவ்விதம் முடித்துக் கொடுத்தால் உன்னை விட்டுவிடுகிறோம். நீ கவலைப்படவேண்டாம். உன் இஷ்டம் என்ன?" வென்றதும் "ஐயா, பிடித்த பிடியை நிறைவேற்றக் கூடியவனாகிய எனது தந்தை, தான் ஏற்பட்ட காரியமே முக்யமென்று என்மேலுள்ள ஆசையைத் துறந்தாலும் துறப்பானே யல்லாது, சரணமென்று வந்த சந்திரகுப்தனை உங்களிடம் ஒப்புவிக்க மாட்டான்" என்றான். இவ்வாறு அவன் கூற நந்தர்கள் "அடா! பைத்யமே! பெற்ற பிள்ளையைச் சிறையினின்று மீட்டிக் கொள்வதைக் காட்டிலும்

அற்பப் பயலான சந்திரகுப்தனாவது? ஏற்பட்ட காரியமாவது? என்னவோ உளறுகிறாயே. வெளியி லிறங்கி வந்து பேசு" என்றதும், "ஐயோ நந்த பூபதிகளே! ஒரு காரியத்தையும் முடிக்க முடியாமல் சிறையிலிருக்கும் இந்த நிலைமையில் நான் ஜனங்களுக்கு என்ன வென்று என் முகத்தைக் காட்டுவேன்!" என்று சொல்லிக்கொண்டு, தனது சைன்யங்க ளெல்லாம் வந்து சேர்ந்து விட்டது என்று அறிந்ததும் உடனே அந்த கபட மலயகேது திரையை நீக்கிக் கொண்டு கத்தியும் கையுமாகக் கீழ்க் குதித்து நின்று தனது சேனைகளைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே நின்றான்.

இந்த ஜாடையை யறிந்து சகல சேனைகளும் உருவிய ஆயுதங்களுடன் நந்தர்களை நெருக்கமாகச் சூழ்ந்து நின்றுவிட்டனர்.

இவைகளை யெல்லாம் பார்த்து, ஜேஷ்ட நந்தன் பெருந்திகில் அடைந்து, தனது தம்பிகளை நோக்கி "அருமைத் தம்பிகளே! சிறையில் அகப்பட்டவன் கையில் கத்தி எவ்விதம் வந்தது? இவன் சற்றும் பயமற்றுச் சுற்றிலுமிருப்பவர்களைப் பார்த்துச் சிரிக்கிறானே? இஃதென்ன ஆச்சரியமா யிருக்கிறது?" என்றான்.

"அண்ணன்மாரே! இங்கிருக்கும் சைன்யங்கள் தாம் கழுத்தில் அணிந்திருந்த ருத்திராக்ஷ மாலைகளை அறுத்தெறிந்து நெற்றியிலுள்ள விபூதிகளை யழித்துக் கொண்டும் தத்தமது ஆயுதங்களை உருவிக் கொண்டும் தயாராவதைப் பார்த்தால் இவர்கள் காசிராஜனுடைய சேனை ஜனங்களல்லர் என்று தோன்றுகிறது. சத்துரு சைன்யமே கபடமாக இவ்விதம் வந்து சூழ்ந்து கொண்டு இருக்கிறது. ஓஹோ! அடடா! குடி கெட்டு விட்டதே. முதியோர்களான தாய் தந்தையர்கள் சொல்லை மீறி எல்லோரும் சேர்ந்து நகர் விட்டு வெளியில் வந்ததற்குத் தக்க பலன் கிடைத்து விட்டது. இங்கிருக்கும் ஸ்வல்ப பரிவாரத்தினால் ஒன்றும் முடியாது. நமது கட்டுப்பாட்டினாலேயே நாமிவ்விதம் ஒரே சமயத்தில் அகப்பட்டுக் கொள்ளும்படி நேர்ந்தது. நம்மாலேயே மெய்க்காவலாட்கள் கூடாரத்திலேயே தங்கி விட்டார்கள். நம்மாலேயே பத்திரபாடகர்களான சூர சேனாபதிகளும் தூரச் சென்று விட்டார்கள். அ[illegible] பிரித்து [illegible]

மன்யுவை சம்ஹரித்தது போல, மஹா சூரரான அமாத்ய ராக்ஷஸரைப் பிரித்து நம்மை யிவ் வாபத்திற்கு உட்படுத்தி யிருப்பது தெய்வ சங்கல்பமே. சத்துருக்களை நிந்திப்பதில் பயனில்லை" என்றான் அவர்களில் ஒருவன்.

மற்றொருவன் "தான் ஆபத்தில் சிக்கியும் தைரியத்துடன் அபிமன்யு யுத்தம்செய்து மாண்டது போல், நாமும் யுத்தம் செய்து வீரசுவர்க்கம் அடையவேண்டு மல்லாது அதைரியப்படுவது உசிதமில்லை" யென்றான்.

மற்றொருவன் "அபிமன்யு இறந்துவிட்டாலும், அதுகேட்ட அருச்சுனன் சயிந்தவனைக் கொன்று தனது துக்கத்தையும்கோபத்தையும் தீர்த்துக் கொண்டது போல், அமாத்ய ராக்ஷஸர் நாம் மாண்டுவிட்ட போதிலும், எவ்விடத்திலேனும் சந்திரகுப்தனைப் பழிக்குப் பழி வாங்கியே பிறகு தபோவனம் செல்வார். இதற்கு ஐயமில்லை" என்றான்.

மற்றொருவன் "அர்ச்சுனனுக்கு கிருஷ்ண சகாயம் போல் நமக்கும் அமாத்ய ராக்ஷஸனால் செய்யப்பட்ட தந்திரங்களெல்லாம் பலியாது போய்விட்டதா லல்லவோ நமக்கு இவ்வாபத்து நேர்ந்திருக்கிறது? நமக்குப் பிறகு மட்டும் அவருடைய எண்ணம் எவ்விதம் நிறைவேறப் போகிறது? இதெல்லாம் வீண் பேச்சு" என்றான்.

அதற்கு "மற்றொருவன் நாம் செய்த தீக்கருமத்தாலும் நம் ஒற்றுமையாலுமே நமக்குத் தெய்வபலம் தப்பி விட்டது.நமது பாபமே யிவ்விதம் நம்மைக் கொல்லுகிறது. இதோ சத்துருக்கள் மேன் மேலும் பெருகி வந்து விட்டார்கள். நாம் க்ஷத்ரிய தர்மத்தின் படி அவர்கள் மீது பாய்ந்து சண்டை செய்வோம். ஜயித்தால் உயிர் பிழைப்போம். செத்தால் வீர சுவர்க்கம் கிடைப்பது நிச்சயம்" என்றான்.

என்றதும், ஒற்றுமையுள்ள அவ்வொன்பது சகோதரர்களும் "சரி" யென்று அவ்விதமே ஒப்புக்கொண்டு தமது சமீபத்தி லிருக்கும் ஹரிக்காரர்களின் கைக்கத்திகளை வாங்கிக் கச்சையை இழுத்துக் கட்டிக் கொண்டுயுத்தத்திற்குச் சித்தமாய் நின்று விட்டார்கள்.

# இருபத்தாறுவது அத்தியாயம்.

## நந்த ஸம்ஹாரம்.

இவ்விதம் யுத்தத்திற்கு ஸித்தமாய் நின்ற நந்தர்கள் தமது குதிரைகள் மீதேற ப்ரயத்தினம் செய்யும்போது, சத்துரு சேனைகள் சூழ்ந்து நந்தர்களின் அசுவங்களின் கால்களை வெட்டி வீழ்த்தி விட்டு, ஜபசாலைக்குள் புகுந்து, அங்கிருக்கும் பிராமணர்களைத் துரத்தி யடித்து ஹோம குண்டத்திலிருக்கும் நெருப்பைக்கொண்டு அஜ்ஜபசாலையைக் கொளுத்தி எரியச் செய்ததும், மாஸோபவாஸி தனது ஜடைகள் புரள, மான்தோல் தொங்க, விரைவினில நந்தர்களிடம் வந்து "ஐயா அரசர்களே! நானுங்களுக்கு தேவதையின் தரிசனம் செய்து வைக்க வேண்டுமென்று இருக்கும் ஸமயத்தில் இவர்கள் ஏன் ஜடையைப் பிய்த்து எறிவதற்கு ஆரம்பிக்கிறார்களே. நீங்களிச்சமயம் உபேக்ஷை செய்யலாமோ" வென்று பரிகசித்துப் பேசியும், "கையிலிருக்கும் கட்கத்தை விட்டெறிந்தால் உங்களுக்கு கட்க ஸ்தம்ப மந்திரத்தையாவது இப்போது உபதேசிப்பேன்" என்று விகடம் செய்தும், "நானுரைத்தது போல இன்று உங்கள் சத்துருக்களுக்குப் பதிலாக எங்கள்சத்துருக்கள் நாசமடைவது ஸித்தம்" என்றும் சொல்லி விட்டு, சாணக்யன் இருக்குமிடம் நோக்கி வந்து கொண் டிருந்தான்.

ஜபசாலை பற்றி யெரிவதைக்கண்டு, சேநாபதியும், இதுவே அடையாளம் என்றறிந்து, நந்தர்களுக்கு நான்கு பக்கத்திலிருந்தும் ஸேனைகள் உதவ விடாது தனது சேனைகளை நான்கு புறத்திலும் நிறுத்தித் தடுத்து விட்டான். ஜேஷ்ட நந்தன், குதிரைகள் நாசமடைந்தது கண்டு, தரையி லிருந்தே யுத்தம் செய்யத் தீர்மானித்து தனக்கெதிரில் கத்தியை யுருவிக்கொண்டு நிற்கும் ஸபட மலயகேதுவைத் தனது கைக் கத்தியினால் ஒரே வீச்சில் வீசி அவன் தலையைக் கீழுருட்டி விட்டு அங்கிருந்து சத்துரு சேனை மத்தியில் பாய்ந்து மான்குட்டி போல் தாவித் தாவிக் குதித்து ஒவ்வொரு வீச்சிற்கு பத்துப்பதினைந்து தலைகளைத் தரையில் வீழ்த்தி, பிரளய கால பைரவனோ, கட்கதாரியான வீரபத்திரனோ, அல்லது யமனே இந்த ரூபத்துடன் வந்திருக்கிறானோ, என்று சொல்லும்படி முகத்தில் கோபாக்கினி

கொழுந்து விட்டெரிய க்ஷண காலத்தில் அநேக மாயிரம் சத்துரு சேனைகளை ஸம்ஹாரித்து விட்டான்.

இவ்விதம் நவநந்தர்களும் ஒருவரைக் காட்டிலும் மற்றொருவர் அதிக சாஹஸங்கள் செய்து தங்கள் கத்தியைக் கொண்டே சத்துருக்களின் ரத கஜ துரக பதாதிகளை நிபாதம் செய்து, எட்டுத் திக்கில் எண்மரும் ஆகாசத்திலொருவனும் சஞ்சரிப்பது போல சூழ்ந்து பாய்ந்து கூவிக் கனைந்துக் கர்சித்து யுத்தம் செய்து வரும்போது சத்துரு சேனைகள் எதிர் நிற்க முடியாது ஓட வாரம்பித்தன. மீந்திருந்த சேனைகளும் நந்தர்களை யெதிர்த்து யுத்தம் செய்ய வஞ்சி "நீங்கள் தேவதாம்சம் பொருந்தி யவர்கள் போலிருக்கிறது. கேவலம் மனிதர்களான எங்களால் எதிர் நிற்க முடியுமோ?" என்று அவர்களைப் புகழ்ந்து கொண்டு நின்று விட்டார்கள்.

இங்கு, இவ்வித மிருப்பதைக் கேள்விப் பட்ட சாணக்யன் மெத்தக் கோபமடைந்து உத்தரியத்தை இடுப்பில் வரிந்து கட்டிப் பூணூலை காதில் மாட்டித் தண்டத்தைக் கையிலெடுத்துக் கொண்டு, "இது வரையிலும் நந்தாதமர்கள் மாளாததால் எல்லோரும் பேடிகளே யாவார்கள். நானே சென்று ஸம்ஹரிக்கிறேன்" என்பதாக ஓடிவர, இது கண்டு சந்திரகுப்தன் சாணக்யரை நமஸ்கரித்து, வினயத்துடன் கோபத்தை ஸமாதானப் படுத்தி, தான் கவசம் தரித்து வில் அம்பறாத் தூணி கட்கம் கேடயம் ஈட்டி முதலியவைகளைத் தரித்து, குதிரையேறிப் புறப்பட்டதும், சேகரன் முதலிய சகல ஸேனாபதிகளும் சந்திரகுப்தனுடன் புறப்பட்டு ஜயசாலைக்கு வந்துகொண்டிருந்தார்கள்.

இங்கு, ராக்ஷஸனின் தூதர்கள் நந்தர்கள் ஜயசாலை சென்றது முதல் இதுவரை நடந்த கொடுங் காட்சிகளைக் கண்டு, "ஏதோ பரமாதம் வந்து விட்டது" என்று, ஓடிப்போய், தூங்கிக் கொண்டிருக்கும் ராக்ஷஸனைத் தட்டி யெழுப்பி "ஸ்வாமீ! தாங்கள் தூங்கி விட்டீர்கள். நந்தர்கள் ஜயசாலை சென்றார்கள். அவர்களின் மெய்காவற் படைகளை, மலயகேதுவைச் சிறைப் பிடித்து வந்த காசீ ராஜனின் சேனைகள் கொன்றுவிட்டன. நந்தர்கள் கூடாரத்தையும் சூறையிட்டு விட்டார்கள். நந்தர்களி னுத்திரவின்றிலேயே பக்ரபடாதி சேனாபதிகள்

மலய கேதுவை மீட்டுக் கொள்ள வரும் பருவதேசனை மடக்கி யுத்தம் செய்யும் பொருட்டுத் தமது ஸேனைகளுடன் தக்ஷிண திக்கை நோக்கிச் சென்று விட்டார்கள். இப்பொழுது ஜயசாலைக்குப் போக வழியின்றி நாலா பக்கத்திலும் பருவதேசன் சேனைகள் வளைந்து கொண்டிருக்கின்றன. ஜயசாலை பற்றி யெரிகிறது. இஃதென்ன விபரீதமோ வென்று பயத்தையடைந்ததாலேயே தங்களைத் தட்டி யெழுப்பினோம். எங்களை மன்னிக்க வேண்டும்" என்றார்கள்.

இதைக் கேட்ட ராக்ஷஸன், குபீரென்று படுக்கைவிட்டு எழுந்து "நாம் நித்திரை புரியும் ஸமயமறிந்து சத்துருக்கள் இவ்விதம் எல்லாப் ஜாலம் செய்து, நந்தர்களைத் தனிமையில் சூழ்ந்து விட்டார்கள் போல் இருக்கிறது. ஓஹோ! நினைவு வந்தது. நான் காசி ராஜனைக் கொண்டு செய்த யத்தினத்தை சாணக்யன் அறிந்து அதற்கு எதிராகக் காரியங்களை நடத்தி நந்தர்களுக்கு ஆபத்தை விளைவித்து விட்டான் போலும். நான் சத்துருக்கள் நாசமடையும்படிக்குச் செய்த கபடங்களும் தந்திரங்களும் அவர்களுக்கே அநுகூலமாக ஏற்பட்டு அவைகளே நந்தர்களுக்கு விநாச காரணமாக ஏற்பட்டு விட்டதே! ஐயோ நந்தர்கள் என்னவானார்களோ? சத்துரு மததியில் தவிக்கிறார்களோ! நிர்ப்பாக்யனானவெனக்கு ஒரு நாளுமில்லாது இன்று மத்தியானத்தில் தூக்கம் ஏன் வந்ததோ" என்று புலம்பிக் கொண்டே, கவசந் தரித்து, ஆயுதங்களைக் கைப்பிடித்துக் குதிரையேறி ஜயசாலையை நோக்கிச் செல்லும்போது, அதற்குள் சத்துருக்களின் ஜயபேரிகைகளினோசையும் கோலாஹல சப்தமும் எட்டுத் திசையிலும் வியாபிப்பது கண்டு, "அடடா! சத்துருக்கள் ஜயபேரிகை முழக்குகிறார்களே! நந்தர்கள் நஷ்டம் அடைந்து விட்டார்களோ என்னவோ" வென்று எண்ணிக் கொண்டே சூறையிடப்பட்டிருக்கும் நந்தர்களின் கூடாரங்களையும், வழி முழுதும் உருண்டு கிடக்கும் பிணங்களையும் பார்த்தான். ஜயசாலை யெரிச்சலினால் உண்டாகும் பெரும்புகை பூமி ஆகாயம் முழுதும் சூழ்ந்திருந்ததால் சத்துரு ஸேனைகளும் அங்கு நடக்கும் விஷயங்களும் கண்களுக்குப் புலப்படவில்லை. தனது குதிரையைச் சவுக்கினால் அடித்து வெருட்டிக் கொண்டு வரும்போது நந்தர்களின் குதிரைகளுக் கணிந்திருந்த விலை மதிக்க முடியாத ஆபரணங்களைத் தமது குதிரைகளுக்கு அலங்

சரித்துக் கொண்டும் அவர்களுக்குப் பிடித்திருந்த நல் முத்துக் குடைகளை "எனக்கு உனக்கு" என்று கிழித்துப் பங்கு போட்டுக் கொண்டும், வரும் சத்துரு சேனைகளை அவன் கண்டு, "ஹா, ஹா, ஹா! நந்தர்கள் கொல்லபபட்டார்கள் என்பது நிச்சயமே. அவர்கள் உயிருடனிருந்தால் சூரர்களானஅவர்களுடைய ஆபரணங்களும் குடைகளும் சத்துருக்கள்கைக்கு அகப்படுமோ ஹா! தெய்வமே! இவ் வித ஆபத்தை யுண்டாக்கி விட்டாயே. ஹா! நந்த பூபதிகளே! அரைக் கணமும் உங்களை விட்டு அடையா திருந்து, உங்களால் ஸன்மானிக் கப் பட்டு வந்தும், உங்களுடைய ஆபத்துக்கு உதவாது போய் விட்ட என் ஜன்மத்தைச சுட வேண்டாமா? இனி யாரை "அரசர்களே" "ராஜ குமாரர்களே!" "பூபதி புத்திரர்களே!" "மன்னர்களே!" "நந் தஸார்வ பௌமர்களே!" என்று அழைப்பேன்! உங்களைப் பறிகொடு த்துப் பின் நான் உயிரை வைத்திருந்து யாது பயன்? உங்களைக் கப டத்தினால் சம்ஹரித்த சத்துருக்கள் மீது விழுந்து யுத்தம் செய்து அவர்களையும் பழிக்குப் பழி வாங்கி என்னுயிரையும் ரணகளத்திற் கே பலியாக்கி நீங்கள் சென்ற கதிக்கு நானும் வருகிறேன்" என்று கதறி விட்டு, மஹா கோபத்துடன் கட்கத்தை யுருவிக் கொண்டு குதிரையை நாலுகால் பாய்ச்சலில் ஓடும்படி அடித்து ஓட்டிச சென்று கொண டிருநதான்.

அச்சமயம், முன்பு ஸித்தார்த்தகனால் நியமிக்கப் பட்டிருந்த வனும், ராஜனுக்குப் பிறந்தவனும், ராக்ஷஸனுடைய மெய்காவலர் களுக்கு அதிகாரியுமான, விநதன் என்பவன், இவ்விதம் வேகமா கச் செல்லும் ராக்ஷஸனுக்குக் குறுக்காகத் தனது குதிரையைச் செலுத்தி, வழிமை மறித்து, ராக்ஷஸனை நிறுத்தி, "ஸ்வாமீ அமாத் யரே! எனது ஒரு விண்ணப்பத்தைக் கேட்டருள வேண்டும். உலகில் ஸ்வாமி பக்தர்கள் தமது எஜமான்கள் கண்டு களிக்கும்படி சமயோசிதமாகப பெருங் காரியங்களை நிரவகித்துக் கீர்த்தியை அடைவது சகஜம். இபபொழுது பிரபுக்களான நந்தர்கள் நிலைமை மாறுபட்டுப் போன பின்பு தாங்கள் செய்யும் சாகஸ காரியங்களைக் கண்டு மெச்சிக் கொள்ளவும் பிரயோஜனத்தை யடையவும் யாரிரு க்கிறார்கள்? அரசர்களான நந்தர்கள் உயிருடனிருக்கும் வரையில் அவர்களுக்குச் சத்துருவாயிருந்த மன்னர்கள், மந்திரியாயிருக்கும்

உங்களுக்கும் சத்துருவாக யிருக்கலா மன்றி இப்பொழுது உங்களு க்கு மட்டும் சத்துருக்கள் என்பதுண்டோ? யுத்தத்தில் மடிவது க்ஷத்திரிய தர்ம மல்லாது, பிராமண சிரேஷ்டரான உங்களுக்கு இது தர்மமோ? துவாபர யுகத்தில் சஸ்திர வித்தையில் பிரஸி த்தி பெற்றிருந்த துரோணாசாரியரும் சஸ்திர வித்தையைக் கொ ண்டு ஜீவித்தும், முடிவில், அந்தணர்களுக்கு ஆயுதத்தால் நற்கதியு ண்டாகாது" என்று அறிந்தல்லவோ சஸ்திர ஸன்யாஸம் செய்து விப்ரர்களுக்கு உசிதமான தியானத்திலேயே நற்கதி யடைந்தார். ஆகையால் ஸேவகத் தொழில், நீசத் தொழிலன்றி சிலாக்ய மான தாகுமோ? வீண் ஆபாஸத்தினாலும் கோபத்தினாலும் இனிப் பய னில்லை. நீங்களேனும் உயிரோடிருந்தால் விருத்த மஹாராஜரின் அந்தப்புர ஸ்திரீகளுடையவும் நந்தர்களின் பத்தினிகளுடையவும் பதிவிருதத் தன்மைக்கு, மிலேச்சர்களான சத்துருக்களால் மான க்குறைவு நேரிடாது காப்பாற்றலாம். இனிமேல் நீங்கள் செய்ய வேண்டிய ஸ்வாமி காரியம் இதுவே யாகும்" என்று சமயோசித மாகச் சொன்னான்.

ராக்ஷஸன் இதைக் கேட்டு இந்த விநதன் நமது மெய் காவ லர்க்கு அதிபதியானாலும், வைப்பாட்டி மகன் ஆனதால் இச்சமயம் இவன் சொல்லைக் கேட்பது கூடாதெனினும், யோசித்துப் பார்த் தால், சொன்னவைகள் எல்லாம் உசிதமாகவே இருக்கின்றன" என்று தீர்மானித்து, இன்னது செய்கிறதென்று தோன்றாது, மெய்மறந்து, அவ்விடத்திலேயே மரம் போல் அசையாது நின்று விட்டான்.

அங்கு, நந்தர்களைச் சூழ்ந்திருக்கும் ஸேனைகள், சேகரன், சந்திரகுப்தன், முதலியவர்கள் வருவது அறிந்து, "இனி நாம் பேசா திருக்கக் கூடாது. எவ்விதத்திலேனும் நந்தர்களைக் கொல்ல வேண் டும்" என்று, கத்தி, ஈட்டி முதலிய ஆயுதங்களைக் கொண்டு நந்தர் களைத் தாக்கினார்கள். நந்தர்களும் உக்கிரகங் கொண்டு வீச்சி ற்குப் பத்தெட்டுத் தலையாக நிலத்தில் வீழ்த்திக் கோரமாய்ச் சமர் புரிந்ததில் ஸேனையில் மூன்று பங்கு நாச மடைந்து விட்டது. அதுகண்டு சேகரன் முதலிய ஸேனாபதிகள் பிரமித்து "இதென்ன வாச்சரியம்! இவ்வளவு பெருத்த ஸேனையில் நவ நந்தர்கள் கோடி

நந்தர்களாகக் காணப் படுகின்றார்களே.! இவர்கள் பராக்ரமத்தை என்னென்று சொல்வது? இவர்களன்றோ வீரர்கள்.! இவரே சூரர்கள்" என்று சிலாகித்துக் கொண்டு, நிற்க, சாணக்யர் "இன்னமும் தாமதமா?" என்று. கோபித்ததால் கட்கங்களுடன நந்தர்கள் மேல் விழுந்து, கடுமையாய் யுத்தம் செய்தார்கள்.

சபரவமர்னும் ஜேஷ்ட நந்தனும் யுத்தம் செய்யும்போது சபரவர்மனின் கைக்கத்தியைத் தனது கேடயத்தால் முறித்துத் தனது கட்கத்தினால் ஜேஷ்ட நந்தன் சபரவர்மன் சிரத்தைச் சேதித்து கீழ்வீழ்த்தி விட்டான்

இது கண்டு கோபத்தை யடைந்த சந்திரகுப்தன் தனது வில்லை வளைத்து நாணேற்றி ஒரு அர்த்த சந்திர பாணத்தினால் ஜேஷ்ட நந்தனின் வலக்கையை யவன் கட்கத்துடன் வெட்டி வீழ்த்தித் தனது கையீட்டியை அவன் மார்பில் அழுத்தியதும், வச்சிராயுதத்தின் அடியால் கீழ் உருண்ட பர்வத சிகரம் போல் அந்நந்தன் தரையில் விழுந்து இறந்தான்.

தன் மாதுலனாகிய சபரவர்மன் மாண்டது கண்டு, சேகரன் கோபத்துடன் நந்தர்களுடன் யுத்தம் செய்து, உபநந்தனை வெட்டி வீழ்த்தினான். சித்திரவர்மனும் கனிஷ்ட நந்தனும் கடும் போர் புரிந்தனர். கடைசியில் கனிஷ்ட நந்தனைச் சித்திர வர்மன் ஸம்ஹரித்தான். விநந்தனும் காம்போஜனும் யுத்தம் செய்ததில் காம்போஜனை விநந்தன் கொன்றது கண்டு, சித்திர வர்மன் விநந்தனுடன் போர் புரிந்து தனது கதையை யவன் மார்பிலடித்ததும், அவன் கீழ் விழுந்து மாண்டான். லோகநந்தன் தனது கட்கத்தால் மகத மன்னன் இருகைகளையும் வெட்டி யெறிந்தது கண்டு, சிந்துஷேணன் தனது கை வேலாயுதத்தினால் லோகநந்தனை ஸம்ஹரித்தான். பாரசீகபதி குருநந்தனையும் புஷ்கராக்ஷன் அனுநந்தனையும் கொன்றதும், சாணக்யன் சேகரனை யழைத்து "இவர்களுடன் எந்நேரம் யுத்தம் செய்வது? மீந்திருக்கும் மூன்று பேர்களின் கால்களில் கயிற்றைக் கட்டி யிழுத்துக் கொல்" என்று ஆக்ஞாபித்ததும, அவ்விதமே மூன்று பேர்களையும் கட்டி உருட்டியிழுக்கும் போது, அவர்கள்,

சந்திரகுப்தனையும் சாணக்யனையும் பார்த்து "அடா குலத்ரோகியான சந்திரகுப்த கிராதக! அவனையே போன்ற சாணக்ய பிராமணாதம! சத்துருவாக விருந்தாலும் ஆயுதமற்றிருக்கும் போது இவ்விதம் வாதனை செய்யலாமா? இது தர்மமா?" வென்று கேட்டான்.

அதற்குச் சந்திரகுப்தன் "நந்தாதமர்களே! நீங்களே அகாரணமாய் எனது தந்தையையும் சகோதரர்களையும் மோசடியாய் நிலமாளிகையில் அடைத்து அன்னந் தண்ணீர் கொடுக்காது கொன்று குலத்துரோகிகளாக விருக்க, நான் குலத்துரோகி யாவேனோ? நீங்கள் முன் செய்த கொடுமைக்குத் தக்கபடியே பதில் அனுபவிக்க வேண்டியது தெய்வஸம்மதமான காரியமல்லது,தர்மவிரோதம் அல்லவே" என்றான்.

பின்பு சாணக்யன் அவர்களை நோக்கி, "ஆ! ஆ! க்ஷத்திரியாதமர்களே! அதிதியாக வந்து இலையி லுட்கார்ந்த வென்னை, இன்னாரென்று விசாரியாமலும்,நிரபராதி யென்று எண்ணாமலும் பிராமணாதமன் என்று அவமதித்து ஆட்களைக் கொண்டு 'கரகர' வென்று இழுக்கச் சொன்னதற்குப் பதில் பலனை நீங்கள் அனுபவியாது யார் அனுபவிப்பார்கள்? என்று சொல்லி, இப்பாபிகளின் முகத்தைப் பார்க்க ஸகிக்காது திரும்பிக் கொண்டு, சேகரனை யழைத்து, "இந்துராத்மாக்களின் ஒன்பது தலைகளையும் கொண்டு வந்து நமக்குக் காண்பி" யென்று உத்தரவிட்டுச் சந்திரகுப்தனை யழைத்துக் கொண்டு, தனது இருப்பிடத்திற்குத் திரும்பினான்.

மலயகேதுவுடன் யானையி லுட்கார்ந்து இவற்றை யெல்லாம் பார்த்துக்கொண் டிருந்த பருவதேசன், சாணக்யரின் அதிக ஸாஹஸங் கண்டு பயந்தும், நந்தர்கள் திடீரென சத்துருக்கள் கடடத்தில் அகப்பட்டு மாண்டது கண்டு ஆச்சரியப்பட்டும்,நந்த ஸம்ஹாரமாய் விட்டது பற்றி ஸந்தோஷித்தும் தனது இருப்பிடம் சென்றான். நிற்க.

சாணக்யர் நியமித்த ப்ரகாரம் சேகரன் தனது தூதர்களுக்குக் கட்டளை யிட்டதும் அப்படர்களும் அவ்விதமே நந்தர்களின் ஒன்பது தலைகளையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள். அப்

பொழுது வீர படர்களின் சிங்க நாதமும், ஜய பேரிகையின் ஒலியும் சமுத்ர கோஷம் போல் பூமி அந்தரிக்ஷங்களை மூடுவது கண்டு, நந்த ஸேனைகள், "அரசர்கள் மடிந்த பின் நமக்கென்ன?" வென்று மூலைமூலைக்குச் சிதறி யோடிக்கொண்டிருந்தன.

நடு வழியில் ஒன்றுந் தோன்றாது நின்று கொண்டிருந்த ராக்ஷஸன் இவைகளைக் கண்டு "நந்தர்கள் மாண்டு விட்டதினாலேயே சத்துரு சைன்யங்கள் கோலாஹலத்துடன் தமது பாளையம் செல்லுகின்றன" என்று அறிந்து, "மௌரிய வதம் தான் இவ்விதம் நந்தர்களை நாசப்படுத்தியது" என்று விசனப்பட்டுக் கொண்டே தனது குதிரையைத் திருப்பிப் பட்டணத்தின் வாயில் அருகில் வந்து, அவ்விடம் இருக்கும் சைன்யங்களை, கோட்டை வாயிலை மூடிவிட்டுச் சத்துருக்களை உள்ளே விடாமல் காத்துக் கொண்டிருக்கும் படி உத்தரவிட்டுத் தானும் தனது வீடு சென்று படுக்கையில் குப்புற விழுந்து "ஹா நந்தபூபதிகளே! உங்களை எவ்விதம் மறப்பேன் இப்பொழுது எனது சக்தியும ஸாஹஸமும் யுக்தியும் லோபியின் தனத்தைப் போல் பயனற்றனவாய் விட்டதே. உங்கள் தாய் தகப்பன்மார்களுக்கு என்னவென்று தேறுதல் சொல்லுவேன்! இனி மேல் ஸேனாதிபதிக ளெல்லாம் சந்திரகுப்தனையே அனுஸரிப்பார்களே! நீங்கள் உட்கார்ந்து செங்கோல் செலுத்திய சிம்மாஸனமும் ராஜ்யமும், பொக்கிஷங்களும் பராதீனப்பட்டும் இவைகளை யெல்லாம் பார்த்து சகிக்கிறேனே! ஐயோ! தன் இனத்தைவிட்டுப் பிரிந்து சிங்கத்தினிடம் அகப்பட்டுத் தவிக்கும் மான்போல் சத்துருக்களுக்கு கீழ்ப் பணிந்து நிற்பேனோ? அரசர்களான உங்களுக்கு, மித்திரனான என்னை, சத்துருக்கள் கண்டால் பல விதத்திலும் அவமானப் படுத்தி ஏளனம் செய்வார்களே!" என்று புலம்பிக் கொண் டிருந்தான். நிற்க.

அங்கு, நந்தர்களின் சிரங்களை யெடுத்துச் சென்ற படர்கள் அவைகளைச் சாணக்யன் முன்பு வைத்தனர். கஸ்தூரி திலகங்களாலும், கழுத்தில் பூசிய சந்தனப் பூச்சினாலும், ரத்னமயமான கிரீடங்களாலும் விளங்கியும, உதடுகளைக கடித்துக் கொண்டும், அவைக்

கண்ணை மூடிக்கொண்டும், நித்திரை புரிவது போலவும் இருக்கும் அவ்வொன்பது சிரங்களையும் பார்த்து, "இவர்களின் துஷ்காரியமே இவர்களுக்கு இவ்வித அபகீர்த்தியை யுண்டுபண்ணிற்று. ஆனாலும் யுத்தத்தில் முன் வைத்த காலை பின் வைக்காமல் யுத்தம் செய்த தால் இவர்களுக்கு நற்கதியுண்டு" என்று சொல்லி விட்டு, சந்திரகுப் தனைப் பார்த்து "அப்பா குழந்தாய்! இந் நந்தர்களின் சிரோபூஷணங் களில் உள்ள மஹா ரத்நங்களைப் பார்த்து, பிதாவையும் சகோதரர் களையும் சத்துருக்கள் கொன்றதினா லுண்டான துக்கத்தை விட்டு விடு. துவேஷ மென்பது சத்துருக்கள் மரண பரியந்தமே யாகும். கங்காநதிக்குச் சென்று ஸ்நானம் செய்து, யுத்தத்தில் மடிந்த இந்த நந்தர்கள் உனக்கு ஞாதிகள் ஆகையால் இவர்கள் நற்கதியடையும் படி தர்ப்பணம் முதலியவை செய். இன்று தான் எனது ஸாஹ ஸம் நிறைவேறிற்று. எனது சபதமும ஸத்யமாயிற்று" என்றான்.

இது கேட்டு சந்திரகுப்தன் கண்ணீரை ஆறாகப் பெருக்கி, "இப்பாபிகள் என் தகப்பனையும் ஸகோதரர்களையும் அநியாயமாகக் கொன்று தாங்களும வீணில நாசம் அடைந்தார்கள். எங்கள் பாட்டனாகிய சர்வார்த்தஸித்தியின் நல் வம்சம் இவ்விதம் வீணாய் விட்டதே. இந்த நூற்றொன்பது பெயர்களுக்கும் தர்ப்பணம்செய்து, ள்ளுந் தண்ணீரும் இறைக்கும்படி என் ஒருவன் தலையில விதி விட்டதே! இவர்கள் செய்த அநியாயம் பொறுக்காது உங் ச் சரண மடைந்து இவர்களைக் கொன்று விட்டேனானும ன்னைக் குலத் துரோகி யென்றே யெல்லாரும் தூஷிப்பார்களே! வ்வபகீர்த்திக்கு உட்பட்டு இத்தேகத்தை யினி வைத்துக்கொள்வ ல் எனக்குச் சற்றும் இஷ்டமில்லை. நான் நற்கதி யடையும்படி சீர்வதிக்கவேண்டும்" என்று சாணக்யரின் பாதங்களில் விழுந்து புரண்டு அழுதான்.

இது கேட்டு சாணக்யன் "ஐயா சந்திரகுப்தனே! உனக்கு அணுவளவும் பாபம் ஏற்படாது. க்ஷத்திரிய வம்சத் துதித்தவர்களு க்கு இது சகஜமான காரியமே யாகும். முன்பு ஸ்ரீராமனைச் சரணக் டைந்து, தமயனாகிய ராவணனைக்கொன்று லங்கையை யாண்டு வந்த ணனுக்கும, ராமனைச் சிநேகித்து அண்ணன் வாலியைக் கான்று கிஷ்கிந்தையை யாண்ட சுக்கிரீவனுக்கும், கிருஷ்ண சகா யத்தைக் கொண்டு கௌரவர்களைக் கொன்று அரசாட்சி புரிந்த பாண்டவர்களுக்கும் பாபமுண்டாயிற்றோ? அவர்கள் எல்லோரும்

இவ்வுலகில் கீர்த்திமான்களாய் விளங்கிப் பரலோகத்திலும் நற்க யடையும்படி தான தருமங்கள் செய்து தருமத்துடன் அரசாட செய்யவில்லையோ? நீ கவலைப்படுவது அழகோ? இதெல்லாம் மன யத்தனத்தால் நடப்பதோ? சொல்பவனும் சொல்விப்பவத ஈசுவரனல்லவோ? இவ்வித அகங்காரத்தை விட்டுவிட்டு க்ஷத்தி குலத்திற்கு உசிதமாய் இவர்களுக்குத் திலோதகம் கொடு" என் சமாதானம் செய்து, கங்கைக்கு அனுப்பிவிட்டு. சேகரனை யன த்து "ஐயா ஸேனாதிபதியே! இந்த நந்தர்களின் கபந்தங்களை ரா பிரோஜத்பன்னர்களானவர்களைக் கொண்டு கங்கா ஜலத்தினால் ஸ்ந னம் செய்வித்து, ஜபசாலையிலிருக்கும் அக்னி குண்டத்தில் போட செய். அவர்கள் பத்தினிகள் அபேக்ஷித்தால் இந்தத் தலைக்க தைலக் கொப்பரையில் வைத்து அனுப்பி விடு. ஸேனை முழு தும் சத்துரு ஜயத்திற்காக உற்சவம் கொண்டாடட்டும்" என்று சொல்லி யனுப்பினான்.

சேகரனும் அவ்விதமே நந்தர்களின் தேகத்தை அக்கினி குண் டத்தில் போட்டுத் தலைகளைத் தைலக் கொப்பரையி லிட்டுத் தமது ஸேனைகளை யுற்சவம் கொண்டாடும் படி நியமித்ததும், உற்சா மடைந்த வீர படர்களின் சிங்க நாதங்களும் ஜய பேரிகைகளின் சப்தங்களும், பீரங்கிகளின் வெடிப்புகளும், பூமி ஆகாச மிரண்டை யும் மூடி அதிரசெய்தன. பர்வதேசன் ஸேனா ஜனங்கள் ஒ வரை யொருவர் கட்டிக்கொண்டும், தட்டிக் கொடுத்தும், "நீ சூர நீ சூர னென்று புகழ்ந்து கொண்டாடியும், நடனோத்ஸவங்களை கண்டு களித்தும், சர்க்கரை வழங்கியும், கந்த மாலிகைகளால் அல கரித்துக் கொண்டும், மத்யபானம் செய்து, சந்தோஷங்கொண டாடினார்கள்.

அங்கு, சாணக்யனும் கங்கா நதிக்குச் சென்று ஸ்நான செய்து அவிழ்ந்து புரளும் தனது சிகையைத் தட்டி, முடிந் கொண்டு, சந்தியாவந்தனாதி நித்ய கருமங்களைச் செய்து விட்டு, ச திரகுப்தனையு மழைத்துக் கொண்டு தனது சாகஸம் நிறைவேறி தற்கு ஆனந்தப்பட்டுக்கொண்டே தன் விடுதி வந்து சேர்ந்தான்.

சாணக்ய ஸாஹஸம் அல்லது

சந்திரகுப்த சரிதம்

முதற்பாகம் முற்றிற்று.